30

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

நாகூர் மீரான் சாஹிபு

ஆண்டவர்களின்

காரணச் சரித்திரம்.

இஃது

நாகூர் ஹலைத் செப்பிற அப்துல் காதிர், ஷாஹுல்
ஹமீது, கஞ்சஸவாயீ பாதுஷா ஆண்டவர்களின்
ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய, கரா
மாத்துகளும் ஒருங்கு சேர்த்து
அச்சிடப்பட்டது.

கோட்டார்

அ. வா. சைகு முஹம்மது அவர்களால்
அச்சிட்டு ரிஜிஸ்டர் செய்து வெளிப்படுத்தப்
பட்டிருந்த புஸ்தகத்தின் காபிரைட் அதிகாரத்தை
கிரயத்திற்கு பெற்று,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

அதை மீளவும் செந்திருத்தி எழுதி

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

(Copy-Right Registered)

1953

Q7:458
N53
10689

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நாகூர் மீறான் சாஹிபு

ஆண்டவர்களின்

காரணச் சரித்திரம்.

இஃது

நாகூர் ஹலாத் செய்பிது அப்துல் காதிர், ஷாஹுல்
ஹமீது, கஞ்சஸவாயி பாதுஷா ஆண்டவர்களின்
ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கறா
மாத்துகளும் ஒருங்கு சேர்த்து
அச்சிடப்பட்டது.

கோட்டார்
அ. வா. சைகு முஹம்மது அவர்களால்
அச்சிட்டு ரிஜிஸ்டர் செய்து வெளிப்படுத்தப்
பட்டிருந்த புஸ்தகத்தின் காபிரைட் அதிகாரத்தை
கிரயத்திற்கு பெற்று,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

அதை மீளவும் சீர்திருத்தி எழுதி

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

(Copy-right Registered)

1953.

ஹஸரத் நாகூர் மீரான் சாஹிபு ஆண்டகை அவர்களின் காரண சரித்திரம்.

விஷய அட்டவணை.

நெ.	விஷயம்.		பக்கம்.
1	நாயகமவர்களின் வம்ச பாரம்பரை	...	1
2	நாகை நாயகர் உதயஞ் செய்த சரித்திரம்	...	2
3	அமுது மீட்டியும் அரிசியியற்றியும் புசித்த சரித்திரம்	...	4
4	துறவியர் சரித்திரம்	...	5
5	குருவியர் சரித்திரம்	...	7
6	ஹஸ்ரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா சாஹிபு அவர்கள் உபதேசம் பெற்ற சரித்திரம்	...	11
7	ஷில்லாவிலிருந்த சரித்திரம்	...	12
8	ஹஜ்ஜியற்ற குருவினுத்தாரமான சரித்திரம்	...	13
9	மீருன் சாஹிபவர்கள் மாணிக்கபூர் போன சரித்திரம்	...	14
10	ஹஜ்ஜு யாத்திரை போன சரித்திரம்	...	16
11	செய்யிதுனா யூசுபு சாஹிபவர்களுற்பவித்த சரித்திரம்	...	17
12	முனிவர்கள் வழிபடு சரித்திரம்	...	20
13	பாகளித்த சரித்திரம்	...	22
14	குடகு தேசத்தின் நதி கடந்த சரித்திரம்	...	24
15	புத்து புனலருந்துஞ் சரித்திரம்	...	26
16	ஜாபா ஜோகி மரணித்த சரித்திரம்	...	27
17	தபதியன் பிணி நீக்கும் சரித்திரம்	...	29
18	போர்புரி சரித்திரம்	...	31
19	ஹஜ்ஜு செய்த சரித்திரம்	...	32
20	மதீனா முனவ்வர் போன சரித்திரம்	...	34
21	திருவாக்கு பெற்றது	...	35
22	கொழிஞ்சிக்கனி பெற்றது	...	37
23	பள்ளி கட்டியது, மரக்கலம் தானஞ் செய்தது	...	38

என்.	விஷயம்.		பக்கம்.
24	தோன்றலைக் கண்ணுற்றதும் புத்திரர்வந்து சேர்ந்ததும்	...	40
25	ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் சேம நிஷ்டை புரிந்த சரித்திரம்	...	45
26	பொன்னாணி போன சரித்திரம்	...	48
27	பட்ட மரம் தழைத்தது	...	50
28	மஹல்ல தீவு புக்கிற சரித்திரம்	...	51
29	ஜின்னை யீடேறித்த சரித்திரம்	...	53
30	பாவா ஆதம்மலையை தெரிசித்த சரித்திரம்	...	57
31	கீழக்கரை சேர்ந்ததும் பட்டணமாரி நகர் புகுந்ததுமான சரித்திரம்	...	59
32	காயற் பட்டணம் புக்கிய சரித்திரம்	...	62
33	இடபம் உயிர் பெற்ற சரித்திரம்	...	63
34	நத்தம் புக்க சரித்திரம்	...	65
35	பைசாசங்களழிபட்ட சரித்திரம்	...	67
36	தோலுக்கு நாணயமளித்த சரித்திரம்	...	69
37	பொதியமலையைக் கண்ணுற்ற சரித்திரம்	...	70
38	திருச்சி நத்தஹு வலியுல்லாவைத் தரிசித்த சரித்திரம்	...	73
39	தஞ்சை ராஜனுக்கு பிணி தீர்த்த சரித்திரம்	...	75
40	தோராம் பேட்டை புக்கிய சரித்திரம்	...	78
41	கூத்தாநூருக்குப் போன சரித்திரம்	...	80
42	திருவாரூருக்குப் போன சரித்திரம்	...	81
43	எருதருளிய சரித்திரம்	...	83
44	மேலை நாகூருக்கு போன சரித்திரம்	...	84
45	தஞ்சை ராஜன் நாகூரில் ஸ்தலமிட்டது	...	86
46	கிலுறு அலைஹிஸ்ஸலாமை கண்ட சரித்திரம்	...	88
47	சித்திர கூடம் கண்ட சரித்திரம்	...	90
48	பற்கொம்பை தளிர்ப்பித்த சரித்திரம்	...	93
49	மணம் பொருந்தின சரித்திரம்	...	94
50	தருணைச் சேரி புக்கிய சரித்திரம்	...	98
51	புத்துகள் பேசிய சரித்திரம்	...	100
52	மணம் புரிந்த சரித்திரம்	...	105
53	சிறு கீரை பாலாக்கிய சரித்திரம்	...	107

நெ.	விஷயம்.	பக்கம்.
54	ஸ்தனங்களை மாற்றி மீட்டிய சரித்திரம் ...	108
55	கற்பாரிற் பொறுத்த கப்பலை மீட்டிய சரித்திரம் ...	110
56	கள்ளுக் குருவிகளுக்குச் சீட்டுவிட்ட சரித்திரம் ...	112
57	கப்பல துளையை கண்ணாடியா லடைத்த சரித்திரம் ...	114
58	மழையை வருவித்ததும் பச்சை கிராம்பு அழைப் பித்ததும் ...	116
59	காணிக்கை நிலைத்த சரித்திரம் ...	118
60	பாப்பாலூர் புக்க சரித்திரம் ...	122
61	இராயகுஞ்சாலி மறைக்காயரின் பிணிமாற்றிய சரித்திரம் ...	124
62	வாஞ்சூர் புக்க சரித்திரம் ...	127
63	புளியந்தரு வசனித்த சரித்திரம் ...	128
64	செங்குவளைமலர் தோற்றிய சரித்திரம் ...	129
65	வைப்பருளிய சரித்திரம் ...	130
66	ஆண்டவரவர்களின் வபாத்து ...	132
67	மறைந்த மூன்றும் நாள் நடந்த சரித்திரம் ...	139
68	தபோதனர் புறப்படு சரித்திரம் ...	142
69	கந்தூரி நடப்பித்த சரித்திரம் ...	144
70	இராய குஞ்சாலி மறைக்காயர் மண்டப மியற்றிய சரித்திரம் ...	148
71	ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு ஆண்டவரவர்களின் புத்திரர்கள் விவாக சரித்திரம் ...	149
72	ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்களின் வபாத்து ...	151
73	பாந்தன் நகரதிபன் போர்வை யனுப்பிய சரித்திரம் ...	153
74	கொலைமாற்றி இரட்சித்த சரித்திரம் ...	154
75	பஞ்சமாற்றிய சரித்திரம் ...	158
76	பணிவிடை செய்தவர்க்குப் பணமருளிய சரித்திரம் ...	160
77	காரணக் குருவியால் கண்ட மாறுபட்ட சரித்திரம் ...	161

தொ.	விஷயம்.	பக்கம்.
78	சமைத்துண்ட சேவல் வயிற்றில் கூவிய சரித்திரம் ...	163
79	குருடு மாற்றி இரக்ஷித்த சரித்திரம் ...	167
80	தரியா பிணி தனை மறந் தழிந்த சரித்திரம் ...	168
81	ஷெய்கு ஹைத்திக்குல்லா வெருட்சி யுற்றோடிய சரித்திரம் ...	171
82	பாவா ரூவுத்தருக்கு சந்ததியுண்டான சரித்திரம் ...	172
83	செவியிற் புகுந்திருந்த இலையான் றலையறுந்து விழுந்த சரித்திரம் ...	174
84	ஊமையும் குருடு மாற்றிய சரித்திரம் ...	175
85	ஓலைச் சுருள் பாம்பான சரித்திரம் ...	176
86	பொன்னும் அரிசியும் புதுமையா யளித்த சரித்திரம் ...	177
87	முதல் மினாறாவும், சில மண்டபமு மியற்றிய சரித்திரம் ...	178
88	தேங்காயில் கொம்பு முளைத்த சரித்திரம் ...	180
89	2-ம் மினாறாவும் 3-ம் மினாறாவும் இயற்றிய சரித்திரம் ...	182
90	கிட்டா நகரத் தரசனின் குருவை பன்றிருபமா யமைத்து மாற்றிய சரித்திரம் ...	183
91	4-ம் மினாறாகட்டிய சரித்திரம் ...	186
92	சாஹிபுமார்களில் ஒருவருக்கு குன்ம வாய்வு தீர்த்த சரித்திரம் ...	187
93	5-ம் மினாறாவும் ஒரு மானிய கிராமமு முண்டான சரித்திரம் ...	190
94	துளசி மகாராஜா மானியங்கள் விடுத்த சரித்திரம் ...	191

ஹஸரத் நாகூர் மீரான் சாஹிபு ஆண்டகை
அவர்களின் காரணச் சரித்திரம்
விஷய அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஹலரத் நாகூர் மீறான் சாஹிபு ஆண்டகை அவர்களின் காரணச் சரித்திரம்.

நாயகமவர்களின் வம்ச பரம்பரை

சர்வரே ஆலம் செய்யிதுல் முர்ஸலீன், இமாமுல் முத்தகீன், முஹம்மது முஸ்தபா, அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தவப்புதல்வியாகிய மாதருக்கரசான காத்தூனே ஜன்னா பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களும், அபூத்தாலிப் அவர்களின் நற்றவந்திரண்டுதித்த புத்திர சிகாமணி அமீருல் முஃமினீன் ஹஸரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் சுபசோபனத்துடன் மணமகிழ்ந்தீன்ற புதல்வ சிகாமணி ஹஸரத் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு, அவர்களின் புதல்வர் செய்யிதினா இமாம் ஹஸனில் முஸன்னா, அவர்களின் புதல்வர் செய்யிதினா அப்துல்லாஹில் மஹ்லு, அவர்களின் புதல்வர் செய்யிதினா மூஸல் ஜவ்ன், அவர்களின் புதல்வர் செய்யிதினா உபைதுல்லா ஸானீ, அவர்களின் புதல்வர் செய்யிதினா மூஸா ஸானீ, அவர்களின் புதல்வர் செய்யிதினா தாவூத், அவர்களின் புதல்வர் செய்யிதினா முஹம்மது ஷாஹிது, அவர்களின் புதல்வர் செய்யிதினா எஹ்யஸ் ஸாஹித், அவர்களின் புதல்வர் செய்யிதினா அப்துல்லா ஜைலீ, அவர்களின் புதல்வர் செய்யிதினா கந்தகூஸ், அவர்களின் புதல்வர் செய்யிதினா மூஸா, அவர்களின் புதல்வர் செய்யிதினா அபூசாலிஹ் மூஸா ஜங்கி தோஸ்த்து, அவர்களின் புதல்வர் அபூ முஹம்ம தென்று சைக்கினை பெயர் கொண்ட செய்யிதினா குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ ரலியல்லாஹு அன்ஹு, அவர்களின் புதல்வர் செய்யிதினா தாஜுத்தீன் அப்தூர் றஸ்ஸாக், அவர்களின் புதல்வர் செய்யிதினா இமாதுத்தீன் சாலிஹ் நஸ்று, அவர்களின் புதல்வர் செய்யிதினா அபீ நஸ்று முஹைய்யத்தீன், அவர்களின் புதல்வர்

செய்யிதினா முஹம்மது ஒலஹஸூறு அஹ்மது, அவர்களின் புதல்வர் செய்யிதினா ஹஸன் பக்தாதிய்யி, அவர்களின் புதல்வர் செய்யிதினா முஹம்மது பக்தாதிய்யி அவர்களின் புதல்வர் செய்யிதினா அலீ, அவர்களின் புதல்வர் செய்யிதினா மூஸா, அவர்களின் புதல்வர் செய்யிதினா ஹஸன் குத்தூஸ் சாஹிபு, அவர்களின் புதல்வர் செய்யிதினா வகுத்பினா ஷாஹுல் ஹமீது மாணிக்கப் பூரிய்யின் நாகூரீ றலியல்லாஹு அன்ஹும் அஜ்மயீன்.

நாகை நாயகர் உதயஞ் செய்த சரித்திரம்.

ஹலரத் ஹஸன் குத்தூஸ் சாஹிபவர்கள் மிகுமாட்சிமையுடன் மாணிக்கப்பூ ரென்றும் நல்வளஞ் செறிந்த முதூரதனில் ஹலரத் செய்யிது ஹமீதுத்தீன் மாணிக்கப்பூரி யவர்களின் கண்மணிப் புதல்வி யாகிய பத்தினிப் பெண்களுக்கரசியான பாத்திமா நாயகியை மணந்து வாழு நாளில் அல்லாஹு தஆலா மிகுந்த கிருபையுடன் ஹிஜ்ரி, தொளாயிரத்தி பத்தாம் வருஷத்தில் ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்களைத் தன் சத்துவங் கொண்டு ஹலரத் ஹஸன் குத்தூஸ் சாஹிபவர்களில் நின்றும் புறத்திப்படுத்தி மாட்சிமை தங்கிய மேற்சொன்ன பாத்திமா நாயகியவர்களின் அகட்டிற்றரிபடச் செய்தான். சுல்தான் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்கள் தாயாருடைய வயிற்றில் தரிபட்ட இரவில் அல்லாவுடைய உத்தாரப்படி பாத்திமா நாயகி யிடத்தில் கிலுறு அலைஹிஸ்ஸலாம் வந்து, பாத்திமாவே! அல்லாஹு தஆலா உமக்குச் சலாஞ் சொல்லி மேன்மை தங்கிய குத்பை உம்முடைய அகட்டிற் றரிபடுத்திய நன்மாராயத்தையும் சொல்லச் சொன்னானென்றுரைத் தகன்றார்கள். ஹலரத் மீரான் சாஹிபவர்கள் பாத்திமா நாயகியின் கர்ப்பத்திற் றரித்த ஆறுமாதம் அல்லாஹு தஆலா கிலுறு அலைஹிஸ்ஸலாமை அழைத்து நீர் பாத்திமாவி னிடத்தில் சென்று அவரின் குவளறையிற் றங்கியிருக்கும் நமது ஒலி அப்துல் காதிறுக்கு நம்முடைய சலாம் சொல்லு மென்றான். அவர்க ளவ்வாறு சென்று பாத்திமாவே, உம்முடைய கர்ப்பத்தி லிருக்கும் வலியுல்லா வுக்கு அல்லாஹு தஆலா ஸலாம் சொல்லச் சொன்னானென்று சொல்லி தங்களின் சலாமுஞ் சொல்லிப் போனார்கள். அது கேட்டு அம்மா

அவர்களாச்சரிய மடைந்து சுபுஹானுடைய நேரமானதால் பாத்திமா நாயகி காலைக் கடன் கழிப்பதற்காய்க் கலசத்தைக் கையிலெடுத்துத் தாம்பிற் பூட்டிக் கூவலிற்றாழ்த்தி நீரள்ளி மேலெடுக்கும் போது கலச மின்றி கயிறு மாத்திரம் வந்தது. அது கண்டு பாத்திமா நாயகி திகைத்து, தோண்டி கிணற்றில் போய் விட்டதே, சுபுஹானுடைய நேரந்தப்பிப் போகின்றதே, நாமெவ்விதம் ஒலுச் செய்து காலைக்கடன் கழிப்போமென் றெண்ணி மனமயங்கும் போது அம்மா அவர்களின் அகற்றில் நின்றும் என்னைச் சுமை கொள்ளும் என் அன்னையரே, தாங்கள் கவலையுறேல் நீருடன் றோண்டி யுமது முன் பிருக்கின்றது, நோக்கு மென்ற சத்தங் கேட்டு, அம்மா அவர்கள் பார்க்கத் தண்ணீருடன் தோண்டியு மிருப்பதைக் கண்டு புதுமையாகி மனமகிழ்ந் தெடுத்து ஒலுச் செய்து சுபுஹா தொழுது வல்லவனைப் புகழ்ந்தாற் றார்கள். இவ்வாறு காரணம் வளர ஹலரத்தவர்கள் தரித்திருக்கின்ற கர்ப்பமும் வளர்ந்து ஒன்பது மாதமாயிற்று. அந்நாள் ஓரிரவில் மஜூசித் திருடர்கள் பெருங் கூட்டமாக வந்து மாணிக்கப்பூரை வளைத்து மனிதர்களை வெட்டிக்குத்தி யழித்து சோரஞ் செய்வதை பாத்திமா நாயகி யறிந்து அச்சங்கொண்டு தங்கள் வீட்டுக் கதவை மூடி முகஞ் சாம்பி நின்றார்கள். அவ்வேளையில் ஹலரத்தவர்கள் கர்ப்பத்தில் நின்றும் தாயாருடைய கண்ணுக்குத் தோற்றும் படி வெளியாகி வாலிப ரூபங் கொண்டு அம்மா அவர்களடைந்த கதவைத் திறந்து துரிதமாக வெளிவாயலிலாக அல்லாஹு தஆலாவின் குதறத்தினால் சொல்லுதற் கரிய ஒளி விளங்கிய வாள் வொன்றை முதுகிற்றாங்கி ஐங்கதிகளை யுடைய பஞ்சகல்யாணிக் குதிரை யொன்று முதுபிலாக ஹலரத்தவர்கள் அக்குதிரை மீதேறி அவ்வாளைக் கையிலேந்தி அத்திருடர்கள் மேற் சென்று அடர்ந்து வெட்டி சின்னபின்ன மாக்கினார்கள். அது கண்டு அந்த மஜூசிக் காபிர்கள் பயந்து நடுநடுங்கி மிக ஒடுங்கி நாம் இவரோ டெதிர்க்கில் நம்மனைவரையும் வெட்டிப் பிளந்து விடுவாராதலால் நாமவரை மன்றாடி நமது உயிரைத் தப்பித்துக் கொள்வதே நல மென்று எண்ணி, எல்லோரும் வந்து ஆண்டவரவர்களின் பாத கமலங்களில் சிரசை வைத்து மிகவுங் கெஞ்சி, ஆண்டகையே! நாங்க ளறியாமற் செய்த குற்றத்தைப் பொறுத்து இரட்சிக்க வேண்டு மென்று மன்றாடி நிற்பதைக் கண்டு ஹலரத்தவர்கள் கிருபை கூர்ந்து இனி யொருக்காலுந் திருட்டுத் தொழில் செய்கிறதில்லை யென்ற வார்த்தைப் பாட்டை அத்திருடர்களிடத்தில் வாங்கிக் கொண்டு

அவர்களை அந்நகர் நீங்க உத்தாரங் கொடுத்தனுப்பி விட்டு, தங்கள் மனைசார பாத்திமா நாயகி கண்டு இக்காரணச் சிசுவிற்கு நாம் சங்கை செய்ய வேண்டு மென்று எண்ணினார்கள். அதற்குள் ஹலரத்தவர்கள் மறைந்து கர்ப்பக் கோளிலாகி விட்டார்கள். இவ்வதிசயங்களைக் கண்ணுறக் கண்ட பாத்திமா நாயகி யவர்கள் தங்களின் பிராண நாதராகிய ஹலரத் ஹஸன் குத்தூஸ் சாஹிபிடத்திற் சொல்ல அவர்கள் கேட்டு மகிழ்ந்து தன் மனைவியை நோக்கி, இப் புதுமை விளைத்தது உமது வயிற்றி லிருக்கும் பிள்ளையாகும்; அவர் மிகுந்த காரணங்களை யுடையவராகவும் இரட்சகராகவும் உம்மிடத்தில் இருந்து வெளியாவ ரென்றார்கள். அது கேட்டு பாத்திமா நாயகி மனமகிழ்ந்தார்கள். பின்பு அல்லாஹ்வுடைய கிருபையினால் அம்மா அவர்களின் கர்ப்பமுற்று உதரங்கனிந் திளகினதால் தாயாரவர்களுக்கு சோபதாபமின்றி நற்றவங்களெல்லாந் திரண்டு உதித்தது போலும் நற்கிருபைக ளெல்லாம் ஓர் உருவெடுத்தது போலும் ஆரணமுழங்க காரண விளங்க பூரண நாயகர் தாரணியி லுதித்தார். செப்பிது ஸால் தான் ஷாஹுல் ஹமீது மீறான் ஸாஹிபு ஒலியுல்லா பிறந்தார்கள். தாதியர் மூப்பியர் கூடிப் பிள்ளைக்குச் செய்யுஞ் சடங்குக ளெல்லாஞ் செய்து தாயாரிடத்தில் கொடுக்க வாங்கி மடிமிசைவைத்து கண் குளிர நோக்கி புத்தி, முத்தி, சித்தி, பத்தி, வெற்றி இவைகளைப் புகட்டு மாறு தாயார் மாரமுதூட்டி ஏழாம் நாளில் மிகுந்த சிறப்புடன் காப் பிட்டு அப்துல் காதிரென்ற திருநாமமு மிட்டார்கள்.

அமுது மீட்டியும் அரிசிலியற்றியும் புசித்த சரித்திரம்.

ஹலரத் மீறான் ஸாஹிபவர்களை தாய் தந்தை யிருவ ருயிரினு மிகக்காத்து வளர்த்து வருங்காலை ஹலரத் தவர்களுக்குத் தாயார் பாற் குடி மறப்பிக்குமுன், தாங்களே மறந்து விட்டார்கள். இவ்வாறதிசயம் பிறக்க மதலைச்சொல் விளங்கி சிறடி நடைகொள்ள ஹலரத் தவர்களுக்கு வயது மூன்று நிறப்பமானபோது ஒரு நாள் தாயாரவர்கள் பால் காய்ச்சுவதைக் கண்டு, "தாயே! அப்பாலை யெனக்குத் தாருங்கள்" என்று கேட்க, பாத்திமா நாயகி ஓர் பாத்திரத்தில் அப்பாலை வார்த் தார்கள். கைதவறிப் பால் முற்றும் அடுப்பில் கவிழ்ந்து போனதால்

தாயார் மலைத்து நின்றார்கள். அதுகண்டு ஹலரத்தவர்கள், "என் தாயாரே! தாங்கள் கவலையுறாது தங்கள் முபாறக்கான கரத்தை அடுப்பி லிட்டு அப்பாலை யள்ளி யெடுங்கள்" என்று சொல்ல, தாயாரவர்கள் உடனே கையை யிட்டு அள்ள, கவிழ்ந்தபா லவ்வளவுந் தூய்தாக மீண்டது. பாத்திரத்தி லிட்டு, ஹலரத் தவர்களிடத்திற் கொடுக்க வாங்கிப் புசித்தார்கள். அதுகண்டு அன்னையுந் தந்தையும் அகமகிழ்ந் தார்கள். இவ்வாறு வெகு புதுமைகள் துலங்க வளர்ந்து ஹலரத் மீறான் சாஹிபவர்களுக்கு ஏழு வயது நிறைந்தபோது ஹலரத் மீறான் சாஹிபு அவர்கள் ஒரு நாள் பள்ளியிற் சென்று தனிமுதற் கடவுளை மனதில் தியானித்து வாக்குமனமு மொன்றாய் ஐம்புல னொடுக்கி உள்ளத்தை யோர்நிலையிலாக்கித் தொழுது மீண்டு தங்களில்லிற் சென்று தாயாரை நோக்கி, "என் மாதாவே! எனக்குப் பசியா யிருக்கிறது, வஜீபனந் தாருங்கள்" என்க தாயார் ஹலரத்தவர்களின் மதியனைய முகத்தைப் பார்த்து, "என் மகனே! கண்ணே கண்ணின் மணியே! அரிசி கழுவி அடுப்பின் மேலேற்றி யிருக்கின்றது, நீ கொண்டு வர ஆளனுப்பி யிருக்கின்றேன். சற்றே பொறுதி செய்து கொள்ளும்; வெகு சிக்கிரத்தில் வேகவைத்துத் தருகிறேன்" என்க, ஹலறத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்கள் அன்னையரைப் பார்த்து, "என் தாயாரே! என் பசியறிந்த நாயன் எனக்கு வஜீபனந் தருவான், அடுப்பி லிருக்கும் பாண்டத்தை திறந்து பாருங்கள். சாதஞ் சமைத்திருக்கும் எனக்குத் தாருங்கள்" என்க, பாத்திமா அம்மா அவர்கள் பானையைத் திறந்து பார்க்கு மிடத்தில் கழுகிவைத்த அரிசி சோறாகி யிருக்கக் கண்டு அகமகிழ்ந்து பாத்திரத்திலிட்டு மகனுக்கீய, ஹலறத் மீறான் சாஹிபவர்கள் புசித்துப் பசியாறினார்கள். பாத்திமா நாயகி இவ்வதிசயங்களைக் கண்டு புதுமையாகி தன்புருட நாயகரான ஹலறத் ஹஸன் குத்தூஸ் சாஹிபவர்களிடத்திற் சொல்லி இருவரும் ஆச்சரியமடைந்து அல்லாஹு தஆலா, ஒரு ஒலியை நமக்குப் பிள்ளையாய்த் தந்திருக்கிறு னென்று மகனை முகந்து கொண்டு ஹக்கைப் புகழ்ந்து பிள்ளையளவில் உள்ளச்சம் வைத்து நடந்தார்கள்.

துறவியர் சரித்திரம்.

ஹலறத் மீறான் சாஹிபவர்கள் பூரணச் சந்திரோதயம் போல நாட்குநாள் காரணம் வளரக் காயமும் வளர்ந்து வயது பதினெட்டாகி

யது. நிந்தை, வஞ்சகம், பொய், மாறுபாடு இப்பேர்க்கொற்ற கெடுதலையுடையவர்களின் கண்டங்களைத் தறிக்கும் கருவிபோலும் அன்னை தந்தையர்க் கருமருந்தாகவும் வளர்ந்த ஹாலறத்தவர்கள் வேதாகமங்களையும் வல்லமெய்க் கடவுளிற்கு வழிபடுமறிவும் மனவெனுங் கடலை மட்டுப் படுத்துமறிவும் முத்திபெறு மூதறிவும் கெடுதி செய்வாரின்ன யிழிவுறுவாரென்பதையும் உலக மாயையின் இயல்புகளையும் அகமிது புறமிது வென்றவதிவையும் மொழிவதிது மொழியாததிது என்பவைகளையும் மானிடர் முதலிய ஜீவஜந்துகள் உலகத்திற் பிறந்திருக்குஞ் சூட்சங்களையும் இவ்வகையுறும் அநேக அறிவுகளைக் கற்றும் ஹாலறத்தவர்களுடைய எண்ணத்தில் மண் தண்ணீரிரண்டும் வைத்துக்கொண்டு வித்தில்லா திருப்பவன் என்னப் பலனைப் பெறுவானென் றுதித்தது. அந்நினைவே மீறியதால் தந்தைதாயாரை யடுத்துத்தான் தொழுது போற்றி மகத்துவந்தங்கிய வாயைத்திறந்து, "என் மாதா பிதாவே! மொழிவதற்கும் வரைவதற்கு மடங்காத பெருநிதிகளை யுடையவர்களாகினும், சூரியனைப் போலொத்த அரசர்களாயிருக்கினும், அறிவிற் கடல் போன்றவர்களாயிருக்கினும், மலைகளிற் சென்று சருகுகளைத் தின்று தபமியற்றின வர்களாயினும், வானிற் பறக்கத் தத்துவம் பெற்றவர்களாயினும், சிறிச்சிறந்த வைடய்குகளை தெரிசினை பண்ணுவிடில் பரிசு பெறமாட்டார்கள். இஃதன்றி ஓய்வில்லாது ஜெபமணி யுருட்டுகினும், துற்செயலன்றி நற்செயலை புரிகினும், ஆகமங்களைத் தெரிகினும், காலகாலமெல்லாம் வணக்கத்திற்றரிபடுகினும், மேகங்களாற் சொரிகின்ற மழையின் துள்ளிகளை இத்தனை யென்று கணிக்க வல்லமை பெறுகினும், வெளியாகியும் வெளியாகாமல் மறைந்தும் மறையாதிருக்கும் ஒரு பெரிய வஸ்துவை இன்னதென்று அகக்கண்ணால் அறியாதவர்கள் ஊமையர், செவிடர், குருடர், முடவர்களைப் போல் தடுமாறி வன்னியிற் சூழ்ந்து வாதைக் குட்படுவது சகஜம். ஆதலால், அவ்வழி காட்டத் தக்க ஆசானைத் தேடி உபதேசம் பெற்றுய்க நான் நாடினேன். நீங்கள் இருவரும் எனக்கு நல்விடை யருளவேண்டும் என்றார்கள். இச்சொற் கேட்டு தாய் தந்தையர் மிக மகிழ்ந்து அகங் குளிர்ந்து புயங்கள் பூரித்து மைந்தனை நோக்கி, "எங்கள் கண்ணே! கண்ணின் மணியே! கருத்தே! கருத்தினருவே! உயிரே! உயிரி னிருக்கையே! பிள்ளைக்கனியே! பேரழகே! வேதக்கடலே! வெண்முத்தே! போதக் கடலே! பொறைக்கடலே! எங்களாகங்களுக் கருமந்தே" என்று ஆசரித்து "நீர் எங்கே சென்று யாரிடத்திலே முரீதாக வேணுமோ அங்கே

சென்று அவரிடத்து * முரீதாகும்" என்று ஆசிகூறி அனுப்பினார்கள். அவ்வுத்தாரம் பெற்ற ஹஸரத் ஷாஹமீது சாஹிபு ஆண்டவரவர்கள் மாணிக்கப் பூவென்னுந் தன்னகர் நீங்கி வனவாசமாகி காடுங் கானியாறுகளும் மலையு மலைச் சாரல்களுங் கடந்து நடந்து நல்வளந் தங்கிய, குவாலீ றென்னும் பட்டணத் தருகாய் காட்டில் ஒழிந்த பள்ளி யொன்றிருந்தது. ஹஸரத்தவர்கள் அப்பள்ளியிற் றரித்து இந்த குவாலீறென்ற நகரில் அறிவாளர் மிகுத்திருக் கின்றார்களே நாம் யாரிடத்தில் முரீது பெறுவோ மென்கிற ஐயம் மனதிலுற்றமையால் அவ்வையந் தீரும் பொருட்டுத் தங்களெண்ணத்தை அல்லாஹு தஆலாவிடத்திற் பாஞ்சாட்டி சில காலம் † முனாஜாத்துச் செய்துக் கொண்டிருந்தார்கள். வேறொரு சொற்படி பத்து வருடம் வரையில் முனாஜாத்துச் செய்ததாகவும் வருகின்றது. இவ்வாறிருக்கும் காலத்தில் ஓர் நாள் அப்துல் காதிறே நீர் குவாலீற் முஹம்மது கவுதுசாஹிபிடத்திற் சென்று முரீது பெற்றுக் கொள்ளுமென்று உருத்தோற்ற மின்றியவொரு தொனி முழங்கிற்று. அச்சப்தங் கேட்ட ஹலறத் மீரான் சாஹிபவர்கள் அகமிக மகிழ்ந்தார்கள்.

குருவியர் சரித்திரம்.

ஹலறத் கதிறுத்தீன் சாஹிபவர்களின் நற்றவந்திரண்டிப்புவியினி லுதித்த ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் சிறு வயதாயிருக்கும் போதெல்லாம் மேனகராற்றி லொலித்தோடுகின்ற தண்ணீரை தேவ தூதர்கள் கொண்டு வந்து கொடுக்க வாங்கி, ‡ ஒலுச் செய்து தொழுது கொள்வார்கள். இவ்வாறு நடக்கின்றதை தந்தை தாயாரறிந்து எங்களருமை மகனாரே! உமக்கு ஒலுவிற்காகத் தண்ணீர் கொண்டு வந்து தருபவர்களா ரென்க, ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் மலக்குகளென்க, தந்தை தாயார் கேட்டானந்தமாகினார்கள். இதுபோல் மிகுதவங்களை விளக்கும் ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்களுக்கு வாலிபம் வந்துற்றபோது ஒரு நாள் தங்களிருதயக் கமலத்தில் குரு உபதேசம் பெற வேணுமென்ற எண்ணங் கொண்டதால், தந்தை தாயின் உத்தாரம் பெற்றுக் கொண்டு குவாலீ ரென்னும் நகர் நீங்கி ஓராசானைத் தேடிப் பரதேசியாகி வனவாசஞ் செய்து பின்னோர் நகர் சென்று ஹலரத் காஜிகுலூறு ஷெய்கு

---

* முரீது—உபதேசம். † முனாஜாத்து—வேண்டுதல். ‡ ஒலுவென்பது ஆனுஷ்டானஞ் செய்வது போலவா யிருக்கும்.

லுஹறூற் சாஹிபு அவர்களைக் கண்ணுற்று அவர்களை யடிக்க அவர்கள் இவர்களை நோக்கி முஹம்மதே! நீர் வந்த காரியம் மெனக்குத் தெரியும் உமக்கு முரீது கொடுக்க நான் பாத்திரனல்ல. என்பீர் ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபு அவர்களிடத்தில் ஏகுமென்க, அவ்வாறவர்களேக, ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபு அவர்கள் முஹம்மதே! நீர் ஷெய்கு லுஹறூறிடத்திற்முன் செல்லுமென்க, அங்கே அவர்கள் மீண்டும் ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபவர்களிடத்திலனுப்ப, ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபு அவர்கள் அங்கு செல்ல, ஹலறத்து ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபு அவர்கள் இவர்களை நோக்கி முஹம்மதே! நீரிங்கிரு மென்று சொன்னூர்கள். அப்போது ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபவர்கள் ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபவர்களை நோக்கி எல்லோருக்குமிட்ட பணிவிடை போலெனக்கு மொரு பணிவிடை கட்டளை யிடவேண்டு மென்க, மற்றைய ஐம்பது பெயர்களைப் போல் நீரும் விறகொடித்துக் கொண்டு வாருமென்க, அவ்வாறிவர்கள் மற்றவர்க்கு முன் கொணர்ந்த ஒரு கட்டு விறகினல் அந்த ஐம்பது பெயர்க ளெப்போதுங் கொண்டு வருகிற ஐம்பது கட்டு விறகு கொண்டு ஒரு நாள் முழுதுஞ் சமையல் செய்கிற வஸ்துக்களை யெல்லாம் நண்பகலிற்குள் சமைத்து பாதி மீதியாகி விட்டதை அங்கு சமையல் செய்கின்றவர்கள் கண்டு ஆச்சரியமடைந்து, ஹலரத் ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபவர்களிடத்தில் விண்ணப்பஞ் செய்ய, அவர்கள் கேட்டு மகிழ்ந்து முன்னுள்ளவர் கொண்டு வரும் இந்தனந்தீ மூட்டுவதில் காலை தொடுத்து மாலை வரையிலும் நெடும் பொழுதாகி சமையலாகிறதுந் தவிர்ந்து இந்தனமும் பாதிக்குக் குறையாத்துந் தவிர நண்பகலிற்முனே சமையலாகிறபடியால், ஒரு வேளை புசிக்கின்றவர்களுக் கெல்லாம் இந்த முஹம்மதென்கிற பிள்ளையின் பொருட்டால் இரு வேளை சமையல் செய்து ஒருவருக்கும் பசித்தாப மில்லாது கொடுக்க சமையல்காரர்களுக்கு உத்தரவு செய்தார்கள். அவ்வுத்தாரப்படி சமையல்காரர் செய்ய மற்றவர்கள் இரண்டு வேளையும் புசித்து முஹம்மது கவுது சாஹிபு ஆண்டவர்களை வாழ்த்தினூர்கள். இவ்வாறு நடக்கிற போது ஒரு நாள் ஹிதாயத்துல்லா சர்மஸ்து சாஹிபு ஆண்டவர்கள் ஹலரத்து முஹம்மது கவுது சாஹிபு அவர்களை நோக்கி ஓ, சிறு பிள்ளையே! உம்மிடத்தில் நான் வேலை வாங்கிக் கொண்டேன். நானுகிறவன் மஸ்தான். நமது பீடர் ஷெய்கு லுஹறூரிடத்தில் நீர் சென்று உபதேசம் பெற்றுக் கொள்ளு மென்க, அவ்வுரை கேட்டவர்கள்

அவ்விடம் நீங்கி நடக்கும் பாதையிலிருக்கின்ற மலையினருகாய் போகும் போது அசரீரி வாக்கியமாய் முஹம்மது கவுதே! யென்றழைத்த ஒரு சத்தங் கேட்டபோது நமது நாமத்துடன் மற்றொரு நாமமிட்டழைத்த தாரென்றறிவோ மென்ற எண்ணத்துடன் நான்கு திக்கிலும் பார்த்து விட்டு அம்மலை மீதிலேறி நோக்குமிடத்து அங்கு ஒரு மனிதரைக் காண்க இவர்களை அவர்களுங் கண்டார்கள். அந்த க்ஷணமே அம்மலையி லிருந்தவர்கள் மவுத்தை யடைந்தார்கள். அது கண்ட முஹம்மது கவுது சாஹிபு அவர்கள் திகைத்து நிற்கும்போது ஒருவர் மையித்துக் குரிய கபனுடை முதலியவைகள் கொண்டு சில ஜனங்களுடன் வந்து அம்மையித்துக்குச் செய்யுஞ் சடங்குகள் செய்து மலையைக் கெல்லி யடக்கஞ் செய்தார்கள். அதன் பின்னர் முஹம்மது கவுது சாஹி பவர்கள் அங்கடைந்த மனிதரை யடுத்து நோக்கி, என்னை கவுதென் றழைத்ததார், மவுத்தானதார், கபன் முதலியவைகள் கொணர்ந்ததார், நீங்களாரென்க, அம்மனிதர்கள் உம்மை கவுதென்றழைத்தது ஆண்ட வன், மவுத்தை யனுபவித்தது ஹிதாயத்துல்ல சர்மஸ்து சாஹிபவர்கள், கபன் முதலியவை கொணர்ந்தது கிலுறு அலைஹிஸ்ஸலாம், நாங்களோ தாங்கள் சிறுபிள்ளையா யிருக்கும்போது தினந்தோறும் ஒலுவுக்குத் தண்ணீர் கொணர்ந்து தந்தோமே அந்த மலக்குகளா யிருக்கும். எங்களை யனுப்பியது, அல்லாஹு தஆலாவா யிருக்கும். தாங்கள் எங்களை நினைத்த போது வருவோமென் றிசைத்தேகினார்கள். ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபவர்கள் அம்மலை விட்டிறங்கி குருவின் மனை நோக்கி வந்தார்கள். காஜி குலூற் ஷெய்குலுகூற் சாஹிபு அவர்கள் வெளியில் நின்று முஹம்மது கவுதேவாருமென் றழைத்து மார்போடணைத்து இவர்களுக்கொரு மிசவாக்குக்குச்சியு மிவர்களின் தமையனார் ஷாஹ்றப்பூல் சாஹிபு அவர்களுக்கு ஒரு மிசு வாக்குக் குச்சியுங் கொடுத்து இக்குச்சிகளை நாட்டி அஃது தழைக்கிற வரையில் வணங்குங்களென்க, அவ்வாறே அதற்குத் தக்கவிடத்தில் நாட்டி வணங்கி வந்தார்கள். சிறிது நாளைக்குப் பிறகு ஷாப்பூல் சாஹிபவர்கள் இக்கொம்புகளை நாட்டிக்கொண்டு வணங்கிக் கொண் டிருந்தால் எந்தக் காலத்தில் இக்குச்சிகள் தழையப்போகிறது, எழுந்து வாரும் ஷெய்கிடத்திற் செல்லலா மென்க, ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் அச்சொல்லிற் கிசையாததால் ஷாப்பூல் சாஹி பவர்கள் அவர்களின் கரம்பிடித்திழுக்க அதற்கு அவர்க ளிசைந்தார்க ளில்லை. இச்சங்கதி ஷெய்கு லுஹூறு சாஹிபவர் களறிந்து இங்கு

வந்து அம்மிசுவாக்குகளை நோக்குமிடத்து, ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபவர்களின் மிசுவாக்குத் தழைத்தும் ஷாஹ்றப்பூல் சாஹிபவர்களின் மிசுவாக்கு தழைவில்லாமலு மிருக்கக்கண்டு, அல்லாஹுத் தஆலா உமக்கு மேன்மையென்ற தறஜாவை தந்திருக்கின்றானென்று காத்தைப் பற்றி உபதேசஞ் சொல்லிய பின்னர் காட்டிற்சென்று வணங்கு மென்றனுப்பிவிட்டு ஷாய்ப்பூல் சாஹிபவர்களை யழைத்துக் கொண்டு தங்கள் மனை சார்ந்தார்கள். ஹலரத் முஹம்மத கவுது சாஹிபு அவர்கள் குருவினது சொற்போல் காட்டிற் சென்று ஒரு மலை மீதாகி ஒரு பிடி வேப்பிலை புசித்ததோடு மறுபராக்கின்றி பன்னீராண்டாகத் தபமியற்றி அப்பிராக் கொழிந்து மறுநோக்கமாகும் வேளையில் ஓரிராஜ குமாரன் ஒரு மானைத் தொடர்ந்தெய்ய வந்தான். அந்நோக்கம் அவன்பேரி லாகினதால் அவன் பிரமையாகி வீழ்ந்தான் அச்செய்தி. அவ்வரசனறிந்து ஹலறத்து காஜீகுலூற் ஷெய்கு லுகூற் சாஹிபிடத்தில் சாலையத்துடன் சொல்ல அவர்கள் கேட்டு ஆனந்தமாகி நமது எண்ணப்படி நமது சீடருக்கு அல்லாஹுத் தஆலா மிகுந்த வல்லமையைக் கொடுத்தானென் றெண்ணித் தாங்கள் கோலாரி வண்டியில் ஏறிக்கொண்டு சிலர்களுடன் ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபின் இருப்பிடத்திற்கு வருவதை ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபவர்கள் தங்களின் குருவென் றறிந்து ஆசாரஞ் செய்ய வென்றெழுந்தார்கள். சரீரத்தில் சக்தியில்லாமையால் எழுந்திருக்கக் கூடாமையாகி தாங்களிருந்த மலையினின்று உருண்டார்கள். அதுகண்டு ஷெய்குலுகூற் சாஹிபவர்கள் துரிதமாக வண்டியை நடத்தினார்கள். ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்களை யடுக்கக்கண்டு திடுக்கிட்டு இவர்களுங் கீழே விழுந்தார்கள். முஹம்மது கவுது சாஹிபவர்கள் தங்களின் ஆசான் பூமியில் வீழாது புயத்திற்றாங்கிக் கொள்ள இதைக்கண்டு மற்றவர்கள் ஆச்சரியமடைந்து இருவரையும் வண்டியிலேற்றி ஷெய்குலுகூற் சாஹிபவர்கள் 150 வருஷம் ஜீவனோடிருந்து 130 குருக்களிடத்திற் பெற்றுக்கொண்ட அறிவுகளை யெல்லாம் ஹலரத்து முஹம்மது கவுது சாஹிபவர்களுக்குப் புகட்டிகிரப்பமான கிலாபத்துங் கொடுத்து ஷாஹ்றப்பூல் சாஹிபுக்கு நீர் கிலாபத்துக் கொடுமென்று ஏவி மிகுந்த றஹ்மத்துடன் வபாத்தை அனுபவித்தார்கள். ஹலறத்து முஹம்மது கவுது சாஹிபவர்கள் நல்லடக்கஞ் செய்து 4 நாள் மட்டில் அங்குறைந்து தங்கள் குருவிற்குச் செய்யுஞ் சடங்குகளெல்லாம் செய்து முடித்து விட்டு குவாலீர் சார்ந்தார்கள்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா சாஹிபு அவர்கள் உபதேசம் பெற்ற சரித்திரம்.

காதிற்கன்ஸே ஜவாயி ஆண்டவரவர்கள் பள்ளிவாயலி லிருக்கும்போது முஹம்மது கவுது சாஹிபிடத்திற் சென்று உபதேசம் பெற்றுக்கொள்ளுமென்று உருத்தோற்ற மின்றி சத்தங்கேட்டது. ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்களுந் தெரிந்து அவர்களின் மதுரசாவி லிருக்கின்றவர்களை நோக்கி ஹலரத் மஹ்பூபு சுபுஹானி ஆண்டவர்களுடைய பேரர் அப்துல் காதிறென்பவர் என்னைப்போ லெப்போதுந் தூய்தாகி ஒலுவுட னிருக்கின்றவர், அவரை என்னிடத்தில் *நசிஹத்து பெறும்படி அல்லாஹு தஆலா உத்தாரஞ் செய்தான். அவர் வருகிறார். நானு மவரை வழிபார்த்துக் கொண்டிருக்கிறே னென்றார்கள். அத்தருணத்தில் ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்கள் என்னேரமும் நேமநிஷ்டை புரிந்து தெண்டித்து ஹக்களவிற் பாக்காகி நற்கதி சேர வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களானதால் அல்லாஹு தஆலாவுடைய கிருபைதங்கிய காலகாலமெல்லாம் சிதேவித்தனம் பெற்று வல்லநாயன் குறிப்பின்றிய தொனியால் இரட்சகரென்ற அர்த்தந்தரும் கவுதென்னுந் திருநாமமிட்டழைத்த ஹலரத் முஹம்மதிபுனு கதீறுத்தீன் என்னுஞ் ஷெய்கவர்களிடத்தில் போகும்படி அல்லாஹு தஆலா கிருபை செய்தான். ஹலரத் மீறான் சாஹிபு அவர்கள் அல்லாவுடைய கிருபைக்கொண்டு உருத்தோற்ற மின்றிக்கேட்ட தொனியைக் காணிக்கையாகவைத்து நிற்க ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் புன்னகைசெய்து தலையை யசைத்துக் கொண்டு, ஷாஹுல் ஹமீதே! நீர் இரண்டு றக் ஆத்துத்தொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரால் ஹதியாச் செய்யுமென்க, ஷாஹுல் ஹமீது சாஹிபவர்கள் எல்லா நேரமும் ஒலுவுள்ளவர்களானதால் உத்திரவானவுடன் அந்நிலையிற்றனே தொழுது ஹதியாச் செய்தார்கள். ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்களுக்கு முரீது வென்கிற உபதேசஞ்சொல்லி அல்லாஹு தஆலாவுக்குச் செய்கிற பணிவிடையின் வரலாறும் உலகமாயை யிழந்த பெரியோர் களுடைய துஆவின் நேமங்களையும் வலுப்பமான திருநாமங்கள் ஓதுகிறவகையும் சங்கையான திருநாமம் திறபடி

---

* நஸீஹத்-உபதேசம்.

யாகிற அடித்தலங்களையும் ஜின்களை வசப்படுத்துகிற ஜெபங்களையும் அட்சரங்களைக் கொண்டு தக்ஸிறு அடைக்கிற விவரங்களையும் வம்பர் களை யெல்லா மடக்கி யாளுகிற வல்ல நாயனின் ஆதீனத்தார்களாகிய அவுலியாக்களின் பராக்குகள் இன்னவித மென்று நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவாயினால் ஷத்தாரிய்யா என்கிற அறிவு என்னிருதயத்திற் றங்கிய தால் பூர்வீகந் தொடுத்து காலகாலமுள்ள அறிவுக ளெல்லாம் அறிந்தே னென்று புகழ்ந்தார்களே அப்பேர்ப் பெற்ற அறிவையுஞ் சொல்லி நாலு பாதையின் ஸிக்றுகளையும் அகமியங்களையும் அறிவுகளின் புதையல்களையும் தெரியச் செய்து மனிதர்களை நேர்வழி காட்டுகிற பாத்திரவான்களுக்குச் செய்து வைக்கிறது போல் கிலாபத்துங் கொடுத்து தாங்கள் கோர்வை செய்த பூர்வீகமாகிய * ஜவாஹிறுல் கம்சா வென்கிற கிதாபையுங் கொடுத்தார்கள்.

ஷில்லாவி லிருந்த சரித்திரம்.

ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் தங்கள் இபாதத்து கானாவின் நடுவில் ஒரு மதில் வளர்த்து ஒரு சன்னலும் வைத்து பணிவிடைகளுக்காக தங்கள் வீட்டிலுள்ள தாதிகளி லிருவரையும் நேமித்து, ஹலரத்து மீறான் சாஹிபவர்களை நோக்கி ‡ கல்வத்திரு மென்றிசைத்தார்கள். மீறான் சாஹிபவர்கள் குருவினது சொற்போல் கல்வத்தி லிருந்தார்கள். நாள் தோறும் அவ்விருதாதிகளும் பணி விடை செய்து வந்தார்கள். ஒரு நாள் ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்களின் பெண்ஜாதி நாயகியவர்கள் அவ்விரு தாதிக ளிடத்தி லும் எனது புத்திரியாகிய இந்தப் பெண்ணை ஹலரத்து ஷாஹுல் ஹமீது சாஹிபவர்களுக்குக் கலியாணஞ் செய்ய நாடியிருக்கின்றே மென்றுரையென்க, அவ்விருவருமேகி அவ்வாறிசைக்கக் கேட்ட மீறான் சாஹிபவர்கள் புன்னகை செய்து இப்புவியில் விவாகஞ் செய்வ தெனக்கு இச்சையில்லை யென்றிசைத்ததுடன் அல்லாஹு தஆலா வெனக்குத் தந்திருக்கின்றதைப் பாருங்களென் றிடக்கையை யுயர்த்தி னார்கள். அவ்விரு தாதிகளின் கண்ணெதிரே ஆண்டவரவர்களின்

---

* ஜவாஹிறுல் கம்சா-ஐந்து இரத்தினம்:

‡ கல்வத்து-தனியா-யிருந்து தியானம் புரிவது

இடக்கைச் சட்டையினுள் ஒரு பூங்காவனமும் அதனடுவில் முத்தினு லொரு மாளிகையையும் அந்த மாளிகையின் நாப்பண் நாலுகின்ற நவரத் தின மழுத்தப் பெற்ற தொட்டிலின்கண் பூலோகத்திலாவது சுவர்க்கத் திலாவது உவமை சொல்லற்கரிய இரு கன்னிகைகளிருந்தாடக் கண்டு அப்பெண்ணின் சொரூப சவுந்தரியத்தா லிவ்விருதாதிகளு மயங்கி மெய்மறந்து வீழ்ந்து விட்டார்கள். அது கண்டு ஹலரத் மீரான் சாஹிபவர்கள் அவ்விருவருக்கும் நினைவுவருத்தி போகுங்களென்க, அந்தத்தாதிக ளடைந்த ஆச்சரியமாறாத நெஞ்சினராகி ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்களின் தேவியரை யடுத்து ஹலரத் மீரான் சாஹிபவர்களிசைத்த வார்த்தையையும் தாங்கள் கண்ட பெண்களின் அலங்கிர்தங்களையு மியம்பியதை ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் கேட்டு தங்களின் தேவியரை நோக்கி ஷாஹுல் ஹமீது இப்புவன வாழ்வை யிகழ்ந்து அல்லாவுடைய திருச்சமுகத்திற் பாக்கானவராச்சே! என்னுத்தாரமின்றி நீங்களே லிச்சங்கதியை அவ ரிடத்தில் பேசினீர்களென்று கோபித்துக் கொள்ள அன்று முதல் அப்பேச்சை யொருவரும் பேசாதிருந்து விட்டார்கள்.

ஹஜ்ஜியற்ற குருவி ஹுத்தாரமான சரித்திரம்.

ஹலரத் மீரான் சாஹிபவர்கள் கல்வத்திருந்து தீர்ந்து பின்னர் ஒரு நாள் ஹலரத் முஹம்மது கவுத் சாஹிபவர்கள் ஹலரத் மீரான் சாஹிபவர்களை நோக்கி மிகுந்த அன்புடன், ஷாஹுல் ஹமீதே உம்முடைய முதுகந்தண்டில் தரிபட்டிருக்கின்ற ஓராண் சிசுவின் கருவை (யகுறுசுமின் னைனி) என்கிற ஆயத்தின் படி எவ்விதமாய் வெளிப்படுத்துவீரென்க ஹலரத் ஷாஹுல் ஹமீதாண்டவர்கள் குருவை நோக்கி மிகுந்த மரியாதையுடன் தாட்சி செய்து தங்களிரு கரகமலங்களையு மேந்தி வாய் திறந்து வெளியானதையும் மறைவான தையும் முந்நடந்ததையும் இப்போது நடக்கின்றதையும் இனி மேல் நடத்தப் போகிறதையும் சகல காரியங்களையு மறிந்த ஆண்டவர்கள் தாங்களாக விருக்க தங்கள் முன் நானென் சொல்வே னென்று புறக் கான் வேதத்தில் ஆண்டவனால் சொல்லப்பட்ட (வலமியமபுனத இம்றுனல்வத்தி) என்கிற ஆயத்தை யோதிக் காட்டி அல்லாஹுவை

தஆலா இவ்வாயத்தின் பிரகாரம் இக்கருணையும் வெளியாக்கி வைப்பா னென்றார்கள். மற்றொரு சொற்படி, ஹலறத் மீறான் சாஹிபவர்கள் தங்களின் குருவாகிய ஹலறத் முஹம்மது கவுது சாஹிபவர்களை நோக்கி என் முதுகந்தண்டி லிருக்கின்ற இக்கனியின் கருவை எவ்விடத்தில் வெளியாக்குகிறதென்று வினவ, நீரெந்த விடத்தை ஆய்தாகக் கண்டீரோ அவ்விடத்தில் வெளியாக்கிக் கொள்ளு மென்றார்கள். ஹலறத் மீறான் சாஹிபவர்கள் குவாலீருக்கு வந்து பலவித கர்மங்களி லும் பத்து வருடம் நிரப்பமாயிற்று. ஒரு நாள் ஹலறத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் ஷாஹமீது ஹமீதே! நீர் பைதுல்லா வென்னும் சிறமதிக்கியனாந் தரும்பி யொழுகா நின்ற கஃபாவிற் சென்று ஹஜ்ஜு யற்றி மற்றைய தற்பலங்களை யெல்லாந் தெரிசிக்கச் செல்லுமென்று தானஞ் செய்யுந் தருணத்தில் ஒரு கூட்டத்தார் வந்து நிற்கக்கண்ட ஹலறத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் ஷாஹமீது ஹமீதே இக் கூட்டத்தாரை யறிவீரா வென்க நானறியே னென்றார்கள். ஹலறத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் இந்தக் கூட்டத்தார்கள் நீரவதரித்த மாணிக்கப்பூருக்கும் குவாலீ ரென்னு மிந்நகருக்கு மிடையிலுள்ள திருடர்கள். இப்போதிவர்கள் அக்கெடுதிகளை விட்டொழிந்து நேரான பாதையிற் கலிமாச் சொல்லி உறுதியுடன் நம்மிடத்தில் முரீது பெற நாடி வந்திருக்கின்றவர்கள். இவர்களுக்கு உம்மை முரீது கொடுக்கும் படி அல்லாவுடைய வுத்தரவுவா யிருப்பதால் இந்நான்கு தலைவர் களுக்கும் மற்றைய நானூறு பேர்களுக்கும் நீர் உபதேசஞ் செய்து பகீர்களாகி பைத்துல்லாவுடைய சபறுக்காகக் கூடக்கூட்டிச் செல்லு மென்றார்கள்.

மீறான் சாஹிபவர்கள் மாணிக்கபூர் போன சரித்திரம்.

ஹலறத் ஷாஹமீது ஹமீது சாஹிபவர்கள் குருவி னுத்திர வானவுடன் மிகமகிழ்ந்து குருசிகாமணி யவர்களுக்கு சஜதாதகிய்யத் தென்கிற சாஷ்டாங்கஞ் செய்து அக்கூட்டத்தாருடன் குவாலீரை நீங்கி நடந்து மாணிக்கப்பூர் புகுந்து தந்தை தாயாரின் பாதம் பணிந்து தங்களின் குருவாகிய ஹலறத் முஹம்மது கவுது சாஹிப வர்கள் தங்களுக்குப் புகட்டிய அமிர்த அஞ்சியமாகிய ஞானபோதம்

களின் சிறப்புகளையும் தாஜுல் முறுசலீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுதயஞ் செய்த மக்கமா நகர் சென்று ஹஜ்ஜு செய்ய வுத்தாரமானதையு மியம்பக்கேட்ட இருவரும் அனந்த சாகரத்தி லமிழ்ந்தவர்களாகி ஹலறத் மீருன் சாஹிபவர்களின் மனங்குளிரும்படி அந்நானூற்று நால்வர்களு மிருக்கத்தக்க பெரிய நந்தவன மொன்றருளி மிகுந்த ஆசாரஞ் செய்தார்கள். ஹலரத் காதிற்கன்சேஜவாய் ஆண்டவர்கள் என்னோரும் அவ்வனத்தின் கண்ணுற்ற அக்கூட்டத்தார்களுக்கு இஸ்லாமார்க்கத்தின் வரலாறுகளைப் பயிற்றிக் கொண்டிருந்து சில நேரங்களில் தாய் தகப்பன் வீட்டிற்கு வருவாகள். இவ்வாறு சில நாளியற்றியதில் அந்நானூற்று நால்வர்களும் இஸ்லாம் மார்க்கத்திற் குரிய ஜெபதபம் ஞான முதலியவைகளை யுணர்ந்துகொண்டார்கள். அப்பால் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் எல்லா கான்வாதாவின் அறிவுகளை யெல்லாங் கற்று இஜாசா வென்கிற உத்திரவும் பெற்றவர்களானதால் தாங்கள் நாடியபடி அக்கூட்டத்தார்களிற் சிலரை காதிரிய்யா பகீராக்கினார்கள், சிலரை ஷத்தாரிய்யா பகீராக்கினார்கள், சிலரை நபகாத்திய்யா பகீராக்கினார்கள், சிலரை ஜிஷ்திய்யா பகீராக்கினார்கள். இவ்வாறியற்றி அந்நான்கு தலைவர்களுக்கும் கிலாபத்துங் கொடுத்தார்கள். அக்கூட்டத்தார் அந்தந்த வழிகளிற் குரிய திக்று பிக்று முஷாஹதா முருகபா முஆனியா முகாஷபா இவ்வகையுற்ற வணக்கங்களியற்றி அந்த எண்ணத்திலே பாக்காகினார்கள். இவ்வண்ண நிகழ்காலத் தொருநாள் ஹலரத் ஹஸன் குத்தூஸ் சாஹிபவர்கள் தங்கள் குமார சிகாமணியாகிய ஹலரத் மீருன் சாஹிபவர்களுக்கு விவாகஞ் செய்யக் கருதி தங்கள் மனையை மிகவு மலங்கரித்து அழகிய பந்தலுமியற்றி அவ்வூர் மனிதர்களை யெல்லா மழைத்து விவாக முரசு முதலிய வாத்தியங்கள் முழங்கச் செய்தனர்கள். இச்சங்கதிகளை நந்தவனத்திலிருந்த ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்கள் ஞான திருஷ்டியினாலறிந்து அவ்விடம் விட்டெழுந்து தன் மனைசார்ந்து அப்பந்தல் நாப்பாணின்று அன்னையை நோக்கி என் மாதாவே! இப்பந்தல் முதலியவை எதுக்கென்று வினவ, தாயாரவர்கள் என் கண் குளிர்ந்த வாழ்வே, உம்முடைய கல்யாணத்திற்கியற்றிய சிறப்பென்றார்கள். மீண்டும் ஹலரத் அவர்கள் என் தாயே! தங்களுக்கு இச்செய்கை சந்தோஷமா வென்க, அவர்கள் மூன்று தரம் ஓ மென்றார்கள். ஹலரத் அவர்கள் கோபமாகப் பந்தலை நோக்கினார்கள். அந்நோக்கத் திருந்து ஒரு தீப்பொறி கிளம்பி அப்பந்தலைச் சுட்டு நீறாக்கி

ஆகாயத்திற் பறக்கச் செய்தது. இது கண்ட அந்நகரார்கள் அதிசய முற்றுப் பார்த்து நிற்க ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்களிடத்தில் மாதாபிதா இருவரும் வந்து எங்களருமை மகனாரே உமக்கவ்வளவு கோபமுற்ற காரணமென்ன வென்க, ஹலரத் மீறான் சாஹிபவர்கள் என் குருவாகிய ஹலரத் முஹம்மது கவுது சாஹிபவர்கள் என்னை ஹஜ்ஜு செய்யும்படி ஏவியிருக்க, தாங்களிருவரு மதற்கொத் திராமலும் என்னை உசாவி யறியாமல் நீங்கள் வேறெண்ணங் கொண்டதால் அல்லாஹு தஆலா அக்கல்யாணப் பந்தலை எரித்து நீறாகச் செய்தா னென்றார்கள். அது கேட்டு தாய் தகப்பன் முதலியவர்க ளெல்லாம் அஞ்சி இவ்விளவலின் பிரியமில்லாதொரு காரியமுஞ் செய்யக் கூடா தென்றெண்ணங் கொண்டிருந்தனர்கள்.

ஹஜ்ஜு யாத்திரை போந்த சரித்திரம்.

ஷாஹுல் ஹமீது சுல்தான் செய்யிது அப்துல் காதர் கன்ஜ ஸவாய் பாதுஷா சாஹிபவர்கள் இருபத்தெட்டாவது வயதிற் ஹஜ்ஜுக்கேகநாடி அன்னை தந்தையாரை, அடுத்தவர்களின் பாதம் பணிந்து நான் மக்கமா நகர்சென்று ஹஜ்ஜு செய்து மீள்வதற்கு தாங்களிருவரும் மனமகிழ்ந்து விடையருள வேண்டுமெனக் கேட்க, அவ்விருவரும் மனமகிழ்வுடன் மகனை நோக்கி எங்களின் கண்ணின் மணியே! உயிரின் னிருக்கையே! பிள்ளைக் கனியே! பேரழகே! அல்லாஹ்வுடைய ஏவற்செய்வதில் எங்களுக்குத் தடையில்லை. ஆதலால் நீருறுதியுடன் செல்லுமென்றார்கள். அவ்வுத்தாரம் பெற்ற மீறான் சாஹிபவர்கள் தாய் தந்தை யவர்களுக்கு வந்தனஞ் செய்தெழுந்து உடனே பிரயாணமாகி அந்நானூற்று நாலு பக்கீர்களுஞ் சூழ்ந்துவர அந்நகர் நீங்கி நடந்து முல்லை நிலம் மருத நிலம் நெய்த நிலம் குறுஞ்சி நிலம் இவைகளைக் கடந்து அக்கினியின் கொடுமை தாங்கிய பாலைநிலத்தி லானார்கள். ஆண்டவரவர்களின் தாமரை மலர் போன்ற மாட்சிமை தங்கிய பாதாரவிந்தம் அந்தப் பாலையிலானவுடன் அதன் கொடுமைகளெல்லாம் நீங்கி அங்கு கருகி நின்ற தருக்களெல்லாந் தழைத்துக் குளிர்ந்த சோலையாயிற்று. அச்சோலையின் கண் அழகிய செணங்களை

யுடைய பூரணச் சந்திரோதயம் போன்ற தேசுவஜீகரத்துடைய மீறுன் சாஹிபாண்டவர்கள் நடந்தேகி நீர்வளம் நிலவளம் பொருந்திய லாகூ ரென்னும் நகாருகிலானுர்கள். இச்சமாசாரம் அந்நகரிலுள்ளார்களறிந்து எதிர்வந்து கண்டு மிகுமரியாதைசெய்து நகருக்குள் அழைத்தேகி இந்நகரிற் றங்கியருள வேண்டுமென்று மன்றுடினதால் வெகு ஜனங் களின் விருப்பத்திற்காக ஹலரத் சம்மதித்து அந்நகரிலுள்ள உல்லாசம் பொருந்திய கட்டிடங்கள் சூழ்ந்த பள்ளி வாயலில் விடுதிவிட்டு இறங் கினுர்கள்.

செய்யிதிறு யூசுபு சாஹிபவர்க ளூற்பவித்த சரித்திரம்.

அந்த லாஹுர் பட்டணத்தில் உள்ளவர்களெல்லாம் ஹலரத் மீறுன் சாஹிபவர்களுக்குப் பணிவிடை செய்துற்றுர்கள். அந்நகர் களில் மேன்மையும் முன்னிலையுமுள்ள சங்கை செறிந்த ஹாஜிஷெய்கு நூறுத்தீ னென்னுந் திருநாமத்தை யுடையவர்கள் ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்களை யடுத்து மற்றவர்களைக் காண தனதாக மிகுந்த பணிவிடையும் செய்து வந்தார்கள். இவ்வாறு சிலநாள் சென்றதின் பின்னர் ஒரு நாள் அவர்கள் தனித்திருக்கும்போது அந்த ஹாஜி ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்கள் ஹலரத்தவர்கள் முன்னின்று சந்திரோதயம் போன்ற முகத்தை நோக்கி, ஆண்டவர்களே அல்லாஹு தஆலா எனக்கு சகல பாக்கியத்தையுங் கொடுத்தான். ஒரு பிள்ளை யில்லாமையால் மிகவுந் துக்கித்து மனங்கலங்கி இந்நகரடையும் பெரி யோர்களை யெல்லாம் அடுத்து மிகுந்த பணிவிடைகள் செய்து சந்ததி யுண்டாகும்படி வல்ல நாயனிடத்தில் வரங்கேட்கச் சொன்னுல், சிலர்கள் எனக்கு சந்ததிகளில்லை யென்றறைந் தேகுவார்கள். சிலர்கள் துஆச் செய்வார்கள். இவ்விதமாக வெகு காலமாய் வெகு பேர்களுக்குப் பணிவிடைகள் செய்து நானும் எந்தேவியும் தளர்ந்து போனேம், சந்ததியுண்டாகவில்லை. ஆகையால் தாங்கள் எளியேன் பேரில் கிருபை வைத்து சந்ததியுண்டாகும்படி துஆச் செய்யவேண்டு மென்று மன்றுடி நின்றுர்கள். அதுகேட்டு ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண் டகையவர்கள் அந்த ஹாஜி ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்களை நோக்கி உமது வமிஷ பரம்பரை என்னவென்க, நானுமென் பெண்

ஜாதியும் ஹலரத் அமீறுல் முஃமினீன் அபூபக்கரினிஸ்ஸித்திக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மரபிலுதித்தவர்க ளென்றார்கள். அச்செய்தி கேட்டு ஹலரத் மீறான் சாஹி பாண்டவர்கள் மனமகிழ்ந்து நம்மிடத்துற்ற சிசுவின் கருவை இந்த முபுத்திஷெய்கு நூறுத்தீனு டைய பெண்ஜாதியின் அகட்டினிடத்து அமானிதமாக வமைத் தெடுத்துக் கொள்ளலாமென்ற வெண்ணத்துடன் ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்களை நோக்கி, உமதெண்ணத்தை அல்லாஹு தஆலா நிறைவேற்றி வைப்பான். நீர் போய் உமதுபெண்ஜாதிக்குச் சொல்லும், நான் உம்முடைய வயிற்றில் ஒரு சிசுவின் கருவை அல்லாவுடைய வல்லபங்கொண்டு காரணீகமாயமைத்து எடுத்துக்கொள்ள நாடியிருக் கிறேன். அதற்கு நீங்களிருவரும் சம்மதித்தால் அவ்வாறியற்றிய பின் உங்களுக்கு மிகுந்த சந்ததிகளுண்டாகும்படி அல்லாஹு தஆலா நல் லுதவி செய்வானென்றார்கள். அது கேட்டு, முபுத்தி ஷெய்கு நூறுத் தீன் சாஹிபவர்கள் அச்சொல்லிற் கிசைந்து மிகுந்த சந்தோஷமாய் தங்களின் தேவியரை யடுத்து ஹலரத் மீறான் சாஹிப் ஆண்டவர்கள் சொன்ன தேவாமிர்த வார்த்தையைச் சொல்லக் கேட்டு அவர்களின் நாயகியான சுஹறாபீபி அவர்கள் மிகுந்த சந்தோஷமாகி அவ்வாறு செய்வதற்கு நானும் சம்மதித்தேனென்றார்கள். அது கேட்டு ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்கள் மிருதுரிதமாக நடந்து ஹலரத் மீறான் சாஹிப் ஆண்டவர்கள் முன்பில் மிகமரியாதையுடன் நின்று ஆண்ட வர்களே ! தாங்கள் சொன்ன பிரகாரம் எனக்கும் என் பெண்ஜாதிக்கும் சம்மதமென்றார்கள். அது கேட்டு ஹலரத்தவர்கள் ஓ, ஷெய்கு நூறுத்தீனே ! நீர் உம்முடைய மனையிற்சென்று உமதுமனைவியை நீராடி தூய்தான உடையுடுத்தி ஆபரண அலங்கிர்தமாக்கி பரிமளங்க மழத்தக்க, உமது பெண்ஜாதியின் உடற்பிறந்தாளையும் துணையாகக் கொண்டு திங்கட்கிழமை இரவில் இங்கழைத்துக்கொண்டு தாம்பூலமும் எடுத்து வாருமென்றார்கள். முபுத்தி ஷெய்கு நூறுத்தீன் சாஹி பவர்கள் மிக மகிழ்ச்சியோடு தன் மனைசார்ந்து திங்கட்கிழமை இரவான போது தங்களின் பெண்ஜாதியான சுஹ்றாபீயவர்களை ஹலரத் அவர்கள் சொன்னது போல அலங்கிருதஞ்செய்து தங்களின் மனைக்கும் பள்ளி வாயலிற்கு மிடையில் உள்ள வீதியின் இரண்டருகிலுந் திரைகளிட்டு அதனுள் சுஹ்றாபீபியவர்களை முன்சொன்ன துணையுடன் நடத்தாட்டி தாம்பூலமு மெடுத்துக்கொண்டு வந்து ஹலரத் காதிரே கன்ஜே சவாயி ஆண்டவர்களின் இருப்பிடத்திற்கு முன்னாலே வளைந்த திறையொன்றி

பற்றி அதனுள் சுஹறுறபீபியவர்களை அத்துணையுடனிருக்கச் செய் தார்கள். பின்னர் செய்யிது ஷாஹறூல் ஹமீது சாஹிபாண்டவர்கள் மனமும் வாக்குமொன்றாய் வணங்கு மென்னத்தக்க இரவையின் இரண் டாவது நேரத்தின் வணக்கமியற்றித் தீர்ந்த பின்பு ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்கள் கொண்டு வருந் தாம்பூலத்தை தங்களின் மாட்சிமை தங்கிய கரத்தில் வாங்கி வல்ல பெரிய நாயனைத் தியானித்தவர்களாக மூபாறக்காகிய வாயிற் சேர்த்து சுவைத்தபோது ஆண்டவரவர்களின் தேகமெல்லாம் வேர்வை கண்டு விழிகளிரண்டும் சிவப்பேறி முகம் மஞ்சல் நிறமுற்றது. அப்போது ஷாஹமீறான் சாஹிபாண்டவர்கள் தங்களிருகரங்களையும் பூமியின்கண் ஊன்றி ஹக்குடைய நினைவாகசற்று நேரமிருந்துபின்பு அத்திரையை நீக்கச்செய்து சுஹறுறபீபியம்மா அவர் களின் திருவாயில் தங்கள்வாயிலிருந்த தாம்பூலத்தை யுமிழ்ந்து துரித மாக விழுங்குங்களென்றார்கள். அவ்வாறு அம்மா அவர்கள் விழுங் கினார்கள். அப்பால் ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்களையும் அவர் களின் பெண்ஜாதி நாயகி சுஹறுறபீபியம்மா அவர்களையும் நோக்கி அல்லாஹு சுபுஹானஹுவ தஆலாவின் உத்தாரப் படிக்கு உங்களி டத்தில் தூய்தாகிய இந்தப்பிள்ளையை அமானிதம் வைத்தேன், இது என் பிள்ளையாயிருக்கும். இனியெனக்குப் பின்னால் என்னை நாடியவர்கள் எனக்காக கொண்டுவரும் பலவித ஹதியாக்களையும் இப்பிள்ளையின் பௌத்திரர்கள் அனந்திரமாகக் கொள்வார்கள், இப்பிள்ளை பிறந்த டன் என்மூத்த தமையனுருக்கு இட்டசெய்யிது முஹம்மது யூசுபு சாஹிபுவென்ற திருநாமந்தரியுங்கள். இந்தப்பிள்ளை ஐந்து வயதானால் நமக்குரிய புறுகானென்னும் வேதமுழுமையும் பாராது மொழியக் கற்றுக் கொள்ளும், ஏழுவயதானால் உங்களிடத்தில் என் தகப்ப னெங்கே அவர்கள் எனக்கு என்னஹதியாக் கொடுத்தார்கள் என்று கேட்கும். கேட்டவுடன் இப்பற்கொம்பை அப்பிள்ளையின் கையிற் கொடுத்து நீங்கள் இருவரும் சஞ்சலமுறாது மனமகிழ்வுடன் உத்தாரம் கொடுத்து என்னிடத்திற்கு அனுப்பி வையுங்கள். அப்பால் அல் லாஹுதஆலா உங்களுக்கு நாலுபுத்திரர்களையும் சிறிது புத்திரிகளையும் தருவானென மொழிந்து அப்பற்கொம்பையும் கொடுத்து ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்களை நோக்கி உமது பெண்ஜாதியை வீட்டிற்கு அனுப்பிவிட்டு நீர் இக்கட்டிடத்துக்குள் நாற்பது நாள் மட்டில் தனித் திருந்து ஓதுமென்று ஓர் ஆயத்தும் ஓர் அசுமாவும் சொல்லி கொடுத் தார்கள். ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்கள் ஹலரத் அவர்கள்

சொற்போலவே சுஹறுபீபியவர்களைத் தன்மனைக்கேகச் செய்து ஹலரத்தவர்கள் சுட்டியவிடத்தில் நாற்பதுநாள் தங்கியிருந்து ஜெபதப முதலியவைகள் செய்து தீர்ந்த பின்னர் வெள்ளிக்கிட்டு வாசனை பொருந்திய * வெண்ணரி முதலிய நற்பதார்த்தங்களால் அடிசிலியற்றி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேராலும் ஹலறத்குதுபுல் அகுத்தாப் முஹியத்தீன் அப்துல் காதிற் ஜெய்லானி ஆண்டவரவர்கள் பேராலும் பாத்திஹாவோதி அவ்வூரிலுள்ளவர்களுக் கெல்லாம் பசியாறக் கொடுத்தார்கள். பின்பு ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்களை வீட்டிற்குப் போகும்படி ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவர்கள் உத்தரவு செய்தார்கள். அவ்வாறவர்களேகி அப்பதுமினியாகிய சுஹறுபீபியவர்களை நோக்குமிடத்து கர்பக் குறிகளிருக்கக் கண்டு இருவருமிக மகிழ்ந்துற்றார்கள். இதன் அகமியங்களை ஷெய்குல் அக்பற் முஹியித்தீனிப்னு அறபிய்யி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முவாக்கியின்னுஜூமென்ற கிதாபில் பலக்குல் இஸ்லாமிலுள்ள பலக்குஸ்ஸிர்றியில் விபரமாக சொல்லியிருக்கின்றார்கள். அதிற் சிலதை இப்புத்தகத்தின் கடைசியி லெழுதப்படும்.

முனிவர்கள் வழிபடு சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா சாஹிபு ஆண்டவர்கள் அவர்கள் முபுத்தி ஷெய்கு நூறுத்தீன் சாஹிபவர்கள் முதலியவர்களுக் கெல்லாம் பிரயாணச்சங்கதி சொல்க அந்நகருள்ளவர்களெல்லாம் பிரயாண உபசாரஞ்செய்தனுப்ப ஹலரத்தவர்கள் அந்நான்கு சீடர்களும் மற்றைய நானூறு பகீறுகளும் சூழ்ந்துவர லாகூ ரென்னும் நகர் நீங்கி நடக்கும்போது கெடுமனத்தையுடைய தலைமை பொருந்திய சன்னியாசிகள் இருவரும் அவர்களுடன் சிலர்களும் கௌனென்கிற மலையின்மேலிருக்கிற சமாசாரத்தை ஹலரத்தவர் களறிந்து தங்களின் மிருதுவுதங்கிய பாதத்தில் அணிந்திருக்கிற மிதியடியை நீக்காது அம்மலைமீதேறி வருகின்றதை அக்காபிர்கள் கண்டு அவர்களின்றலைவனை அச்சன்னியாசியின் இடத்திற் சொல்ல, அவன் கேட்டு மிகுந்த கோபமாகிக் கருவண்டுகளை அழைத்து நம்மைச்சற்றுகிலும் சங்கியாது நாமிருக்கு மிடத்திற்குப் பாதக்குறட்டுடன் வருகின்ற அவரை கொட்டென்

---

* வெண்ணரி—வெளுத்த அரிசி.

ரூன். அக்குளவிகள் ஹலறத்தவர்கள் முன்பிலாக, அவைகளை நோக்கி நீங்களேன் வந்தீர்களென்க, அக்குளவிகள் இம்மலையிலிருக்கின்ற முனிவனின் உத்தாரப்படி தங்களை கொட்டவந்தோமென்றனை. இதுகேட்டு ஹலறத்தவர்கள் குளவிகாள்! என்னைக் கொட்டும்படி உங்களை ஏவினுனே அவனையே போய்க்கொட்டுங்களென்ருர்கள். அவைகளெல்லாம் திரும்பிப்போய் அம்முனிவனைக்கொட்ட, அவன் வாதை பொறுக்காது விரண்டோட வண்டுகளவனை விடாது தொடர்ந்து கொட்டின. அம்முனிவன் வருத்தம் பொறுக்காமல் தான் கற்றவினைதங்களைக் கொண்டு ஆகாயத்திற்பறந்தான். அது கண்டு ஹலறத் தவர்கள் தங்களின் மிதியடியை பாதகமலங்களை விட்டு நீக்கி அம்முனிவனை நோக்கியெறிய அம்மிதியடி அம்முனிவனின் றலையில் மிகுந்த அடிகளை யடித்துப் பூமியின்கண் தாழ்த்தி ஹலறத்தவர்களின் சமுகத்திலாகிற்று. அப்போதவன் மனநடுங்கி மிகவொடுங்கி ஹலறத்தவர்களுக்குச் சாஷ்டாங்கஞ்செய்து ஆண்டவர்களே! தாங்களிட்டகட்டளைக் குட்பட்டு நானும் என்னுேடுற்றவர்களுமாய் நடக்கிறேம். தாங்கள் என்னை வாதைக்குட்படுத்த வேண்டாமென்றிசைக்க, ஹலறத்தவர்கள் மனம் இரங்கி அவனுக்கும் அவனுேடுற்றவர்களுக்கும் கலிமாச் சொல்லிக் கொடுத்தார்கள். அவ்வாரவர்கள் கலிமாச் சொல்லிநற்பதவிக் குரியவராகி, அத்தலைவர் ஹலறத் ஆண்டவர்களை நோக்கி ஆண்டவர்களே! இம்மலையினுச்சத்தில் என்னைக்காணப் பெலத்தையுடையவன் ஒருவனிருக்கின்றுனென, ஆண்டவரவர்கள் அவனைக் கொண்டு வரும்படி ஒரு ஜின்னுக்குத்தாரஞ் செய்தார்கள். அந்தஜின் அங்கேகி அவனையழைக்க அவன் மறுத்ததால் அவனுடன் எதிர்த்துச் சண்டை செய்து அவனது பலாட்டியங்களை யெல்லாம் குறைத்துப் பிடித்திழுத்துக் கொணர்ந்து ஆண்டவரவர்களின் சமுகத்தில் விட்டது. அவன் ஆண்டவரவர்களைப் பார்த்து மிகவும் பயந்து என்னைக்காப்பாற்றுங்கள் என்று அபய சப்தமிட்டான். ஆண்டவரவர்கள் அவன் பேரி லன்பு கூர்ந்து அவனுக்கும் நற்கலிமாவைப் புகட்டினூர்கள். அப்பால் பகீறகளை நோக்கி நீங்கள் இவர்களுக்கு நமது மார்க்கத்துக்குரிய இயற்கையும் செயற்கையும் பயிற்றி வையுங்களென் றுரைத்து விட்டு அம்மலையின் கண்ணுற்று அழகிய தூய்தான ஒரு பொதும்பின் கண்ணுற்று ஆண்டவனை நாடிக் கலப்பற்ற நோன்பு நோற்றுக் கொண்டு நாற்பதுநாள் மட்டில் தனித்திருந்தார்கள். அப்போது அல்லாஹூதஆலா அவர்களுக்கு மிகுதமான புகழைத்தரிப்படுத்தி வைத்தான்.

ஆண்டவரவர்கள் அப்பொதும்பைவிட்டு வெளியேலானார்கள். அப்போது அங்கு கலிமாச் சொன்ன தபோதியர்கள் ஆண்டவரவர்களை அடுத்து எங்களில் சிலர்களுக்கு கிமியாவென்கிற பொன் செய்கிற தொழிலும் சிலருக்கு ஹீமியா வென்ற பிறருக்கு தோற்றாது மறைந்து கொள்கிற தொழிலும் சிலருக்கு சிமியாவென்கிற மறைக்கப்பட்ட சகல காரியங்களையும் வெளியாக்கிற தொழிலும், சிலருக்கு றீமியா வென்கிற உடல் விட்டு மற்றோருடலிற் புகுந்து சங்கடமின்றி மீளுகிற தொழிலும் தெரியும். தேவரீரவர்களின் உத்தரவானால் இந்த பகிறுகளுக்குப் படித்துக் கொடுக்கிறோமென்க ஆண்டவரவர்கள் இந்த பகிறுகளில் வேணுமென்ற பேர்களுக்குப் பயிற்றி வையுங்களென்றுரைத்தார்கள் அவ்வாறவர்கள் பகீறுகளுக்குப் படித்துக் கொடுத்து ஆண்டவரவர்களின் கிருபைபெற்று நல்லறிவுகளைக் கற்று சர்வதயாபரனை வணங்கும் பொருட்டு காடுகளிலானார்கள். ஹலரத் மீரான் சாஹிபாண்டவர்கள் அந்த மலையை நீங்கி நடந்தேகும்பாதையில் இருக்கின்ற காந்தமலையின் அருகிலாகும் போது அப்பகீறுகளின் கைகளிலிருந்த இரும்பு ஆயுதாதிகள் எல்லாம் கையை விட்டுப் பறிபட்டேகி அம்மலை மீதாயிற்று. அதுகண்டு பகிறுகள் சிந்தை நொந்து ஆச்சரிய மடைந்து ஆண்டவர்களின் பாதம் புயம் பணிந்து நவில அதுகேட்ட ஹலரத்தவர்கள் அம்மலைமேலேறி அல்லாவை நாடி இரண்டு றக் ஆத்துத் தொழுது வானத்தளவில் கையையுயர்த்தி துஆச் செய்தார்கள். உடனே அவ்வாயுதங்கள் எல்லாம் அம்மலையை விட்டு நீங்கி முன்போல் அந்த போதனர்கள் கரங்களிலாயிற்று. அதுகண்டு பகிறுகளெல்லா மிக மகிழ்ந்து ஷாஹுல் ஹமீது நாயகத்தைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

பாகளித்த சரித்திரம்.

காதிற்கன்ஜே சவாயி ஆண்டவர்கள் அக்காந்த மலையை விட்டிறங்கி அங்கிருந்தெழுந்து நடக்கும்போது பாலை நிலத்தில் நடந்து அப்பாலையின் கொடுமையைக் கடந்து ஒரு சோலையில் விடுதி விட்டார்கள். பகீறுகளுக் கெல்லாம் பசியுந்தாகமு மிகுந்ததால் தண்ணீர் தேடிப் பல திசையும் சென்று பார்த்தும் நீர் கிட்டாமல் திரும்பும் போது அக்குற்ற காபிர்கள் வணக்குல் கோவில் ஆசானுக்காக காபிர்கள்

பத்துக் குடம் பால் கொணர்ந்திறக்கி வைத்திருக்கக் கண்டு அப்பால் அடங்கலையும் எடுத்துக் குடித்து விட்டுக் குடங்களை உருட்டி விட்டார்கள். அது கண்டு அக்காபிரின்கள் பகிறுகளை நோக்கி எங்கள் குருவிற்காக கொணர்ந்த பாலை நீங்கள் பறுகாதியாராக விருக்க என் பறித்தருந்தினீர்க ளென்ன, பகிறுகள் மிகுந்த கோபத்துடன் அக்காபிர்களை அடித்துத் துரத்தி விட்டார்கள். அக்காபிர்கள் சிரத்திற் கரஞ் சேர்த்து ஐயோ கோவென்றழுது புலம்பிக் கொண்டு அவர்களின் குருவை யடுத்துச் சொல்ல அவன் கேட்டு மிகுந்த சினமுற்று அவனை சூழ்ந்தவர்களில் ஆயிரம் பேர்களை திரட்டி நீங்கள் அங்கு சென்று அந்தப் பகிறுகளுடன் சண்டை செய்து அவர்களைப் பிடித்துக் கொண்டு வாருங்க ளென்றான். அந்த ஆயிரங் காபிர்களும் சண்டைக்கு ஆயத்தமாக எழுந்துத் தகாத வார்த்தைகள் பேசிக்கொண்டு வருவதை ஆண்டவரவர்கள் கண்டு பூமியை நோக்கி இக்காபிர்களின் காலைப் பிடித்துக் கொள்ளென்க, பூமியானது அந்த ஆயிரம் பேர்களின் கால்களை யெல்லாம் முழந்தாள் வரையில் பிடித்திறுக்கிக் கொண்டது. அப்போதந்த ஆயிரம் பேர்களும் மிக வருத்தமுற்று கோவென் றழுதார்கள். இவையறிந்த காபிர்களின் குருவானவன் அச்சமடையாது மடத்தைவிட் டோடி வந்து ஆண்டவரவர்களின் பாதத்திற் சாஷ்டாங்கமுஞ் செய்யாது நின்று மனதில் தய்வுவரத்தக்க வார்த்தைகளைப் பேசாமல் வெஞ்சினத்துடன் ஆண்டவர்களை நோக்கி எனக்கு வந்த பாலை உன் பகிறுகளை எவிப்பறித்தருந்தச் செய்த தென்ன வென்க, ஆண்டவரவர்கள் நானறியமாட்டேன்; ஆகிலும் உன்னுடைய பால் குடங்களிலிருக்கின்றது பாரென்க, அவனங்கேகிக் குடங்களைப் பார்க்குமிடத்தில் பால் ததும்பிக் கொண்டிருக்கக் கண்டு மீண்டும் வந்து உன் மனிதர்கள் குடித்து மிஞ்சிய எச்சிலை நான் குடிக்கிறதா? வென்றான். ஆண்டவரவர்கள் கோப வாக்காக அடா! நீயும் உன்னோடுற்றவர்களும் என் முன்னில்லாது போவென்றார்கள். அது கேட்டந்த யோகி துணிவுடன் நின்றுநான் யோகியாயிருக்க மரியாதை யில்லாமற் பேசுகிறாயே, உன் தத்துவத்தையறிவோம் நான் ஆகாயத்திற் பறக்கிறேன் நீயுமென்னுடன் பறந்துவா வென்றான். அதுகேட்டு ஆண்டவரவர்கள் நல்லது நீ எழும்பிப்பற வென்க, அத்தேசிகன் தான்கற்ற வித்தையினால் மூச்சையடக்கிக் கொண்டு எழும்பிப் பறந்து ஆகாயத்தின் கண் ஒரு சவளத்தி னுயரமானபோது ஆண்டவரவர்கள் புன்சிரிப்புக் கொண்டு தங்களின் முபாறக்கான கையினால் சைக்கினை செய்து அவன்

மேலேறாமலும்கீழிறங்காமலும் மற்றிடங்களுக்க கலாமலும் ஆகாயத்தில் தரித்துவிட வியற்றிச் சூரியனை நோக்கி இத்தேசிகனையும் இவன் கூட்டத்தார்களையும் சுட்டு வாதனை செய்யென்றார்கள். சூரியன் மிகுந்த கொடூரமாய்த் தன் கிரணங்களைக் கொண்டு சுட்டனன். அந்த சூட்டின் வாதை பொறுக்காமல் மிகவருந்தி ஆண்டவர்களே! நாங்கள் செய்த குற்றங்களைப் பொறுத்து இரட்சிக்க வேண்டு மென்றார்கள். அதுகேட்டு ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவர்கள் மனதிரங்கி அக் கனலியை நீக்கி ஆகாயத்தில் மறிபட்டிருந்தவனை இறங்கச் செய்து பூமியிற் சிக்கியவர்களை விடுவித்து விட்டார்கள். அதுகண்டு அத்தேசிகன் முதலியவர்கள் ஹலரத்தவர்களின் பாத கமலங்களில் கண்களை வைத்துப் புரட்டி மற்றைய பகீறுகளுடைய கால்களிலும் சாஷ்டாங்கஞ் செய்து ஆண்டவரவர்களை நோக்கி முன் தாங்கள் பால் குடிக்கச் சொன்னபோது நாங்கள் எச்சிலென்று உரைத்தது தப்பித மாகையால் அந்த தப்பிதத்தைத் தாங்கள் பொறுத்தருள் செய்து அவ்வெச்சிற் பாலை எங்களுக்குத் தந்தருள வேண்டு மென்றார்கள். இச்சொற் கேட்டு ஹலரத்தவர்கள் அத்தேசிகன் முதலியவர்கள் பேரில் அன்பு கூர்ந்து அந்தப் பாலை கொடுக்கச் செய்தார்கள். அத்தேசிகன் முதலியவர்கள் மிகுந்த அவாவுடன் அப்பாலை வாங்கிக் குடித்து மனமகிழ்ந்து ஆண்டவரவர்களின் பாதம் புயம் பணிந்து நாயகமே! எங்களை உங்கள் மார்க்கத்திலாக்கிக் கொள்ளுங்க ளென்க, ஆண்டவரவர்கள் சந்தோஷமாகி தேவாமிர்தம் போன்ற நற்பதவிக்குரிய கலிமாவைச் சொல்லிக் கொடுத்து இஸ்லாமார்க்கத்தின் வகைவிபரங்களையும் படித்துக் கொடுத்தார்கள். அக்கூட்டத்தார்கள் நல்லறிவுகளைக் கற்றுக் கொண்டு ஆண்டவரவர்களின் உத்தாரப்படி அவ்விடத்திற்றானே தரிபட்டிருந்தார்கள்.

குடகு தேசத்தின் நதிகடந்த சரித்திரம்.

ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவர்கள் பாகளித்துத் தேசிகன் முதலியவர்களை தீனிலாக்கிய பின் பகீறுகள் சூழ்ந்துவர அவ்விடம் நீங்கி காடு மலைகளை யெல்லாம் கடந்து காபிர்கள் வாசஞ்செய்யும் குடகு நகரெல்லையி லாகியபோது கடற்போன்ற பெரிய ஒரு ஆற்றைக் கண்டு அதன்கரை யருகாகி அங்குற்ற சோலையில் விடுதி

விட்டார்கள். அதுகண்டு அந்நகர் காபிரீன்கள், அந்நகர் அரசனிடத்திற் சென்று அரசே! நமதாற்றின் கரையில் பெரிய கூட்டம் வந்திறங்கி இருக்கிற தென்றார்கள். அதுகேட்டு அந்த அரசன் தன்னுடன் யுத்தஞ்செய்ய வந்தவர்கள் என்றெண்ணிப் பயந்து அவ்வாற்றிற்கு ஓடம் விடாமல் தடுத்து ஆற்றினருகில் சிலர்களை நேமித்து அக்கரையில் நடக்கிற காரியங்களை யறிந்து தினந்தோறும் நமக்குத் தெரியப்படுத்துங்கள் என்றான். இங்கு இவ்வாறிருக்க ஆண்டவரவர்களும் மற்றும் பகீறுகளும் மூன்றுநாள் மட்டில் அத்தோப்பின் கண்; புசிப்பின்றி இருந்தும் ஓடம் வாராததினாலும் பசி மிகுந்ததாலும் பகீறுகளெல்லாம் மீறான் சாஹிபுஆண்டவரவர்களை யடுத்து இனி எங்களால் பசித்திருக்கக் கூடவில்லை யென்றார்கள். அதுகேட்டு ஆண்டவரவர்கள் இந்தச் சோலையிலுள்ள குழைகளைக் கிள்ளிப் பாண்டங்களிலிட்டு அடுப்பில் வைத்து எரியுங்கள். அதில் நீங்கள் நாடிய பதார்த்தங்களை அல்லாஹு தஆலா தருவான், புசித்துப் பசியாறுங்க ளென்றார்கள். அதுகேட்டு பகீறுகள் எல்லாம் அந்தவிதம் செய்யப் பாண்டங்களில் அருமை பொருந்திய நல்ல பதார்த்தங்கள் உண்டாயிற்று. பகீர்க ளெல்லாம் மிகுந்த திருப்தியாக வஜீபனித்து அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்தார்கள். அவ்வேளை ஹலரத் ஆண்டவரவர்கள் ஒருதுண்டுக்காகிதத்தில் சில அட்சரங்களை யெழுதித் தூய்தாகிய ஒருபகீறை யழைத்து அவர்கையிற் கொடுத்து இந்தக் கடுதாசியைக் கொண்டுபோய் இவ்வாற்றில் போடும். உடனே அது ஒரு வள்ளமாகும். அதில் நீர் ஏறிக்கொண்டு அக்கரைசென்று இந்நகர் இராஜனைக்கண்டு இருபுறமும் கரைபுரண்டு ஓடும் இவ்வாற்றிற்கு ஓடம் விடாது மறுத்த நீ இப்போது ஓடம் விடுகிறாயா? இல்லாவிடில் இப்போது வந்தவிதமே எல்லோரும் வரலாமா? என்று கேட்டு அவன் சொல்லுகிறதை அறிந்துவாருமென்றார்கள். அந்த பகீர் அவ்வாறுசெய்து அக்கரையிலாக அங்கு காத்திருந்த அவ்வரசனின் சேவகர்களின் பார்வைக்கு யானைப்படைகள் குதிரைப்படைகள் வருவதுபோல் தோன்றினதால் அவர்கள் விரண்டோடி அரசனிடத்தில் சொல்ல அவன்கேட்டு மனமருண்டிருக்கும் நேரத்தில் இந்த தூறுவ பகீர் அங்கு சென்றார்கள். இவர்களை அவ்வரசன் கண்டு மனம்பதறி நீர் வந்த காரணமென்ன வென்றான். பகீறவர்கள் ஹலரத்மீறான் சாஹிபாண்டவர்கள் சொன்ன செய்தி யெல்லாஞ்சொல்லி இதற்கு மறுமொழி சொல்லென்றார்கள். அதுகேட்டு அவ்வரசன் இவர் வலுப்பமான வருடைய தூதர்; ஆனதனாலே சற்றும்

அஞ்சாமல் நமது முன்னின்று செய்தி சொன்னுரென்றெண்ணி மனதிலச்சமுற்று உடனே ஒடக்காரர்களை யழைத்துக் தனதாட்களில் சிலர்களை அவர்களுடன் சேர்த்து நீங்கள் வெகுசிக்கிரமாய் ஒடங்களை விட்டு இந்த பகீறுடன் அக்கரைசென்று அங்குள்ள பெரியாரையும் அவருடன் இருக்கின்றவர்களையும் ஒடங்களிலேற்றி இக்கரையிற் கொணர்ந்து நமது நந்தவனத்தில் விடுதிவிட்டிருக்கச் செய்து விட்டு வாருங்களென்ருன். அவ்வுத்திரவுபெற்ற ஒடக்காரர்களும் மற்றவர்களும் அந்த பகீறையும் கூட்டிக்கொண்டு ஒடங்களை விட்டுகொண்டு போய் அக்கரையிலிருந்த ஹலரத்மீருன் சாஹிப் ஆண்டவரவர்களையும் மற்றும் பகீர்களையும் ஏற்றிக்கொண்டு வந்து இராஜாவுடைய சொற்போல் அவனுடைய தோட்டத்தில் விடுதிவிடச்செய்து விட்டு இச்சமாச்சாரத்தை இராஜாவுக்கறிவித்தார்கள்.

புத்து புனலருந்துஞ் சரித்திரம்.

ஹலரத் செய்யிது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் குடகு தேசத்தின் இராஜாவுடைய தோட்டத்தில் விடுதிவிட்டவுடன் அவர்களின் பறக்கத்தினுல் அங்கு கருகி இலையுதிர்ந்தும் பூக்காமலும் காய்க்காமலும் இருந்த மரங்களெல்லாம் தளிர்த்துப் பூத்துக் காய்த்துச் சொரிந்தன. ஹலரத்தவர்கள் அத்தோட்டத்தின் ஒரு மரத்தடியில் ஒரு புத்துவைக்கப்பட்டிருந்தது. அதனருகில் பிஸ்தருச்செய்து அப்புத்தின்பேரில் திண்டுபோட்டு அதன் பேரில் சாய்ந்துக்கொண்டிருந்தார்கள். அவ்விதமாக இருக்கிறபோது ஒரு நாள் அவ்வூர் இராஜனும் அவனுடைய குருவும் சாஸ்திரங்களை ஆராச்சியுள்ள சில காபிர்களுமாக ஹலரத்தவர்களைக் காண்பதற்காக அத்தோட்டத்திற்கு வந்து பார்த்தபோது ஹலரத்தவர்கள் காபிர்களின் புத்துகானின்பேரில் சாய்ந்துக்கொண்டிருப்பதைக் கண்டு மனநொந்து மிகுந்த கோபமாகி மனதில் வஞ்சத்தை யெண்ணி மறைத்துக்கொண்டு ஹலறத்தவர்களை யடுத்துப் பாதம் பணிந்து இத்தோட்டத்தில் அநேக விடங்களிருக்க அங்ஙனமிராமல் எங்களை இரட்சிக்கும் மிந்தச் சுவாமியின் பேரில் சாய்ந்திருப்பது நன்றல்ல, விலகியிருங்க ளென்ருன். அதுகேட்டு ஆண்டவர் புன்னகை செய்து இராஜனை நோக்கி யாதொரு தத்துவமுமில்லாத இக்கருங்கல்லில் உங்களுக் கென்ன பலனிருக்கிற தென்க,

அரசன் எங்கள் சுவாமிக்கு வேணதத்துவ மிருக்கிறது. இப்போது இக்குளத்தி லுள்ள நீர்களை யெல்லாம் குடிக்க வேண்டுமா யிருந்தால் ஒரு நிமிடத்திற் குடித்து விடுமென்றான். ஆண்டவரவர்கள் நல்லது உங்கள் சுவாமியை அந்நீரை யெல்லா மருந்தச் செய்யென்று அகன்றிருந்தார்கள். அவ்வரசன் முதலியவர்கள் அப்புத்தி னெதிரிற் சென்று தீபதூபங் காட்டிப் புட்பவகை சூட்டிப் பூசைமணிகளாட்டிக் கரங்களிரண்டை யொன்றாய்க் கூப்பிச் சாஷ்டாங்கஞ் செய்து முன்னின்று எங்களின் இரட்சகரே! இக்குளத்து நீரையருந்த வேண்டுமென்றிரந்தார்கள். இவ்விதமாய் மூன்றுதரம் தெண்டனிட்டுச் சொல்லியும் அக்கற்சிலை நாட்டிய படியே நிற்கக்கண்டு அரசன் நாணமுற்று வாய்பேசாமல் நின்றான். ஹலரத் ஆண்டவரவர்கள் அரசனை நோக்கி உங்கள் சுவாமி உங்கள் சொல்லைப் பழுதாக்கி விட்டது. நான் அந்நீர் முழுவதையும் குடிக்கச் சொல்லவா? என்றார்கள். அரசன் ஆமென்றான். ஆண்டவரவர்கள் அச்சிலையை நோக்கி தங்கள் முபாறக் காணவாயினால், அடா மலஊனே! இக்குளத்தின் நீர் அடங்கலையும் உன் தும்பிக்கை யினாலுறிஞ்சிக்குடி யென்றார்கள். உடனே அக்கற்சிலை தவளைபோலத் தத்தி தத்திப்போய் அக்குளத்தில் தன் தும்பிக்கையைப்போட்டு அதிலிருந்த மீன்களெல்லாம் குதிக்கத்தக்கதாய் அந்நீர் முழுவதையும் குடித்து விட்டது. அதுகண்டு அரசன் முதலிய காபிர்களெல்லாம் மனங்கலங்கி உடலயர்ந்து முகஞ்சாம்பிச் சற்றிருந்து பின்பு இராஜன் ஆண்டவரவர்களின் பாதத்தில் சாஷ்டாங்கஞ் செய்து ஆண்டவர்களே! எங்கள் சுவாமி குடித்த நீரை யெல்லாம் இக்குளத்திற்றானே விடும்படி உத்தாரஞ் செய்யவேணு மென்றான். ஆண்டவர்கள் அச்சிலையை நோக்கி அடா மலஊனே! நீ யருந்திய நீரை வெளிவிடென்றார்கள். உடனே அச்சிலை தானருந்திய நீரையெல்லாம் குளத்தில் விட்டது. முன்போல அந்தக்குளம் நிரம்பி விட்டது.

ஜாபாஜோகி மரணித்த சரித்திரம்.

காதிற்கன்ஜேசவாய் ஆண்டவரவர்கள் கற்சிலையை நீரருந்தச் செய்ததையும் அந்நீரை மீட்டியதையும் பார்த்திருந்து சற்றாவது அஞ்சாமல் குடகுநகர் இராஜனின் குருவாகிய ஜாபாஜோகி யென்பவன் நீர் இந்த விக்கிரகத்தை நீரருந்தச் செய்தீரே, நானிப்போது ஆகாயத்திற் பறக்கிறேன். உமக்குத் தத்துவ மிருக்கு மானால் என்னுடன் பறந்து

வாறு மென்றிசைத் தெழும்பிப் பறந்தான். அதுகண்டு ஹலரத் மீறான் சாஹிபவர்கள் மேன்மை தங்கிய தங்களின் பாதரட்சையை விட்டு அவனை அடித்திழுத்துக் கொண்டுவா வென்று ஏவினார்கள். அப்பாதரட்சை ஆகாயத்திற் சென்று அந்த ஜாபாஜோகியின் உறுப்புகள் வருந்தத் தக்க மிகுந்த அடிகளை யடித்து அவன் தத்துவங் குறையச் செய்து கீழே கொண்டு வந்து ஒரு சவளத் துயரத்தில் நிறுத்தி வைத்து அடித்துக் கொண்டிருந்தது. அவன் படுகிற வாதையை அங்கு நின்ற அரசன் முதலியவர்கள் கண்டு மனம் வருந்தி ஆண்டவர்களை யடுத்து ஆண்டவர்களே ! அவர் எங்கள் குருவான படியால் அவர் தங்களுக்குச் செய்த குற்றத்தை எங்களுக்காகப் பொறுத்துக் கொண்டு அவரின் வாதையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று மன்றாடினதற்காக ஹலரத் தவர்களின் மனதிரங்கி தண்டனையை மறுத்துக் கீழிறங்கச் செய்தார்கள். அப்பால் அந்த நிர்மூடன் ஆண்டவரவர்களின் காரணீகத்தை மனதிலெண்ணி அச்சங் கொள்ளாமல் முன்னின்று நீர் இவ்வளவு காரணஞ் செய்தீரே, அரிசி, நெருப்பு, விறகில்லாமல் இக்குளத்திலுட் புகுந்து சாதஞ் சமைத்து வருவீரா? நான் செய்வே னென்க, ஹலரத் ஆண்டவரவர்கள் நல்லது, நீ அவ்விதஞ் செய் பார்க்கலா மென்றார்கள். ஜாபாஜோகி சுறுக்கென்றெழுந்து அக்குளத்திற் பாய்ந்தான். ஹலரத்தவர்கள் முன்னின்ற ஜின்களில் இரண்டை யேவி, அவனை அக்குளத்திலுள்ளேதானே கொல்லென்றார்கள். அந்தஜின்கள் போய் ஒரே அடியில் அவனுயிர் போகச்செய்து விட்டு வந்து ஆண்டவர்களுக்குச் சொல்லின. ஆண்டவரவர்கள் அந்த இராஜனை நோக்கி உன் குரு குளத்தில் சோறு சமைக்கப் போனவன் அங்குதானே இறந்து போனான் பாரென்க, அரசன் அக்குளத்தை நோக்கி, குரு செத்து மிதப்பதைக்கண்டு ஆண்டவரவர்கள் பேரில்வன்மமுற்று பழிக்குப்பழிவாங்க வேண்டுமென்றெண்ணி வன்மத்தை வெளிக்கிடாமல் மனதில் அடக்கிக் கொண்டு ஆண்டவர் அவர்களை நோக்கி, ஆண்டவர்களே ! இக்குரு இறந்து போனாலென்ன? மிகுந்த அதிசயங்களையுடைய தாங்கள்தா னெனக்குக் குரு வென்று மிகுந்த உபசாரனை பேசித் தாங்களும் தங்களுடனி ருக்கிறவர்களும் இந்த ஏழையின் வீட்டிற்கு வந்து விருந்தருந்த வேண்டுமென்றான். ஆண்டவரவர்கள் அவனது சொல்லுக்கிசைய அவ்வரசன் அருமையோடழைத்துப் போய்த்தன் மனையிற் சென்று அழகிய விரிப்புகளின் பேரில் ஆண்டவரவர்கள் முதலியவர்களை இருக்கச்செய்து மிகுந்த உபசாரஞ் செய்து

விட்டுத் தன் மனைவிபால் சென்று ஒருபிடி வஜீபணம் தின்றவுடன் ஐம்பூதங்களும் ஒடுக்கத்தக்கக் கொடூரமான நஞ்சைக் கலந்து உண்டிற் பதார்த்தங்கள் சமையற்செய்யும்படி அந்தரங்கமாய்ச் சொல்லி விட்டு, வஞ்சகம் நிறைந்த நெஞ்சன் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து நல்லவனைப்போல் யிருந்து அளவளா வாளமொழிபேசிக் கொண்டிருந்தான். அத்தருணத்தில் அரசன் மனைவி வஜீபணம் ஆயத்தமாகி விட்டதென்றுளனுப்ப, அரசன் ஹலாத்தவர்கள் முதலியவர்களுக்குத் தன் பெண்ஜாதியைக் கொண்டு நஞ்சுணவு நிறைந்த பாத்திரங்களை முன்பில் வைக்கச் செய்து கைகட்டி வாய்பொத்தி நின்றான். ஆண்டவரவர்கள் அறிந்தும் அறியாதவர்கள்போல் பிஸ்மில்லா சொல்லித் தங்கள் முபாறக்கான கையை வஜீபணத்தில் வைக்க, நஞ்சுகளெல்லாம் நீங்கி அவ்வரசனின் உடலிலாகி விட்டது. ஆண்டவர்களும் பகீறுகளுமாக வஜீபணங்கள் புசித்துவிட்டு அவ்விடம் விட்டெழும்பும்போது அவ்வரசன் திடீரென்று விழுந்திறந்தான். அது கண்டு அவன் மனைவி திடுக்கிட்டேங்கி நடுக்கமுற்றுப் பதறி கோவென்றழுது புலம்பி ஆண்டவரவர்களின் பாதத்தில் வீழ்ந்து அறியாமற் செய்த குற்றத்தைப் பொறுக்க வேண்டும், அவ்வரசன் செய்த வினையவனுக்கே பலித்தது—தாங்களென்பேரில் அன்புவைத்து எனக்குத் தாலிப்பிச்சை தரவேணுமென்று மன்றாடினாள். மூடர்கள் செய்த குற்றங்களை பெரியார் பொறுப்பரென்ற கதைபோல ஆண்டவரவர்கள் மனதிரங்கி அறக்கொடுமை செய்திறந்தவனைக் கடைக் கண்ணினால் நோக்கி உயிருள்ளதை யிறந்ததாக்கவும் யிறந்ததை வுயிருள்ளதாக்கவும் தகுதியுடைய ஆண்டவன் பேரில் ஆணையாக எழுந்திரு என்றார்கள். இறந்துகிடந்த அரசன் உயிர் பெற்றெழுந்து கைகூப்பி நின்றான். அரசன் மனைவியும் மிக மகிழ்ந்து ஆண்டவர்களை வணங்கி நின்றாள். ஹலாத்தவர்கள் இருவரையும் பார்த்து மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்திருங்களென்றிசைக்க, அரசனும் பெண்ஜாதியும் பாதம் பணிந்தார்கள்.

தபதியன் பிணிநீங்கும் சரித்திரம்.

ஹலறத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் இந்த அரசனை யெழுந்திருக்கச்செய்து பகீறுகள் சூழ்ந்துவர அந்நகர் நீங்கி நடந்து ஓர் சிற்றூரிலாகினார்கள். அங்குள்ள ஒரு கம்மாளன் ஆண்டவரவர்கள் விளைவிக்கும் அதிதகாரணங்களைக் கேள்வியுற்று ஆண்டவரவர்களிடத்

தில் வந்து சாஷ்டாங்கஞ் செய்து பாதத்தில் சிரசை வைத்துக்கொண்டு ஆண்டவர்களே ! என் வயிற்றில் ஒருவித வலியொன்றிருந்து என்னைப் பண்ணுகிற வாதையை வாயினுற் சொல்ல முடியாது. அதற்காக அநேக விதமான ஔஷதங்களைச் சாப்பிட்டும், தந்திர மந்திரங்களைச் செய்தும் என் திரவியங்களெல்லாம் செலவாகிப்போய் விட்டதே தவிர என் பிணி நீங்கவில்லை. ஆதலால், தாங்களென்பேரில் கிருபைசெய்து என் பிணியை நீக்கி வைக்க வேண்டுமென்று மன்றாடினுன். ஆண்டவரவர்கள் அந்தக் கம்மாளன்பேரில் கிருபை கூர்ந்து அவனின் சிரசை யுயர்த்தி அங்ஙனமிருந்த மணலில் தங்கள் தூய்தாகிய கைவிரலிரண்டினுல் கிள்ளி அவன் வாயிற்போட்டு தங்கள் முபாறக்கான வாயினுல் உன் பிணி நீங்கிப்போயிற்று, போவென்றார்கள். உடனே அந்தக் கம்மாளன் வயிற்றுவலி நீங்கிச் சரீர வருத்தங்களெல்லாம் அகன்று அழகுந் தத்துவமும் பெற்று மிகமகிழ்ச்சியுடன் தன் மனைசென்று தபோதனர்கள் இராஜாக்களெல்லாம் போற்றுகின்ற மிதியடி ஒன்று செய்து ஆண்டவரவர்களின் பாதத்திற் சேர்க்க வேணுமென்றெண்ணி மிகுந்த வாசங்கமழும் சந்தனக் கட்டையினுல் பாதக்குறடொன்று செய்து முடித்து அதற்காகக் குமிழ் செய்வதற்கு ஆயத்தம் பண்ணும் போது ஆண்டவரவர்கள் பிரயாணித்த செய்திகேட்டு அந்த மிதியடியை எடுத்துக் கொண்டு பெண்ஜாதி பிள்ளைகளுடன் ஓடோடியும் வந்து ஆண்டவரவர்களின் பாதம்பணிந்து தங்களுக்காக இப்பாதக்குறடு செய்தேன். இதற்கு குமிழ்செய்யுமுன் தாங்கள் பயணமாகியதை அறிந்தோடி வந்தேன். என்னுட்டத்தை நிறைவேற்ற வேணுமென்றான். ஹலரத்தவர்கள் நல்லது, உன்கையிற் கொணர்ந்த மிதியடியை நிலத்தில் வையென்க, அவன் மிகுந்த நாட்சியுடன் வைத்தான். ஆண்டவரவர்கள் வார்குமிழில்லாத அந்தப் பாதக்குறட்டில் தங்கள் பாதங்களை வைத்து நடந்தார்கள். அதுகண்டு அவ்வூரார்களெல்லாம் ஆச்சரியமடைந்து பின்றுடர்ந்து நடந்தார்கள். ஹலரத்தவர்கள் அவ்வூராரைப் பார்த்து நீங்கள் இல்லிடங்களுக் கேகுங்களென்றனுப்ப, அக்கம்மாளன் முதலியவர்கள் தங்கள் மனையிற் சார்ந்தார்கள். அந்த மிதியடிதான் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் அவர்கள் ஹயாத்துடனிருக்குங் காலமெல்லாம் வார்குமிழில்லாது பாதத்தில் அணிந்து நடந்தார்கள். ஆண்டவர் அவர்கள் இப்புவனத்தை யிகழ்ந்து-சர்வ தயாபரனின் திருச்சமுகத்திலாகிய பின்னர், அம்மிதியடியை வரிசைதங்கிய நாகூரிலியற்றப்பட்ட றவுலாவென்கிற தறுகாவில் பொற்பேழையின்

தன் அமைத்து வைத்திருக்கின்றது. இராஜர்கள், மந்திரிகள், பிரதானிகள், செல்வந்தர்கள், உத்தமர்கள் ஏழைகள், பேதைகள், உலக ஜாதிகளாகிய யாவரும் தேசங்கடோறுமிருந்து வந்து கைகட்டி நின்று பாதக்குறடையணிந்த அப்பேழையை சிரசிலேற்றித் தாங்கள் தாங்கள் நாடியவரங்களைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆதலால் அந்த மிதியடியின் தகுதி வரிசை சிறப்பு மற்றவைகளை மனிதர்களறியவும் எழுதவும் சொல்லவு முடியாது.

போர்புரி சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் இறந்துபோன குடகுதேசத்தரசனை உயிர்பெற்றெழுந்திருக்கச் செய்து அங்கசர்நீங்கி மற்றோர்பாடியிலுற்றுக் கம்பியனின் பிணிநீக்கி விட்டுத் தபோதனர்கள் சூழப் பறவைகள், யானைகள், கரடிகள், புலிகள் மற்றவையமிருகங்கள் சஞ்சாரஞ்செய்யும் காடுகளையும் மலைகளையும் கடந்து நடந்து ஓர் கடற்கரையிலானார்கள். அவ்வேளை ஓர் திசையில் நின்றும் முரசொலி வாத்திய முழங்க வாளாயுத முதலிய கருவிகளிலங்கக் கடற் போன்ற பெருஞ் சேனைகள் வருவதை ஆண்டவரர்களும் மற்ற பகீருமார்களும் பார்த்துக் கொண்டிருக்குந் தருணத்தில் அச்சேனைகள் நெருங்கி வந்து மாயவித்தைகள் செய்யா நின்ற கூட்டத்தார்களே! நில்லுங்களென்று சப்தித்து ஆண்டவரவர்கள் முதலியவர்களை வந்து வளைந்தார்கள். அது கண்டு ஹலறத்மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் அக்கூட்டத்தார்களை நோக்கி ஆயுதபாணிகளுடன் வந்து எங்களை வளைந்து கொண்டதேன்? உங்களை யாரனுப்பினதென்றார்கள். அதற்கு அந்த கூட்டத்தார்கள் எங்களை யிரட்சிக்கா நின்ற சுவாமியை இழிவு செய்து எங்கள் குருவையும் வதைத்து எங்களரசனையும் சாகச்செய்து மீட்டிய உம்மையும் உம்மோடுற்றவர்வர்களையும் வளைந்து கட்டிப்பிடித்துக்கொண்டு வரும்படி அக்குடகு தேசத் தரசனால் விடுத்த சேனையர் யாங்களென்றார்கள். அது கேட்டு ஹலரத்தவர்கள் மிகுந்த கோபமாகி அக்கூட்டத்தார்களை நோக்கி எங்களை வெட்டவந்த நீங்கள் வெட்டிக் கொள்ளுங்களென்றார்கள். ஆண்டவரவர்கள் இச்சொல்சொன்னவுடன் அச்சத்துருக்கள்பேளங்கள் முழங்க வாட்களை யுருவிப்பிடித்து தன்னை மறந்து தங்களுக்குள்ளே

ஒருவரோடொருவர் எதிர்த்துக் கடுமையாகிய வெட்டுகளை வெட்டிக் கொண்டார்கள். அதனால் சிரமறுந்தும், உடலறுந்தும், கரமறுந்தும், தாளறுந்தும், தோளறுந்தும், விலாக்களறுந்தும், குடற்பிதுங்கியும், சிலரிறந்தும் சிலர் மெய்மறந்தும் சிலர் உழட்டும் பலவாறு சிதைந்ததை ஆண்டவரவர்கள் கண்டு மனதிரங்கி அக்கூட்டத்தார்களுக்கு நினைவு வருத்தினார்கள். அப்பாலந்தக் கூட்டத்தார்களி லிறந்தவர்கள் போக மற்றவர்களெல்லாம் பெரியோர்களுக்கிடர் செய்ய நாம் வந்ததால் அவ்விடர் நமக்கே நேரிட்டதென்றெண்ணி ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு மனங்கலங்கி ஆண்டவரவர்களின் பாதத்தில் சாஷ்டாங்கஞ் செய்து ஆண்டவர்களே! நாங்கள் பேதைமதியாற் செய்த பெரும் பிழையைத் தாங்கள் பொறுத்து எங்களை இரட்சிக்கவேண்டுமென் றழுது சொன்னார்கள். ஆண்டவரவர்கள் அக்கூட்டத்தார்கள் பேரில் கிருபை கூர்ந்து அவர்களின் ஊறுகள் அகலதக்க வரங்கொடுத்து உங்கள் ஊருக்குப் போங்களென, அக்காபிர்களின் வருத்தங்களகன்று தங்கள் நகர்சென்று இச்செய்திகளை யெல்லாம் அவ்வரசனுக்குச் சொன்னார்கள்.

ஹஜ்ஜு செய்த சரித்திரம்.

ஹலரத் காதிர் கன்ஜே சவாயி ஆண்டவரவர்கள் கடற்கரையி லிருக்கின்ற துறைமுகத்திற் சென்றார்கள். அங்கு ஒரு கப்பல் ஓடி வந்து நங்கூரம் வைத்திருந்தது. ஹலரத்தவர்கள் அக்கப்பலுடைய வனிடத்திற் சென்று வினவ, ஜித்தாவுக்குப் போகிற கப்பலென்றான். ஹலரத்தவர்கள் மிகுந்த சந்தோஷமாகி அக்கப்பலிலேறத்தக்க வார்த்தைகளை யவனுடன் பேசிமுடித்துக் கொண்டு தாங்களும் அந்நான்கு நூற்றுநாலு பகீறுகளும் சூழ்ந்து வரக் கப்பலிலேறினார்கள். அக்கப்பல் மீகாமன் கப்பலைப் பாயெடுத்து சிலதூரம் ஓடிப்போகிறபோது ஹலரத்தவர்கள் பகீறுகளை நோக்கி இக்கப்பலின் பாய்மரங்களைப் பிடுங்கித் தட்டுகளைப் பிரித்து அந்தங்குறைத் தூளையுங்க ளென்றார்கள். உடனே பகீறு களெழுந்து அக்கப்பலின் பாய்மரங்கள் தட்டுப் பலகைகள் எல்லாவற்றையும் வெட்டிக்கொத்திச் சிதைத்து விட்டார்கள். அதுகண்டு அக்கப்பலுடையவன் புதுமையாகிய ஹலரத்தவர்களைப் பார்த்து ஏன் இவ்வாறுசெய்தீர்கள்? என்கப்பல் சேதமாகி

விட்டதே, யென்ருன். ஹலரத் அவர்கள் நீயஞ்சவேண்டாம். நஜன் இக்கப்பலை இவ்விதஞ் செய்த காரணத்தைச் சற்று நேரத்தில் அறிந்து கொள்வா யென்ருர்கள். அது போல் சற்று நேரத்தில் கள்ளக் கப்பற்காரர்கள் வந்து இக்கப்பலிலேறிப் பார்த்தார்கள். இக்கப்பலி லிருக்கின்ற பேதகத்தைக் கண்டு இதில் தகுதியான சரக்கு மற்றவை இராதென் றெண்ணி யிறங்கித் தங்கள் கப்பலிலேறிக் கொண்டுபோய் விட்டார்கள். அதுகண்டு அக்கப்பலுடையான் மிகுந்த சந்தோஷத் துடன் ஆண்டவரவர்களைப் புகழ்ந்து பாதம் பணிந்து கப்பலிற்குப் பாய்மரமிட்டுத் தட்டுப்பலகை பரப்பிப் பாய்விரித்துச் சீராக வோடி ஜித்தாவின் துறைமுகத்தில் கரைபிடித்து ஹலரத் அவர்கள் பகீர்க ளோடு தக்பீற் தஹ்லீல் முழக்கத்துடன் கப்பலை விட்டிறங்கி ஜித்தா வின் கரையிலானுர்கள். அங்கு அடங்கியிருக்கின்ற ஹவ்வா அலை ஹிஸ்ஸலாமவர்களின் சமாதிஸ்தான மென்ற கபுறருகிற்சென்று பாத்திஹா வோதிக்கொண்டு அன்றிரவு ஜித்தாவிற்ருனே தங்கி அங் குள்ள பள்ளி வாயலிற் சென்று மகுரிபு, இஷா, சுபுஹு இம்மூன்று நேரத்தின் தொழுகையு மியற்றினுர்கள். சூரியனுதித்த பின்னர் ஜித் தாவிலுள்ளவர்களெல்லாம் ஆண்டவர்களின் வரவு முதலியவைகளை அறிந்து சமுகத்தில் வந்து சலாம்சொல்லி முகமன்கூறிப் போயினுர்கள். ஆண்டவரவர்கள் அவ்விடம் நீங்கித் தபோதனர்கள் சூழ மக்கத்தை நாடி நடக்கும் பாதையில் ஒரீத்தந்தோட்ட மிருந்தது. அதிலிறங்கித் தாமதித்து அங்கிருந்தெழுந்து அல்லாஹு தஆலாவுடைய இஷ்கில் ஓரே நாட்டமாக ஆநந்தமாகிப் பாதகமலங்களில் மிதியடி பூட்டாமல் நடந்து தக்பீர் தஹ்லீல் முழக்கத்துடன் மக்கமாநகர் சென்று வரை வதற்கும் புகழ்வதற்கு மெட்டாத புகழையுடைய கஃபாவை வலஞ்சுற்றி முபாறக்கான ஹஜறுல் அஸ்வதென்கிற கல்லைத்தொட்டு முத்தமிட்டு கலீலுல்லா இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய மகாமிலி ரண்டு றக்அத்துத் தொழுது ஆபே சம்சம் என்கிற கிணற்றின் தண்ணீரை யருந்தி மஹ்பூபு சுபுஹானி ஆண்டவரவர்களிருந்த ஸ்தலத் திலிரண்டு றக்அத்துத் தொழுது அங்குதான் விடுதி விட்டார்கள். அங்கு தங்கின நாள்முதல் உள்ளூரிலும் புறவூர்களிலுமுள்ள ஏர்உடைய லாஹிரான உலமாக்களும் புகஹாக்களும் வந்து வந்து தரிசனம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆபிதீன்கள், ஆரிபீன்கள், ஜாஹி தீன்கள், ஆஷிகீன்கள், வாஸிலீஹீன்கள், நுஜபாக்கள், நுகபாக்கள், புதலாக்கள், உமறுக்கள், புகறுக்கள், எல்லாரும் பிரதி தினமும் ஆண்

டவரவர்கள் திருச்சபையில் வந்து கூடியிருப்பார்கள். பின்பு இரவான போது இரண்டாவது சாமத்தில் ஹலரத்தவர்கள் தனித்தெழுந்து குத்புல் அக்தாபு ஆண்டவரவர்கள் ஜில்லாவிலிருந்த ஸ்தலத்திற்கு சென்று பாத்திஹாவோதிச் சற்றுநேரமிருந்தார்கள். பின்பு நாலு தரீகுகளையு மறிந்த ஹலரத் உதுமான் ஹாறானி அவர்களின் தாய்தாகிய றவுலா ஷரீபிற் சென்று பாத்திஹா வோதி முறுகபாச் செய்து சிறிது நேரம் தங்கிவிட்டு பின்பு ஜன்னத்துல் முஅல்லாவென்கிற கட்டிடத்திலாகி அதன் வாயிலடங்கப் பட்டிருக்கின்ற ஹலரத் காஜா ஷரீபு ஜிஷ்தி ஆண்டவரவர்களின் கபுறைக்கண்டு பாத்திஹா வோதி பின்பு அக்கட்டி டத்துட்புருந்து உம்முல் முஃமினீன் உலகமாதா கதீஜத்துல் குபுறு றலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஒளி பொருந்திய றவுலாவை சியாறத்துச் செய்து பாத்திஹாவோதி அங்குள்ள மற்றைய கபுறுளிகள் பேரிலும் பாத்திஹா வோதிக்கொண்டு மீண்டும் தாங்களிருந்த ஸ்தலத்திலாகினார்கள். சூரியனுதித்தபின்னர் ஹலரத் ஆண்டவர் அவர்களும் பகிறுகளுமாக ஜன்னத்துல் முஅல்லாவுக்குப் போயிருந்து ஷரீபனங்கள் பரிமாறி பாத்திஹாவோதி கந்தூரிக்கொடுத்து அவ்விடம் விட்டெழுந்து நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், உதையஞ்செய்த பக்காவென்கிற வீட்டிற்குபோய் இஃதிகாபுடன் ஜில்லாவிலிருந்தார்கள். ஹஜ்ஜு மாதம் வந்தது ஜில்லாவைவிட்டெழுந்து அறபாத்து மலையில் சென்று ஹஜ்ஜுக்குரிய காரியங்களையெல்லாம் செய்து முடித்து மக்கத்தில் சியாறத்துச்செய்யவேண்டிய விடங்களெல்லாம் சென்று ஸியாரத்துச் செய்துக்கொண்டார்கள்.

மதீனா முனவ்வர்போன சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் மக்கா ஷரீபை விட்டெழுந்து மதீனத்தை நாடி நடந்தார்கள். பாதையில் யிருந்த புதுமைகளைக் கண்ணுற்றுக்கொண்டு மதீனமா நகராருகிற் சேரும்போது பாதக்குறட்டை நீக்கி விட்டு நடக்கையில் தங்கள் பாட்டனாரவர்கள் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பேரில் எண்ணமிருக்கதால் அதேமஸ்தாகி யிருந்த வணக்கத்துடனே யதுறிபு என்ற திருநாமம் பெற்ற மதீனா முநவ்வறிற்சேர்ந்து ஹலரத் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் றவுலாவிற்புகுந்து

மிகுமரியாதையுடன் நபிகள் நாயகமவர்களின் கபுறு முபாறக்கைக் கண்குளிரத் தெரிசித்து ஷறுத்தின்படி ஸியாரத்துச் செய்தார்கள். பிறகு சந்தோஷத்துடனே நின்று மறைவான தாந்துல்லாவுடைய ஜமாலேநோக்கி முனுஜாத்துச் செய்தார்கள். அல்லாஹு தஆலா அவர்களுடைய வேண்டு தனுக்கு நிரப்பமான வாத்தைக் கொடுத்தான். மீண்டும் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர் அவர்கள் ஹஸய்த் செய்யிதினு அபூபக்கரி ஸிஸ்ஸித்தீக் ஹலரத் செய்யிதினு உமரிப்னில் பாருக் ஹலரத் பாத்திமாநாயகி றலியல்லாஹு அன்ஹும் இவர்களுடைய கபுறு முபாரக்குகளையும் தெரிசித்து ஸியாரத்துச் செய்துக் கொண்டு ஜன்னத் பக்யாவென்கிற ஸ்தலத்திற்கு சென்று ஹலரத் உதுமான், ஹலரத் அப்பாசு, ஹலரத் இமாம் ஹசன், ஹலரத்சைனுல் ஆபிதீன், ஹலரத் இமாம் முஹம்மது பாக்கிறு, ஹலரத் இமாம் ஜஃபறுசாதிகு, றலியல்லாஹு அன்ஹும் இவர்களுடைய கபுறு முபாறக்குகளையும் தெரிசித்து பாத்திஹா வோதி மற்றும் பெரியோர்களுடைய கபுறுகளையுங் கண்டு பாத்திஹாவோதி ஸியாரத்துச் செய்துக் கொண்டு உஹது மலையைச் சார்ந்து ஹம்சா றலியல்லாஹு அன்ஹு வுடைய கபுறு முபாறக்கையும் உஹது யுத்தத்தில் ஷஹீதான எல்லா ஷுஹதாக்களையும் தெரிசித்து பாத்திஹா வோதி ஸியாறத்துச் செய்துக்கொண்டு மீண்டும் மக்கா ஷரீபிற்கு வந்து சேர்ந்தார்கள்.

திருவாக்கு பெற்றது.

ஹலரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா சாஹிபு ஆண்டவரவர்கள் முதல் தடவை ஹஜ்ஜு செய்த பின் மதீனுவிற் போய் ஜியாரத்துச் செய்து திரும்பி வந்து சில வருஷம் வரையும் மக்காவிலேயே குடியிருந்தார்கள். ஒவ்வொரு ஹஜ்ஜு செய்து முடியும் ஒவ்வொரு தடவையிலும், மதீனுவுக்குப் போய் தங்கள் பாட்டனூர் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஜியாரத்துச் செய்து கொண்டு மக்காவுக்கு வருவார்கள். ஒவ்வொரு ஜியாரத்திலும் நபி நாயகம் அவர்கள் பேரில் கந்தூரி கொடுக்காமல் திரும்புகிறதில்லை.

ஹலரத் ஆண்டவரவர்கள் மக்கா நகரத்திற் குடியிருந்த கால முழுதும் தங்கள் தலைக்குப்பாகை, தொப்பி ஒன்றும் அணியாமல் தலை திறந்தவர்களாய் கால்களுக்கு மிதியடி செருப்பு ஒன்றும்

பூணமல் வெருங்காலோடு தான் இருந்தார்கள். அன்றியும் தைக்கப் படாத இரண்டு வெள்ளைப் புடவைகளை அணிந்து கொண்டு கட்டின இஹ்ருமுடனேயே இருந்தார்கள். இன்னும் அவர்கள் ஒரு நாளிலும் அட்டணைக்கால் போட்டதில்லை. கால்களை நீட்டிப் படுத்ததில்லை. வாகனங்களில் ஏறினதில்லை; வருஷத்திற்கு ஐந்து நாள் தவிர மற்றப்பகல் காலமெல்லாம் உபவாசமாகவே இருப்பார்கள். இராக் காலமெல்லாம் கஃபாவில் போய் பிரதக்கணஞ் செய்து குர்ஆன் முழுவதையும் ஓதித் தொழுவார்கள். ஒரு தினமாவது அவர்கள் உலுவில்லாம லிருந்த தில்லை. இவ்வாறிருக்குங் காலத்தில் ஒரு நாள் இரவு ஹலரத் ஆண்ட வரவர்கள் கஃபாவிற் போய் பரிசுத்தமான அந்தத் தேவாலயத்தை தங்கள் சிறப்பான தாடியால் சிர்த்துப் பெருக்கி முத்தமிட்டுக் கொண்டு வாசலுக்கு முன் தலை குனிந்து சலாம் சொல்லி நின்று, தக்பீறு கட்டி குர்ஆன் முப்பது ஜுஸுக்களையும் இரண்டு றக்அத்தில் ஓதித் தொழுது முடித்து இரு கைகளையும் ஏந்தி, “என் கர்த்தாவாகிய எஜமானே! உன் சிற்றடிமையாகிய இந்த அப்துல்காதிரு உன்னைத் தீர்ப்பாய் அறிந்து பரிசுத்தமாக வணங்கினவனல்ல. உன் மகத்துவம் இப்படிப் பட்டதென்று திடனாக அறியவில்லை. ஆனாலும், கர்த்தாவாகிய நீ உன் அடியானாகிய என் பிழைகளையும், என்னைப் பின் தொடர்ந்தவர் களின் பிழைகளையும் பொருத்து என்னை ஒப்புக் கொண்டு கிருபை செய்து உனது திருக்காட்சியை தந்தருள்” என்று துவா இரந்தார்கள்.

ஹலரத்து ஆண்டவரவர்கள் அடுத்த ஜாமம் வேளையில் இப்படி துவாகேட்ட போது கஃபாவுக்கு மேலே ஆகாயத்தி லிருந்து “ஷாஹுல் ஹமீதே! நீர் என்னைத் தீர்ப்பாய் அறிந்து பரிசுத்தமாகவே வணங்கு கிறீர். உம்மையும் உம் வணக்கங்களையும் நான் பொருந்திக் கொண் டேன். உமது பிழைகளையும் உம்மைத் தொடர்ந்தோர் பிழைகளை யும் பொறுத்துக் கிருபை செய்தேன்” என்று ஒரு சப்தம் கேட்டது. அல்லாஹுத் தஆலாவின் புறத்தி லிருந்து வந்த இந்தச் சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் ஆண்டவரவர்கள் அப்படியே சுஜூதில் விழுந்து ஆனந்த பரவச மடைந்து முஷாஹிதாவி லிருந்தார்கள். அப்படி பஜறு வருமளவும் சுஜூதில் கிடந்த ஆண்டவரவர்கள் பஜ்ருனவுடன் எழுந்து தொழுது முடித்து அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து ஷுக்கூருடன் ஜாகைக்கு வந்தார்கள்.

கொழிஞ்சிக்கனி பெற்றது.

ஹலரத் சையிது மீரான் சுல்தான் அப்துல் காதிறு ஆண்டவ ரவர்கள் மக்காவி லிருந்த காலத்தில் ஒவ்வொரு ஹஜ்ஜின் முடிவில் மதினாவுக்குப் போய் பாட்டனாரவர்களை ஜியாரத்துச் செய்வது வழக்க மல்லவா? அப்படியே ஒரு வருஷத்து ஹஜ்ஜு முடிந்தவுடன் மதினா வுக்குப் போனார்கள். ஆண்டவரவர்கள் மதினாவுக்குப் போனால், அங்கிருக்கும் நாளெல்லாம் பகல் முழுதும் உபவாசமாகவும், இரா முழுதும் நின்று வணங்குகிறவர்களாகவும், ஒவ்வொரு வேளை, தொழுகையிலும் நபிநாயகமவர்கள் சமூகத்தில் போய் குர்ஆன் ஸல வாத்து தறாது இவைகளை ஓதி ஹதியா செய்து தங்களுக்காக துவா இரப்பவர்களாகவுமே யிருப்பார்கள். ஒரு நாள் ஹலரத்து ஆண்டவ ரவர்கள் தங்கள் பாட்டனாராகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சிறப்பான றௌலாவிற் புகுந்து அங்கே இட்டிருக்கும் திரையைப் பிடித்து முத்தமிட்டு நின்றுக் கொண்டு "அஸ்ஸலாமு அலைக்கும் யாஜத்தீ, யா றஸூலல்லா" என்று சலாஞ் சொல்லி, முனாஜாத்து செய்தார்கள். றௌலாவுக்குள்ளிருந்து "வஅலைக்கு முஸ்ஸலாம் யாபுனை இ. யா நாயிபி" என்று பிரதி வந்தது. வந்தவுடன் நபி நாயகமவர்களின் சந்திப்புங் கிடைத்தது. அங்கே பல வரிசைகளையும் ஆண்டவரவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பின்பு ஹலரத் ஆண்டவரவர்கள் பாட்டனாரவர்களின் றௌலா விலிருந்து ஆனந்தத்துடன் வெளிப்பட்டார்கள். அப்போது அவர்களின் இருகை நிறையக் கொழுஞ்சிக் கனிகள் இருந்தன. அக்கனிகளைத் தங்கள் பகீர்மார் கண்டு எஜமான் அவர்களே! இவை நபி நாயகமவர் களின் றௌலாவுக்குள் ளிருந்து எப்படித் தங்களுக்கு கிடைத்தன? என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவரவர்கள் இவை என் பாட்டனார் எனக்குக் கொடுத்த வெகுமதி என்று சொல்லி அக்கனிகளை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். அந்த மகத்துவமுள்ள கனிகளை அவர்கள் தின்றபோது அவை இவ்வுலகத்துக் கனிகளைப் பார்க்கிலும் அதிக மதுரமும், வாசனையும் உள்ளனவா யிருந்தன. அவைகளை எல்லாரும் தின்று அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து ஷுக்குறு செய்தார்கள்.

பள்ளி கட்டியது
மரக்கலம் தானஞ் செய்தது.

ஹலரத் ஹாஜி ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் மக்கத்திலிருக்கும் போது இவர்களின் காரணங்களை யறிந்த மிகுந்த செல்வத்தையுடைய ஒரு அறபி வந்து ஆண்டவரவர்களுக்கு எதிரில் நின்று எந்நேரமும் தங்களுக்கு பணிவிடை செய்ய நாடி வந்தே னென்றார். ஹலரத்தவர்கள் அவ்வறபியை நோக்கி நீர் மிகவும் நல்ல மனிதன்; எல்லோருந் தொழுந்தக்கதாக என் பேரால் நீர் ஒரு பள்ளி கட்டி வையு மென்றார்கள். அவ்வறபி மிக மகிழ்ந்து பள்ளி கட்டத்தக்க கல் முதலியவைகள் சேகரித்து கூலி யாட்களை விட்டு வேலை தொடங்கினார். அது கேட்டு ஹஸரத்தவர்கள் ஒரு பகீறிடத்தில், நீர் அந்த அறபியிடத்திற் போய் பள்ளி கட்டுகின்ற கூலிக்காரர்களுக்கு நீர் கூலி கொடுக்க வேண்டாம். அவ்வாட்களை இங்கழைத்து வரச் சொல்லு மென்றார்கள். உடனே அந்த பகீரவர்கள் அவ்வறபியி னிடத்திற் சென்றுரைத்தார்கள். அவ்வறபியும் அதுபோல் மாலையானபோது கூலிக்காரர்களை யெல்லா மழைத்துக் கொண்டு வந்தார். ஹலரத்தவர்கள் அவ்வறபியை அருகிலழைத்திருத்தி நீர் இந்தக் கூலிக்காரர்களின் ஒவ்வொருவரின் பேர் சொல்லிக் கூப்பிட்டு நமது பிஸ்தருவில் உமது கையைவிட்டு அவரவர்களுக்குத் தக்க நாணயங்களை யெடுத்துக் கொடு மென்றார்கள். அவ்வறபி அது போலிருந்து கொண்டு எவ்வளவு தொகையை நினைத்து ஆண்டவரவர்களின் பிஸ்தரு வென்கிற விரிப்பின் கீழ் கையை நுழைப்பாரோ அவ்வளவு தொகையும் பிஸ்தராவிலிருந்து கிடைக்கும். அதைக் கூலிக்காரர்களுக்குக் கொடுப்பார். இவ்வாறு நாடோறுங் கொடுத்து பள்ளிவாயல் கட்டித் தீர்ப்பாகி விட்டது. அதுகண்டு ஹலரத் மீறான் சாஹிபவர்களும் பகீறுகளும் மற்றைய முஸ்லீம்களுமாக அப்பள்ளியிற் சென்று வணக்கத்திற்குரிய ஒரு முதற் கடவுளை வணங்கி ஏழைகளுக்கெல்லாம் மிகுந்த தானங்கள் ஈந்தார்கள். இவ்விதஞ் சில நாள் சென்றதற் பின் ஒரு நாள் மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் அந்த அறபியைப் பார்த்து நாளையத் தினம் நாமும் பகீறுகளும் மதீனா முனவ்வறுக்குப் பயண மென்றார்கள். அது கேட்டு அந்த அறபி மிகுந்த கவலையாகி நாம் ஆண்டவரவர்களுக்கும் பணிவிடைகள் நன்றாகச் செய்யவில்லையே, நாமவர்களின் சதகாவைத் தின்றோமே, ஏதேனுங் கொடுத்தாலும் வாங்கமாட்டார்களே என்றெண்ணிக் கொண்டு கவலையுடன் தன்வீட்டுக்குப் போனார். அந்த வேளையில் அதற்கு ஏழுவருஷத்

திற்கு முன் இந்த அறபியுடைய கப்பலொன்று காணாமற் போனது அக் கப்பல் இப்போது ஜித்தாவுக்கு வந்து விட்டதென்று காகிதம் வந்தது. அக்காகிதம் பார்த்து அந்த அறபி மனமகிழ்ச்சியுடன் ஒரு காகிதத்தில் ஆண்டவரவர்கள் பேரால் அக்கப்பலை பட்டா வெழுதினார். அதென்ன வென்றால் ஷாஹுல் ஹமீது நாயகமே! தங்களுக்கு நான் பணிவிடை செய்த பொருட்டினால் ஏழுவருஷக் காலமாகக் காணாதிருந்த என்கப்பல் இப்போது வெளியாகி வந்திருப்பதினாலே அக்கப்பலையு மதிலுள்ள சாக்குகளையுந் தங்களுக்கு நன் கொடையாகத் தந்தே னென்று எழுதி முடித்துக் கொண்டு ஆண்டவரவர்கள் முன்வந்து நின்று வணக்கத் துடன் அப்பட்டாவை கையிலேந்தி ஆண்டவர்களே! இதைத் தாங்கள் ஒப்புக் கொள்ளவேணுமென்றார். ஹலரத்தவர்கள் அதை ஒப்புக் கொள்ள மறுத்ததனால் அந்த அறபி துக்கசாகரத்தி லமிழ்ந்தவராக அழுது ஆண்டவர்களே! தங்களுக்கு வேண்டாதிக்கிலும் தாங்கள் கையில் வாங்கி யாருக்கும் தானம் கொடுத்து விடுங்களென்று கெஞ்சி மன்றாடி நின்றார். அதுகண்டு தங்களிடதுகையில் அப்பட்டாவை வாங்கி யிடது புறத்து விரிப்பின் கீழ் வைத்தார்கள். அத்தருணத்தில் ஒரு மிஸ்கீன் வந்து நின்று ஆண்டவர்களே! அல்லாவுடைய உவப் புற்ற தருமம் கொடுங்க ளென்றார். அதற்கு ஆண்டவரவர்கள் ஒரு தீனாறு கொடுத்தார்கள். அந்த மிஸ்கீன் நானிதுவாங்க வரவில்லை யென்றார். ஆண்டவர்கள் இரண்டு தீனாறு கொடுத்தார்கள். அதற் கந்த மிஸ்கீன் இதுவும் நான் வாங்க வரவில்லை. தங்களிடது பாகத்தின் பிஸ்தருவுக் குள்ளிருக்கிறதே அந்த வஸ்துவை நான் வாங்க வந்தே னென்றார். ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் புன்சிரிப்புடன் அந்த அறபி யெழுதிக் கொடுத்த கப்பல் பட்டயத்தை யெடுத்து பிஸ் மிற் சொல்லி அந்த மிஸ்கீன் கையிற் கொடுத்தார்கள். அந்த மிஸ்கீன் அதை ஆனந்தத் தோடுவாங்கிக் கொண்டு சந்தோஷமாகப் போய் விட்டார். அந்த அறபி கண்டு இதை மிகுஆனந்தங் கொண்டு இன்று நான் மிகுந்த பாக்கியத்தைப் பெற்றே னென்றார். பின்பு ஹலறத் மீறான் சாஹிப் ஆண்டவரவர்கள் மக்கா ஷரீபை விடுத்து மதீனா முநவ் வறுக்கேகி முன்போலவே தெரிசனைகள் செய்து அங்கிருந் தெழுந்து பகுதாதுஷா ஷரீபு நஜது அஷ்றபு கறுபலாமுஅல்லா முதலிய ஸ்தலங் களுக்கெல்லாம் சென்று பெரியாரின் கபுறு முபாறக்குகளைத் தெரிசனை கள் செய்து பாத்திஹா வோதி ஸியாறத்துச் செய்து மிகுந்த பலனைப் பெற்றுக் கொண்டு மீண்டும் மக்கமாநகர் வந்து சேர்ந்தார்கள்.

தோன்றலைக் கண்ணுற்றதும் புத்திரர் வந்து சேர்ந்ததும்.

ஹலரத்காதிர்கன்ஜெ சவாயி ஆண்டவரவர்கள், ஒருநாள் கஃபாவிற்சென்று வலஞ்சுற்றிக் கொண்டிருக்கும்போது, மனதில் பிள்ளையுடைய வசாட்டம் வந்து, பிள்ளையுடைய தேட்டத்தில் கல்லைப் பராக் காக்கி கவனமுற்றிருந்தார்கள். இங்ஙனம் இங்கிருக்க.

ஹலரத் சையிது சுல்தான் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் பொருட்டால், லாஹூர் காலி ஷெய்கு நூறுத்தீன் முப்தியவர்கள் குமாரராக அவதரித்த ஹலரத்துசையிது முஹம்மது யூசுபு சாஹிபு ஆரிபுபில்லாஹி அவர்கள் லாஹூரில் பிதாமாதாக்களின் ஆதரவில் சுற்றத்தார் யாவர்களாலும் வளர்க்கப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு நான்கு பிராயமான போது தந்தையவர்கள் குர்ஆன் ஓதும்படி செய்தார்கள். அவர்கள் ஓதும் பிராயமாயிருந்து கல்வி சாலைக்கு போய் வந்து கொண்டிருக்கும் காலத்தில், பிதா மாதாக்களுக்கு உண்டாயிருக்கும் கிருபைக்கு அளவில்லை. அவர்கள் தகப்பனார் காலி நூறுத்தீன் முப்தியவர்கள் மைந்தனை சந்திக்கும் போதெல்லாம் "என் அருமைக் கண்மணியான சிரேஷ்ட மகனே! உம்மைப் பெற்றதால், நான் என்றும் பெறாத நன்மைகளை பெற்றேன்" என்று ஆனந்தத்துடன் சொல்லி மனங்குளிர்ந்து அணைத்துக் கொண்டு தான் சம்பாஷிப்பார்கள். அவர்களுக்குப் பின்னும் ஆண் மக்கள் பெண் மக்கள் உண்டாயிருந்தும், பிதா மாதாக்களின் கிருபை முழுதும் மூத்த மகனாகிய சையிது முஹம்மது யூசுபுசாஹிப் அவர்கள் மீதே யிருந்தன.

இவ்வாறாக ஹலறத்து சையிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்கள் பிதா மாதாக்கள் சுற்றத்தார் இவர்களின் முழு கிருபையும் பெற்று, அவர்கள் எல்லார் மீதும் கிருபையுள்ளவர்களாய் அல்லாஹு தஆலாவின் காவலைக் கொண்டு குர்ஆன் ஓதி வருங்காலத்தில் ஓரிரவு அவர்களின் சொற்பனத்தில் சையிது ஷாஹுல் ஹமீது பாதுஷா சாஹிபு ஆண்டவரவர்கள் போல ஒருவர் வந்து நின்று "மகனே! வாயைப் பிள" என்று சொல்லி, பிளந்த பின் வாயில் உமிழ்ந்து "நீ இல்மில் சிறப்படைவாய்" என்று சொல்லி விட்டு மறைந்து போனார்கள். அன்று முதல் அவர்களுக்கு குர்ஆன் முழுவதும், மனப்பாடமாய் நஹ்வு சறுபாதி நூல்களும், பிக்ஹு அகாயிது, தஸவ்வுபு முதலான இல்முகளும் மனதிற் குடியாயின. எந்த கிதாபுகளை எடுத்து வாசித்தாலும், அதில் அடங்கின அகப்பொருள், புறப்பொருள் அடங்கலும்

தெளிவாய் புலப்பட்டு வந்தன. ஏழு பிராயத்தை யடையுமுன் பதினான்கு இல்முகளிலும் தேறினார்கள்.

பின்பு, ஸையிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்களுக்கு ஏழு வயதாயிற்று. ஒரு நாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து குத்பாப் பள்ளியிற் போய் இமாம் ஜமாஅத்துடன் பஜ்று தொழுது முடித்து குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். ஓதி முடிந்தவுடன் "ஸையிது முஹம்மது யூசுபே! உமது தந்தை ஸையிது அப்துல் காதிறு மக்காவில் கஃபாவின் ஹறமத்துக் குள்ளிருந்து கொண்டு, உமது வருகையை அதிக விருப்பத்துடன் எதிர் பார்க்கின்றார். அவ்விடம் நீர் போய்ச் சேர்ந்துக் கொள்வது கொண்டு உமக்கு துன்யாவிலும், ஆகிறத்திலும் ஜெயம் பெறுதலுண்டாகும்" என்று அசரீரியான ஒரு சத்தம் அவர்கள் காதிற் கேட்டது. இச்சத்தத்தைக் கேட்டுத் திகைத்து மனதில் ஆராய்ந்து உடனே எழுந்து வீட்டுக்கு வந்து தகப்பனாராகிய காலி நாறுத்தீன் முப்தியவர்களின் முன் போய்ப் பணிந்து நின்று, (மன் அபீ ஹக்கன்) "என் உண்மையான தகப்பன் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் (அனா அபூக ஹக்கன்) "திடனாக நான் உனது தகப்பன்" என்று மறுமொழி சொன்னார்கள். இதைக் கேட்ட ஸையிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்கள் பின்னும் தகப்பனாரை நோக்கி (அந்த அபூ பதனீ, வஜிஸ்மீ வமன் அபூ றூஹீ, வநப்ஸீ) "மெய்தான்; தாங்கள் என் உடலுக்கு தகப்பன் தான், என் றூஹுக்குத் தகப்பன் யார்?" என்று மறுத்து கேட்டு விட்டு, "அல்லாவினாணை என் தந்தை ஸையிது அப்துல் காதிறு இடத்தில் நான் போய் சேர்ந்து கொள்வேன்; இன்ஷா அல்லா" என்று சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்ட தகப்பனாராகிய காலி நாறுத்தீன் அவர்கள் ஆச்சரியப்பட்டு ஆலோசித்து (மன் அன்பாக ஹாதா கபறல் கபிய்ய) "மகனே! இந்த ரகசியத்தை உனக்கு அறிவித்தவர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் (நட்பானி அல்லாஹுல் கபிய்யி) "ரகசியங்களை யெல்லாம் அறிந்திருக்கும் அல்லாஹு தஆலா இதை எனக்கு அறிவித்தான்" என்று சொல்லி விட்டு, என் தந்தை கொடுத்த அடையாளம் ஏதாவதுண்டா? கொடுங்க ளென்று கேட்டார்கள். அப்போது தாயாராகிய ஜுஹறாபீவி "மகனே! அப்படி ஒன்றிருந்தால் நீரே எடுத்துக் கொள்ளும்" என்றார்கள்.

இச்சொல்லைக் கேட்டு ஹலரத் சையிது சாஹிபு அவர்கள் பெட்டியைப்போய் திறந்து முன் ஹலரத்து ஆண்டவரவர்கள் கொடுத்த பற் கொம்பைத் தாங்களே கொண்டு போய் வைத்தது போலவே எடுத்துக் கொண்டு தந்தை அவர்களை நாடிப் பிரயாணப் பட்டார்கள். அப்போது பிதா மாதாக்கள் கண்ணீர் சொரிந்து அழுது "மகனே! நாங்கள் விரும்பி யிருந்து பெற்ற நீர் எங்களை விட்டுப் போகாதிர். அப்படிப் போய் விட்டால் உம்மோடே எங்கள் எல்லாச் சுகங்களுந் தொலைந்துப் போம், போகாதிர் மகனே!" என்று பலவாறு சொல்லித் தடுத்தார்கள்.

எவ்வளவு சொல்லித் தடுத்தும் கேளாமல், நான் என் தந்தை அவர்களைக் கண்ணுற்க் கண்டல்லாமல் தரித்திருக்க மாட்டேன் என்று சொல்லி, ஓரே பிடியாய்ப் புறப்பட ஒருப்பட்டார். அப்போது தகப்பனார் "மகனே! உமது தந்தை சையிது அப்துல் காதிறு இப்போது மக்காவி லிருக்கிறார்கள். நீர் தன்னந்தனியே அவர்களைத் தேடிப் போவது கூடாது. சில துணைவர்களையாவது சேர்த்துக்கொண்டு போவீர்கள்" என்று சொல்லி, தங்கள் ஆட்களில் நாலு பேரைச் சேர்த்து வழிச் செலவுக்குப் பணமும் ஏறிப்போக ஒரு குதிரையும் கொடுத்து பிரயாணப் படுத்தினார்கள். அப்போது ஹலரத் சையிது முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் தந்தையை நோக்கி, "எனது தந்தையே தாங்கள் எனக்கு வழி துணைக்காக இந்த நான்கு பேர்களையும் என்னுடன் கூட்டி யனுப்புகிறீர்களே நல்லது, வழியில் இவர்கள் சொல்வதை நான் கேட்டு நடக்கிறதா? நான் சொல்வதை இவர்கள் கேட்டு நடக்கிறதா? இதன் வகை எப்படி?" என்று கேட்டார்கள். அப்போது தந்தை "மகனே நீர் சொல்வதை இவர்களே கேட்டு நடப்பார்கள்" என்று சொன்னார்கள். இதை ஹலரத்து அவர்கள் கேட்டு "அப்படியானால் வழியில் நான் சொல்லும் எதையும் இவர்கள் தட்டாமல்கேட்டு நடக்கிறதாக இவர்கள் கைப்பட ஒரு எழுத்து வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்டார்கள். தமக்குக் கீழ்ப்படியாமல் நடப்பார்களோ என்ற அச்சத்திற்காக உறுதிப்பட வேண்டியே இப்படி எழுதி கேட்கின்றார் என்று தகப்பனார் எண்ணி அவர்கள் சொன்னபடி அந்நால்வர் கைப்பட ஒரு உறுதி மொழி எழுதி வாங்கி மகனார் கையில் கொடுத்தார்கள். ஹலரத் அவர்கள் அதை வாங்கிக் கொண்டு அந்நாலு பேரும் தங்கள் பின்வர பிதா மாதாக்களின் உத்தரவு பெற்று அவர்களைப் பணிந்து சலாம் சொல்லி வீட்டை விட்டு புறப்பட்டார்கள்.

அப்போது அவர்கள் பிதா மாதாக்கள் சுற்றத்தார் எல்லோரும் உயிரைப் பிரிந்த வெற்றுடல் போலானார்கள்.

ஹலரத்து சையிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்கள் தங்கள் தகப்பனாராகிய ஹலரத் ஆண்டவரவர்களை நாடி, லாகூரை விட்டு வெளிப்பட்டு நடந்தார்கள். துணைவர் நால்வரும் கூடவே தொடர்ந்து போனார்கள். அப்போது ஹலரத்து அவர்களுக்கு வயது ஏழு.

லாகூருக்கு வெளியில் கொஞ்சந் தூரம் போனபின் ஹலரத் அவர்கள் தங்களுக்கு வழித்துணையாய் வரும் நால்வரையும் பார்த்து "நீங்கள் எழுதிக் கொடுத்த பத்திரம் இதோ பார்த்தீர்களா? இதற்கு என்ன சொல்லுகின்றீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு அந் நால்வரும் "ஆம் எஜமானே! தாங்கள் ஏவினபடி நடக்கக் காத்திருக்கின்றோம்" என்று மறுமொழி சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்ட ஹலரத் அவர்கள் அந்நால்வரையும் பார்த்து "நான் கால் நடையாகத் தன்னந் தனியே போய் என் தகப்பனவர்களைத் தரிசிக்க வேண்டும், அதற்கு அல்லாஹு தஆலா துணை இருக்கிறான். ஆகையால், நீங்கள் என்னோடு வரவேண்டாம்; திரும்பிப் போய் விடுங்கள்" என்று கட்டளை பண்ணினார்கள். இதைக் கேட்ட நால்வரும் திடுக்கிட்டு மறுத்துப் பேச வாய் இல்லாமல் அக்கட்டளைகளுக்குக் கீழ்படிந்து உடன் பட்டார்கள். உடனே ஹலறத் அவர்கள் தங்கள் பிதா வழிச் செலவுக் கென்று கொடுத்த பணத்தையும் ஏறிப் போகக் கொடுத்த குதிரையையும் அந்நால்வரிடமும் கொடுத்து அவர்களை லாஹூறுக்குத் திருப்பி யனுப்பி விட்டார்கள்.

ஹலறத் அவர்கள் தங்களுக்குத் துணையாட்களாய் வந்த நால்வரையும் அனுப்பி விட்டு ஒன்றியாய் ஏறி நடக்க வாகனமும் உண்ண ஆகாரமும் இல்லாமற் தகப்பனாராகிய ஹலறத் ஆண்டவரவர்கள் மேல் ஒரே நாட்டமாய் அல்லாஹு தஆலாவின் புறத்தில் தவக்கல் வைத்துக் கொண்டு நடந்தார்கள். ஹலறத் அவர்களுக்காக அல்லாஹு தஆலா அவர்கள் நடக்கும் பாதையை சுருக்கினான். அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், அகன்ற நதிகள், பரந்தவனாந்திரங்கள் எல்லாவற்றையும் வெகுவிரைவாகக் கடந்து ஆப்கானிஸ்தான், பெல்ஜிஸ்தான், குருஸான், பெர்ஷியா, இராக்கு என்னும் இந்த இராஜ்ஜியங்களையும் நீங்கி அரபி இராஜ்ஜியத்துக் கடலருகில் இருக்கும் கன்ஆன் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஹலரத் அவர்கள் அந்தப் பட்டணத்துக் கடல் கரையில் போய் தகப்பனுருடைய நாட்டத்துடன் அங்குள்ள ஒரு மரநிழலில் உட்கார்ந்து கொண்டு ஆழ்ந்த சிந்தனையுள்ளவர்களாக யிருந்தார்கள்.

மக்கா ஷரீபிலிருக்கின்ற ஹலறத்து மீரான் சாஹிபு ஆண்டவ ரவர்கள் அருகார்களை நோக்கி, என்னுடைய பிள்ளை யென்னைத் தேடிப் புறப்பட்டு கன்ஆனுடைய கடலருகிலிருக்கின்றார், நீங்களெதிர் சென்று அழைத்து வாருங்க ளென்று சிறிது பேர்களை அனுப்பினார்கள் வேறொரு சொற்படி இரண்டு ஜின்களை யனுப்பினார்க ளென்றும் வருகிறது. ஹலறத் மீரான் சாஹிபவர்களால் அனுப்பப்பட்ட கலீபாக்கள் வந்து ஹலரத் யூஸுபு சாஹிபவர்கள் கன்ஆனெனும் கடற்கரையில் ஒரு மரத்தின் நிழலில் இருக்கின்றதைக் கண்டு அவர்களை தங்கள் புயத்திற் சுமந்து கொண்டு வந்து ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவ ரவர்கள் கஃபத்துல்லாவில் இருக்கிறபோது சமுகத்தில் விட்டார்கள். ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் பிள்ளையைக் கண்டவுடன் தங்கள் முபாறக்கான கைகளினுற்றாக்கி இரு புருவத்திற்கு மிடையில் முத்தங் கொண்டு வச்சிரகிரியை போன்ற தங்கள் புயத்தின்பேரில் லேற்றிக் கொண்டு கஃபாவை ஏழுதரம் வலஞ்சுற்றி ஹலரத் யூஸுபு சாஹிபவர்களுக்காக மிகவுந் துஆக்கேட்டு ஹலரத்தில் வந்து தோளி லிருந்த பிள்ளையை யிறக்கி வைத்துக் கொண்டு முஹம்மத் யூசுபு சாஹிபு அவர்களைப் பார்த்து மகிழ்ச்சிக் கொண்டு சுப சோபனங் கொண்டாடினார்கள். மீண்டும், யூசுபு சாஹிபவர்களுக்குச் சில அறிவுகளைப் புகட்டி "யூசுபே! நீர் என் கண் குளிர்ந்த மகன்; என்னுடனிருக்கிற இந்த நானூற்று நால்வருக்கும் நீர் சருதார். எனக்குப் பின்னல் நீரும் ஒலியாக விருப்பீர். உம்மை உவந்தவன் எவனோ அவன் என்னை உவந்தவன். உம்மை வெறுத்தவன் எவனோ அவன் என்னை வெறுத்தவன். உமக்கும் உம்மை உவந்தவர்களுக்கும் அல்லாஹ் றஹ்மத்து செய்வானாக!" என்றிசைத்து ஞானவாருதியைக் கரங்களிலடக்கி மற்றோர் கையிற் கொடுப்பதுபோல சிறப்பாகிய முரீதென்ற உபதேசமும் சொல்லி கிலாபத்து, இஜாஸத்து, கிறக்கத்து, கில்அத்துங் கொடுத்து முந்திய நான்கு கலீபாக்களுக்கும் ஹலரத் யூஸுபு சாஹிபு அவர்களை தலைமையாக்கி மிகுந்த கிருபையுடன் தங்களுக்கு இரண்டாவதாக்கி வைத்துக் கொண்டு மக்கத்தில் சில நாளிருந்தார்கள்.

ஷெய்கு யூஸுபு சாஹிபவர்கள் நேம நிஷ்டை புரிந்த சரித்திரம்

ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவர்களையும் மற்றும் பக்கீறுகளையும் கூட்டிக் கொண்டு மக்கத்தை விட்டெழுந்து மதினத்திற்குச் சென்று முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் றவுலா ஷரீபைத் தரிசித்து ஸியாறத்துச் செய்துக் கொண்டு அங்குள்ள ஈற்றவங்களை யெல்லாம் முஹம்மது யூசுபு ஆண்டவரவர்களுக்குக் காண்பித்து மதீனம் விட்டெழுந்து தூறிசினா மலையிற் சென்று அங்குள்ள புதுமை களெல்லாம் பார்த்து அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து தொழுது துஆச் செய்து கொண்டு, அம்மலையை விட்டு நீங்கி, ஷாம்ராஜ்ஜியத்திற் குப் பிரயாண மானார்கள்.

ஆண்டவரவர்கள் ஷாமிற் சேர்ந்து அங்குள்ள கன்ஆன் தேசமுதலான பல பகுதிகளிலு முள்ள பிரதான நகரங்களுக் கெல்லாம் போய் அங்கங்கே உள்ள நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம், நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், நபி இஸ்ஹாகு அலைஹிஸ்ஸலாம், நபி யஃகூபு அலைஹிஸ்ஸலாம், நபி யூசுபு அலைஹிஸ்ஸலாம் முதலான நபிமார் றஸூல்மார்களின் மகுபுறுக்களை யெல்லாம் ஸியாரத்துச் செய்துக் கொண்டு பரிசுத்தஸ்தலமாகிய பைத்துல் முகத்திசு நகரத்திற் போய் அங்குள்ள திவ்வியாலயத்திற் பிரவேசித்து உபவாசத்துடன் இஃதிக்கா பிருந்து பின் தொழுது துஆ இரந்து நபி தாவூது அலைஹிஸ்ஸலாம், நபி ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், நபி ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாம், நபி மரியம் அலைஹிஸ்ஸலாம், இவர்களின் மஃபுறுக்களையும் ஸியாறத்துச் செய்துக் கொண்டு நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் இருந்து வணங்கி வானத்திற்குப் போன ஸ்தலத்தையும் தரிசித்துக் கொண்டு அங்கிருந்து நீனவா நகரம் போய் நபி யூனுசு அலைஹிஸ்ஸலாமவர்களை ஜியாரத்துச் செய்துக் கொண்டு தூரியாமலை ஏறி அங்கே அமீறுல் மூமினீன் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கட்டின தேவாலயத்திற் போய் தொழுது துவாயிரந்து இஃதிக்கா பிருந்து தக்பீறு தஹ்லீலு முழக்கத்துடன் ஷாமி இராஜ்ஜியத்து எல்லையைக் கடந்து ஹலபு அந்தாக்கியா மார்க்கமாக றூமி ராஜ்ஜியம் போய்ச் சேர்ந்தார்கள். ஹலரத் ஆண்டவரவர்கள் றூமி ராஜ்ஜியம் போய்ச் சேர்ந்து அங்குள்ள பிரதான நகரங்களை யெல்லாம் கண்டு அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து கொண்டு முஸ்லிமான

அதிபதியாகிய சுல்தான் அவர்கள் அரசு செய்யும் இராஜதானியாகிய இஸ்தம்பூல் என்னும் நகரம் போய் அந்நகரத்து அலங்காரங்களைக் கண்டு மகிழ்ந்து எல்லா ராஜாங்கங்களிலும் இந்த இராஜாங்கத்தை மேன்மையாக்கி வைத்த ஆண்டவனுக்கே எல்லாப் புகழுமென புகழ்ந்து ஷுக்கூறு செய்து அந்நகரத்து பிரதான ஆலயமாகிய ஆயா, சூபியா என்னும் பள்ளியில் போய்விடுதி விட்டார்கள். அக்காலத்தில்அங்கிருந்த சக்ரவர்த்தியாகிய சுல்தான் முஹம்மது உஸ்மானி கேள்விப்பட்டுதன் மந்திரி பிரதானிகளோடும், உலமாக்களோடும் பெருந்திரளாகபுறப்பட்டு அந்தப்பள்ளியில் வந்து ஹலரத்ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களைச் சந்தித்து கனப்படுத்தி அடுத்தவெள்ளிக்கிழமை ஜும்ஆவில் தாங்களே குத்பாவோதி இமாமாய்நின்று தொழுவித்து வஃலும் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஹலரத் ஆண்டவரவர்களும் அவ்வேண்டு கோளுக்கிணங்கி அந்த வெள்ளிக்கிழமை அங்கிருந்து தொழுது பிரசங்கமும் செய்து சுல்தான் அவர்களுக்கும் அவர்கள் குடிகளுக்கும் இராஜாங்கத்திற்கும் துவாச்செய்து ஆசிர்வதித்து பின் இராஜாமாளிகையில் விருந்துண்டு பிரயாணஞ் சொல்லிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். ஹலரத்து அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு ஷாம்வழியே இராக்குக்கு வந்து அத்தேசத்து இராஜமாநகராகிய பக்தாதி பட்டணம் சேர்ந்தார்கள். அப்பட்டணம் புகுந்தபோதே அங்கே அடங்கி விளங்கும் இமாமுல் அஃலம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கபர்ஷரீபுக்கு போய் அவர்களை ஜியாரத்துச் செய்துக்கொண்டு அங்கிருந்து தங்கள்பாட்டனார் சுல்தானுல் அவுலியாசையிது முஹியத்தீன் அப்துல் காதிறுல் ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பள்ளியில் புகுந்து கைகட்டி நின்று அஸ்ஸலாமு அலைக்கும் யாஜத்தி என்று ஸலாஞ் சொன்னார்கள். உடனே கபரிலிருந்து வஅலைக்கு முஸ்ஸலாம் யாபுனைய்யி என்று பிரதிவந்தது. ஹலரத் ஆண்டவரவர்கள் அதைக் கேட்டு சந்தோஷங்கொண்டு பதினொரு தினம் அந்த பள்ளியில் கல்வத்திருந்து பின் கத்தம் பாத்திஹா ஓதி ஹதியாசெய்து விட்டு கந்தூரியுங் கொடுத்து அங்குள்ள பெரியோர்களை எல்லாம் ஜியாரத்துச் செய்துகொண்டு ஜாமிஉல் மஸ்ஜிது ஜாமிஉற்றிலா என்னும் பள்ளிகளில் போய் தொழுது இஃதிகாப்பிருந்து பின்பு அங்கிருந்து தங்கள் கூட்டத்தார்களுடன் புறப்பட்டு கற்பலா என்னும் ஸ்தலத்திற்கு போனார்கள். அங்கே ஷஹீதான ஸுல்தானுஷ் ஷுஹதா சையிதினா இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களையும் மற்றும் அஹ்லுல்

களையும் ஜியாரத்துச் செய்துக்கொண்டு அங்கே மூன்றுநாள் கல்வத்திருந்து கத்தம் பாத்திஹா ஓதிகந்தூரி கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு ஹுதைதா நகரம்போய்ச் சேர்ந்தார்கள்.

ஹுதைதாவிற் போய் அங்கே அடங்கியிருக்கும் எல்லாப் பெரியோர்களையும் ஜியாரத்துச் செய்துகொண்டு பின் அங்கிருந்து பல நாடு நகரங்களையும் கண்டு களித்து அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து கொண்டு முஃகா என்னும் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

அந்த முஃகா நகரத்தில் ஹலரத் ஆண்டவரவர்கள் போனவுடன் அங்கு விளங்கும் ஷைகுல் மஷாயிகு இமாம் உமறிபுனு ஷாதலி றஹிமஹுல்லா இமாமம் ஸந்தலி றஹிமஹுல்லா இவர்களின் ஆலயங்களிற்போய் இவர்களின்கபறுகளுக்கு முன்னின்று சலாம் சொன்னார்கள். உடனே அவ்விருவருடைய கபறுகளிலு மிருந்து பிரதி சலாம் வந்தது. ஆண்டவரவர்கள் சந்தோஷமடைந்து அவ்விருவரின் ஜியாரத்துகளையும் முடித்துக்கொண்டு பின் அவ்வூரிலுள்ள ஒரு பூங்காவனத்தில் தங்கள் கூட்டத்தாருடன் விடுதிவிட்டுத் தங்கினார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் ஹுதைதாவின் தோட்டத்தில்தங்கியிருக்கும்போது ஒரு நாள் தங்கள் புத்திரர் சையிது முஹம்மது யூசுபு சாஹிபவர்களை அருகில் அழைத்து "என் அருமை மகனே! உம்மிடமிருக்கிற என் பற்கொம்பை யெடுத்துத் இந்தத் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நாட்டிவிட்டு நீர் வஹதானியத் தென்னும் விரிப்பில் ஒழுக்கத்தோடும் உபவாசத்தோடு மிருந்து அல்லாஹு தஆலாவை வணங்கிக் கொண்டு கல்வத்திலும் அவன் உம்மையும் உமது வணக்கத்தையும் எற்று உமக்கு நேர்வழிகாட்ட சக்கவன், அப்படி அவன் எற்றுக் கொள்வானானல், நீர் நட்டின பற்கொம்பு தளிர்த்து மூன்று பிளை விட்டு வளர்ந்திருக்கும்" என்று கட்டளை பண்ணினார்கள். அவ்வாறே ஹலரத்து சையிது முஹம்மது யூஸுபு சாஹிபு அவர்கள் பற்கொம்பைக்கொண்டு போய் ஓர் இடத்தில் நாட்டிவைத்து விட்டு அதின் பக்கத்தில் கல்வத்திருந்தார்கள். அவர்களைச் சூழ பகீர்களில் பலரை கல்வத்தில் இருத்தி விட்டு ஆண்டவரவர்களும் ஒரு புறம் கல்வத்தில் இருந்தார்கள். அந்த கல்வத்தில் இருப்பு நாற்பது நாட்களுக்குக் குறிப்பிட்டிருந்தது.

நாற்பது தினங்களுந் தீர்ந்து ஹலரத் ஆண்டவரவர்கள் எழுந்து தங்கள் மகனார் சையிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்களைப் போய்ப்

பார்த்தார்கள். அப்போது அவர்கள் கல்வத்தின் இருப்பிலேயே ஸுஜூதில் விழுந்து கிடப்பதையும் நாட்டின பற்கொம்பு தளிர்த்து மூன்று பனரிட்டிருப்பதையும் கண்டு ஆனந்தங்கொண்டு அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து ஷுக்குறு செய்து "மகனே! எழுந்திரும்; உம்மையும் உமது வணக்கத்தையும் அல்லாஹு தஆலா பொருந்திக் கொண்டான்" என்று சொல்லி அவர்களைக்கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய் அருகில் வைத்து மீதியாயிருந்த ரகசியமான இல்முகள் எல்லாவற்றையும் புகட்டி மற்றைய தரீக்குகளிலும் கிலாபத்தும் இஜாஜத்தும், கிறுக்கத்தும், கில்அத்தும் கொடுத்து நிரப்பமாக்கினார்கள்.

பின்பு ஹலரத் ஆண்டவரவர்கள் ஹுதைதா நகரத்திலிருந்து பிரயாணப்பட்டு உலக முழுதாண்ட முடிமன்னருள் ஒருவனை ஸத்தாதுசாசன் இருந்து இராஜ்ஜியபரிபாலனஞ் செய்த அதன் (எடன்) என்னும் பட்டணம்போய் அங்கே அடக்கி யிருக்கும் ஷைகுஹைதறூஸ் ரஹிமஹுல்லா ஷைகுஷையிது ரஹிமஹுல்லா ஷைஹு ஜௌஹர் ரஹிமஹுல்லா முதலான பெரியோர்களை எல்லாம் ஜியாரத்துச் செய்துகொண்டு ஹயாத்துடனிருக்கும் பெரியோர்களையும் சந்தித்த எல்லா மகிமைகளும் பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் தங்கள் கூட்டத்தாருடன் மறுபடியும் மக்கா நகரம்போய் சேர்ந்தார்கள்.

பொன்னுணி போன சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீதாண்டவரவர்கள் அறபு இராஜ்ஜியத்திற் சென்று ஒன்பது உம்ருவும், எழு ஹஜ்ஜும் செய்து மற்றைய திருப்பதிகடோறுஞ் சென்று மேன்மைதங்கிய ஒளலியாக்களின் மக்பறுக்களை எல்லாம் ஸியாறத்து செய்துக்கொண்டார்கள். ஹலரத்து யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் உம்ருவுடன் இரண்டு ஹஜ்ஜுசெய்து மேற்சொல்லிய ஸ்தலங்களை யெல்லாம் ஸியாறத்து செய்துக்கொண்டார்கள். அப்போது ஹலரத் யூசுபு சாஹிப் ஆண்டவர் அவர்களுக்கு வயது ஒன்பதாயிற்று. ஹலரத் மீருன் சாஹிப்ஆண்டவர் அவர்களுக்கு முப்பத்தேழாயிற்று. அவர்கள் மக்காவுக்குப்போன ஒன்பதாவது ஆண்டுக்குப் பின் இந்தியாவுக்கு வரவேண்டுமென்று நாடி மக்காவிலுள்ள ஷரீபுகள் இமாம்கள் மற்றும் பெரியார்கள் யாவர்களுக்கும் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு, தங்களருமை மகனர் முஹம்மது யூசுபு

ஆண்டவர் அவர்களும் பகீர்களுமாக புடைசூழ ஜித்தாவென்னும் நகர் வந்து சேர்ந்தார்கள். ஜித்தா வந்து சேர்ந்தபோது அங்குள்ள பெரியோர்களெல்லாம் ஆண்டவரவர்களைக் கண்டு மிகுந்த சங்கைகள் செய்து உபசரித்தார்கள். பிறகு ஜித்தாவிலிருந்து மலையாளத்துக்கு பிரயாணமாயிருந்த ஒரு கப்பலில் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் பயணமேறினார்கள். ஜித்தாவின் முஸ்லிம்களெல்லாம் திரண்டு மரியாதையுடன் கப்பலிலேற்றி யனுப்பினார்கள்.

ஆண்டவரவர்கள் முதலியவர்களெல்லாம் கப்பலிலேறிப் பாயெடுத்துச் சிலதூரம் கப்பலோடுகிறபோது, ஒரு நாள் ஹலரத்தவர்கள் இரவில் இஷாத் தொழுது விட்டு ஓதிக்கொண்டிருக்கும் போது ஹலரத்து யூசுபு சாஹிபவர்களைக் கூப்பிட்டு, "மகனே! நமது தஸ்பீகென்ற ஜெப மாலையைக்கொண்டு வாரும்" யென்றார்கள். ஹலரத் யூசுபு சாஹிபு அவர்கள் மனம் பதறி மிகப்பயந்து நடுங்கி தாட்சியுடன் எதிர் நின்று "என் தந்தையே! நேற்று ஜெபமாலையைக் கையில் வைத்துக்கொண்டு கப்பல் கடலைப் பார்த்துக் கொண்டு நின்றேன், அப்போது கைதவறி தஸ்பீஹு கடலில் விழுந்து விட்டது" யென்றார்கள். அதைக் கேட்டு ஹலரத்தவர்கள் மகனாரை நோக்கி, "யூசுபே! நீர் அஞ்சவேண்டாம். நேற்று நீர் இக்கப்பலில் எந்த விடத்தில் இருந்தீரோ அவ்விடத்தில் இக்கிஸ்தியையிட்டு தண்ணீரள்ளும் அதில் தஸ்பீஹு வருமென்றார்கள். யூசுபு சாஹிபவர்கள் அவ்வாறியற்றி தஸ்பீஹை யெடுத்து ஆண்டவரவர்களின் சமுகத்தில் வைத்தார்கள்.

மற்றோர்நாள் கப்பல் ஓடும்போது ஒரு கள்ளக் கப்பற்காரன் வருவதைக் கண்டு இக்கப்பல் மாலுமிகள் கலாஸிகள் முதலியவர்கள் மிகப் பயந்து சஞ்சலித்து முகம் பேதலித் திருப்பதைக்கண்ட ஹலரத்தவர்கள் "நீங்களேன் இவ்விதம் விசனமுற்று கவலையுள்ளவராய் கலங்குகிறீர்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அக்கப்பலைச் சுட்டிக் காட்டி அக்கப்பலிலுள்ள சோரர்கள் வந்து நம்மைத் தாக்கி நமது வங்கமதில் உள்ளவைகளைக் கொள்ளையாடிக்கொண்டு நமது கப்பலையும் நம்மையும் ஹலாக்காக்கி விட்டு போய் விடுவார்கள், யென்று விசனமுற்று இருக்கிறோமென்றார்கள். அதற்கு ஹலரத்தவர்கள் அக்கள்ளக் கப்பற்காரன் நம்மை யெவ்வாறு ஹலாக்காக்குவான் என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "அக்கள்ளகப்பலில் பீரங்கிகள் உண்டாயிருக்கின்றன; அவைகளில் வெடி மருந்துபோட்டு சுடுவார்கள்" என்று சொன்னார்கள்.

அதற்கு ஹலரத்தவர்கள் இக்கப்பலில் பீரங்கியிருக்கின்றதா வென்று கேட்டதற்கு மாலுமி இக்கப்பலில் பீரங்கி, கருமருந்து, குண்டு, ஒன்று மில்லையென்றான். அதுகேட்டு ஹலரத்தவர்கள் உங்களிடத்தில் மெழு கிருந்தால் அதுகொண்டு பீரங்கி செய்துசாம்பலைக் கருமருந்தாகவும் கற் களைக் குண்டாகவும் போட்டு அச்சோரக்கப்பலை நோக்கி அடியுங்களென் றார்கள். அக்கப்பலிலுள்ளவர்கள் அவ்வாறேமெழுகினால் பீரங்கிசெய்து கல்லையும் சாம்பலையும்குண்டு மருந்தாகப்போட்டு அக்கள்ளக்கப்பல் புற மாய் பீரங்கி முகத்தைதிருப்பி நெருப்பை கொளுத்தினபோது அம் மெழுகுப் பீரங்கியினுள்ளிருந்து கணக்கிடற்கரிய குண்டுகள் பறிந்து அச்சோரக் கப்பலிற்றாக்கிச் சின்ன பின்னஞ் செய்து அக்கப்பலை ஜலத் தின் கண்அமிழ்த்து விட்டது. அக்கப்பலும் அதிலுள்ள திருடர் களும் ஹலாக்காகி விட்டார்கள். ஹலரத் மீருன் சாஹிபவர்கள் ஏறிய கப்பல் சலாமத்தாக வோடி அலியென்கிற இராஜாவின் பட்டணமாகிய பொன்னுணி என்றும் பொன்னுக்கை யென்றும் பெயர் விளங்கும் பட்டணத்தின் துறை முகம் வந்து சேர்ந்தது. கப்பலி லுள்ளவர்களெல் லாம் கரையிலிறங்கினார்கள். ஆண்டவரவர்கள் ஹலரத் முஹம்மது யூசுபு சாஹிபு பகீருகள் முதலியவர்களுடன் இறங்கி அந்நகர் செய்யிது சைனுத்தீன் மருதாமுடைய தோட்டத்தில் விடுதி விட்டு புடை சூழ தங்கினார்கள்.

பட்டமரம் தழைத்தது.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பொன்னுணியில் செய்து சைனுத்தீன் மக்தூம் தோட்டத்தில் விடுதி விட்டபோது, அது கண்டு அத்தோட்டக் காவற்காரன் ஆண்டவரவர்களின் வர்த்த மானங்களை எல்லாம் கேட்டு நன்றாக அறிந்துகொண்டு அத்தோட்டத் துடையவரிடத்தில் சென்று நமது தோட்டத்திற் பெரிய கூட்ட மொன்று வந்திறங்கி யிருக்கின்றது. அக்கூட்டத்தின் தலைவர் முஹியித்தீன் அப்துல் காதிறு ஆண்டவரவர்களின் மரபில் வந்த மகா பெரியோர் என்கிறார்களென்றான். அதற்கந்த ஸைனுத்தீன் மருதா மென்கிறவர் நமது தோட்டத்தில் பட்டிறந்து போன பலாமரந் தழைத்துப் பூத்துக் காய்க்கச் செய்தால் அப்போது தான் அவரைப் பெரியோரென்று எண்ணலா மென்றார். அது கேட்டந்தக் காவற்காரன் தோட்டத்திற்கு வந்து நோக்கு மிடத்தில் ஹலரத் மீருன் சாஹிபு

ஆண்டவரவர்கள் கூஜாவில் தண்ணீரெடுத்துக் கொண்டு அப்பட்ட மரத்தடியிலிருந்து அம்மரத்தின் வேர்களிற் தண்ணீர் படும்படியாக ஒலுச் செய்துக் கொண்டிருப்பதைக் கண்டு புதுமையாகிப் பார்த்துக் கொண்டு நின்றான். ஹலரத்தவர்கள் ஒலுச்செய்து எழுந்து வந்து முசல்லாவில் நின்று இரண்டு றகஆத்துத் தொழுது சலாம் செய்த வுடன் அந்த மரந்தழைத்துப் பூத்துக் காய்த்துச் செழித்து நின்றது. அது கண்டு அந்தக் காவலாளன் மிகுந்தஆச்சரியமடைந்து ஓடோடியும் போய் அந்த ஸைனுத்தின் மருதூமிடத்திற் மிகு ஆச்சரியத்தோடு நடந்த விஷயம் யாவையும் ஒழுங்காய்ச் சொன்னான். அவர் இச் சொல்லைக் கேட்டதும், பட்டமரம் தழைத்ததா ? ஆ ! வென கால் பாக்க கைபரக்க பதறி ஓடோடியும்வந்து ஆண்டவரவர்களை கண்டு மிகு மரியாதையோடு சலாம் சொல்லி மிகுந்த தாழ்ச்சி செய்து தம்முடைய மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போய் இன்பகரமான அறுசுவை பதார்த்தங்களோடு வஜ்பனங் கொண்டு விருந்துங் கொடுத்து மிகுமரி யாதையாய் அன்புள்ள மொழிகளை பேசி ஆண்டவரவர்களை நோக்கித் தாங்கள் கவுது சமதானி ஆண்டவரவர்களின் மாபிலுதித்தவர்கள், யானும் அவ்வழியிலுள்ளவன், நான் வெகுநாளாக நாடியிருந்த காட்டம் இன்று நிறைவேறிற்று, அதாவது நான் ஒரு மகளை வைத்துக் கொண் டிருக்கிறேன். அதற்குச் சரியான மணமகனில்லாமலிருக்கிறது. ஆகை யால் தாங்கள் என் மகளைக் கலியாணஞ் செய்துகொள்ள வேணு மென்றார். அதற்கு ஆண்டவரவர்கள் எனக்கு கலியாணத்தின் பேரில் இச்சையில்லை என்பது உமக்கும் தெரிந்திருக்கு மென்றார்கள். அது கேட்டு செய்யிது ஜைனுத்தின் மருதூம் அவர்கள் மவுனமாய் வாயை மூடிக்கொண்டார்கள்.

மஹல்லதீவு புக்கிற சரித்திரம்.

ஹலரத் ஷாஹமீது ஆண்டவரவர்கள் பொன்னுனி யின் கண்ணுற்ற செய்யிது சைனுத்தீன்மருதூ முதலியவர்களுக் கெல் லாம் பயணஞ் சொல்லிக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணப் பட்டு, மகனார் யூசுபு சாஹிபும் மற்றும் பகீர்களும் புடைசூழ நடந்து பொன்னுனி கடற்கரை வந்துசேர்ந்தார்கள். அங்கிருந்து மஹல்ல தீவுக்கு ஏக வேண்டுமென்று பார்த்தபோது யாதொரு கப்பலோ, படகோ ஒன்றும் அகப்படவில்லை. அப்போது அவசியம் மஹல்லதீவுக்

கேகவேண்டு மென்ற எண்ணத்துடன் ஆண்டவனை நாடி அவ்விடத்தில் இரண்டு றக் ஆத்துத் தொழுதுவிட்டு ஹலரத் யூசுபு சாஹிபு அவர்களையும் மற்றும் பகிர் முதலியவர்களையும் நோக்கி நீங்கள் விழிகளை மூடிக்கொண்டு இந்த இலவண சமுத்திரத்திற் கால்களை வைத்து என் பின்றொடர்ந்து வாருங்களென்று சொல்லி இசைத்துக் கொண்டு பிஸ்மிற் சொல்லிமுந்தி ஆண்டவர்கள் தங்களின் பாதகமலங்களை கடல்மீது வைத்து நடந்தார்கள். மற்றவர்களும் பின்றொடர்ந்து நடந்தார்கள்.

ஒரு கண்ணிமைகொட்டி அப்படி நடக்க ஆரம்பித்து ஆண்டவவர்கள் *முபாறக்கானவாயினால் தபோதனர்களைக் கண்விழிக்கச்சொல்லி ஏவினார்கள். அவர்கள் விழித்துப்பார்க்க மஹல்ல தீவின் கரையிலிருக்கக் கண்டு மிகுந்த மகிழ்ச்சிகொண்டார்கள். அந்நகராதிபன் முதலியகாபிர்கள் ஹலரத்தவர்கள் கூட்டத்துடன் வந்திருப்பதைக்கண்டு இக்கூட்டத்தார் நம்மூரைபிடித்து ஆளவோ? அல்லது நம்மை சிறைபடுத்திக்கொண்டு போகவோ அல்லது நம்மெல்லோரையும் படுகொலை செய்யவோ வந்திருக்கின்றார்கள் என்றொருவரோ டொருவர் பேசிக்கொண்டு இவர்களையெல்லாந் தந்திரமாக கொலை செய்துவிட வேண்டுமென்று கருதிக் கனிவர்க்கங்களிலும் தின் பண்டங்களிலும் கொடூரமான நஞ்சுகளை ஏற்றி எடுத்துக்கொண்டு அரசன் முதல் நகரவாசிகளெல்லாங்கூடி எதிர்காண வருபவர்களைபோல ஹலரத்தவர்களிடத்திற் சென்று மிகுமரியாதையுடன் அடிபணிந்து நின்று தாங்கள் கொண்டுவந்த நஞ்சு பண்டங்களை முன்பில் புசிக்கும்படி வேண்டி நின்றார்கள். எவ்விதமான மறைந்த கருமங்களையும் இருதயக் கண்ணாடிக்குள் வெகு தெளிவாயுணர்ந்துக் கொள்ளும் சக்தியுள்ள ஹலரத்தவர்கள் அறிந்தும் அறியாதவர்கள்போல்பிஸ்மில் சொல்லி அப்பண்டங்களில் தங்களின்முபாறக்கான கரத்தை வைத்தெடுத்துப் புசித்து விட்டு மற்றவர்களுக்கும் தங்கள் கரத்தால் பிஸ்மில்சொல்லி எடுத்துக்கொடுக்க, அவரவர்களும் புசித்து மகிழ்ச்சியானார்கள். இதுகண்டு அவ்வரசன் முதலியவர்கள் திடுக்கிட்டு மனங்கலங்கி இவர்கள் மக்காவை சேர்ந்த பெரியோர்களா இருக்க போதும். நாம் செய்த மோசத்தை யறிந்தும் வெளியிடவில்லை யென்றெண்ணிக் கொண்டு மௌனமாய் போய்விட்டார்கள். பின்பு ஹலரத் அவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் மஹல்ல தீவிற்குள் ஒரு ஜாகையில் தங்கி இருந்தார்கள்.

* முபாறக் அழகு.

ஜின்னை யீடழித்த சரித்திரம்.

மஹறல் லதீவின் காபிர்கள் நேர்வழியிலாகவும் அந்நகரிலுள்ள இடர்தவிரவும் ஒருநாள் ஹலரத்மீருன் சாஹிபு ஆண்டவர்கள் சில பகீருகளுடன் தெருவீதியில் வரும்போது ஒரு வீட்டில் அந்நகராதிபரின் சேவகர்களும் அவ்வூரார்களெல்லாம் கூடி அங்குற்ற ஒரு கன்னிஸ்திரியை அலங்கரித்து கயிறுகொண்டு கட்டப் போகிறார்கள். பெண்ணின் தாய் மனவருந்தி வயிறலைந்தேங்கி யழுகிறாள். அதுகண்டு ஹலரத்தவர்கள் அங்குள்ளவரைப்பார்த்து, இதென்ன விஷயம்? இவளை இப்படி ஏன் செய்கிறீர்கள்? என்றுகேட்டார்கள். அக்கேள்விக்கு அந்த ஜனங்கள் ஆண்டவர் அவர்களை நோக்கி இவ்வூரில் மகாப்பெரிய ஒரு ஜின்னுண்டு. அது ஒரு வருடத்திற்கு ஒருதரம் இவ்வூர்ப்புறமிருக்கின்ற தேவாலயத்திற்குவரும். அதுவருங்காலமும் நேரமும் எங்களுக்கு தெரியும். அப்படி அதுவரும் இரவுக்கு முன்னமேயே இவ்வூரிலுள்ள கன்னிகாகுமரி பெண்ணை ஜோடித்து அக்கோவிலிற் கொண்டு போய் அதற்கு பலியாக வைத்துவிடுவோம். அந்த ஜின் அன்றிரவில் அங்கே வந்து அந்தப்பெண்ணை தன் இஷ்டப்படி நடத்தி பிரேதமாக்கிப் போட்டு விட்டு போய்விடும். அதிகாலையில் நாங்கள் அந்த பிரேதத்தை எடுத்து தகனம் செய்வோம். இப்படி வருடத்திற்கொருமுறை நடக்கும். அப்படிக் கொடுக்காவிட்டால் அந்த ஜின் ஊருக்குள் வந்து அழிச்சாட்டியம் செய்யும். இஃது பூர்வீகமாய் நடந்து வருகின்றது. ஆதலால் முறை வண்ணமாகக் கன்னிஸ்திரிகளை கொடுத்து வருகிறோம். இப்போது இப்பெண்ணின் முறையானதினாலே இங்கடைந்து இப்பெண்ணைக் கொண்டுபோக எத்தனஞ் செய்கிறோமென்றார்கள்.

ஹலரத்தவர்கள் அக்காபிர்களை நோக்கி இக்கெடுதியான காரியத்தைச் செய்யவேண்டாமென்று விலக்கி அப்பெண்ணை ஓர் ஆடவனுக்கு மணமுடித்து கொடுங்களென்றுரைத்து விட்டேகினார்கள். அக்காபிர்கள் ஹலரத் தவர்களின் காரணீகங்களை நன்றாய் அறியாதவர்களானதால் ஆண்டவர்களின் நன்மொழியை விசுவாசிக்காமல் எப்போதுஞ் செய்வதுபோல் அப்பெண்ணை அலங்கரித்து இறுகக் கட்டிச் சிவிகையிலேற்றித் தீவிகைகள் பிறங்க வாத்தியங்கள் முழங்க ஊர்வலம் சுற்றி மாலையானதும் கோயிற்குள் அப்பெண்ணை வைத்து விட்டு அவரவர்கள் வீட்டிற்கு போய் விட்டார்கள்.

இச்சங்கதிகளை ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவரவர்கள் அறிந்து கஜ்ஜாமத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்து அர்த்தராத்திரி

யாணயுடன் தங்கள் கையில் கூஜா வென்னும் நீர் காகம் ஒன்றை எடுத்துக்கொண்டு முத்திபெற்ற வள்ளல் தனியே நடந்து அப்பெண்ணிருக்கும் கோவிலுக்குச் சென்ருர்கள்.

ஹலரத் ஆண்டவர்கள் அங்கே போயிருந்தத் தருணத்தில் அந்த ஜின்னுனது வழக்கப்படி இடிமுழக்கம் போன்ற தொனியுடன் ஆவென்று அலறிக்கொண்டு கண்களில் அக்கினி பறக்க விகார ரூபத்துடன் அக்கன்னியை நோக்கி வந்தது. அதைக் கண்ட மீருன் ஹமீதொலி ஆண்டவவர்கள் அந்த ஜின்னை நோக்கி, அடா ஷைத்தானே! நீ பொறுதிசெய். அப்பெண்ணிடத்தணுகாதே. இங்கே என்முன்வாவென்ருர்கள். அச்சொற்கேட்டந்த ஜின் மனமருண்டு உடற்றளர்ந்து முகஞ்சாம்பி ஆண்டவாவர்களின் பாத தாமரையிற் சாஷ்டாங்கஞ் செய்கிடையாய் விழுந்தது. ஹலரத்தவர்கள் அந்த ஜின்னை நோக்கி அடா *மல்வூனே! இக்கூஜாவைக் கொண்டுபோய் எதிரிலிருக்கின்ற ஏரியில் தண்ணீர் எடுத்துவா வென்று உத்திரவு செய்தார்கள். அவ்வுத்திரவுபடி உடனே அந்தஜின் கூஜாவை கையிலெடுத்து மனித ரூபங்கொண்டு அவ்வேரியிற் சென்று கூஜாவை அவ்வேரியில் தண்ணீர் மெள்ள அருகிற்று. அவ்வேரியின் தண்ணீரடங்கலும் கூஜாவிலுள்ளாகி விட்டது. அதைக் கண்டு அந்த ஜின் ஆச்சரியமடைந்து அக்கூஜாவைக் கையிலெடுக்க வராததினுல் மீண்டுந்தன் ஆக்கிரமங்களைக் கொண்டு தூக்கியும் எவ்வளவும் நகராததினுலே ஜின் வலு குறைந்து அக்கூஜாவை விடாதி முத்துக் கொண்டு நிற்கும் போது அத்தீவி லுள்ளவர்கள் வழக்கம் போல் மூன்ருஞ் சாமத்தில் குடங்களை யெடுத்துக்கொண்டு தண்ணீரள்ள அவ்வேறிக் கரையை அடுத்து பார்க்கும் போது அவ்வேரி தண்ணீரின்றி வற்றிக் கிடப்பதையும் இந்த ஜின் மனிதர் போல் நின்று கூஜாவுடன் மல்லாடுவதையும் பார்த்து ஆச்சரியமுற்று நின்ருர்கள். அந்த ஜின் தன்னுல் கூடியமட்டில் கூஜாவை யெடுத்தும் வராமையால் உடலயர்ந்து ஹலரத் காதிர்கன்ஜே சவாய் நாயகம் அவர்களின் திருச்சமுகத்திலாகி, நடந்த சங்கதியை சொல்லிற்று. அதைக்கேட்டு ஹலரத்தவர்கள் அடா ஷைத்தானே! நீபோய் நமக்குரிய அக்கூஜாவைக் கவிழ்த்துவிடு. அதனுட்பட்ட நீரெல்லாம் ஓடிப்போகும். அப்பால் பிஸ்மில் சொல்லி கூஜாவை நீரில்முக்கி தண்ணீரை மொண்டுக்கொண்டு வாவென்று உத்திரவு செய்தார்கள்.

---

* மல்வூன்-பேய்

அவ்வுத்திரவுபடி ஜின் போய் கூஜாவை கவிழ்த்தியதும் நீர் முழுதும் பழையபடி ஆருய்பெருகிற்று. அதன் பின் பிஸ்மில் சொல்லி கூஜா நிறைய தண்ணீரைமொண்டு தூக்கிக்கொண்டு ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்து கைகட்டி நின்றது. ஹலரத்தவர்கள் அத்தண்ணீரை எடுத்து ஒலுச்செய்து இரண்டு ரக்அத்துத் தொழுதார்கள். ஆண்டவர்கள் ஒலுச் செய்யும் போதும் தொழும்போதும் அந்த ஜின் தன்மூடப் புத்தியினுல் அக்கூஜாவினுட் புகுந்து அதனுள்ளூறும் அதிசயத்தை நாமறிய வேண்டு மென்றிண்ணிக் கொண்டிருந்து ஆண்டவரவர்கள் ஒலுச் செய்து தொழுது முடிந்தவுடன் ஆண்டவர்களே! இக்கூஜாவினுள் என்னபுதுமை இருக்கின்றது? நான் நுழைந்து பார்க்க உத்திரவு தரவேணு மென்று விரும்பிக் கேட்டு நின்றது. ஹலரத்தவர்கள் நல்லது புதுமையை நுழைந்து பார் என்ருர்கள். அந்த ஜின் மிகுஆவலோடு தன்னுடலையொடுக்கிக் கூஜாவினுட் புகுந்தது. உடனே ஹலரத் தவர்கள் அக்கூஜாவிற்கு மூடி போட்டு ஜின்னை வெளிவராமல் தடைசெய்து விட்டார்கள். இதற்குள் கோழி கூவி பொழுது விடியும் நேரமாயிற்று.

ஹலரத் ஆண்டவரவர்கள் அந்த கூஜாவை பக்கத்தில் வைத்துவிட்டு சுபுஹு தொழுது முடித்துவிட்டு ஓதிக்கொண்டிருந்தார்கள். இங்கே நடந்த சகல காரியங்களையும் கோவிலுக்குள் பலியிட வைக்கப்பட்ட அந்தப் பெண் அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். பொழுது விடிந்து சூரிய உதயமானவுடன், அத்தீவார் வழக்கம் போல் சவமெடுப்பதற் குரியவைகளை யாவையும் கொண்டு வந்து பார்க்கும் போது அப்பதிவிரதை இரவையில் வைத்ததுபோல் ஜீவித்திருப்பதைக் கண்டு புதுமையாகிய யவளை யடுத்திருந்து, இங்கு நடந்தவை யாவெனவினவினுர்கள். அக்கன்னி இரவையில் நடந்த காரணங்களைச் சொல்ல, அவ்வூரார் கேட்டு அந்த ஜின் எங்கே இருக்கிறதென்ருர்கள். அவள் ஹலரத்தவர்களை சுட்டிக் காட்டி அக்காரணீகரின் சமுகத்தின் கூஜாவில் அடைப்பட்டிருக்கிற தென்ருள். அத்தீவிலுள்ளவர்கள் யாவரும் மிக மகிழ்ந்து அங்கங்குளிர்ந்து அப்பெண்ணின் கட்டுகளை யவிழ்த்துத் தங்களுடன் கூட்டிக்கொண்டு ஆண்டவரவர்களின் திருவடிகளில் வந்து விழுந்து சாஷ்டாங்கம் பண்ணிப் புகழ்ந்து, மிகு துரிதமாய் நடந்து அத்தீவரசனிடத்தில் இச்சங்கதிகளைப் பகர்ந்தார்கள். அவன் கேட்டு ஆனந்தமாகி அதிசயப்பட்டு அந்தப் பெண்ணை தாய் வசம் ஒப்படைத்து விட்டுத் தானும், மந்திரி பிரதானிகளும், புரோ

கிதர் மற்றுந் தலைவர் வணிகர் சூழக் கால் நடையாக ஓடோடியும் வந்து ஆண்டவரவர்களைக் கண்டு எங்களுக்குற்ற தீங்கை நீக்கி வைத்த நாயகமே! என்று பாதம் பணிந்து எங்களை நேர்வழி காட்டி யிரட்சிக்க வேண்டும். நாங்கள் உங்கள் அடைக்கலமாகிறோம். தாங்களிட்ட கட்டளைப்படித் தவறாது நடப்போமென்றுரைத்து நின்றார்கள். ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் அவ்வரசன் முதலிய யாவர்களுக்கும் தீனுல் இஸ்லாத்தின் மூல மந்திரமாகிய கலிமா வென்னும் தேவாமிர்தத்தைப் புகட்டி இஸ்லாத்திலாக்கினார்கள். பிறகு அத்தீவிலுள்ள கோயிற்களை யெல்லா மிடித்துப் பள்ளியாக கட்டிவித்து அவர்களுக்கு இஸ்லாம் மார்க்க போதனைகளை எல்லாம் போதித்து கற்பித்து விட்டு, அவ்வரசனை நோக்கி நீயே இத்தீவுக்கு அரசனா யிருந்து செங்கோற் நடத்தி குடிபடைகளுக் கொத்தாசையாக விருந்து இராஜீகம் செலுத்தும்படி ஆசிகூறி சிலநாள் அங்கு தங்கி யிருந்தார்கள்.

இது நடந்த இரண்டு தினங்களுக்குப் பின், இராஜாவும் அவ்வூரார் பலருமாக ஹலரத்தாண்டவரவர்கள் பால் வந்து எங்களின் நாயகமே! இச்சத்துருவாகிய ஜின்னை இங்கு இவ்வாறு வைத்திருந்தால் பின்னுக்கென்ன மோசஞ் செய்யுமோ வென்ற அச்சம் எங்கள் மனதைக் கலக்கின்றது. தாங்களெவ்வாறு உரைக்கின்றீர்களோ, அவ்வாறிசைந்து நடக்கிறோ மென்றார்கள். ஹலரத்தவர்கள் இந்த ஜின் அடக்கமாயிருக்கின்ற கூஜாவை ஒரு தோணியி லேற்றிக்கொண்டு போய் காலிக்கப்புறமுள்ள கடலிற்றாழ்த்திவிட்டு வாருங்களென்றார்கள். அது கேட்டு அவர்கள் ஆண்டவர்களே! நாங்கள் என்னேரமும் கடலோடித் திரிகின்றவர்கள், இந்த ஜின் கடலிலிருந்து கொண்டு எங்களை யென்னென்ன தொந்திரவு பண்ணுமோ வென்றார்கள். அதற்கு ஹலரத்தவர்கள் உங்களை யாதொன்றுஞ் செய்யமாட்டாது. உங்களின் தோணிகளுக்கு இனி யொருக்காலும் கடலில் யாதொரு ஆபத்து மில்லை என்றார்கள். அவ்வூரார் ஹலரத்தவர்களின் முபாறக்கான வாயினாற் சொன்னவை யொருக்காலுந் தவறாதென்றெண்ணி, மகிழ்ச்சி கூர்ந்து அக்கூஜாவைத் தோணியிலேற்றிக் கொண்டு ஹலரத்தவர்கள் சைக்கினை செய்த கடலிற்றாழ்த்திவிட்டு வந்து மிகமகிழ்ந்து ஹலரத்தவர்களை வாழ்த்திப் புகழ்ந்தார்கள். மஹல்ல தீவாருக்கு அந்நாள் தொடுத்து ஜின்னின் பயமும் நீங்கி சுகமாய் வாழ்ந்தார்கள். அவர்களின் தோணிகளுக்கும் யாதொரு ஆபத்தும் கிடையாது.

பாவா ஆதம்மலையைத் தெரிசித்த சரித்திரம்.

ஹலரத் ஹாஜீ:ஷாஹூல் ஹமீது ஆண்டவரவர்கள் மஹல்ல தீவை விட்டு ஜபல் மஹப்பத்த நூரி என்று பெயர் சொல்லப்பட்ட ஸைலானிலிருக்கின்ற பாவா ஆதம்மலையை நாடிபோக வேணுமென்று எண்ணங்கொண்டு மஹல்லதீவாருக்கு மார்க்க சம்பந்தமாய் சொல்ல வேண்டிய நஸீஹத்துகளெல்லாம் சொல்லி விட்டு தங்களின் அருமை புதல்வர் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபவர்களும் மற்றும் பகீர் களும் புடைசூழ எழுந்தருளியாகி அத்தீவின் பலபாகங்களையும் சுற்றி பார்த்துக்கொண்டும் இன்னும் அந்த தீவிற்கு காரண குருவாகிய ஹலரத் ஷம்ஷே தப்ரேஸ் ஆண்டவரவர்கள் முன்னொரு விடுத்தம் அந்த தீவின் கண் மீன்களை தின்னவேண்டுமென்று கருதி சமுத்திரத் திலுள்ள மீன்களை அழைத்து வைத்துக்கொண்டு அதை சுடுவதற்கு அத்தீவுகளில் பல பாகங்களிலும் நெருப்பிற்கு ஆளனுப்பி பார்த்தும் நெருப்பு கிடைக்காததால் சூரியனை யழைத்து அக்காந்தியில் மீனைச் சுட்டார்கள். அச்சமயத்தில் அந்த சூரியன் வெப்பத்தை அந்த தீவி லுள்ள மனிதர்கள் சகிக்க முடியாமல் ஹலரத் ஷம்ஷே தப்ரேஸ் ஒலி நாயகத்தின் பால் கடந்துவந்து பாதம் பணிந்து கெஞ்சி நின்றழுது இக்காந்தியை மாற்ற வேணுமென்று மன்றாடினார்கள். அது கேட்டு சூரியனை தனது ஸ்தானத்திற்கு அனுப்பிவிட்டு தாங்கள் புசித்த மீனின் முட்களை யெல்லாம் சேகரித்து அல்லாவின் உத்திரவு கொண்டு முன் போல் ஜீவித்தெழும்புகளென்று சொன்ன உடன் அந்தமீன்களெல் லாம் உயிர் பெற்றெழும்பி கடலி லோடிவிட்டன. இவ்வரிதான காரண குருவாகிய ஹலரத் ஷம்ஷே தப்ரேஸ் நாயகமவர்களின் கப்று ஷரீ பையும் ஸியாரத்து செய்துக் கொண்டு அத்தீவின் கடல் கரையில் வந்து சேர்ந்தார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் கடல் கரையில் வந்து பார்த்தபோது இலங்கைக்கு போகக்கூடிய யாதொரு மாக்கலமும் தென்படாதகால், அக்கடலருகில் கிடந்த ஒரு பெருப்பமான கருங்கல்லின் பேரில் தங்கள் மகனார் ஹலரத் யூசுபு சாஹிபு ஆண்டவர்களையும் மற்றும் பகீர்களையும் ஏறி இருக்கச்செய்து தாங்களும் ஏறி இருந்து கொண்டு எல்லோரையும் கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லி மறுநொடி பொழுதில் கண்ணை திறக் கச்சொன்னார். அதுபோல் யாவரும் கண்ணை திறந்து பார்த்தபோது இலங்கை, காலிகரையை ஓரத்தில் நிற்கக்கண்டு ஆச்சரிய முற்று சந்தோஷமானார்கள்.

பின்னர் ஹலரத் ஆண்டவரவர்கள் தங்கள் பகீர்மார்களுடன் காலி நகரத்திற்குள் சென்று அவ்விடத்தின் அமைப்பை பார்த்துக்கொண்டு அங்கிருந்து நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்திலிருந்து இறங்கின சிறப்பானமலையைநோக்கி புறப்பட்டு செல்லும் வழியில் பல புதுமைகளையும் பார்த்துக்கொண்டு சிலநாள் நடந்து சிறப்பான அம்மலையைக்கண்டபோது நாயனை புகழ்ந்து இரண்டு றக்காத்து தொழுது கொண்டு தாங்கள் கூட்டத்தார்களோடு அம்மலைமேல் ஏறிபோகும் வழியில் அனந்தங்காட்சிகளோடு அங்கே வசிக்கும் மெஞ்ஞானத்துறவிகளையும் புதுமைகளையும் பார்த்துக் கொண்டு மலைசிகரத்திற்குப் போய்ச்சேர்ந்து அங்கே நபிஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் திருவடி அவட்டைக்கண்டு அல்லாஹு தஆலாவைத் துதித்து அம்மலைசிகரத்தில் வணங்கிக் கொண்டு சிலநாள் தங்கியிருந்தார்கள்.

அம்மலையின் சிகரத்தில் நபிஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்திலிருந்து தள்ளுண்டு இறங்கி அவர்கள் நாயனிடம் தங்கள் பாபத்தை மன்னிக்குமாறு பலநாள் நின்று மன்றாடி மகுத்துவம் தங்கிய அம்மலையின் பெருமையை வர்ணிக்க யாவருக்கும் திராணியில்லை.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் அவ்விடந்தங்கியிருந்த இடம் மிகவும் உன்னத சிகரமானதால் தங்கள் கூட்டத்தார்களுக்கு தவராமல் உணவுதேடுவது அசாத்தியமாயிருந்ததால் ஒருநாள் ஹலரத் அவர்கள் தங்கள் செல்வ புத்திரர் சையிது முஹம்மது யூசுபு சாஹிபவர்களை அழைத்து நம்முடைய கிஸ்தியை எடுத்துக் கொண்டு வாருமென்று உத்திரவு செய்தார். அது போல் புதல்வரவர்கள் கிஸ்தியை தூக்கின போது அது கல்லில் விழுந்து நொறுங்கிற்று. அதனால் அவர்கள் மனம்பதறி சஞ்சலித்து நிற்பதைக் கண்டு ஹலரத் ஆண்டவரவர்கள் மகனே! பயப்படாதீர். உடைந்த கிஸ்தி துண்டுகளை பொருக்கி கொண்டு வாரும் என்று அழைத்தார். அது போல் கிஸ்தி துண்டுகளை யூசுபு சாஹிபவர்கள் பொருக்கி எடுத்த மாத்திரத்தில் அது முன் போல் பழுதற்ற கிஸ்தியாயிருந்தது. அக்கிஸ்தியை தகப்பனார்பால் கொண்டு வந்து வைத்து கைகட்டி நின்றார்கள்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் அக்கிஸ்தியையெடுத்து பிஸ்மில் சொல்லி அதற்குள் கையை விட்டு ருசிகரமான உணர்ந்த உணவுகளை அதிலுள்ளிருந் தள்ளி தங்கள் கூட்டத்தாருக்கு பகுந்தார்கள். அவசியமான பல வேளைகளிலும் அக்கிஸ்தியிலிருந்தே

உணவுகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். சில வேளை களில் மகனார் ஹலரத் யூசுபு சாஹிபு அவர்களையும் எடுத்துக் கொடுக்கச் செய்வார்கள்.

ஒரு நாள் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவாவர்களுடைய பகீர்மார்களில் ஒருவர் ஹலரத் அவர்கள் உணவு உண்ணும் பீங்கான் தட்டத்தை கையினால் எடுத்த போது அது தவறி கல்லின் கீழ் விழுந்து விட்டது. அது கண்டு அந்த பகீர் திடுக்கிட்டு பயந்து துரிதமாய் கீழ் யிறங்கி அப்பீங்கானை எடுத்து பார்க்கும் போது யாதொரு சேதமு மின்றி முன் போல் நிறப்பமாக யிருக்கக் கண்டு ஆச்சரிய மடைந்து எடுத்து வந்து முன்யிருந்த ஸ்தானத்தில் வைத்தார்கள்.

கீழக்கரை சேர்ந்ததும் பட்டணமாரி நகர்புகுந்ததுமான சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபு ஆண்டவாவர்கள் மஹ் பத்நூதீ என்கிற ஆதம் நபியுடைய மலையை விட்டிறங்கித் தபோதனர் கள் சூழ நடந்து வரும் போது அல்லாவுடைய உத்தாரங் கொண்டு ஒரு இளம் பிராயமுள்ள புள்ளிமானனது ஆண்டவாவர்களைத் தொடர்ந்து வந்தது. அதையுங் கூட்டிக் கொண்டு சில தினங்களில் நடந்து கீழக் கரை யென்கிற ஊரில் வந்து ஒரு பள்ளிவாயலில் விடுதி விட்டிருந்தார் கள். அதிற் சில பகீறுகள் ஊருக்குள் சென்று ஊண் தின் முதலியவை களில் ஏதேனும் கிடைக்கு மென்று தேடியுங் கிடைக்கவில்லை. கேட்டும் ஒருவரும் கொடுக்கவில்லை. அவ்வூரார் அந்த பள்ளிக்குத் தீபமும் வைக்கவில்லை. பகீர்கள் எங்கள் ஜாகை இருண்டிருக்கிறது. ஒரு சிறிய விளக்காவது கொடுங்க ளென்று வீடு வீடாய் கேட்டார்கள். அதுவும் இல்லை யென்றே சொல்லி விட்டார்கள். பின்னர் சில பகீர்கள் பாத்தி ரங்களைக் கொண்டு போய் அவ்வூரிலுள்ள மனைகடோறும் குடிக்கத் தண்ணீர் கேட்டதற்கு ஒருவரும் கொடுத்தவர்களில்லை. ஒரு வீட்டில் கொஞ்சம் உப்புத் தண்ணீரை மாத்திரம் கொடுத்தார்கள். அதை பகீர்கள் வாங்கிக் கொண்டு வந்து ஹலரத் அவர்கள் முன்பில் வைத்தார் கள். அது கண்டு ஹலரத் ஆண்டவர்களுக்கு மனதில் கொஞ்சம் வருத்தம் வந்து இந்த ஊரில் நல்ல ஜலம் இல்லைபோலும் என்று சொல்லி விட்டு மௌனமா யிருந்து விட்டார்கள். ஆண்டவாவர்களின் மாட்சி யுற்ற வாக்கில் வார்த்தை நடந்து விட்ட நாள் முதல் அங்கமெல்லையில்

நல்ல தண்ணீரே கிடையாது. பின்பு அந்த நூற்றாண்டில் அவ்வூரில் அவதரித்த மகா கல்விக் கடலாகிய ஹலரத் ஷைகுசதகத்துல்லா சாஹிபு அவர்கள் அங்கு நேரிட்ட ஜல கஷ்டத்தை ஆண்டவரவர்களிடம் மன்னிப்பு கேட்டு அவர்கள் துஆ செய்து அதன் பொருட்டால் நல்ல தண்ணீர் உண்டாயிற்று.

பின்பு ஹலரத் அவர்கள் தங்கள் கூட்டத்தார்களோடு அவ்வூர் விட்டெழுந்து நடந்து பட்டணமாரி என்னும் நகரில் வந்து விடுதி விட்டிருந்தார்கள். அவ்வூர் முஸ்லிம்களும் மற்றோர்களும் ஹலரத் ஆண்டவரவர்களின் மகிமையைக் கேள்விப்பட்டு அவ்வூரார்க ளெல்லாம் ஒன்றாய்க் கூடி அவரவர்களுக்குத் தக்கபடி பொருள்களைச் சேகரித்து ஒன்றாய் சேர்த்துக் கொண்டு வந்து, அப்பொருள்களை பாதகாணிக்கை யாய் ஆண்டவரவர்களுக்கு முன்பில் வைத்து ஆண்டவர்களே! இதைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு எங்கள் பேரில் கிருபை செய்ய வேண்டு மென்று மன்றாடினார்கள். ஹலரத் அவர்கள் அவ்வூரார் பேரில் கிருபை கூர்ந்து அப்பொருளை ஏற்றுக் கொண்டதால், அவ்வூரார் அடங்கலும் ஹலரத் அவர்களுடைய கிருபை பெற்றேகினார்கள்.

அவ்வூரார்களில் நின்றும் ஒரு மிஸ்கீன் அவ்விடத்தில் மூன்று நாள் வரையில் பகீர்களிடத்தில் வஜீபனம் புசித்துக் கொண்டு இருந்து விட்டார். மூன்றாவது நாள் ஹலரத் அவர்கள் அம்மனிதனைக் கண்டு ஓ மனிதனே! நீ ஏன் இங்கிருக்கிறாய்? உன்னுடைய காரிய மென்ன வென்க, அம்மனிதன் ஆண்டவரவர்களே! என்னிடத்தில் ஒரு தோணி யிருந்தது, அதைக் கொண்டு மீன் பிடித்து பிழைத்து கொண்டிருந்தேன். அத்தோணி உடைந்து விட்டதால் நான் மிகவும் ஏழையாகி உண்ண உடுக்க வகையின்றி மூன்று நாள் பசியாக யிருந்து இங்கடைந்து தங்களின் பறக்கத்தினால் தங்கள் பகீருகளிடத்தில் மூன்று நாளாக வயிறார உணவருந்தினே னென்றான். அது கேட்டு ஹலரத் அவர்கள் அந்த ஏழையின் மீது அதிக இரக்கங் கொண்டு அம்மனிதனை நோக்கி உன் பழைய தோணியின் சாமான்கள் ஏது வேனும் இருந்தால் கொண்டு வாவென்றார்கள். அது கேட்டு அவன் ஒன்றுமில்லை யென்றான். மீண்டும் ஹலரத் அவர்கள் ஒரு சிறிய துண்டு பலகையாயினும் பார்த்தெடுத்துக் கொண்டு வாவென்றார்கள். அம்மனிதன் கடலருகிற் சென்று தன் தோணியுடைந்த இடத்திற் போய்ப்பார்க்கும் போது பழைய பலகை துண்டொன்று தாம்பின் துண்

வொன்று கூறப்பாயலின் துணிபொன்று இவைகள் உக்கிப்போ யிருந் ததைக் கண்டெடுத்துக் கொண்டு வந்து ஹலரத்தவர்களிடத்தில் கொடுத்தார்.

அதை ஹலரத் அவர்கள் தங்கள் முபாரக்கான கரத்தால் வாங்கி அதைப் பார்த்துக் கொண்டு மீண்டும் அம்மனிதன் கையிற் கொடுத்து நீ இப்பலகையைக் கொண்டு போய் கடலருகிற் நிலத்தில் போட்டு இக்கம் பத்துணியை அதில் நாட்டு இக்கயிற்றால் கட்டி பாய்த்துண்டை அதிற்றொடுத்து அதின் பேரில் நீயும் ஏறிக் கொண்டிரு வென்று அவனை யனுப்பி வைத்தார்கள். அவன் போய் அவ்வாறியற்றி யிருந்தான். ஹலரத் மீறான் சுல்தான் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் ஒரு பகீரிடத்தில் போர்வையும் பிரம்பும் கொண்டு வரச் சொல்லித் தாங்கள் கடலருகிற் சென்று அப்போர்வையை அக்கம்பத்தின் மேல் போட்டு மூடச் செய்து அம்மனிதனை நோக்கி இப்போதிது தோணியாக்கி தண்ணீரில் ஓடும். அப்படி ஓட ஆரம்பித்தவுடன் இப்போர்வையை யெடுத்துச் சீக்கிரம் கரையிற் எறிந்து விடென் றுரைத்து விட்டு தங்கள் கையில் அந்த பிரம்பை வாங்கி போர்வை மீது ஒரு தட்டு தட்டினார்கள். அல்லாவுடைய தத்துவங் கொண்டு இற்றுப்போ யிருந்த அப்பலகைகள் புதிய தோணியாகி வலை முதலியவைகளும் உண்டாகித் தண்ணீரில் ஓடிற்று. அம்மனி தன் அப்போர்வையை எடுத்துக் கரையில் வீசினதும் அத்தோணி நடு கடலுக்கு போய்விட்டது. முன்போல் போய் மீன் பிடித்துக் கொண்டு வந்து அதிக லாபத்தோடு விற்று பணமாக்கிக் கொண்டு ஆண்டவரவர்கள் பால் வந்து ஸலாஞ் சொல்லி தாட்சி செய்து நின்றான். ஹலரத் அவர்கள் உன் செய்தி என்ன வென்றார்கள். அவர் ஆண்டவரவர்களே! தங்களால் நான் மிகுந்த பாக்கியத்தைப் பெற் றுக் கொண்டே னென்றான். ஆண்டவரவர்களும் நீ சுகத்துடன் வாழ்ந் திருவென்று துஆவும் செய்தார்கள். அம்மனிதனும் அவனின் பெண்டு பிள்ளைகளும் ஆண்டவரவர்களின் பாதம் பணிந்து புகழ்ந்து போற்றித் தங்கள் இல்லம் போயினார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்களும் தங்கள் கூட்டத்தாருடன் பட்டண மாரியை விட்டு புறப்பட்டு விட்டார்கள். இக்காரணத் தோணியானது மற்ற தோணிகளுடன் பாயெடுத்து போனபோதிலும் மிகுந்த மச்சங் களை பிடித்துக் கொண்டு மற்றயவைகளுக்கு முந்தி வந்து நல்ல

விலைக்கு மீன்களை விற்று அம்மனிதன் மிகுந்த செல்வம் பெற்று வாழ்ந்தான். இதைக் கண்டு மற்றய தோணியாள ரெல்லாம் இவன் பேரில் பொருமையாகி அவனை நோக்கி இந்நகரில் ஒரு பெரியோர் வந்து நற்காரியத்தைச் செய்தால் அதை நீ மாத்திரம் எடுத்துக் கொள்வது நியாயமன்று. மற்றவர்க்கு அதில் பங்கில்லையா? அந்த பெரியார் எங்களுக்கும் பொதுவானவர்கள் நாமே. நாமும் அவர்களுக்கு அடிமைத் தானே. அவர்கள் செய்யும் உபகாரம் ஊர்பொதுதானே. ஆகையால் இதில் எங்களுக்கும் பாகம் உண்டென்று கலாபனை செய்து இந்த விவகாரத்துக்கு ஊர் பஞ்சாயத்தார்களே முடிவு சொல்லட்டும் என்று மீன்பிடிக்கப் போகவிடாமற் தோணிகளை யெல்லாம் மறித்து கட்டி விட்டு ஊரார்களிடம் பிராது கொடுத்தார்கள்.

அவ்வூர் பஞ்சாயத்தார்கள் இவ்விவகாரங்களை விசாரித்துணர்ந்து மற்றய தோணியர்க ளெல்லாம் பொதுவில் பணம் சேகரித்து ஒரு தோணி உண்டு பண்ணி அம்மனிதனுக்குக் கொடுத்து விட்டு இக் காரண தோணியைப் பிரித்து ஆளுக்கொரு துண்டாக அம்மனிதன் உள்பட பாகித்து அத்துண்டை உங்களுங்கள் தோணிகளில் ஆணி வைத்து தைத்து கொள்ள வேண்டியது. யாவர்களுமே அக்காரண தோணியின் பறக்கத்தை பெற்றுக்கொள்வீர்க ளென்றூர்கள். அது போல் யாவருஞ் சேர்ந்து அம்மனிதன் தனக்கு ஒரு படகு செய்து கொடுத்து விட்டு இக்காரண படகை பங்குவைத்து அவரவர்கள் படகிலும் ஆணி வைத்துக் கொண்டார்கள். அன்று முதல் எல்லா படகிலும் சரிவர மச்சங் கிடைத்து எல்லோருமே சிமானாய் வாழ்ந் தார்கள்.

காயற்பட்டணம் புக்கிய சரித்திரம்

ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவரவர்கள் பட்டணமாரி யென்னும் நகரை விட்டகன்று மேன்மை தங்கிய தபோதினர்கள் சூழ நடந்து காயற்பட்டணம் என்கிற காபிர் நகரருகில் வருகின்றதை அந் நகரிலுள்ள மிகுந்த செல்வத்தையும் தலைமை தனத்தையும் அறிவுகளை முடைய அப்துல் கப்பாரென்கிறவரும் மற்றய மனிதர்களும் அறிந்து ஹலரத் குத்புறப்பானி கவுது சமதானி முஹியத்தீன் அப்துல் காதிரில் ஜிலானி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மரபிலுதித்த மீருன் சாஹிபு ஆண்டவரவர்கள் மகா காரணக் குருவானவர்கள்; ஆன

தால் நாம் எல்லாம் எதிர் கொண்டழைத்து வருவதே நலமென்று எல்லோரும்கூடி எதிர் சென்றழைத்து வந்து மிகுந்த சங்கையுடன் அன்பு புரிந்து நகருக்குள் ஒரு ஸ்தலத்தில் அமர்த்தினார்கள். ஹலரத் அவர்கள் சந்தோஷத்துட னிருக்கும்போது ஒரு நாள் அப்துல் கப்பார் என்கிறவர் வந்த ஹலரத் அவர்களை தன் மனைக்கு அழைத்துச் சென்று மிகுந்த உபசாரத்துடன் வாசனை பொருந்திய அறுசுவை பதார்த்தங்களைக் கொண்டு விருந்து கொடுத்து அவ்விருந்துண்டு தீர்த்தபின் அந்த அப்துல் கப்பா ரென்பவர் ஆண்டவரவர்கள் சமூகத்தில் மரியாதையுடன் நின்று ஆண்டவரவர்களே! எனக்கொரு மகள் உண்டு. அவள்மிகுந்த சௌந்திரியமும், வணக்கமு மிகுந்தவள், நமக்குரிய வேதத்தை முகப்பாடமாக்கினவள். ஷரஹு நெறி தவறாது நடக்கின்றவள். ஆகையால், அப்புத்திரியைத் தங்களுக்கு விவாகம் செய்து தர மிகுந்த நாட்டம் வைத்திருக்கிறேன். தங்கள் இருதயத்து எண்ணம் எனக்கு தெரியவேணு மென்றார்கள்.

ஹலரத் அவர்கள் அந்த அப்துல் கப்பாரை பார்த்து இப்புவனமாதர்களில் எனக்கு அபேட்சை இல்லை. அல்லாஹு தஆலா சுவனலோகத்தி லிரண்டு பெண்களை எனக்களித்து தந்திருக்கிறான். இதோ பாருங்களென்று இடக்கரத்தினால் வலக்கர சட்டையை நீக்கி காட்டினார்கள். அதனுள் மிகுந்த சவுந்திர சொரூபிகளாய் இரண்டு அரம்பை மார்களைக் கண்டு அப்துல் கப்பா ரென்கிறவர் திகைத்து ஆண்டவரவர்களே நான் அறியாமல் சொன்னதை பொறுத்துக் கொள்ள வேணு மென்று மன்றாடி கேட்டுக் கொண்டார்.

இடபம் உயிர்பெறு சரித்திரம்.

சையிதினா ஷாஹுல் ஹமீது காதர் ஒலி ஆண்டவரவர்கள் தனது புத்திரர் ஹலரத் ஷெய்குல் யூசுபு சாஹிபும் மற்ற தபோதனர்களுஞ் சூழ காயல்மா நகரை விட்டு நீங்கி நடந்து மேலப்பாளையமென்னும் ஊரில் ஒரு ஸ்தானத்தில் இறங்கி அங்கு நாற்பது நாள் தனித்து ஜில்லா யிருந்தார்கள். அந்த ஜில்லா தீர்ந்த பின் புறப்பட்டு தனது தபோதனர்கள் சூழ தென்காசிமா நகரம் போய் சேர்ந்தார்கள். அப்போது அந்நகர் பஞ்சமா யிருந்தது, அங்கு பெரும்பாலும் ஹிந்துக்களே மலிந்திருந்தார்கள். அங்கு ஒரு ஹிந்து கோயிலும் உண்டு. ஹலரத் ஆண்டவரவர்கள் அங்கு ஒரு ஜாகையில் தங்கி யிருந்தார்கள். பகீர்களுக்கு உணவு பொருள் கிடைப்பது அரிதா யிருந்த போதும்

பகீர்களெல்லாம் ஒரு நாள் புறப்பட்டு ஊரைச் சுற்றிக் கொண்டு வரும் போது அங்கு கோயில் காளை யொன்று கொழுத்து நிற்பதைக் கண்டு அதைப் பிடித்துக் கொண்டு வந்து அறுத்து சமைத்து புசித்தார்கள். இச்செய்தி ஊராருக்கு தெரிந்த போது அவ்வூர் காபிர்களாகிய ஹிந்துக்கள் யாவரும் ஒருங்கு திரண்டு போருக்கு எத்தனத்தோடு வந்து பகீர்மார் எதிரில் வந்து, என்ன அநியாயம்? எங்கள் கோவில் காளை மாட்டை அதிக்கிரமமாய் பிடித்து அறுத்து தின்று விட்டீர்களே இது பாதகமல்லவா? இதற்கு பிரதி கிடைத்தாலன்றி நாங்கள் விடோமென்று அடர்ந்து நின்றார்கள். இதை ஹஸரத் ஆண்டவரவர்கள் கேட்டு அவர்களை நோக்கி நீங்கள் கொஞ்சம் பொறுங்களென்று ஆறுதல் சொல்லி விட்டு பகீர்களை அழைத்து நீங்கள் அறுத்து தின்ற எருதின் எலும்பு, தோல்களை இங்கே எடுத்துக் கொண்டு வாருங்களென்று கட்டளை யிட்டார்கள். அது போல் பகீர்கள் அவ்வெலும்புகளையும் தோலையும் கொண்டு வந்து ஆண்டவரவர்கள் முன்பில் வைத்தார்கள். அவ்வெலும்புகளை எல்லாம் ஒன்று சேர்த்து தோலை அதின் மீது போர்த்து தங்கள் வலது கரத்தால் அசாவென்னும் ஊன்று கோலை யெடுத்து அத்தோலின் பேரில் ஒரு தட்டு தட்டினார்கள். உடனே அக்காளைமாடு முன்போலவே உயிர் பெற்று எழுந்து நின்றது. இதைக் கண்ணுற்ற காபிர்கள் பிரமை கொண்டு இது என்ன ஆச்சரியம்! என்று சொல்லித்திகைத்து நின்று பின்பு எல்லோரும் ஆண்டவரவர்களின் திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள் அவர்களை நோக்கி இது உங்கள் மாடுதானா? கூட்டிக் கொண்டு போங்களென்று கட்டளை யிட்டார்கள். காபிர்கள் பேச வாயற்றவர்களாய் அக்காளை மாட்டை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

இச்செய்தி ஊரெங்கும் பிரஸ்தாபமாகி இவர்கள் மகா பெரியார் என்று ஊரிலுள்ள பிரதானமான சிலர் ஆலோசனை செய்து ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து கைகட்டி நின்று ஆண்டவரவர்களே! இந்த ஊரில் பஞ்சம் பிடித்து ஜனங்கள் வெகு கஷ்டப்படுகிறார்கள். ஒரு துளி மழையுமில்லாததால் காலிகளெல்லாம் மடிகின்றன, இக்கஷ்டந் தீரும்படி மழை பெய்யச் செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்கின்றோம் என்று மன்றாடி நின்றார்கள். ஆண்டவரவர்கள் அந்த முறைப்பாட்டைக் கேட்டு அல்லாஹுத் தஆலா விடத்தில் மழை பெய்யும்படி துஆ இரந்தார்கள். அன்றைய தினமே கணக்கற்ற மழை பெய்து ஏரி

குளம் குட்டைக ளெல்லாம் பெருக் கெடுத்தன. அன்றே பஞ்சம் நீங்கி தேசம் வளங் கொண்டு விட்டது. அவ்வூரார் அடங்கலும் ஆண்டவரவர்களை மனமார வாழ்த்திப் புகழ்ந்தார்கள்.

நத்தம்புக்க சரித்திரம்.

ஹலரத் செய்யிது அப்துல் காதிர் சாஹிபு ஆண்டவரவர்கள் தென்காசியை விட்டு பிரயாணப்பட்டு தங்கள் புத்திரர் சையிது யூசுபு சாஹிபோடு தபோதனர்கள் சூழ நடந்து நத்தம் என்கிறசித்தூரில்போய் சேர்ந்து அங்கு ஒரு ஸ்தானத்தில் இரவின் போது வந்திறங்கினார்கள். அன்று ஸுபுஹான போது தொழுது நேம நிஷ்டைகளை முடித்துக் கொண்டு சூரியன் உதயத்திற்கு பின் ஒரு பக்கிரை அழைத்து நமது மானுக்காக இவ்வூருக்குள் போய் எவரிடத்திலாவது கொஞ்சம் பால் வாங்கிக் கொண்டு வாருமென்றார்கள். அதைக் கேட்டு அந்த பக்கீர் ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அவ்வூரின் தெரு வீதிகளில் வீடு வீடாய் போய் விசாரித்துக் கொண்டு வந்ததில் ஒரு வீட்டில் மாத்திரம் ஒரு குடத்தில் பால் வைத்திருக்கக் கண்டு அவ்வீட்டாரை யழைத்து ஐயா எங்கள் மானுக்கு கொஞ்சம் பால் கொடுங்க ளென்று கேட்டார். அதற்கு அந்த வீட்டுக்காரன் அதிகோபத்தோடு இங்கு பால் இல்லை என்று கடுமையாய் சொன்னான். அது கேட்டு அந்த பக்கீரானவர் மிகவருத்தத்தோடு ஆண்டவர் அவர்கள்பால் வந்து இச்செய்தியை அறிவித்தார். இதைக் கேட்டதும் ஹலரத் அவர்க ளுக்கு மனதிற் கொஞ்சம் கோபமுண்டாகி அந்த வீட்டில் என்றும் பாலற்று போகக்கடவது என்று சாபமிட்டு விட்டார்கள். இன்னொரு சொற்படி இவ்வூரில் என்றும் பாலில்லாமல் போகக் கடவது என்று சொன்னார்கள்.

ஹலரத் அவர்கள் இவ்வண்ணமாக பாலுக்கு சாபமிட்ட செய்தி அவ்வூரார்களுக்கு தெரிந்த போது அந்த ஊரார்கள் யாவர்களும் ஒன்று கூடி திரண்டு வந்து ஆண்டவரவர்கள் பாதாரவிந்தத்தில் விழுந்து எழுந்து நின்று எங்கள் நாயகமே! ஆண்டவர்களே! ஒரு வீட்டுக் காரன் செய்த குற்றத்திற்காக ஊரார் அடங்கல் பேரிலும் சாபமிட்ட தாக நாங்கள் கேள்வி பட்டோம். நாங்கள் என் செய்வோம். எங்களை நீங்களே இரக்ஷித்தருள வேண்டு மென்று வெகு உருக்கத்தோடு

மன்றாடிக் கேட்டார்கள். அதற்கு ஹலரத் ஆண்டவரவர்கள் அவர்களை மீது மனமிரங்கி என் மானுக்குப் பால் கொடாதவன் வீட்டில் மாத்திரம் அமுதற்று போகக்கடவ தென்றார்கள். அன்று முதல் நாளது வரையில் அவ்வீட்டில் விலங்கினங்களுக்கும் மாதர்களுக்கும் பாலற்றுப் போயிற்று. மற்றவர்கள் யாவரும் மகிழ் உற்று ஆண்டவ ரவர்களை போற்றி புகழ்ந்து ஏகினார்கள்.

அவ்வூரில் மிகுந்தவர்கள் இஸ்லாமாக விருந்தும் இஸ்லாமின் ஷரியத்தை சரிவர உணராததால் ஒவ்வொருவர் வீட்டிலும் அவ் வீட்டின் மாடங்களில் ஒவ்வொரு விக்கிரகங்களை வைத்து அதையும் தெய்வமென்று உண்மை கொண்டு உபசரித்துக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

இச்சமாசாரம் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களுக்கு தெரிந்தபோது அவ்வூர் முஸ்லிம் அடங்கலையும் அழைத்தபோது அவர்கள் யாவர்களும்ஒழுங்காய் வந்து ஆண்டவரவர்களுக்கு தாட்சிமை செய்து மிகுந்த வணக்கத்துடன் கைகட்டி நின்றதோடு அவ்வூர் தலைவன் ஒருகைவாளை ஹலரத் அவர்களுக்கு இனாம் அளித்து நின்றான். ஹலரத் அவர்கள் அவ்வாளை வாங்கிவைத்துக் கொண்டு அத் தலைவனை நோக்கி ஓய் தலைவரே! நீர் முதல் கொண்டு இவ்வூரில் மிகுந் தவர்கள் இஸ்லாமாயிருக்க ஷரீஅத்துக்கு மாற்றமாக ஒவ்வொரு இல்லத்தின் மாடங்களிலும் விக்கிரகங்களை வைத்து இதுவும் தெய்வ மென்றுவணங்குகிறீர்களே, இது முற்றும் இஸ்லாம் மார்க்கத்திற்கு மாற் றமான செயலென்று நீங்கள் அறிவீர்களோ? இச்செயல் குபிரான செயலாயிருக்கும், இச்செயல் உங்களுடைய ஈமானை போக்கி விட் டதாயிருக்கும். ஆதலால் நீங்கள் இவ்விக்கிரகங்களை யெல்லாம் எடுத்து எறிந்து விட்டுதவுபாசெய்து பாவமன்னிப்பு தேடி ஏகபராபரனாகிய அல் லாஹுதஆலாவே நமக்கு ஓரே கடவுளென்று வணங்குங்கள். உங் களுக்கு அல்லாஹுதஆலா ஈமானை நிறப்பமாக்கி தந்தருளுவான் என்றார்கள்.

ஹஸரத் அவர்கள் சொன்ன இச்சொல்லை கேட்டவுடன் அவர்கள் யாவர்களும் தாங்கள் சொல்வதுபோல் இப்பவோ எங்கள் இல்லத்திற்கு போய் நாங்கள் செய்துவிட்டு தவுபாச் செய்கிறோம் என்று சொல்லி ஹலரத் இடத்தில் மன்னிப்பும், விடையும் பெற்றுக்கொண்டு தலைவன் முதல் யாவர்களும் தங்கள் வீடுபோய் சேர்ந்தார்கள். தங்கள் வீடு

போய் சேர்ந்து அவ்விக்கிரகங்களை பார்க்கும்போது அவைகளெல்லாம் அவரை விட்டு முழங்கவிழ விழுந்து கிடப்பதைக் கண்டு ஆச்சரியமாகி அவைகளை யெல்லாம் எடுத்து ஆற்றில் தாழ்த்திவிட்டு வந்து தவுபாச் செய்து ஆண்டவனிடத்தில் பாவமன்னிப்பு தேடி பரிசுத்தமானார்கள்.

இச்செய்தி ஹலரத் அவர்களுக்கு தெரிந்தவுடன் ஹலரத் அவர்கள் அத்தலைவன் ஊரார் முதலிய யாவர் பேரிலும் கிருபைகூர்ந்து துஆ செய்ததோடு, அத்தலைவனையும் அவ்வூரார்களையும் அழைத்து தங்கள் தூய்தான கரத்தினால் தலைவன் கொடுத்த அவ்வாளை யெடுத்து அத்தலைவன் கையில் கொடுத்து உன் தலைமைத் தனம் உமக்கும் உமது புத்திர பவுத்திரர்களுக்கும் நிலைத்து நீடூழி வாழ்க வென்று ஆசிகூறினார்கள். அவ்வாறே அந்நாள் முதல் இதுவரை அவர்களுக்கு தலைமைத்தனம் நிலைத்து நிற்கிறது.

பைசாசங்க ளழிபட்ட சரித்திரம்.

ஹலரத் மீறான் வலியுல்லா சாஹிபாண்டவர்கள் கொடுத்த வாளை வாங்கிக்கொண்டு நத்தமென்னும் ஊர்த்தலைவன் முதலியவர்கள் போன பிறகு பின்னோர்நாள் அந்தத் தலைவனும் குடிகளும் ஒன்று கூடி வந்து ஹலரத் ஷாஹூல் ஹமீது சாஹிபு ஆண்டவர்கள் திருச் சமுகத்தில் கைகட்டி நின்று மிகுந்த மரியாதையுடன் இரட்சகரே! என்று கூவி இவ்வூரில் ஆண்டிற்கோர்தரம் இவ்வாற்றில் வெள்ளம் வருகிற போது, அத்துடன் பிசாசுகள் பெருங் கூட்டமாகத் தலைகளிற் குடங்களை யேற்றிப் பூமாலைகள் சூடிக்கொண்டு ஆரபாரத்துடன் வந்து இவ்வூருக்கப்புறம் ஒரு நாழிகை வழித்தூர மட்டிற்போய் நீரள்ளிக்கொண்டு திரும்பி அவைகளிருப்பிடம் சேர்கின்றன. அவைகளைக்கண்ட பேர்களுக்கு உடனே காச்சல், தலைவலி, வாந்தி, தேகவாதை, இவ்வகையற்ற பிணிகள் கொண்டிறந்து போகிறார்கள். ஆதலால் தாங்கள் எங்கள் பேரில் அன்புவைத்து அத்துன்பத்தை நீக்கி வைக்கவேண்டுமென்று மன்றாடி நின்றார்கள். அதுகேட்டு ஹலரத் மீறான் சாஹிப் ஆண்டவர்கள் அப்பிசாசுக ளெப்போது வருமென்று கேட்டார்கள். அவ்வூரார் இக்காலந்தான் நாளைய மற்றய நாளைக்குள் வருமென்றார்கள். இவ்வாறிருக்குங் காலத்தில் அவ்வாற்றில் வெள்ளம் வந்து விட்டது. அது கேட்டு ஹலரத்தவர்கள் தபோதனர்கள் சூழ அவ்வாற்றங்கரையை அடுத்து அப்பேய்களை எதிர் பார்த்திருந்த வேளையில் பேய்களானது

பட்டுகளணிந்து தொட்டுகள் தட்டி மாலைகள் சூடி மற்றைய நகைகள் அணிந்து குடங்களைத் தலையிலேற்றிக் கொண்டு மிருந்த சந்தோஷத்துடன் சிரித்து விளையாடிக்கொண்டு ஊமைகளொருபால் குருடுகளொருபால் நொண்டிக ளொருபால் சண்டிகளொரு பாலாக வருவதை ஹலரத்மீரான் சாஹிப் ஆண்டவர்கள் கண்ணுற்று அவர்களை நோக்கி, ஓ பிசாசுகளே! இங்கு வாருங்க ளென்றழைக்க, அதுகேட்டு அப்பிசாசுகள் அஞ்சி பயந்து நடுங்கி ஒடுங்கி வந்து கைகட்டி வாய்பொத்தி நின்று மிருந்த மரியாதையுடன் ஆண்டவரவர்களை நோக்கி தவக்குருவே! என் எங்களை யழைத்தீர்கள் என்று கேட்டு நின்றது. ஹலரத் மீரான் சாஹிப் ஆண்டவர்கள் நீங்கள் என் இக்கோலத்துடன் இவ்வழி வருகின்றீர்க ளென்று கேட்டார்கள். பிசாசுகள், ஆண்டவர்களே! வருடத்திற் கொருதடவை எங்களுக்குப் பெரு நாளானதினாலே நாங்களிவ்வாறு வந்து இப்புதுநீரை அள்ளிக்கொண்டு போகின்றது வழக்கமானதால் இவ்வருடமும் அவ்வாறே வந்தோமென்றுரைத்தது. ஹலரத்தவர்கள் நீங்கள் இவ்வாறுவருவதில் ஜனங்களுக்கு பல சங்கடம் உண்டு பண்ணுகின்றன. ஆதலால் இனி நீங்கள் வரக்கூடாதென்று தடுத்தார்கள்.

ஹலரத்தவர்கள் சொன்னதை அப்பேய்கள் கேட்டுக்கொண்டு போய் அவைகளின் அரசனிடத்திற் சொல்ல, அப்பிசாசரசன் கோபமுற்றுக் கண்கள் சிவப்பேற உதடு துடிக்க மீசைகளாடப்பல்லு நறுநறுத்து கையைப் பிசைந்துக் கொண்டு ஆ! அப்படி அவன் யார் வாருதியைக் கலக்கி சேறெழச் செய்யவும் கார் மேகங்களைக் கசக்கிப் பிழியவும் காற்றினைத் தடுக்கவும் அக்கினிக் குண்டங்களை யவிக்கவும் அட்டகிரிகளைப் பிளக்கவும் வல்லமையுள்ள என் சேனையைத் தடுப்பவன் யார்? அவனிடத்தில் நீங்கள் இப்பவே சென்று அவனோடு உற்றவர்களையும் அவனையுங் குத்தி வெட்டிக் கொலை செய்துவிட்டு வாருங்களென்று கலக்கிடங்கரிய பேய்களை யனுப்பினான். அப்பேய்களோ மிருந்த ஆரவாரத்துடன் ஆயுதங்கள் ;தாங்கி வாய் மதங்கள் கூறி அவ்வாற்றின் பேரில் வருகின்றதை ஹலரத்தவர்கள் கண்டு அவ்வாற்றைப் பார்த்து நதியே! இப்பெருங் கூட்டமாய் வருகின்ற பிசாசுகளை உன் அலைகளால் பிட்டி அழித்து விடு என்றார்கள். உடனே அந்த ஆற்றில் ஒன்றுக்குப்பின் ஒன்றாகத் தொடர்ச்சியுடன் மூன்று அலை கிளம்பி அப்பிசாசுகளை அடித் தமிழ்த்தி விட்டது. அத்துடன் பேய் பிசாசுகள்

அத்தனையும் இறந்ததைக் கண்டு அவ்வூரார் மகிழ்ச்சியுற்று ஹலரத்தவர்களைப் புகழ்ந்தார்கள். அன்று முதல் இன்றுவரையில் அவ்வாற்றில் வெள்ளம் வரும்போதெல்லாம் அவ்வாறாக மூன்றலை கிளம்புகின்றன. அதன் பின் ஹலரத் அவர்கள் தன் ஜாகை வந்து சேர்ந்தார்கள்.

தோலுக்கு நாணய மளித்த சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது நாயகமவர்கள் நத்தமென்கிற ஊரை விட்டுப் புறப்பட்டு தங்கள் தபோதனர்கள் சூழ நடந்து ஆயக்குடி என்னும் ஊரருகில் இருக்கின்ற நல்ல சோலையின் கண் குளத்தருகில் வந்து விடுதி விட்டிறங்கினார்கள். அத்தருணத்தில் அந்நாட்டிலுள்ள வழிப்போக்கர்களில் தோல் வியாபாரிகள் சிலர் ஆட்டுத் தோல் மானின் தோல் இவைகளைக் கட்டிச் சுமந்துகொண்டு மறு நகர்களில் விற்பனை செய்ய நாடிவந்தவர்கள் ஹலரத்தவர்களிறங்கியிருக்குந் தலத்தில் அத்தொலிச் சுமைகளை யிறக்கி வைத்து அவர்களும் அங்கிருந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். அப்போது பகீர்கள் அவ்விருவகைத் தொலிச் சுமைகளும் ஹலரத் அவர்களுக்குப் பாதகாணிக்கையாக வந்ததென் றெண்ணி அக்கட்டை அவிழ்த்து தொலிகளை யெல்லாம் ஆளொன்றிற்குத் தொலியொன்றாக வெடுத்து விரித்திருந்து கொண்டார்கள். அது கண்டு அத்தொலிச் சுமைக்காரர்களெல்லாம் அழுது கொண்டு வந்து ஹலரத்தவர்களிடத்தில் வந்து, நாங்கள் ஏழை, எங்கள் தோல்களை உங்கள் ஆட்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அது கேட்டு ஹலரத்தவர்கள் கிருபை கூர்ந்து சாய்ந்த இருப்பிற்றானே யிருந்து கொண்டு தூய்தான காலினால் ஓரிடத்தைச் சுட்டி அச்சுமையாளரை நோக்கி உங்களின் தொலிகளுக்குத் தக்கபடி இந்த விடத்தில் கில்லி பணமெடுத்துக் கொள்ளுங்க ளென்றார்கள். அச்சுமைக்காரர்கள் அந்நிலத்தை தோண்டி பார்க்கும்போது அந்நகர் நாணயங்களாக இருக்கக் கண்டு மிகுந்த பேராசையுடன் ஹலரத்தவர்களின் சொல்லுக்கு மாறாக ஒன்றுக்கு நாலு வீதம் நாணயங்களை யெடுத்துக் கொண்டு அவ்விடத்தையும் இலக்கிட்டுக் கொண்டு போய் விட்டார்கள். பின்பு ஹலரத்தவர்கள் அவ்வூரை விட்டு அகன்ற பிறகு அவர்கள் மீளவும் வந்து தாங்கள் முன்னெடுத்த பணங்களைச் செலவு செய்து கூலி

கொடுத்து முன் பணம் எடுத்த ஸ்தலத்திலின்னும் பொருள் இருக்குமென்ற எண்ணத்தினால் அந்நிலத்தை வெட்டிப் பள்ளமாக்கிப் பார்த்தும் ஹலரத்தவர்களின் சொல்லிற்கு விரோதமாய்த் தோல் விலைக்குமே லதிகமாய் எடுத்த பொருட் செலவானதே யல்லாது ஒரு பலனையும் பெறவில்லை. ஆனதால் அத்தோலி வியாபாரிகள் ஒருவரோடொருவர் ஹலரத் மீருன் சாஹிபவர்கள் பெரியோர்களானதால் அவர்கள் காலினால் காட்டிய மண்ணும் பொன்னாயிற்று. நாம் நம்முடைய மூடத் தன்மையினால் அவர்களின் சொல்லுக்கு மாறாகத் தோலின் கிரயத்திற்கு மேற் கொண்டெடுத்த பொருட் செலவாகும் பொருட்டு இப்புத்தி நமக்கு நேரிட்டது. அதுவும் வீண்போகவில்லை, ஒரு குளமாயிற்றென்று பேசிக் கொண்டு போயினார்கள்.

பொதிய மலையைக் கண்ணுற்ற சரித்திரம்.

ஹலரத் சுல்தான் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் ஆயகுடியை விட்டு புறப்பட்டு துறவிகள் வாசஞ் செய்யும் பொதியமலைக்கு போக நாடி தங்கள் புத்திரர் ஸையிது யூசுபு சாஹிபும் மற்றும் தபோதனர்களும் சூழநடந்து அம்மலையை யடுத்து ஏரி அதன் மேல் சிகரத்தில் உள்ள ஒருபொதும்பில் விடுதி விட்டு மகனார் யூஸுபு சாஹிபு அவர்களை அழைத்து நீர் நமது கிஸ்தியிலிருந்து பகிருகளுக்கு உணவு எடுத்து கொடுத்துக் கொண்டிருமென்று கட்டளை செய்து விட்டு தாங்கள் நாற்பது நாள் வரை அப்பொதும்பில் கல்வத்திலிருந்து விட்டார்கள். மகனார் யூசுபு சாஹிபு அவர்கள் வேளைக்கு வேளை பகிறுகளுக்கு உணவு எடுத்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அம்மலையில் பல துறவிகள் வாசஞ் செய்வதோடு சந்நியாசிகளில் ஆயிரம்பேர் கொண்ட ஒரு கூட்டத்தாரும் அவர்களுக்குத் தலைவனான ஒரு முனிவனும் ஆண்டவர்கள் விடுதி விட்ட கெபிக்கு பக்கத்தில் வசித்திருந்தார்கள். சில சமயங்களில் அந்த ரிஷிகளில் சிலர் வந்து இவர்களை பார்த்துக்கொண்டு போவார்கள். அப்போது கிஸ்தியிலிருந்த தரந்தரமான ஆகாரங்களை வேண்டிய மட்டும் எடுத்துக் கொடுப்பதைக் கண்டு ஆச்சரியப் படுவார்கள்.

ஆண்டவரவர்கள் நாற்பது நாள் கல்வத்திருப்புத்திருந்து வெளி வந்த பின் ஒரு நாள் அந்தத் துறவிகள் சேர்ந்து வந்து ஆண்டவர்கள்

சமுகத்தில் நின்று நாங்கள் உணவருந்தி நெடு நாளாயின, எங்களுக்கு பசி அதிகரித் திருப்பதால், ஏதாவது உணவு கொடுத்து உதவுங்கள் என்று கேட்டார்கள். ஆண்டவரவர்கள் அவர்களை நோக்கி உங்களுக்கு என்னென்ன உணவு வேண்டுமென்று வினவினர். அதற்கு அவர்கள் எங்கள் மனங்கள் எதனை நாடுகின்றனவோ அதை தரவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது ஆண்டவரவர்கள் மகனாரை நோக்கி, "மகனே! நீ கிஸ்தியை எடுத்து இவர்கள் நாடுகிற உணவை எடுத்து கொடும்" என்று கட்டளை யிட்டார். ஹலரத் ஸையிது யூசுபு சாஹிபு அவர்கள் அத்துறவிகள் நாடின உணவுகளை எடுத்துக் கொடுத்தார்கள். துறவிகள் அவற்றை வாங்கி புசித்து விட்டு அவ்வுணவின் சுவைகளையும் மதுரத்தையும் அறிந்து ஆச்சரியப்பட்டு போனார்கள்.

பிறகு அத் துறவிகளெல்லாம் சேர்ந்து கூடி ஆலோசித்ததாவது இந்த கிஸ்தியில் ஏதும் ஒரு நூதன தத்துவமிருக்கும். அப்படிக்கில்லாவிடில் இவ்வித ஆச்சரியமான கர்மம் உண்டாக மாட்டாது. இக்கிஸ்தி நம்போல் கொற்ற துறவிகளுக்கு அவசியமானது. இக்கிஸ்தியை நாம் கேட்டால் இவர்கள் கொடுப்பார்களா? மேலும் நாம் கேட்பது அழகல்ல. இவர்கள் இரவில் நித்திரை செய்யும்போது சமயம் பார்த்து எடுத்துக் கொள்வதே உசிதம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். அன்று பொழுதுபட்டபோது ஹலரத் ஆண்டவர்கள் வணக்கத்திலும், மற்றும் பகீர்கள் உறக்கத்திலும் ஆனார்கள்.

ஹலரத் முஹம்மத் யூசுபுசாஹிபு அவர்கள் மேல்படி கிஸ்தியை தலையணையாக வைத்துக்கொண்டு நித்திரை புரிந்தார்கள். அவர்கள் அனைவர்களும் அயர்ந்து நித்திரை செய்யும்போது அத்துறவிகளில் சிலர் அரவம் காட்டாமல் வந்து கிஸ்தியை யெடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். திருடிக்கொண்டு போன கிஸ்தியை அங்கு ஆழமாக குழி ஒன்று பறித்து அதில் புதைத்து அதின்மேல் மணல் மேடையொன்று போட்டு அதின்மேல் விரிப்பும் விரித்து அதன்மீது ஆசானாகிய முனிவனை இருக்கச் செய்து, மற்றவர்களெல்லாம் அதை சூழ்ந்திருந்து கொண்டு ஆராதனை செய்து மந்திரோச்சாரணமும் செய்து கொண்டிருந்தார்கள். அன்று பொழுது விடிந்து ஹலரத் ஸய்யிது முஹம்மத் யூசுபு சாஹிபு அவர்கள் தலைக்கு வைத்திருந்த கிஸ்தியை காணாமையால் பகீர்களை விசாரித்தார்கள். அவர்களனைவரும் நாங்கள்

எடுக்க வில்லையென்று சொல்லி விட்டதால் கிஸ்திகாணவில்லை யென்னும் செய்தியை ஹலரத் ஆண்டவரவர்களுக்கு தெரிவித்தார்கள்.

ஆண்டவரவர்கள் அச்செய்தியைக் கேட்டு தங்கள் மகனாரை அழைத்து அந்தத் துறவிகள் நமது கிஸ்தியின் பேரில் ஆசைப்பட்டு திருடிக்கொண்டு போயிருக்கிறார்கள். நீர் ஒரு ஆளை அனுப்பி கேட்டு விடும் என்று சொன்னார்கள். உடனே மகனார் ஒரு பகீரை துறவியிடம் கிஸ்தியை வாங்கிக்கொண்டு வாருமென்று அனுப்பினார்கள். அது போல் பகீர் துறவிகளிடம் கேட்டபோது அத்துறவிகள் இது என்ன அநியாயம்; நாங்கள் திருடர்களா? நாங்கள் திருடர்களாயிருந்தால் இந்த பொதிய மலைகள் எங்களுக்கு இருக்க இடங்கொடுக்குமோ? உலகத்தைத் துறந்த தவசிகளாகிய எங்கள் மனம் நோவச் செய்வது பெரியோர்களுக்கு அழகல்லவே, உங்கள் கிஸ்தி எங்கள் வசம் இருந்தால் உங்கள் குருவே அதை அழைத்துக் கொள்ளட்டும் என்று சொல்லி ஒரே சாதனை செய்து விட்டார்கள். அதைக் கேட்ட பகீர் திரும்பி வந்து ஹலரத் அவர்களிடம் சொன்னார். ஹலரத் ஆண்டவரவர்கள் மகனாரை நோக்கி நீர் போய் அந்த துறவிகளுக் கெதிரே நின்றுகொண்டு கிஸ்தியை கூப்பிடும் அது வந்துவிடு மென்று சொன்னார்கள். ஹலரத் முஹம்மத் யூசுபு சாஹிபு அவர்கள் புறப்பட்டு அந்த துறவிகளுக்கு முன்போய் நின்றுக்கொண்டு கிஸ்தியே! இங்கே வா; வென்று கூப்பிட்டார்கள். கூப்பிட்ட மாத்திரத்தில் குழிக்குள் புதைந்திருந்த கிஸ்தி அவர்கள் அழைப்புக்கு பிரதி சொல்லிக்கொண்டு அதன்மேல் மேடை யிட்டு உட்கார்ந்திருந்த முனிவனையும் குப்பர விழுத்திவிட்டு நிலத்தைப் பீறிக்கொண்டுவெளிவந்து ஹலரத் அவர்கள் கையில் தரிபட்டது. துறவிகள் அனைவர்களும் அதைக்கண்டு நடுங்கி நின்றார்கள். ஹலரத் யூசுபு சாஹிபு அவர்கள் கிஸ்தியோடு தங்கள் ஜாகைக்கு வந்து சேர்ந்தார். பின்பு அக்காபிரான துறவிகளுக்கு மனமச்சமுண்டாகி இவர்கள் மகா பெரியோர்கள், இவர்கள் மார்க்கம் பரிசுத்தமும் உண்மையுமானது, ஆகையால் நாம்இப்போதே இவர்களிடம் போய் நாம் செய்த பிழைக்கு மன்னிப்புத்தேடி எல்லாரும் அவர்கள் மார்க்கத்திலாகி விடவேணுமென்று ஒற்று முடிவுகட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு ஹலரத் ஆண்டவர்கள் சமூகத்தில் வந்து அடிபணிந்துநின்று ஆண்டவர்களே! வழிகேடான நாங்கள் செய்த பிழையை மன்னித்து எங்களுக்கு நேர் வழி காட்டி இரட்சிக்கவேணுமென்று

முறை யிட்டார்கள். ஆண்டவராவர்கள் அவர்கள்பால் சந்தோஷங் கொண்டு அவர்களெல்லோருக்கும் கலிமாவை சொல்லிக்கொடுத்து தீனுல் இஸ்லாத்திலாக்கி மார்க்க விதி விலக்குகளையும் கற்பித்து கொடுத்து பிறகு இந்தகிஸ்தியையும் அவர்களுக்கு, உங்களுக்கு வேண்டுமான உணவுகளை இதிலிருந்து அல்லாஹு தஆலா உண்டாக்கித் தருவானென்று சொல்லி சிமியா, கிமியா, ஹிமியா, ரிமியா என்னும் நான்கு வித்தைகளையும் கற்பித்து கொடுத்து அதற்கு மேல் அவர்கள் நடந்துக் கொள்ளவேண்டிய ஒழுங்குகளையும் அறிவித்து கொடுத்து விட்டு பின் அம்மலையை விட்டு தபோதனர்கள் சூழ மகனர் யூசுபு சாஹிபோடு கீழே இறங்கினார்கள்.

திருச்சி நத்ஹறுரெலியுல்லாவைத் தரிசித்த சரித்திரம்.

ஹலரத் மீருன் சாஹிபு ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் ஹலரத் செய்து முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் தபோதனர் முதலியவர்களுடன் பொதிய மலையை விட்டிறங்கி ஹலரத் நத்ஹற் அவுலியாவை தெரிசிக்க நாடி திருச்சினாப்பள்ளியை நோக்கி நடந்தார்கள். இவர்கள் இவ்விதம் பிரயாணவழியிலிருக்கும்போது திருச்சினாப்பள்ளியிலடக்கமா யிருக்கின்ற நத்ஹற் அவுலியா அவர்கள் ஒரு இரவு தங்கள் சமாதி ஸ்தானத்தின் ஊழியர்களின் கனவில் வெளியாகி மிகுந்த காரணீகரான செய்யிது ஷாஹுல் ஹமீது சாஹிபவர்கள் தனது பிள்ளை ஷெய்கு யூசுபுடன் மிகுந்த பகீறுகளையுங் கூட்டிக்கொண்டு நமது தெரிசனையை நாடி வருகின்றார்கள்; நீங்கள் அவர்களுக்குத் தகுந்த தீன் பதார்த்தங்கள் அடங்கலும் சேகரித்து வைத்துக்கொள்ளுங்கள். நாளையத்தினம் இவ்விடம் வருவார்களென்று அறிவித்தார்கள். இச்சொப்பனத்தை கண்டு விழித்து எல்லோரு மொருவரோ டொருவர் ஆலோசித்துப் புதுமையாகி உடனே மேன்மையான வஸ்துக்களெல்லாஞ் சேகரித்து வைத்துக் கொண்டு தர்காவையும் சாந்து பூசி துலங்க வைத்து வழிபார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கண்டகனவின்படி மறுநாட் காலையில் ஹலரத் மீருன் சாஹிபவர்கள் தபோதனர்களுடன் திருச்சினாப்பள்ளியை அடர்ந்து ஷெ தர்காவில் போய் சேர்ந்தார்கள். அங்கு சென்றதுங் ஹலரத் அவர்கள் ஷாஹுமுஹம்மது

யூசுபு சாஹிபு முதலியவர்களை வெளியிருக்கச் செய்து விட்டு ஹலரத்தவர்கள் தனித்து நத்ஹற் வலியுல்லாவின் கபறினுள் கட்டிடத்தினுட் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டு நத்ஹற் வலியுல்லாவுடன் பேசி இருவரும் ஹக்கைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்படி யிருக்கிற வேளையில் அந்த தறுகாவின் ஊழியர்கள் சோறு கறிகளெல்லாம் ஆயத்தஞ் செய்து வைத்துக்கொண்டு ஹலரத் மீருன் சாஹிபவர்களை வழிபார்த்துக் கொண்டிருந்தார்கள். மத்தியானத்துக்கு பிந்தியும் ஆண்டவரவர்கள் வரவில்லை. யாவருக்கும் பசி மிகுத்திருந்தது. அது கண்டு ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் அந்த பணிவிடைக்காரர்களை நோக்கி, எங்களுடைய ஹலரத்தவர்களை நீங்கள் வழி பார்க்க வேண்டாம். அவர்கள் நேமநிஷ்டையி லிருக்கின்றார்கள். மூன்று தினத்திற்குப் பின் தான் அக்கட்டிடத்தில் நின்றும் வெளியே வருவார்கள். மற்றவர்களுக்குச் சாதங் கறிகளைப் பரிமாறுங்களென்றார்கள். அப்பணிவிடைக்காரர்கள் சமையலானவைகளை கொண்டு வந்து ஷெய்கு யூசுபு சாஹிபவர்களின் முன்பில் வைத்துப் பாத்திரங்களிலிட்டு பகிறுகளுக் கெல்லாம் கொடுத்தார்கள். எல்லோரும் புசித்துப் பசியாறினார்கள். அப்படி யிருக்கும் போது அந்த தறுகாவில் விளக்கு வைக்கும் பணிவிடைக்காரர்களில் ஒருவர் சமாதி ஸ்தானத்தருகில் தீபம் வைக்க வேண்டுமே கதவு மூடப்பட்டிருக்கின்றதே, இதென்ன காரணமோ தெரியவில்லை. நமது பணிவிடையுந் தப்பிப் போகிறதே யென்றெண்ணி அக்கட்டிடத்தின் வாயலருகிலாகி அதன் கபாடத்தினி லிருந்த ஒரு சிறிய துளையிற் கண்ணை வைத்துப் பார்த்த போது அக்கட்டிடத்தினுள் முழுதும் கண்கள் மழுங்கத் தக்க ஒளி பிரகாசிக்கின்றது. அங்கு ஒரு பாத்திரத்தில் வெண்மை தங்கிய பிரகாசத்தையுடைய தீன் வைத்து ஹலரத் நத்ஹற்வலியுல்லா அவர்களும் ஹலரத் ஷாஹுல் ஹமீது சாஹிபவர்களுமாய்ப் புசித்துக் கொண்டிருப்பதைக்கண்டு, அம்மனிதன் அந்தத் தீன் பதார்த்த மென்ன சுவையுள்ளதோ வென்றெண்ணி அதன் பேரில் இச்சித்து நின்றார். மனிதர் முதலிய ஜீவஜெந்துக்களின் எண்ணங்களை யெல்லாம் அறிந்த ஹலரத் மீருன் சாஹிபவர்கள் அந்தத் தீன் பதார்த்தத்தில் கொஞ்சத்தைக் கையிலெடுத்து வந்து கதவைச் சற்று நீக்கிக் கொண்டு அம்மனிதன் வலக்கரத்தில் வைத்து இது இடக்கத்திலாகு முன் புசித்துக் கொள்ளும் என்றார்கள். அவ்வாறவர் தின்ன அதன் பொருட்டினால் ஆண்டவன் அவருக்கு அநேக இரகசியங்களை யெல்லாம் வெளியாக்கி

வைத்தான். ஹலரத்தவர்கள் அக்கட்டிடத்துள் மூன்று நாள் வரையி லிருந்து நேமநிஷ்டை புரிந்து ஹலரத் நத்ஹர் வலியுல்லாவுடன் பேச வேண்டிய தெல்லாம் பேசி முடித்த பின் வெளியாகி மகனாரவர்களையும் பகீர்மார்களையும் அழைத்துக் கொண்டு அதை விட்டு புறப்பட்டார்கள்,

---

தஞ்சைராஜனுக்கு பிணிதீர்த்த சரித்திரம்.

ஹலரத் மீறான் சாஹிபவர்கள் திருச்சினாப்பள்ளி யென்கிற நகரை நீக்கித் தபோதனர்கள் புடைசூழ நடந்து தஞ்சை நகரை நோக்கி நடந்துக் கொண்டு வந்தார்கள். அக்காலம் தஞ்சை நகரை ஆளும் வடுக ஜாதியார் அப்போது ஆசனத்தி லிருந்து அரசாளும் மன்னன் அச்சுதப்ப நாயகருக்குச் சூனியத்தினால் கால் கை முடங்கி உடல் தளர்ச்சி யுற்று முகஞ் சாம்பி யிருந்தான். இராஜ வைத்தியர் பலர் பல மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்து பார்த்தும் பலிக்காமல் போயிருந்தது. பல மாந்திரீகர் பலர் வந்து பார்த்தும் தீரவில்லை. அவன் பிரார்த்தனைச் செய்து கொண்டதும் கொஞ்சமில்லை ஒன்றிலும் பலிதபடாமல் விசனமுற்று கிடந்தான்.

அத்தருணத்தில் முஹம்மதியரில் மகாத்மாவான ஒரு பெரியோர் பல ராஜ்ஜியங்களையும் சுற்றிக் கொண்டு அளவிரந்த அற்புதங்களை செய்துக் கொண்டு வருகிறார், என அவன் கேள்வி யுற்ற மாத்திரத் தில் அன்றைக்கே தன் பிணி தீர்ந்த தென்று நம்பி மனமகிழ்ந்து தன் மந்திரி பிரதானிகளை அழைத்து ஒரு முஹம்மதிய மகா பெரியார் நம் நகரை நோக்கி வருகின்றார்களாம். நீங்கள் அவர்களுக்கு எதிர் சென்று உபசரித்து அழைத்துக் கொண்டு வந்து நம் அரண்மனையில் இருத் தாட்டுங்கள் என்று கட்டளை பண்ணினான். அரசனுடைய கட்டளை படியே அவர்கள் ஹலரத் ஆண்டவரவர்களை யடுத்து அடி பணிந்து நின்று, தாங்கள் ஊருக்கு வந்து நமது இராஜமாளிகையில் விடுதி விட்டு தங்க வேண்டு மென்று மன்றாடினார்கள். அவர்கள் வேண்டிக் கொண்ட படி ஹலரத் அவர்கள் தங்கள் தபோதனர்களுடன் தஞ்சை நகருக்குள் பிரவேசித்து அந்நகரத்து அரண்மனையிற் போய் விடுதி விட்டு தங்கினார்கள்.

ஆண்டவரவர்களுக்கு அங்கு வேண்டிய சர்வகாரியங்களும் அரண்மனை ஊழியர்களால் குறைவற நடத்தப்பட்டன. அரண்மனை அதிகாரிகளுக்கு அரசன் ஆண்டவரவர்களுக்கு வேண்டியவைகளை உடனுக்குடன் சமர்ப்பிக்கும் படி ஆக்கியாபித்திருந்தான்.

ஹலரத் ஆண்டவரவர்கள் அரண்மனையில் தங்கி யிருக்கும் போது ஒரு நாள் அரசன் தன் பிரதான மந்திரியை யழைத்து "நீர் ஆண்டவரவர்கள் சமுகத்தில் சென்று பணிந்து நின்று எனக்கு இருக்கும் வியாதிகளனைத்தையும் விபரமாகச் சொல்லி முறையிடும்படி கட்டளை பண்ணினான். அவ்வாறே மந்திரி சில கனவான்களுடன் ஹலரத் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து, ஆண்டவரவர்களின் முக வஜ்சாரத்தையும் அவயவலக்ஷணங்களையும் கண்டு பிரமித்து கைகட்டி விலகிநின்று தங்கள் அரசன் கொண்டிருக்கும் பிணியை விவரித்துச் சொல்லிமன்றாடினான்.

ஹலரத் ஆண்டவரவர்கள் மந்திரியின் முறைப்பாட்டைக் கேட்டு "உங்கள் அரசனை நான் கண்ணால் பார்க்க வேண்டும். ஆகையால் அவனை என் முகதாவில் கொண்டு வாருங்கள்" யென்று கட்டளை யிட்டார்கள். இக்கட்டளைக் கிணங்க மந்திரி துரிதமாய் திரும்பிச் சென்று போய் அரசனுக்குத் தெரிவித்து அரசனை பலர் கூடி தூக்கிக் கொண்டு ஆண்டவரவர்கள் சமுகத்தில் பிண்டம் போல் வைத்தார்கள். அரசனாகிய அச்சுதப்ப நாய்க்கன் ஹலரத் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைக்கப்பட்ட மாத்திரத்தில் அவன் ஆண்டவரவர்களைப் பார்த்து கண்ணீர் தாரை தாரையாய் ஓட அழுது "ஆண்டவரவர்களே! இந்த அடியேனாகிய நான் இந்த நோயில் படும் வேதனை சொல்லுந் தரமல்ல. உலகாளும் அரசர்களுக்கு பல ஆபத்துகள் அடுத்தடுத்து வரும் என் பார்கள்; அரசாளும் தொழில் மிக நுட்பமானது; நீதி நெறியில் ஒரு மயிர்க்கிடை தப்பி நடத்தினால் மகாபாதகம் நேர்ந்து வில்லங்கம் அரசன் தலையில் வந்து விழுவது நிச்சயம்; என் கையிற் பிடிக்கப்பட்ட செங்கோல் என்னை யறியாமல் சற்றே சரிகி யிருந்தாலும் இருக்கலாம்; அதனாலே தான் அடியேன் இந்த வில்லங்கத்திற்கு ஆளானேன். இந்நோய் தீராதென்று கைவிடப்பட்ட நான் சகல வியாதிகளையும் தாங்கள் ஏறிட்டுப் பார்த்த மாத்திரத்தில் அறத்துலைக்கும், தங்கள் திருவடிகள் என் அரண்மனையில் பட்டமாத்திரமே நமக்கினி வியாதியே யில்லை யென்று நம்பி விட்டேன். ஆண்டவர்களே! இந்த அடியேன்

மீது மனதிரங்கி எனக்கிருக்கும் பொல்லாவினைகள் யாவும் தீர அருள் புரிய வேண்டும்" என்று சொல்லி புலம்பி அழுதான்.

நோய் வாய்ப்பட்ட அரசன் அச்சுதப்ப நாய்க்கன் பரிந்து சொல்லும் சொல் யாவையும் ஆண்டவரவர்கள் கேட்டு அவனை கூர்க்க பார்த்தார்கள். அப்போதே அவன் கொண்டிருக்கும் நோய் இன்னதென்று அவர்களுக்கு தெரிந்து விட்டது. உடனே தங்கள் திருவாயினால் பரிசுத்த வேதமாகிய குர்ஆனின் முஅவ்விதத்தைனி என்னும் "குல்அஊது பிரப்பில் பலக்" "குல்அஊது பிரப்பின்னாஸ்" இரண்டு ஸூரத்துகளையும் ஓதி அரசன் மீது ஊதினார்கள். அப்போதே அவனுக்கு ஒருவித தெளிவு உண்டாயிற்று. பின்பு ஹஸரத் ஆண்டவரவர்கள் அரசனையும் அவனைச் சேர்ந்த மந்திரி பிரதானிமார்களையும் பார்த்து, "இந்நோய் பகைவன் ஒருவன் செய்த சூனியத்தால் உண்டான நோய்" என்று சொல்லி விட்டு தங்கள் பகீர் ஒருவரைப் பார்த்து, "இவ்வரண்மனையின் மேன்மாடியின் ஒரு பக்கத்தில் ஒரு புறா ஒன்று வஞ்சனையிட்டு வைக்கப் பட்டிருக்கும், அங்கே போய் அதைஎடுத்து வாரும்" என்று கட்டளை யிட்டார்கள்.

ஹஸரத் அவர்களின் கட்டளையின்படி அந்த பகீர் எழுந்து மேன் மாடியில் ஏறி அங்கு ஒரு மூலையில் குற்றுயிராய்க் கிடந்த ஒரு புறாவை எடுத்துக் கொண்டு வந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்தார். அப்புறாவின் உடல் முழுதும் மந்திரோச் சாரணம் பண்ணின ஊசிகள் பல ஏற்பட்டிருந்தன. அப்புறாவின் பொருத்துகளிலும், நரம்புகளிலும் ஏற்றியிருந்த ஊசிகளை ஹஸரத் ஆண்டவரவர்கள் தங்கள் முபாரக்கான கைகொண்டு ஒன்றொன்றாகப் பிடுங்கினார்கள். ஒவ்வொரு ஊசியை பிடுங்குந்தோறும் அரசன் உடலிலுள்ள முடக்கு ஒவ்வொன்றும் விட்டுக் கொண்டே வந்தன. எல்லா ஊசியும் பிடுங்கி தீர்ந்ததும் அரசன் சுகதேகியாய் எழுந்து நின்றான். அவன் வியாதி யாவும் நீங்கி அவன் மேனி மாசற்ற மேனியாய் ஒளி இலங்க துலங்கிற்று.

தஞ்சைமா நகர் அரசனாகிய அச்சுதப்ப நாய்க்கன் பிணி தீர்ந்து பூரண சௌக்கிய மடைந்து நின்றபோது அவனுக்கிருந்த மனஆனந்தம் கொஞ்சமல்ல. உடனே ஹஸரத் ஆண்டவரவர்கள் பாதார விந்தத்தில் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து கைகூப்பி கும்பிட்டெழுந்து வாயாறப் புகழ்ந்து போற்றினான். தனக்குள்ள பிணியை பலர் காண

கையு மெய்யுமாய் போக்கின புதுமையை சொல்லிச் சொல்லி துதித்தான். பின்னும் ஹலரத் ஆண்டவரவர்களை நோக்கி, "ஆண்டவர்களே! அடியேனுக்குள்ளவை யனைத்தும் தங்களுக்குடையவை" என்று பணிந்து சொன்னான். பின்பு அரசன் மறுபுறம் திரும்பி தன் மந்திரி பிரதானிகளை நோக்கி சயிக்கினை செய்தான். உடனே அவர்கள் தங்க தாம்பாளத்தில் தங்க நாணயங்களையும், மாணிக்க முதலிய நவரத்தினங்களையும் குவித்து கொண்டு வந்து அரசன் முன் வைத்தார்கள். அரசன் அவற்றைத் தூக்கி ஹலரத் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்து கைகூப்பி நின்று இவை எஜமான் அவர்களுக்கு பாத காணிக்கையாகும். இவற்றை தாங்கள் அன்போடு எற்றுக்கொள்ள வேண்டுமென்று மன்றாடி நின்றான். அப்போது ஹலரத் அவர்கள் அரசனை நோக்கி, "இவைகளினின்று எனக்கு விருப்பமில்லை. இவை இப்போது என்னுடையனவாயினும் உன்னுடையனவாக வைத்து நீயே அனுபவி. இனி நான் வணக்கஞ் செய்வதற்கு வேண்டும்போது உன் பூமியில் ஒரு துண்டு நிலம் எனக்குகொடு" வென்று சொன்னார்கள். இதைக் கேட்ட அரசன் பூரித்து தாங்கள் வேண்டிய அளவுக்கு பூமி தர அடியேன் சித்தமாய்க் காத்திருக்கிறே னென்று பணிந்து சொன்னான். அச்சமயம் அவனுடைய மனைவியாகிய இராஜ பெருமாட்டி ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து அடிபணிந்து நின்று ஆண்டவர்களே! அடியாளுக்கு நீடிய காலமாக புத்திர சம்பத்தில்லை. அதற்கு தாங்கள் அருள் புரியவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டாள். ஆண்டவரவர்கள் அவளைப் பார்த்து, ஆண்டவன் கிருபையால் உங்களுக்கு புத்திர சம்பத்து உண்டாகு மென்று வாக்களித்தார்கள். அது போலவே அவர்களுக்கு புத்திர சம்பத்து உண்டாயிற்று. அதன் பின் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் அரசன் முதலிய அனைவருக்கும் பிரயாணஞ் சொல்லிக் கொண்டு தஞ்சாவூரை விட்டு புறப்பட்டார்கள். அரசன் முதல் அதிகாரிகளும் ஊர் குடிகளும் கூட்டமாய் வந்து ஆண்டவரவர்களை தரிசனம் பண்ணிக்கொண்டு அதிதூரம் வரையும் கூடவே சென்று வழியனுப்பி விட்டு திரும்பி வந்தார்கள்.

தேராம்பேட்டை புக்கிய சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீத் பாதுஷா சாஹிப் ஆண்டவரவர்கள் தஞ்சை நகரை விட்டு நீங்கி தங்கள் புத்திரர் [illegible] புடை

சூழ நடந்து வரும் பாதையில், ஒரு வயற்கரையில் ஆண்டவரவர்கள் சற்று தாமதித்து நின்று பாத்திஹா ஓதி விட்டு நடந்தார்கள். அதைக் கண்ட பகீர்கள், "இங்கே யாருக்காக பாத்திஹா ஓதினீர்கள்?" என்று ஆண்டவரவர்களைக் கேட்க, "இங்கே இரண்டு ஒலிகள் அடங்கி யிருக்கின்றார்கள். இவர்கள் இருவரும் பின்னுக்கு வெளியாவார்கள்" என்று சொல்லி விட்டு வந்து தோராம் பேட்டையென்னும் ஊர்போய் சேர்ந்தார்கள். அங்குபோய் சேர்ந்தவுடன், அவ்வூர் முஸ்லிம்கள் ஆண்டவரவர்கள் வருவதையும், அவர்கள் மகிமையையும் கேள்விப்பட்டு ஒன்று சேர்ந்து திரண்டு வந்து ஆண்டவரவர்களை தெரிசித்து பணிந்து, உபசரித்து ஊருக்குள் அழைத்துச் சென்று ஒரு ஆலமரநிழலில் இருக்கச் செய்தார்கள்.

ஆண்டவரவர்கள் பகீர்கள் சகிதம் அந்த மரத்து நிழலடியில் தங்கியிருந்தார்கள். அவ்வூரார்கள் பகீர்மார்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமென்று சமையல் தயார்பண்ணிக் கொண்டு பாத்திரங்களில் வைத்து மூடியிட்டு பகீர்களிடம் இறக்கி புசிக்கும்படி வேண்டினார்கள். அப்போது பகீர்கள் அச்சாதத்தில் மூடியிருந்த மூடியை திறந்து பார்த்தபோது, ஒவ்வொரு பாத்திரத்திலும் கார் அரிசி சாதமும் சார்வைத்த அகத்திக்கீரையும் இருக்கக்கண்டு, பகீர்களுக்கு உண்டான கோபத்திற்கு அளவேயில்லை. அவர்கள் கண்கள் சிவந்து ஊராரை நோக்கி வாய்கொண்ட மட்டும் நிந்தித்து உங்களுக்கு எங்கள் மீதிருந்த அவமதிப்பல்லவா இந்த கீழ்த்தரமான பதார்த்தங்களை அவித்து வைத்தீர்கள்? என்று சிறிச்சினந்து சொன்னபோது, ஊரார்கள் தட்டித் தடுமாறி முகஞ்சாம்பி திகைத்து நின்றார்கள். இதை ஹலரத் ஆண்டவரவர்கள் அறிந்தபோது பகீர்களை அழைத்து இது என்ன முறைகேடு. தங்களால் இயன்றதைக் கொடுத்த போதிலும், பெரியார்கள் யேற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்பித்தானே அவர்களால் கிடுபானதை கொடுத்தார்கள். அவர்களில் சீமானானாலும், ஏழையானாலும் வழக்கமாய்த் தின்பது இதுதான். அந்த வழக்கத்தின் பிரகாரமே உங்களுக்கு கொடுத்தார்களல்லாமல் அவர்கள் வஞ்சகமாய் உங்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. அதனால் நீங்கள் இப்படி கோபிக்கலாமா? நீங்கள் கோபத்தை என்னென்று நினைக்கிறீர்கள்? அது நல்வினைகளனைத்தையும் பற்றரத்துலைக்கும் கருவியல்லவா? கோபம் சுவர்க்கத்துக்குப் போகும் பாதையை தடுக்கு மென்று எல்லோரும் அதற்கு அஞ்சி வெருக்கின்றார்களே, நீங்கள் அக்கோபத்தை கையாட்சி கொள்ள பார்க்

றீர்களே, அது பழுது என்று சொல்லி, பின்னும் பலவாறு புத்தி போதித்தார்கள்.

இதைக்கேட்ட பகீர்கள் அஞ்சித்தடுமாறி அடிபணிந்து நின்று மன்னிப்பு கேட்டார்கள். ஹலரத் யூசுபு சாஹிபு அவர்களும் தலை வணங்கி நின்று மன்னிப்பு கேட்டார்கள். பின்பு ஹலரத் ஆண்டவரவர்கள் அவர்களை மன்னித்து, பகீர்களுக்கு நன்முகங் கொடுத்து உங்களுக்கு அந்தக் கீரையையும், சோற்றையும் தின்னப் பிரியமில்லாவிட்டால் இதோ இருக்கும் இந்த கிணற்றில் போட்டுவிடுங்களென்று கட்டளை பண்ணினார்கள். அப்படியே இந்த பகீர்கள் அக்கீரையையும், சோற்றையும் அக்கிணற்றில் போட்டு விட்டார்கள். அன்று முதல் அக்கிணற்றில் நூர் எடுக்குந்தோறும் அகத்திக் கீரையும், கார் அரிசி சோறும் வந்துக்கொண்டிருக்கின்றன.

பின்பு ஆண்டவரவர்கள் அவ்வூரார்களை அன்புடன் அழைத்து நீங்கள் என் இவ்வூரில் பள்ளி கட்டவில்லை என்று வினவியபோது, அவர்கள் பள்ளி கட்டுவதற்கு எல்லா சாமான்களும் தயார் செய்திருக்கிறோம். அதற்கு நாலு தூண்கள் மாத்திரம் வேண்டிய திருக்கிறது. அதற்கு பணமில்லாமல் தடைபட்டிருக்கிறது என்று பணிந்து சொன்னார்கள். அதைக்கேட்டதும் ஹலரத் ஆண்டவரவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த மாத்தடியை தங்கள் திருகரங்கொண்டு சுட்டிக்காட்டி இவ்விடத்தில்அகழ்ந்து பாருங்கள், தூண்கள் அகப்படுமென்று தங்கள் திருவாக்கினால் மொழிந்தபோது, அதுபோல் அவர்கள் திரண்டு நின்று அம்மாத்தடியில் தோண்டினபோது அதன்கீழ் நாலு செப்புத் தூண்கள் அகப்பட்டன. அவைகளை சந்தோஷத்தோடு யெடுத்து பள்ளியை கட்டி முடித்தார்கள்.

கூத்தாநூருக்குப் போன சரித்திரம்.

ஹலரத் செய்திநு ஷாஹுல் ஹமீத் மீரான் சுல்தான் ஆண்டவரவர்கள் தேசாம் பேட்டையாரை ஆசிர்வதித்து விட்டு, தங்கள் பகீர்கள் சகிதம் கூத்தாநூருக்கு புறப்பட்டு சென்றார்கள். ஆண்டவரவர்கள் வருகிறார்கள் என்றசெய்தி அவ்வூர் முஸ்லிம்கள் அறிந்ததும் கூட்டமாக எதிர் சென்று அழைத்துக் கொண்டுவந்து ஒரு ஜாகையில் இருத்தாட்டி அறுசுவை பதார்த்தத்தோடு விருந்து முதலிய சகல உபசரிணைகளும் செய்தார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் அவ்வூரில் தங்கியிருக்கும் போது ஒரு நாள் அவ்வூர் முஸ்லிம்களனைவரும் ஒன்று திரண்டு ஆண்டவரவர்கள் பால் வந்து அடிபணிந்து கைகட்டி நின்று "ஆண்டவரவர்களே! நாங்கள் அனைவரும் மிகவும் ஏழை, அன்றாடம் கூலிவேலை செய்து பிழைக்கிறவர்களும், பயிர் பச்சையிட்டு ஜீவனம் செய்கிறவர்களுமா யிருக்கின்றோம். எங்கள் வருமானம் நாங்கள் ஜீவனம் செய்கிறதற்கே போதாததா யிருக்கின்றது. இவ்வூரில் பள்ளி ஒன்று இல்லை யென்ற கவலை எங்கள் மனதில் நீண்ட காலம் இருந்து கொண்டே யிருக்கிறது. அக்கவலையை தீர்த்துக் கொள்ள எங்களுக்கு திராணியில்லை. ஆகை யால் தேவரீர் தாங்களே அதற்கு அருள்புரிய வேண்டும்" என்று மன் றாடிக் கேட்டார்கள்.

அவர்களின் மன்றாட்டத்தை ஹலரத் ஆண்டவரவர்கள் கேட்டு அக்கூட்டத்தாரில் மிக எளியவனொருவனை தங்கள் திருக்கண்ணால் ஏரிட்டு நோக்கி "ஏ மனிதனே! இவ்வூரில் குத்துபாபள்ளி ஒன்று நீ கட்டு" என்று வாக்களித்து அனுப்பினார்கள். அன்று முதல் அல் லாஹு தஆலாவின் உதவி அவனுக்குண்டாகி அந்த எளிய மனிதன் கணக்கற்ற செல்வமடைந்து சீமானானான். அவன் உடனே அதற்கு போதிய பணத்தைச் செலவுசெய்து அழகான ஒரு பள்ளியை கட்டு வித்தான். வெகு சீக்கிரமாக பள்ளிகட்டி முடியவே, ஹலரத் ஆண் டவரவர்கள் அப்பள்ளியில் போய்த் தொழுது சந்தோஷமுற்றார்கள். ஊரார் அவர்களும் இவ்வதிசயத்தை கண்ணாரக்கண்டு, சந்தோஷமுற்று கொண்டாடினார்கள்.

ஆண்டவரவர்கள் அப்பள்ளியில் புகுந்த நாள் முதல் அப்பள்ளி யில் ஒருவரும் இராதரித்து நித்திரை செய்கிறதில்லை. அப்படி அறியா மல் இராதரித்து நித்திரை செய்தால் உடனே வெளியில் எடுத்தெரியப் படுகிறார்கள். இது அன்று முதல் இன்றும் நடக்கின்றது.

திருவாரூருக்குப் புகுந்த சரித்திரம்.

செய்யிது ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் கூத்தாநூரை விட்டெழுந்து ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் பகீறுகள் சூழ்ந்துவர, திருவாரூர்வந்து பள்ளியின்கண் விடுதிவிட்டிறங்கினார்கள். அந்நாளக ஊது காபிர்களின் தேருலாவும் திருநாளாக விருந்தபடியினால் அவ்வூரார்

முதலியவர்கள் கூடி தேரை அலங்கரித்து அவர்களின் தெய்வத்தை யதன்மேலேற்றி அத்தேருக்கு வடம் பூட்டி யிழுத்தார்கள். சில தூரம் ஓடியதும் தேர் நின்று விட்டது. அது கண்டு அக்காபிர்கள் மிகுந்த பெயர்களைச் சேகரித்து இழுத்தும் அசையா திருந்தமையால், அவ்வூர்க் கோயில் தேசிகன் முதலியவர்க ளெல்லாம் விசனமுற்று நெஞ்சுருகி எல்லோரு மொன்று கூடி எது காரணத்தினால் இத்தேர் ஓடவில்லை யென்றாலோசித்தார்கள். அப்போது அவர்களில் சிலர் மற்றவர்களைப் பார்த்து துலுக்கர்களின் பள்ளியில் மிகுந்த கூட்டத்துடன் ஒரு பெரிய நாதாவானவர் வந்திறங்கி யிருக்கின்றார்கள். அவர்கள் வந்ததால் தான் நமது தேர் ஓடவில்லை யென்றார்கள். அச்சொல் யாவரின் புத்திக்கும் ஒத்திருந்ததினால் அவ்வூரி லிருக்கின்ற இஸ்லாமானவர்களைச் சிபாரிசு தேடிக் கொண்டு அக்கோயிற் றேசிகன் முதலியவர்கள் கூடி ஹஸரத் மீருன் சாஹிபு ஆண்டவரவர்களிடத்திற்கு வந்து மிகுமரியாதையோடு அடிபணிந்து வந்தனஞ் செய்து நின்று ஆண்டவர்களே! எங்கள் சுவாமியை தேரிலேற்றி வூருலாவித்து வருவது எப்போதும் வழக்கம், அவ்வாறிவ்வாண்டிலுஞ் செய்து பதினாயிரம் பெயர்கள் கூடி வடம் பிடித்திழுத்தும் சற்றாகிலும் தேர் அசைவின்றி நின்றதால், தீபதூபங்களிட்டும் பலி கொடுத்தும் அநேகவித முயற்சி செய்தும் அத்தேரிருந்த தலத்தை விட்டு மசையாது நிற்கின்றது. அதனால் எங்களின் மனங்கள் கசங்கி முகம் வாடி ஊணின்றி வருந்துகின்றோம். ஆதலால், தாங்கள் ஏழைகள் பெயரில் கிருபை வைத்து எங்கள் தேரோடும்படி உதவி செய்தருளல் வேண்டுமென்று மன்றாடிகின்றார்கள். ஹஸரத் ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவரவர்கள் அவர்கள் பெயரில் அன்பு கூர்ந்து தங்கள் முபாறக்குத் தங்கிய திருப்பாதம் பெயர்த்தெழுந்து தேர் நிற்குமிடத்திலாகி அத்தேரின் வடம் பிடித் திருக்கின்றவர்களை விலகச் செய்து அத்தேரை நோக்கிச் சிறப்பான வாயினால் ஷைத்தானே வீதிகளைச் சுற்றி வந்து நீ இருக்குந் தலத்தில் தரிபடென்றுரைத்து மேன்மை தங்கிய கரத்தின் பிரம்பு கொண்டொரு அடி அத்தேரின் பேரிலடித்தார்கள். அந்தத் தேரானது வடம் பிடித்திழுப்பாரின்றி வெகு சீராக அலங்காரத்துடன் நான்கு வீதியுஞ் சுற்றி வந்து தானிருக்குந் தலத்தில் தரிபட்டது. அதுகண்டு அவ்வூரா ரெல்லாம் புதுமையாகி இப்பூலோகத்தில் இப்போதிந்த நாதாவைப் போலொருவருமில்லை யென்று துதித்து ஆண்டவரவர்களின் திருப்பாதம் பணிந்து போயினார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் முன்போற் தாங்களிருக்கும் பள்ளியில் வந்திருக்கும் போது முதிர்ந்த வயதுடைய ஒரு பிராமணன் வந்து ஆண்டவரவர் பாதம் பணிந்து கை கட்டி நின்று இரட்சகரே ! யென்று கூவி, நானுகிறவன் மிகுந்த ஏழையானவன். என் மனையில் ஒரு தென்ன மரம் நின்றது. அது மிகுத்துக் காய்க்கும், அது கொண்டு என் ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தேன், சிறிது நாளைக்கு முன் அம்மரம் பட்டுப் போய் விட்டது. அதனால் நான் மிகுந்த தரித்திரம் பெற்று வருந்துகின்றேன். தாங்கள் கேட்ட வரங் கொடுக்கும் கிருபையாளரானதால், என் மனக்கவலை தீரும் பொருட்டு அம்மரந் தழைக்கச் செய்தருள வேண்டு மென்று கெஞ்சி நின்றான். ஹலரத் ஆண்டவரவர்கள் அவன் மீது அன்பு வைத்துச் சிறப்பாகிய கைகளை உயர்த்தி அல்லாஹு தஆலாவிடம் துஆ இரந்தார்கள். உடனே பட்டிருந்த தென்னமரம் தழைத்துப் பூத்துக் காய்த்து நின்றது. அது கண்டு அம்முதிய பிராமணனும் அவனின் பந்துக்களும் புதுமையாகி ஆண்டவரவர்களின் பாதம் பணிந்து புகழ்ந்து மகிழ்ச்சியுடனேகி னார்கள்.

எருதருளிய சரித்திரம்.

சிறப்புத் தங்கிய ஹலறத் சுல்தான் ஷாஹுல் ஹமீது நாயக ரவர்கள், திருவாரூரை விட்டு பகீறுகள் சூழ நடந்து திருக்களாச் சேரி யென்கிற நகருக்கு வந்தோரிடத்தில் விடுதி விட்டிருந்தார்கள். அதை அவ்வூரார் அறிந்து வந்து மிகுந்த சங்கை செய்து உபசரித்தார்கள். அதிலொரு இஸ்லாமானவன் ஹலரத் ஆண்டவரவர்களின் சமுகத்தில் வந்து பாதம் பணிந்து தலை குனிந்து நின்று இரட்சகரே ! யென்று கூவி நான் உழுது பிழைக்கிறவன், என்னிடத்தி லிரண்டு காளை மாடுண்டாகி யிருந்தன. அவை! கொண்டு உழுது பயிர் செய்து, நானும் என் மனைவியும் பிள்ளைகளுமாயுண்டு பிழைத்திருந்தோம். இப் போது அதிலொரு மாடு செத்து விட்டதினால் என் ஜீவனம் நடக்கிறது கடினமா யிருக்கின்றது. ஆகலால் தாங்கள் எளியேன் பேரில் கிருபை செய்து என் வசமிருக்கின்ற, மாட்டுடன் இன்னுமொரு மாடுண்டாகும் படி அருள் புரிய வேண்டு மென்று, மன்றாடி நின்றான். ஆண்டவரவர் கள் அவன் பேரிலன்பு கூர்ந்து அவனை நோக்கி ஒ மனிதனே ! உன் னிடத்தி லிருக்கின்ற எருதைக் கொணர்ந்து அதோ நிற்கிற மரத்திற்

கட்டி விட்டு கொஞ்சம் புற்போட்டு வைத்து விட்டு அதற்கடுத்த மாத்தில் ஒரு கயிற்றை மாத்திரங் கட்டி அங்ஙனமும் கொஞ்சம் புல்போட்டு வைத்து விட்டு உன்னிருப்பிடம் போய் விடென்றார்கள். அம்மனிதன் அவ்வாறு செய்து விட்டு தன் இருப்பிடம் போயினன். ஹலரத்தவர்கள் அன்றிரவில் இஷாத் தொழுது விட்டுத் தனித்திருந்து அல்லாஹு தஆலாவைத் தியானித்தார்கள். ஆண்டவன் தன்னுடைய தத்துவங் கொண்டு ஒரு காளை மாட்டை யுண்டாக்கி அம்மனிதன் கட்டி வைத்த வெறுங் கயிற்றில் அக்காளை மாட்டைப் பிணித்து வைக்கச் செய்தான். விடிந்த போது அம்மனிதன் ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவரவர்களின் சமுகத்தில் வந்து கைகட்டி நின்றான். ஹலரத்தவர்கள் அம்மனிதனை நோக்கி, ஓ மனிதனே! உன்னுடைய எருதுகள் இரண்டையும் ஓட்டிக் கொண்டு போய் உழுது பிழைத்து சுகமாயிரு வென்று வாழ்த்தி அனுப்பினார்கள். அம்மனிதன் புதிதாய் வந்த மாட்டைப் பார்த்து மிருந்த சந்தோஷத்துடன் மாடுகளை யவிழ்த்துக் கொண்டு ஆண்டவர்களின் பாதம் பணிந்து போற்றிப் புகழ்ந்து விட்டுச் சென்று உழுது பயிர் செய்து சிறப்புடன் வாழ்ந்திருந்தான்.

மேலே நாகூருக்குப்போன சரித்திரம்.

ஹலரத் சையிது சுல்தான் மீரான் சாஹிபு ஒலியுல்லா அவர்கள் திருவாரூரி லிருந்து தங்கள் மகனார் சையிது முஹம்மத் யூசுபு சாஹிபு அவர்களும், தபோதனர்களாகிய பகீர்களும் புடைசூழ நடந்து மேலே நாகூர் வந்து சேர்ந்தார்கள். மேலே நாகூர் என்பது இப்போதுள்ள நாகூருக்கு மேற்கில் இருக்கின்றது. அது அக்காலத்தில் ஒரு பட்டணமா யிருந்தது. அதில் அநேக மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் பல அமைந்திருந்தன. அதில் அநேக உயர் குலத்தார் வாசஞ் செய்தார்கள். கப்பல் வர்த்தக வியாபாரிகள் அநேகர் இருந்தனர். அவ்வூரில் விசேஷமாக முஸ்லிம்களே வசித்து வந்தார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் அவ்வூரில் ஒரு ஸ்தானத்தில் விடுதி விட்டிருந்தார்கள். ஒருவராவது ஆண்டவரவர்களை விசாரித்து உபசரிக்கவேயில்லை. அவ்வூர் குடிகளில் அநேகர் மார்க்க நெறி தவறி நடக்கிறவர்களா யிருந்தார்கள்.

பொன்னினலிழைக்கப் பட்ட மிம்பர்மேடை அமைந்த குத்துபா பள்ளிகள் பல இருந்தும் அதில் தொழுவார் ஒருவருமேயில்லை. ஒவ்

வொருவரும் தன் தன் பணப்பெருக்கினால் தன்னை மதித்து இருமாந்து திரிந்தார்கள். இதுமாத்திரமா? கொலை, களவு, மதுபானம், விபசாரம், சூதாட்டம், பொய், புறம், கோள், குண்டனி, முதலிய துற்கிருத்தியங்கள் அனைத்தும் அவர்களுக்கு நித்திய கருமமாய் இருந்தன. தொழுதல், நோன்பு பிடித்தல், சதகா கொடுத்தல் முதலிய சத்கருமங்கள் ஒன்றுமே அவர்களுக்கு கிடையாது. அவர்கள் செல்வப் பெருக்கினால் மமதைகொண்டு தீனுல் இஸ்லாத்தின் கருமங்களில் தலைகீழாய்ப் புரண்டு கிடக்கும், அவ்வூர் குடிகளை, ஹலரத் ஆண்டவரவர்கள் கவனித்து நமது முஸ்லிம்கள் இவ்வாறு சீர் அழிந்து கிடப்பது முறமையல்லவே என்று, அவர்களுக்கு நரகத்தைக் கொண்டு அச்சம் மூட்டி உபதேசம் புரிய வேண்டுமென்றெண்ணி அவர்களை அழைத்து பலவாறு உபதேசித்தார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் தங்கள் திருவாய் மலர்ந்து சொரிந்த அமிர்த வசனங்களை அவ்வூரார் அலக்ஷியஞ் செய்தது மல்லாமல், அவர்களை பரிகசித்து நகைத்தார்கள். இவர் யார்? எங்குள்ளவர்? இவர் சொல்லுவதென்ன?" என்று பரிகாசஞ் செய்தார்கள். "கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே" என்றபடி தாங்கரிய கஷ்டங்களை அனுபவிக்கப்போகிற மதிகெட்ட மேலே நாகூரார் ஹலரத் ஆண்டவரவர்களின் திருமொழிகளை இகழ்ந்தபோது ஆண்டவரவர்கள் மனம் நொந்து, இவ்வறிவற்ற சண்டாளர்கள் வாழும் ஊரில் நாம் தரித்திருக்கக் கூடாதென்று தங்கள் மகனாரும் பகீர்களும் புடைசூழ அவ்வூரைவிட்டு வெளிப்பட்டு கீழ்புறத்திலுள்ள கடற்கறை மைதானத்தில் வந்து விடுதி யிட்டார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் மேலேநாகூரை விட்டு வெளிப்பட்ட மாத்திரத்தில், அவ்வூரார் பேரில் அல்லாஹு தஆலா தனது கஹறை இறக்கினான். அதனால் வாந்திபேதி, ஜுரநோய், குன்மரோகம், கால்கை வியாதி அவயவ வீக்கம், வாதம், பித்தம், முதலான கணக்கற்ற வியாதிகள் அவர்களுக்கு உண்டாயின. அநேகர் தாங்கரிய கஷ்டப்பட்டு மடிந்தார்கள். மரக்கல வியாபாரிகள் தன்மரக்கலத்தில் நிறைந்த சரக்குடன் பிரயாணத்திற்கு ஆயத்தமாயிருந்த பலமரக்கலங்கள் மேடேறின. பலபடகுகள் போக்கு வரத்தின்றி தடைபட்டு கிடந்தன. அவர்களின் அகங்காரம், ஆண்மை, வீரதீரம் யாவும் தொலைந்தன. அநேகர் அவ்வூரை விட்டு விலகினார்கள். இவ்வாறு

பரிதபிக்கப்பட்ட நிலவரத்தில் சிலருக்கு இது நாம் செய்த துர்செய்கைகளாலும், பெரியார்கள் செய்த உபதேசத்தை நிந்தித்ததாலும் வந்து நேரிட்டதென்று மனதில் பட்டது. ஆக அவ்வூரார் குடிக்க கஞ்சிக்கும் வகையற்று தவித்தார்கள். தரித்திரமும், பலநோயும் அவர்களிடம் குடிகொண்டன. அவ்வூரில் அதிக்கிரமங்களில் சேராமல் நீதியுடன் நடந்த சில வீட்டுக்காரர்கள் மாத்திரம் அந்த ஆபத்துகளை விட்டு விலகி நின்றார்கள். அவர்களில் சிறந்திருந்த சையிது பகாவுத்தீன் சஹறவர்த்தி என்பவர் ஹலரத் ஆண்டவரவர்களிடம் தனியே புறப்பட்டு வந்து பணிந்து நின்று, தமக்கும், தமது மனைவிமக்களுக்கும் அபயம் கேட்டுக்கொண்டு போனார்.

தஞ்சை ராஜன் நாகூரில் ஸ்தலம் விட்டது.

ஹலரத் செய்யிதினா ஷாஹுல் ஹமீது பாதுஷா ஆண்டவரவர்கள் மேலே நாகூரை விட்டு நாகூர்கடற் கரையில் ஒரு ஸ்தானத்தில் தங்கள் ஸகாக்களோடு தங்கினார்கள். அக்காலத்தில் அந்த ஸ்தலம் பல மணல் மேடுகளும் பின்னைமரங்களும் பனைமரங்களும் அடர்ந்த தோப்புகளையுமுடைய தாயிருந்தது. மேலே நாகூர் பாழாய்போய் விட்டதென்று தஞ்சாவூர் அரசனாகிய அச்சுதப்ப நாய்க்கன் காதில் விழுந்ததும் அந்நகர் திடீரென்று பாழாகக்காரணமென்னவென்று விசாரித்தபோது, தனக்கு நோய் தீர்த்த ஆண்டவரவர்களின் சன்மார்க்க போதனைகளை அவ்வூரார் அலட்சியஞ் செய்ததும், ஆண்டவரவர்களை அவமதித்ததும் காரணமென்று அறிந்து கொண்டார். பின்பு ஆண்டவர்வர்கள் எங்கேயிருக்கிறார்களென்று விசாரித்துக்கொண்டு அவர்களை தரிசிக்கவேணுமென்று அவனுக்கு எண்ணம் பிறந்தது. உடனே அச்சுதப்ப நாய்க்கன் தன் மந்திரி பிரதானி சேனாதிபதிகளிடம் தன் பிரயாணத்திற்கு வேண்டி சகல எத்தனங்களுஞ் செய்யும்படி கட்டளை பண்ணினான். அரசன் கட்டளைப்படி சர்வசாமான்களும் தயாரானவுடன் அச்சுதப்ப நாய்க்கன் தன் மந்திரி பிரதானிமார்களோடு ஒரு சிறு பட்டாளமும் புடைசூழப்புறப்பட்டு மேலே நாகூரை நோக்கி வந்தான். அரசன் மேலே நாகூருக்குப் போய் பாழ்பட்ட நாகூரைப் பார்த்துக் கொண்டு ஆண்டவரவர்கள் தங்கியிருக்கும் கடற் கரைக்கு வந்து ஒரு ஜாகையில் தங்கி அங்கிருந்து தான் மாத்திரம் கால் நடையாக நடந்து

ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து சாஷ்டாங்கம் பண்ணி எழுந்து கைகூப்பி நின்று, "எஜமான் அவர்களே! தாங்கள் இங்கே வந்து தங்கியிருப்பதாக கேள்விப்பட்டு திருவடிகளை தரிசிக்க நான் வந்தேன். அடியேனாகிய எனக்கு ஒரு பேருதவியை தாங்கள் செய்து என்னைக் காப்பாற்றினீர்கள். அதற்கு பிரதியாக நான் ஒன்றையும் செய்யவில்லை. இப்போது தேவரீர் அடியேனுக்கு வேறும் ஒரு கருமத்தை கட்டளை செய்குவீர்களென்று தங்கள் திருவடிக் கீழ் வந்து நிற்கின்றேன். தாங்கள் முன் அன்பு கூர்ந்து அருளியபடி கொஞ்சம் பூமியாவது தங்கள் திருவடிக்கு காணிக்கையாக கொடுக்க ஆசைப் படுகின்றேன். இப்போதே தாங்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று மன்றாடிச் சொன்னான்.

இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் அரசனைப் பார்த்து உன் இஷ்டப்படிச் செய்யென்று சொல்லி தாங்கள் தங்கியிருந்த ஸ்தானத்திலேயே ஒரு இடத்தைக் குறித்து இவ்விடத்திலேயே நிலம் வேண்டுமென்று அறிவித்தார்கள். ஆண்டவரவர்களின் உத்திரவு, பிறந்தவுடன், அரசனாகிய அச்சுதப்ப நாய்க்கன் மேலே நாகூருக்கு கீழ் புறம் சதுரங்கமான ஒரு துண்டு நிலத்தை அப்போதே எல்லை குறித்து கல்லை நாட்டி ஆண்டவரவர்களுக்கு பாத காணிக்கையாக சமர்ப்பித்தான். அந்த நிலத்தின் எல்லைக் குள்ளேயேதான் ஹலாத் ஆண்டவரவர்களின் தர்காவும் அவர்களின் சந்ததிகளாகிய சாஹிபுமார்களின் மனைகளும் அடங்கியிருக்கின்றன. மேல் குறித்த ஸ்தலத்தை தஞ்சை ராஜன் ஹலாத் ஆண்டவரவர்களுக்கு பாதகாணிக்கையாக கொடுத்தபின், ஆண்டவரவர்களிடம் பாதம் பணிந்து விடை பெற்றுக் கொண்டு தன் பரிவாரங்களுடன் தன் தஞ்சைமா நகரம்போய் சேர்ந்தான் ஆண்டவரவர்கள் மேற்படி எல்லைக்குள் கடலருகில் சிறு குடிசைகள் பல சமர்ப்பித்து கொண்டு தங்கள் மகனாருடன் வாசஞ் செய்தார்கள். பகீர்மார்கள் நானூற்று நால்வரும் அவ்விடத்திலேயே ஜாகை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

ஹலாத் *ஆண்டவரவர்கள் அவ்விடத்தில் தங்கினபோது அவர்களுக்கு வயது நாற்பது. மகனார் ஸெய்யிது முஹம்மது யூசுபுக்கு வயது பன்னிரண்டா யிருந்தது.

கிலுறு அலைஹிஸ்ஸலாமைக் கண்ட சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களுக்கு வயது நாற்பது நிரப்பமாகி மிகு மாட்சிமையுடன் கடலருகில் குடிசையிட்டு வசிக்கும்போது ஒற்றைக் கால் இரட்டைக்கை ஒற்றைச் செவி இரட்டைக் கண் குதிரை முகம் இவ்வகையுற்று கொடுமைகள் மிகுத்து மனிதர்களைக் கண்டால் அடித்துக் கிழித்து விழுங்கப் பட்டவர்கள் வாழ்கின்ற அந்துமா நகர் சென்று அவர்களை நல்வழியி லாக்கி அங்குள்ள இரதக் கிணற்றையும் பார்த்து ஹலரத் ஸுலைமான் அலைஹிஸ் ஸலாமவர்களின் சமாதி ஸ்தானத்தையுந் தரிசிக்க நாட்டங் கொண்டு ஹலரத் முஹம்மது யூசுபு சாஹிபவர்களை யழைத்து பகீறுகளுடைய காரியங்களை யவர்கள் வசஞ் சாட்டி விட்டு நாற்பது கரும்பும் ஒரு கரகத்தில் தண்ணீருங் கொண்டு தனித்த ஓர் கட்டிட மியற்றி அதனுட் சென்று ஆண்டவனை நாடி கல்வத்திருந்தார்கள். அவ்விடந்தான் இப்போது கடலருகில் சில்லாவடி யென்று வழங்குகின்றது. அப்படியே நாற்பது நாள் கல்வத்திலிருந்தும் அவர்களின் எண்ணத்திற் கொத்தபடி ஆண்டவனின் உத்திரவும் யாதொரு சயிக்கினையுங் காணுமையால் வெளியில் வந்து நாம் நாடிய நாட்டத்தின்படி அல்லாஹு தஆலா நிறைவேற்ற வில்லையே என்கிற எண்ணத்துடன் இருக்கும்போது, ஓர் இரவில் ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம் வந்து ஹலரத் ஆண்டவரவர்களுக்கு ஸலாம் சொல்லி, "அப்துல் காதிறே! உம்மை அந்துமான் பேரில் சாட்டவில்லை; நீரங்கு செல்ல ஆண்டவனின் உத்தாரமுமில்லை; யுகமுடிவில் வரப்போகிற மஹ்தீ அலைஹிஸ்ஸலாம் என்று வழங்குகின்ற இமாம் மஹ்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காக அந்த இரதக் கிணற்றை உண்டுபண்ணி வைத்திருக்கின்ருன். உமக்கதைப் பார்க்க நாட்டமிருந்தால் என்னுடைய தோளில் முகத்தை வைத்துப் பாரும்" என்ருர்கள். அதுபோல் ஹலரத்தவர்கள் கிலுறு அலைஹிஸ் ஸலாமுடைய தோளில் முகத்தை வைத்துப் பார்த்து அங்குள்ள அதிசயங்கள் யாவையுங் கண்டு மிகுந்த சந்தோஷமாகினுர்கள். பின்பு ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலா மவர்கள் ஆண்டவரவர்களின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று இப்போது தர்கா கட்டப்பட்டிருக்கிற இடத்திற்கு வந்து கிலுறு அலைஹிஸ்ஸலா மவர்கள் சில விடங்களைச் சுட்டி இஃது நீரிருக்குந்தலம், இஃது நீர் மவுத்தாகுந் தலம், இஃதும்மை நீராட்டுந் தலம், இஃதும்மை தொழுவிக்கும் தலம், இஃது

நீரடங்கும் தலமென்று காட்டி விட்டு முன் சுட்டிய விடங்களுக்குட் பட்ட அங்குள்ள ஒரு மணற்றிடரை யடுத்து; அப்துல் காதிரே! இத்திடரினுள் ஒரு சதுர மண்டப மொன்றிருக்கிறது. அம்மண்டபத்துக்குள் ஒரு கிணறிருக்கின்றது. பண்டை காலத்தில் அதில் ஹலரத் ஸுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் அவர்களும் நானுந் தண்ணீரெடுத்தொளுச் செய்து தொழுதிருக்கின்றோம். ஆனதால் நீரிந்த மணல் மேட்டை வெட்டி அம்மண்டபத்தையும், அக்கிணற்றையும் வெளியாக்கிக் கொண்டு இத்தலத்தின் கண் நீர் மவுத்தாகுமளவு மிருக்கும்படி ஆண்டவனுத் தாரஞ் செய்திருக்கின்றா னென்றார்கள். இச்சொற்களை கேட்டு ஆண்டவரவர்கள் ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலாமை நோக்கி நான் பிறந்த தேசம் வெகு தூரமா யிருக்கின்றது. என் பந்துக்களில் இங்கொருவருமில்லை, என் மவுத்து வரையில் என் காரியமெப்படி யாகுமென்றார்கள். அதற்கு ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம் அப்துல் காதிரே! நீரதை யெண்ணிச் சலிக்க வேண்டாம், நீர் ஜீவனோடிருக்கும்போதும், மவுத்தை அனுபவித்தபோதும் உம்முடைய காரியத்தில் வல்ல நாயன் காரிய கர்த்தனாக இருக்கின்றான். உம்முடைய காரியங்களை நாயன் இலேசாக்கித் தருவான். யுகமுடிவாகும் வரையும் உம்முடைய சமாதி ஸ்தானத்தின் தீபம் அவியவே மாட்டாது. எட்டு திக்குகளிலிருந்து குத்துபுகளும் ஒலிகளும் இராஜாதி ராஜர்களும் வந்து உம்முடைய கபுறு முபாறக்கை தரிசிப்பார்கள். உம்முடைய ஹஜ்ஜு முதலிய யாத்திரைகளில் உம்முடைய காரியங்களை யெல்லாம் என் வசமாக்கினது போல உமது மவுத்து வரையில் உமது காரியம் என் வசமே யிருக்கும், மவுத்துக்குப் பின்னும் உம்முடைய கூட்டத்தாருடையவும் சந்ததியாருடையவும், காரியமு மென் வசமே யிருக்கும். இவ்வாறு ஆண்டவனின் கற்பனை யுண்டாயிருக்கிறதென்று சொல்லி விட்டு ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம் போய் விட்டார்கள். அது கேட்டு ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் சந்தோஷமாகி ஜின்களை யழைத்து அம்மணல் மேட்டை வெட்டிப் பரப்பச் சொல்லி விட்டுத் தங்களி னிருப்பிடத்தி லிருந்தார்கள்.

அந்த ஜின்கள் அம்மேட்டை வெட்டிப் பரப்பினதில் ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலா மவர்களின் சொற்படி கிணறும் அதை வளைந்திருந்த மண்டபமு மிருக்கக் கண்டு ஹலரத் ஆண்டவரவர்கள் மனமகிழ்ந்து பனிரண்டு வயதையுடைய ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களையும் பகீறுகளையும் சமுகத்திலழைத்து ஹலரத் கிலுறு

அலைஹிஸ்ஸலா மவர்கள் சொன்னதை யெல்லாம் விபரித்துக் காட்டி எல்லோரையுங் கூட்டிக்கொண்டு அக்கிணற்றினருகிற்சென்று தண்ணீர் யெடுத்து ஒலுச்செய்து தொழுது அங்கு தானே ஜாகை செய்து ஆண்டவனைத் தியானித் திருந்தார்கள். அத்தலந்தா னிப்போது தர்காவுக்கு வடகிழக்கு மூலையில் இருக்கின்றது. அதை முதுபகு வென்று மனிதர்கள் கொண்டாடுகின்றார்கள்.

சித்திர கூடங்கண்ட சரித்திரம்.

ஹலரத் செய்யிதினு மீரான் சுல்தான் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் முதுபக்கென்னும் சிறந்த மண்டபத்தில் வாசஞ் செய்துக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் இரவில் இஷா தொழுத பின் ஹலரத்து நபி கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிரசன்னமாகி, ஆண்டவரவர்களை நோக்கி அப்துல் காதிரே! சிலோன் தீவில் சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் கட்டின அலங்கார மாளிகை ஒன்று உண்டு. அங்கே அழைத்துக் கொண்டு போய் அதை உமக்கு காட்டும்படி அல்லாஹு தஆலா கட்டளை யிட்டிருக்கிறான். ஆகையால், எழுந்திருங்கள் என்றார்கள். இதைக் கேட்ட ஆண்டவரவர்கள் ஆனந்த முற்று, எழுந்து கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் நடந்தார்கள். இருவரும் யாதொரு தோணி கப்பல் முதலியனவின்றி, அற்புதகரமாக கடலைக்கடந்து இலங்கை தீவை யடைந்து போகையில், அவர்களுக் கெதிரே வானமண்டபவனந் ஜொலிக்கும் பிரகாசமொன்று ஆண்டவர வர்களின் கண்களுக்கு தெரிந்தது. அந்தப் பிரகாசம் அங்குள்ள விசித்திர மாளிகையிலிருந்து எழும் பிரகாசமாயிருந்தது. மேலும் செல்லச்செல்ல அவ்வலங்கார மாளிகையே கண்களுக்கு தோன்றிற்று. அதன் சிகரம் அதிக உன்னதமாகவும், பல தங்கக் கலசங்களை யுடைய தாகவும், அதன் சுற்று மதில்கள் பசும் பொன்னினாலு மிருந்தது. அம் மாளிகையின் அலங்காரத்தை வர்ணிக்க இயலாது. அவர்கள் இருவரும் அந்த மாளிகையை யடுத்தபோது, அதன் பக்கத்தில் மாணிக்க நதி ஒன்று ஓடக்கண்டார்கள். அந்நதியின் மணலும், கற்களும், மாணிக்கமும், இரத்தினங்களு மாகவே யிருந்தன. அதன் இருமருங்கிலும் பவளக் கொடிபடர்ந்து ஜொலித்துக் கொண்டிருந்தது,

இருவரும் அந்த நதியை யடுத்தபோது நபி கிலுறு அலைஹிஸ் ஸலாம் அவர்களின் உத்திரவின்படி ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் அந்நதியில் இறங்கி நீராடினார்கள். நீராடி கரை ஏறினபின் கிலுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆண்டவர்களை அழைத்துப் போய் அம்மாளிகையின் அலங்காரங்கள் ஒவ்வொன்றையும் காட்டிக் கொண்டு மாளிகைக்குள் புகுந்து அதனுள் அமைக்கப்பட்டிருந்த அளவற்ற அறை வீடுகளையும், அலங்காரங்களையும், காட்சிகளையும் காட்டினார்கள். அக்காட்சி ஆண்டவரவர்களுக்கு வெகு இனிமையாக யிருந்தது. அச் சிங்காரமாளிகைக்குள் போய் நுழைந்ததும் கிலுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆண்டவர்களை இரண்டு றக்ஆத்து தொழும்படி யேவினார்கள். அதுபோல் ஆண்டவரவர்கள் தொழுது தீர்ந்த பின் அந்த மாளிகைக்குள் உண்டான சகல அற்புதங்களையும் ஆண்டவரவர்களுக்கு காட்டி அங்கங்கே செய்ய வேண்டிய கிரிகைகளையும் செய்வித்த பின் ஒரு அலங்கார அறைக்குள் புகுந்தார்கள். அங்கே ஒரு இரத்தின பீடத்தின் மீது தங்கக் கிண்ணம் ஒன்றில் சந்தனக் குழம்பு நிரப்பி வைக்கப்பட்டிருந்தது.

கிலுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆண்டவரவர்களைப் பார்த்து "அப்துல் காதிரே! இந்த சந்தனக் குழம்பில் உமது வலது கையை தோய்த்துக் கொள்ளும்" என்று ஏவினார்கள். அதுபோல் ஆண்டவரவர்கள் தங்கள் வலது கையை அந்த சந்தனக் குழம்பில் தோய்த்துக் கொண்டார்கள். பின்பு கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆண்டவர்களை ஒரு கூடத்திற்குள் அழைத்துப் போய் அங்கே சுவரில் ஏற்கனவே அடிக்கிருக்கும் பலசந்தனக் கையடையாளங்களையும் காட்டி, இக்கை இன்னாரின்னார் கையடையாள மென்றும் எல்லார்க் கையிற்கும் மேலேயிருந்த கையடையாளத்தைக் காட்டி, "இது உமது பாட்டனார் குத்துபுல் அஃதாப் கௌதுல் அஃலம் செய்யிது முஹையத்தீன் அப்துல் காதிரு ஜீலானி அவர்களுடைய கைக்குறியாகும். நீரும் உமது கையின் குறியை இவைகளுடன் வையும்" யென்று ஏவினார்கள். அது போல் ஆண்டவரவர்கள் சந்தனம் தோய்த்த தங்கள் வலது கையை அந்த சுவரில் ஓங்கி அறைந்தார்கள். அக்கையடையாளம் ஹலரத் முஹையத்தீன் அப்துல் காதிறு ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்களின்கைக் குறிக்கு கீழாகவும், மற்ற கைக்குறிகளுக்கு மேலாகவும் வைக்கப்பட்டது. அப்போது "அப்துல் காதிரே! உலகமனைத்தையும் நிலை குலையாமல் காக்கும் அதிகாரமுள்ள குதுபுபட்டம் இன்

றைத்தினம் உனக்கு கொடுக்கப்பட்டு விட்டது'' என்று அல்லாஹு தஆலாவின் புறத்திலிருந்து உருதோற்ற மற்ற சப்தம் ஒன்று கேட்டது.

இதைக்கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கி பரவசமாய் நின்றார்கள். அப்போது கிலுறு அலைஹிஸ்ஸலாமவர்களும் ஆசிர்வதித்தார்கள். பிறகு இருவரும் அம்மாளிகையை விட்டு வெளியில் வந்தவுடன், கிலுறு அலைஹிஸ்ஸலாம் மீளவும் மாளிகைக் குட்சென்று ஒரு இரும்பு சங்கலியைகையில் கொண்டு வந்து "அப்துல் காதிரே ! இச்சங்கிலி இம்மாளிகையில் தொங்கினது. இதை சுல்தான் சிக்கந்தர் துல் கற்னைன் அவர்களுக்கு அல்லாஹு தஆலா அருளினுன். அப்போது இது அருபது முழ நீளமுள்ள தாயிருந்தது. இதை உமக்கு கொடுக்கும்படி அல்லாஹு தஆலா கட்டளை செய்தான்'' என்று சொல்லி ஆண்டவரவர்கள் வசம் கொடுத்தார்கள். அச்சங்கிலி நான்கு கருணைகளை உடைய தாயிருந்தது. அச்சங்கிலியை ஆண்டவரவர்கள் பெற்றுக்கொண்டு, கிலுறு அலைஹிஸ்ஸலா முடன் வந்தார்கள்.

கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆண்டவர்களை கடற் கரையில் விட்டு விட்டுப் போய் விட்டார்கள். ஆண்டவரவர்கள் கடற்கரையிலிருந்து முதுபகு வந்து சேர்ந்தார்கள். அப்போது, சுபுஹு நேரமாகிக் கோழி கூவிற்று. ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் மேற்படி சங்கிலியை வெகுநாள் வரையிலும் தாங்களே வைத்திருந்து பின்பு மகனுர் ஸையிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்கள் வசம்கொடுத்து, அதன் வரலாற்றையுஞ் சொல்லி மகனே ! இது ஆதியில் அறுபது முழ நீளங் கொண்டது. காலத்திற்கு காலஞ் சுருங்குகின்றது. இன்னுங் காலம் போகப்போக இன்னுஞ் சுருங்கிக் கொண்டே வரும். கியாமத்து முடிகியவுடன் கருணைகள் நான்கும் ஒன்றோடொன்றும் ஒட்டிக்கொள்ளும், அது கியாமத்து அடையாளமாக யிருக்குமென்று அறிவித்தார்கள். அந்த சங்கிலி இப்போது ஹலரத் சைய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்களின் திவ்விய வாசலின் முன் மண்டபத்து நடுவில் கொழுக்கப்பட்டு தொங்குகின்றது. இந்தச் சங்கிலி ஹலரத் ஆண்டவரவர்களுக்கு கிடைத்தபோது இன்னும் நீளமாகவேயிருந்த தென்று சொல்லப்படுகின்றது.

பற்கொம்பை தளிர்ப்பித்த சரித்திரம்.

ஹலறத் ஹாஜி ஹமீது ஒலியுல்லா ஆண்டவரவர்கள் மிகு மாட்சிமையுடன் நாகையில் வாழுநாளில் சிந்து ராஜ்ஜியத்திலுள்ள ஒரு முஸ்லிமான மனிதன் தன் ஜென்மங்கடைத்தேறத் தக்க பாதையிலாக வேண்டி காமிலான ஷெய்கிடத்தில் உபதேசம் பெற நாட்டங்கொண்டு தன்நகர் நீங்கி பரதேசியாகிக் காடு மலைகளெல்லாஞ் சுற்றி வரும்போது சற்ஹந்தி ராஜ்ஜியத்தின் காட்டின் தெருக்களில் ஒரு மரத்தில் ஒரு பற்கொம்பை ஒடித்துத் தன்பொக்கிஷத்தில் அமைத்து மறைவாய் வைத்துக் கொண்டு இப்பற்கொம்பை வெளியாக்கி வித்து அதைத் தழைக்கச் செய்பவர்யாரோ, அவர் தான் மெய்குரு; அவரிடத்தில் நாம் முரீதென்கிற உபதேசம் பெறவேண்டு மென்ற யெண்ணத்துடன் சமர்கந்தி இராஜ்ஜியமெல்லாம் சுற்றிப் பார்த்தும் அவரின் எண்ணத் தின்படி ஓர் ஆசானைக் காணாமையால் மிகுந்த கவலையுற்று இந்து தேசத்திலாகி எங்குஞ் சுற்றி விசாரணை செய்ததில் ஹலரத் செய்யிது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களின் அதிக காரணங்களை கேள்வியுற்றுச் சந்தேக மனத்தாகி நாகையை அடைந்து ஹலரத் ஆண்டவர்களின் சன்னதியில் வந்து அவர்களின் பாதம் பணிந்து, மிகுமரியாதையோடு கைகட்டி நின்றார். இவரை ஹலரத் ஆண்டவரவர்கள் பார்த்ததும் புன்னகை செய்து அம்மனிதனை நோக்கி, ஓ! சந்தேகமுற்ற மனத்தனே! உன்பொக்கிஷத்தில் அமைத்திருக்கின்ற பற்கொம்பை வெளியி லெடுத்து வாவென்றார்கள். அம்மனிதன், அதை கேட்டதும் ஆச் சரியமடைந்து மனமகிழ்வுடன் நமதெண்ணத்தின் படிக்குள்ளவர்களி வர்கள் தாமென்றெண்ணி, அப்பற்கொம்பை யெடுத்து ஹலறத் ஆண்ட வரவர்களின் மலர்க்கரத்தில் அளித்தார். ஹலறத்தவர்கள் தங்கள் சிறப்பானகையினுல் அப்பற்கொம்பைவாங்கி, ஒளி விலங்கிய வாயில் வைத்து சுவைத்து தந்திசுத்தி செய்த பின்னர், நிலத்தின், கண் ஊன்றி, தாங்கள் ஒலுச் செய்து மீதிய தண்ணீரை அதன் பேரில் தெளித்து ஒலுவுக்கு நீர் கொளுங் கலசத்தைக் கொண்டு அக்கோல் மறைய மூடி அம்மனிதனை நோக்கி இன்றிரவில் நீ இக்கலசத்தில் உன் சென்னியை வைத்து சறுகாதுறங்கிக் காலையிலெழுந்து கலசத்தை நீக்கிப் பாரென்றுரைத்து விட்டு தங்களிருப்பிடத்தி லாகினார்கள். அம்மனிதன் ஆண்டவரவர்களின் உத்தரவின்படிக்கு அக்கலசத்திற் தன் தலையை வைத்துச் சறுகாமல் நித்திரை செய்து சூரியனுதிக்கும் போதெழுந்து அக்கலசத்தை நீக்கிப் பார்க்கும்போது அத் தந்தப் பற் கொம்பு தழைத்து பசிய நிறத்துடன் முக்கவரிட்டிருப்பதைக் கண்டு,

ஆனந்தம் பொங்கி ஓடோடியும் வந்து ஆண்டவரவர்களின் பாதம் பணிந்து ஆண்டகையே! என்னாட்டம் நிறைவேறிற்று. தாங்கள் எனக்குபதேசஞ் சொல்லி இரட்சிக்க வேண்டுமென்று மன்றாடி நின்றார். ஹலரத்து ஆண்டவரவர்கள் கிருபை கூர்ந்து தங்கள் திருச்சமுகத்தி லழைத் திருக்கிக் கையைப் பிடித்து முரீது கொடுத்து நற்கதி சேர்த்து வைக்கின்ற உபதேசத்தைப் புகட்டினார்கள். அம்பட்டனிதன் உபதேசம் பெற்று நிர்ணயம் தயாளம் உறுதியுண்மை இரகசியப் பொருள் இவை போலொத்த அறிவுகளெல்லாம் நிறைந்த மனத்தராகி வணக்கத்தில் தரிப்பட்டு மிருந்த மேல்பதவியை அடைந்தார். அப்பற்கொம்பு தழைத்துப் பெரிய மரமாகி நாளது வரையில் நாகூர் தறுகாவிற் குள்ளிருக்கின்றது. அம்மரத்தின் இலை தோல், இவைகளைக் கொண்டு அநேகரின் நாட்டங்கள் நிறைவேறி வருகின்றன. அவை எவ்வித பிணியை தீர்க்கவும் அருமருந்தாயிருந்தன.

மணம் பொருதின சரித்திரம்.

ஹலரத் செய்யிது மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் சிறப்புடன் நாகையில் வசித்துக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களை நோக்கி மகனே! உமக்கு விவாகஞ் செய்ய நாடியிருக்கின்றே னென்றார்கள். ஹலரத் யூசுபு சாஹிபவர்கள் தங்களின் வறுமையை யெண்ணி நாம் இரவைக்கு கொளுத்திவைக்கும் விளக்குக்கும் வகையற்றவர்களா யிருக்கிறோமே என்று சொல்லி விவாகச் சொல்லை மறுத்தார்கள். அதைக் கேட்ட ஆண்டவரவர்கள் யூசுபே! நான் நாடிய நாட்டத்தை நீர் மறுக்க வேண்டாம். எல்லாக் காரியத்திலும் ஆண்டவனை முன்னிட்டுக் கொள்ளும், உம்முடைய முதுகந் தண்டில் ஆறு ஆண் சிசுவின் கருவும் இரண்டு பெண் சிசுவின் கருவு முண்டா யிருக்கின்றன. அவைகள் உலகத்தில் வந்துதித்து வாழும் போது எனக்காகத் தேசங்க டோருமிருந்து வரும் காணிக்கைகளை அவர்களை ஆண்டவனுடைய கட்டளைப்படி கையாட்சி செய்ய வேண்டும். அவ்வாறாக ஆண்டவனிடத்தில் வரம் பெற்றிருக்கின்றேன். ஆனதால், என் சொற்கிசைந்து விவாகம் செய்துக் கொள்ளு மென்றார்கள். ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் பாவா ஹலரத் ஆண்டவரவர்களின் சொல்லுக் கிசைந்து சம்மதித்து கொண்டார்கள். பிறகு ஒரு நாள் ஹலரத் மீறான் சாஹிபு

ஆண்டவரவர்கள் ஒரு வெள்ளிக் கிழமை ஜும்ம ஆவுக்கு பிறகு அந்தி நேரத்தில் ஊருலாவ நாடித்தனியே புறப்பட்டு மேலை வாஞ்சியூர் வீதி வழியே செல்லும் போது, அங்குள்ள ஒரு தாமரைத் தடாகத்தில் அரம்பையர்களைப் போன்று இளவாலிபத்தையுடைய இரண்டு பதுமினிப் பெண்கள் நீராடுவதைக் கண்டு ஹலரத்தவர்களின் உள்ளத்தில் இப்பெண்களில் மூத்த பெண்ணை நமது மகனுக்கு மணமுடிக்க வேண்டுமென்றெண்ணிக் கொண்டு அங்கு நின்றவர்களிடத்தில் இப்பெண்கள் எவ்விடத்திலுள்ளது? இப்பெண்களின் தகப்பன் யாரென்று வினவினார்கள். அங்ஙனம் நின்றவர்கள் ஹலரத் ஆண்டவர்களை பணிந்து ஆண்டவர்களே ! இப்பெண்களின் தந்தையார் எமனிலுள்ள வர்த்தகர், ஹலரத் ஷஹீதே கர்பலா இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பேரர், இமாம் ஜஃபர் சாதிகு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மறபிலுள்ளவர்; இங்கு வந்துறைந்து இரண்டு கப்பல் வைத்துப் பற்பலவித வர்த்தகம் செய்கின்றார். அவரின் பேயர் காஜா மகுதூம் சாஹிபென்றும் அவரின் வீடு இன்ன விடத்திலிருக்கிறதென்றும் இப்பெண்களில் மூத்த பெண்ணுக்கு சுஹறா பீவி யென்றும் சிறிய பெண்ணுக்கு சுல்தான் பீவி யென்றும் பெயரிட்டழைக்கின்றார்களென்று சொல்லினார்கள். அது கேட்டு ஆண்டவரவர்கள் மனமகிழ்ச்சியுடன் நடந்து காஜா மகுதூமுடைய வீட்டிற் சென்று அவரெங்கென்று வினவிய போது அம்மனையிலுள்ளவர்கள் இவ்வீட்டின் அதிபர் காஜா மகுதூம் அவர்கள் வெளியில் போயிருக்கின்றார்களென்று விடை பகர்ந்தார்கள். அதற்கு ஹலரத் ஆண்டவரவர்கள், காஜா மகுதூம் இடத்தில் நமக்குச் சில மங்கள வாக்கியம் பேசவேண்டியதுண்டு, அவர் வந்தால் அவரை நம்மிடத்திற்கு வரச் சொல்லுங்களென்றுரைத்து விட்டு ஹலரத்தவர்கள் திரும்பி தங்களிருப்பிடம் போய் சேர்ந்தார்கள். அந்த காஜா மகுதூ மென்பவர் வெளியி லிருந்து வீட்டிற்கு வந்த போது அங்குள்ளவர்கள் ஹலரத்தவர்கள் வந்ததும் மங்கள வாக்கியமுண்டென்று மொழிந்து தங்களிடத்திற்கு வரச் சொன்னதையும் சொன்னார்கள். அதைக் கேட்ட காஜா மகுதூ மவர்கள் தனக்குள் யோசித்து ஆராய்ந்து முன்பிருந்தவர்களைப் பார்த்து மீறுன் சாஹிபு ஆண்டவர்கள் நம்மை யழைத்த காரியம் நமக்கு விளங்கி விட்டது. அவர்க ளெடுத்து வளர்த்த மகனுக்கு என் மகளை மண முடிக்க நாடியிருக்கின்றார்கள். அவர்களுக்கும் நமக்கு மிடையில் சம்பந்தம் ஒத்து வாராது. அவர்கள் பகிருக யிருக்கின்றார்கள். நாம் செல்வரா இருக்

கின்றோம். நமது புத்திரி பகீரிடத்தி லிருந்து ஜீவனம் செய்வதற்கு நாம் சம்மதித்த போதிலும், இந்நகரார் சம்மதிக்க மாட்டார்க ளென்று பலவாறு பகர்ந்துக் கொண்டிருக்கும் போது, ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் அனுப்பி வைத்த தூதர் பகீரொருவர் வந்து காஜா மகுதூமைக் கண்டு, கனவானே! எங்களாண்டவரவர்கள் தங்களின் புத்திரசிகாமணி ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு அவர் களுக்காக உமது மூத்த புதல்வி சுஹறா பீவியை மாலை சூட்ட உமக்கும் பிரிய மிருக்கின்றதா? வென்று கேட்டு வரச் சொன்னார்க ளென்றார். அதைக் கேட்ட காஜா மகுதூமவர்கள் முன் பேசிக் கொண்டிருந்த துடுக்கான வார்த்தையை சொல்லி என் புத்திரியை பகீருடைய மக னுக்கு மணஞ் செய்யப் பொருந்தா தென்று வந்த பகீரிடத்திலும் சொன்னார்கள். அந்த பகீர் கேட்டு வந்து ஹலரத் ஆண்டவர்க ளிடத்தில் காஜா மகுதூம் சொன்ன வசனங்கள் யாவையும் ஒன்றும் விடாமல் அறிவித்தார். அவ்வசனங்களை ஹலரத் அவர்கள் கேட்ட தும், ஹலரத்தவர்களின் மனம் நொந்ததால் கோபம் கொண்டு, பகீ ருடைய பிள்ளை யிடத்தில் சீமானின் குடும்ப மடங்கலும் வந்து வாங்கி தின்னச் செய்யும் வல்ல நாயனொருவனுண்டென்று சாபித்தார்கள். பின்னும் ஹலரத் மீரான் சாஹிப் ஆண்டவரவர்கள் காஜா மகுதூம் பேரில் கோபமாகி அல்லாஹு தஆலா தூயவன், மனிதர்களின் துவக்கமும் ஒடுக்கமும் வறுமை யென்றிருக்க, அதை மறந்திருக்கின் றது என்ன புதுமைதான் என்றும் மொழிந்தார்கள்.

இன்னும் அல்லாஹு தஆலா அவனின் திருக்கலாமில் மொழிந் திருக்கிறான். (வகுல்லுஹும் ஆத்தீஹி யௌமல் கியாமத்தி பர்தா) என்கிற ஆயத்தின் படி நடுத்தீர்ப்பின் நாளில் ஆண்டவனின் சமுகத் தில் மனிதர்கள் தனித்தவர்களாய் வருவார்கள் என்று வந்திருக்கிற படியால் வறுமையே திட்டமாயிற்று. நபீஇல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்னதாக அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்: பகீருகளாகிறவர்கள் சீமான்களைக் காண அதிகப் பதவியைப் பெற்றவர்கள், சீமான்களுக்கு ஐந்நூறு வருடத்திற்கு முன் பகீருகள் சுவர்க்கம் புகுவார்க ளென்று வந்திருக் கின்றது. ஆனதால், பகீருகள் நற்செயலையுடையவர்களா யிருப்பார்கள். இன்னம் உம்றுவு, புகுறுவு என்கிற இரண்டு சொல்லும் இராஜன் பகீறு என்பதாகும். இவ்விரு சொல்லின் அட்சரங்கள் பேதகமா யிருக்கினும்

முடிவின் தொனி ஒத்துமையா யிருக்கின்றதுந் தவிர இராஜனுக்குரிய உம்ருவு வென்ற சொல்லின் முந்திய இரண்டு விரு அட்சரங்களின் இலக்கமோ (41). பகீறுகளுக்குரிய புகருவு வென்ற சொல்லின் முந்திய இரண்டு அட்சரங்களின் இலக்கம் (180). இராஜனுக்குரிய நாற்பத் தொன்றையும் இந்த நூற்று என்பதில் தள்ளிவிடில் பாக்கி (139) ஆகுமானதால் இராஜர்களில் நின்றும் பகீறுகள் நூற்று முப்பத்தொன்பது பங்கு பதவியி லுயர்ந்தவர்களாகின்றார்கள். இஃதன்றி அந்த நூற்று முப்பத்தொன்பதையும் அட்சரமாக்கினால் லக்து என்ற சொல்லாகும். இச்சொல்லின் பயனுணர்கில் அரசர்கள் எல்லா நாளும் இருதலத்திலும் நற்பேறு பெற்றுக் கொள்ளும் பொருட்டு எங்குந்தேடி யெடுக்கும் பொருள் பகீறுகளா யிருக்கு மென்றதாயிற்று.

இன்னமும் நமது நாயகம் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவாய் மலர்ந்து (அல்பக்று பக்ரீ வல்பக்று மின்னீ) மிடிமையே என்னுடைய பெருமையா யிருக்கும். பெருமையோ, வென்னிடத்தி லுள்ளவைகளி லொன்றென்றார்களென்று. இங்ஙனம் தெய்வ மொழிகளுக் கேற்ப சகல காரியங்களிலு மேன்மையுடைய என்னை காஜா மகுதூம் பகிரென்று பழித்தாரோ? வென்று மனம் நொந்து பலசாப வாக்கியங்களும் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் நாவில் நடந்து விட்டது. ஹலரத் ஆண்டவர்களின் இக்கோபாக்கினியில் ஒரு திவலையானது காஜா மகுதூ மவர்களைத் தாக்கினதால் அவர்களின் கப்பல்களில் பெரிய கப்பல் கடலிலாழ்ந்த தென்றும், மற்றொரு சிறிய கப்பல் கரையிலேறிச் சிதைந்த தென்றும், காஜா மகுதூம் அவர்களுக்கு செய்தி கிடைத்துத் துக்கப்பட்டிருக்கும்போது மேலும் அன்றிரவிற்றானே அவர்களில் மூத்தசெல்வி சுஹருபீவியென்கிற பெண்ணுக்குக் கடூரமான ஜுரங் கண்டு மிகுந்த துன்பமடைந்து அச்ஜுரத்தின் கொடுமையினால் கண் மருண்டு உடல் தளர்ந்து நாவுலர்ந்து மிகவருந்தி அல்லாஹு தஆலாவின் கட்டளைப் பிரகாரம் அப்பெண் மவுத்தை யனுபவித்தாள். அது கண்டு காஜா மகுதூம் என்பவர்களேங்கிப் பாதலித்து முகங்கூம்பி மனம் பதறி உடல் தளர்ந்து கவலை யென்னுங் கடலிலாகி இப்பிழைகள் நமக்கு வந்த தென்றெண்ணி அழுதுக் கொண்டிருந்தார்கள். அந் நகரார் வந்து கூடி காஜா மகுதூம் அவர்களை ஆற்றுதல் செய்து இச்சம் பவங்கள் யாவும் தாங்கள் ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவர்களின்

சொற்களுக்கிசையாது அவர்களைப் பழித்த வினை இவ்வகை செய்ததென்றுரைத்து அப்பெண்ணின் பையித்தை எடுத்து அடக்கம் பண்ணிவிட்டு சென்றார்கள்.

கவலையுற்றிருந்த காஜா மகுதூமவர்கள் தன்னுள் ஆராய்ந்து நமது செல்வத்தின் இறுமாப்புக் கொண்டு ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்களை மதிக்காமல் அவர்களுக்கு நாம் விரோத வார்த்தைகள் சொன்னதினால் இவ்வினை நமக்கு வந்ததென்றஞ்சி இன்னும் பெருங் கேடு விளையுமுன்பே ஆண்டவரவர்களை மன்றாடி மனம் பொறுக்கச் செய்வதே நலமென்றெண்ணித் தங்களின் இளைய மகளார் செய்யிதத்து சுல்தான் பீவியவர்களை அழைத்துக்கொண்டு ஆண்டவரவர்களின் திருச்சமூகத்தில் விட்டு ஆண்டவரவர்களின் பாதம் பணிந்து கைகட்டி மிகு மரியாதையுடன் நின்று கண்களிரண்டிலும் தாரை தாரையாய் நீரோட அழுது ஆண்டவரவர்களைப் பார்த்து, ஆதிநாயனின் அருள் தங்கிய வொலியே! காரணப் பொக்கிஷமே! கல்பறியுந் துரையே! பூரண மதியமே! பொற்பதி நிதியமே! யென்று பலவாறு புகழ்ந்து அடியேன் அறிவின்மையாற் செய்த பெரும் பிழையைப் பொறுத்து இரட்சித்து இப்பெண்ணைத் தாங்கள் நினைத்தப்படி தங்கள் குமாரசிகாமணிக்குக் கல்யாணஞ் செய்தருள்க வேண்டுமென்று மன்றாடினார்கள்.

காஜா மகுதூம் அவர்களின் ஆழ்ந்த துக்கத்தை ஆண்டவரவர்கள் பார்த்ததும் மனதிரங்கியும் முந்தின வருத்தம் நீங்காமையால் காஜா மகுதூமவர்களை நோக்கி உமது மனம்போல் உமது இளைய மகளுக்கும் எனது கண்மணி மகனார் ஷெய்கு யூசுபுக்கும் வல்ல நாயன் கிருபையினால் கல்யாணம் பின்னர் நடத்தலாம், நீர் உமது புத்திரியுடன் உமது மனைபோய் சேருமென்றார்கள். அதுகேட்டு காஜா மகுதூ மென்பவர்கள் மனத்துயர் நீங்காது அச்சமுற்றவர்களாகவே தங்கள் செல்வியருடன் வீடுபோய் சேர்ந்தார்கள்.

தருணைச்சேரி புக்கிய சரித்திரம்.

ஹலரத் சுல்தான் ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவர் அவர்கள் நாகையில் மிகு நலத்துட னிருக்கும்போ தொருநாள் தருணைச்சேரிக்குப் போகவேணு மென்கிற எண்ணங்கொண்டு ஆண்டவரவர்கள் தனது புத்திரர் ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹி

பவர்களை பகீறுகளுக் கெல்லாம் தலைமையாக்கிவைத்து விட்டுத் தனித் தெழுந்து நாகைபட்டிணத்திற்கு சென்று பத்தாவியாவுக்குப் பிறை யாணத்திற்கு ஆயத்தமாயிருந்த நசாறுவுடைய கப்பலில் பிரயாணப் படுவதற்காக அக்கப்பல் அதிகாரியிடத்தில் வாக்குப் பெற்றுக்கொண்டு அக்கப்பல் பிரயாணப்பட்ட போது அக்கப்பலிலேறினார்கள். அக் கப்பலின் மாலுமி நங்கூரமெடுத்து பாய் விரித்துப் பத்தாவியாவிற்கு முஜூரா வைத்து சென்றான். சில நாளைக்குப் பின் அக்கப்பலையுடை யவன் மாலுமியை நோக்கி இப்போது நமது கப்பல் எந்த ஊரை நோக்கி செல்லுகிறதென்று கேட்டான். அந்த மாலுமி சூரியனை அளந்து கணக்கிட்டுப் பார்த்து ஆச்சரியமடைந்தவராகி மரக்கலக்காரனை நோக்கி ஐயா நாம் பத்தாவியாவுக்கு முஜூராவைத்து சென்றோம். காற்றும் நீரும் முஜூராவுக்கு ஒத்து நின்றது. ஆனால் இப்போது பார்க்க இவ் வளவு நாளாகியும் நமது கப்பல் நாம் நாடிய துறைக்குச் செல்லாமல் தருஹச் சேரியை நெருங்கியோடு கின்றது. இஃதென்னகாரணமோ தெரியவில்லை யென்றான். அதைக்கேட்டு இதென்ன ஆச்சரிய மென்று எல்லோரும் ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது ஹலரத் கஞ்ஜஸ வாயி ஷாஹூல் ஹமீது ஆண்டவரவர்கள் அந்நசாறுக்களின் பாஷை ஆண்டவர்கள் அறியாதவர்களாயிருந்தும் அல்லாஹூ தஆலாவின் தத்துவங்கொண்டு அப்பாஷையை விளங்கி அறிந்து அந்நசாறுக்களை நோக்கி ஐயா நீங்கள் கப்பல் திசைதப்பி யோடுகிறதென்று மயங்காதீர் கள். இப்போதுங்கள் கப்பலோடுந் துறைக்குத்தானே நான் செல்ல வேணும். நீங்கள் அதே முஜூறவில் கப்பலைக் கொண்டு சென்று என்னை அத்துறையிலிறக்கி விட்டு நீங்கள் பத்தாவியாவுக்கு செல்லுங்களென் றார்கள்.

அதுகேட்டந்த நசாறுக்களில் சிலர் இவர்கள் நமது பாஷையை ஒரு நாளுமறியாதவர்களாயிருக்க நம்முடைய பேச்சை அறிந்து அதற்கு பதில் சொன்னார்களே! உண்மையாக இவர்கள் பெரியோர்கள் தான்; இவர்கள் மார்க்கமும் உண்மையானதுதான்; என்று நிச்சயித்து ஆண்ட வரவர்களின் திருக்கரத்தைத் தொட்டுக் கலிமாச் சொல்லி இஸ் லாத்தை தழுவினார்கள். அப்பால் அம்மரக்கல அதிகாரி ஆண்டவரவர் களின் சொல்லிற்கிசைந்து தருஹச்சேரியை நெருங்கி முஜூராவைத்து கப்பலை நடத்தி தருஹச்சேரி துறைமுகம் பிடித்து ஹலரத் ஆண்டவா வர்களை கரையி லிறக்கி விட்டு மீளவுங் கப்பலைப் பாயெடுத்து வோடி வெகு சிக்கிரத்தில் பத்தாவியாவிற் போய்ச் சேர்ந்தான்.

வேறொரு சொற்படி, ஹலரத் ஆண்டவர்கள் அக்கப்பலிலேறி மறைவாக இருந்ததாயும் அந்நசாருக்கள் கப்பல் முஜ்ராத்தப்பி ஓடு வதைப்பற்றி புதுமையாகப் பேசிக்கொள்ளும்போது வெளியானதாக வும் அந்நசாருக்கள் முந்தியும் ஆண்டவரவர்களைத் தெரிந்தவர்களான தினாலே இவர்களைக்கொண்டு ஆச்சரிய மடைந்ததாகவும்ஹலரத் தவர் கள் இஷ்டப்படி தங்களை தருணைச்சேரியில் இறக்கி விட்டுப் போன தாகவும் வருகின்றது.

புத்துகள் பேசிய சரித்திரம்.

ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் தருணைச்சேரியின் கரையிலிறங்கி குளிர்ந்த நிழலையுடைய ஒரு விருட்சத்தின் கீழ்மூன்று நாள் மட்டில் யாதொன்றும் புசிக்காமல் நாயன் பேரில் நாட்டமாக யிருந்தார்கள். அவ்வூரார்களிற் சிலர் ஆண்டவரவர் களிடத்தில் வந்து தாங்கள் மூன்று தினமாகப் பசியாரா திருக்கின்றீர்களே! நாங்கள் ஏதும் ஒஜ்பனங் கொணர்ந்து தருகிறோம், பசியாறுங்க ளென்று வேண்டினார்கள். அதற்கு ஆண்டவரவர்கள் நீங்கள் அல்லாஹு தஆலாவுக்கு இணையாக உருவங்களைச் செய்து வைத்து வணங்கும் நீங்கள் காபிரு யிருக்கிறீர்கள்; நீங்கள் இஸ்லாமை தழுவினாலொழிய உங்களிடத்தில் உண்டி பரிமாறுகிறதில்லை யென்றார் கள். இஃதன்றி அந்நகருக்குள் ஆண்டவரவர்கள் அடிவைத்த மாத் திரத்தில் அங்குள்ள கோவில்களின் விக்கிரகங்க ளெல்லாம் தலை கீழாய் கவிழ்ந்து கிடந்தன. அவைகளைக் கண்டு அவ்வூரார் ஆச்சரிய மடைந்தார்கள்.

மேலும் அந்நகரில் ஆண்டவரவர்கள் மூன்று நாள் மட்டில் புசிப் பின்றியிருந்தும் முகவாட்ட மில்லாமல் செழிப்புற்றிருப்பதனால் இவர் கள், பெரியோர்களா யிருப்பார்க ளென்று எண்ணி அந்நகரிலுள்ள கூன், குருடர், செவிடர், முடவர், மேகரோகர் முதலிய பல வியாதி யஸ்தர்களும் ஆண்டவரவர்கள் பால் வந்து பாதம் பணிந்து எங்கள் பிணிகளை நீக்க வேண்டு மென்று கெஞ்சி நின்றதால் அவர்கள் பால் ஆண்டவர்கள் மனதிரங்கி அல்லாஹு தஆலாவிடத்தில் துஆக் கேட்டு அப்பிணிகளை யெல்லாம் நீக்கி வைத்தார்கள். அப்பிணியாளர்க ளெல்லாம் சுகம் பெற்ற போது அந்நகரார்க ளெல்லாம் சந்தோஷமுற்று புதுமையாகி அந்நகரின் இராஜனிடத்திற் சென்று இக்காரணங்களை

GT 1058 N55

எல்லாம் அறிவித்தார்கள். இராஜன் ஆண்டவர்களின் காரணங்களைக் கேட்டு தன் மந்திரிகளி லொருவனை யனுப்பி ஆண்டவர்களை அழைத்துக் கொண்டு வரச் சொன்னான். அரசனுடைய கட்டளையை மேற்கொண்டு அம்மந்திரி ஹலரத் ஆண்டவரவர்கள் பால் அடைந்து ஆண்டவரவர்களே! தங்களை எங்கள் அரசன் அழைத்துக் கொண்டு வரச் சொன்னார் என்றான். அதைக் கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் உங்கள் அரசனுக்கு மெனக்கு மிடையில் என்ன காரிய மிருக்கின்றது? உங்கள் அரசனோ திரவிய சம்பத்துள்ளவர். நானோ அதில் விருப்ப மில்லாதவன். ஆனதால் நான் வருகிறதில்லையோ வென்றார்கள். அதைக் கேட்டு அம்மந்திரி மீண்டு போய் அவ்வரசனிடத்திற் ஹலரத் ஆண்டவரவர்கள் சொன்ன வார்த்தைகளைச் சொன்னான். மந்திரிச் சொன்ன சொல்லை அரசனோ கேட்டு அது சரிதான், அவர்கள் நம்மிடம் வரமாட்டார்கள். நாமே அவர்களைப் போய் காண வேண்டு மென்று சொல்லி அரசனே தனது சேனாதிபதிகள் புடைசூழ எழுந்து சென்று, ஆண்டவரவர்கள் பால் அடைந்து ஆண்டவரவர்களை அடுத்து நின்று சாஷ்டாங்கஞ் செய்து வணங்கி கைகட்டி நின்றான்.

ஹலரத் ஆண்டவர்கள் அவனை நோக்கி நீ யிங்கடைந்த காரிய மென்ன வென்று வினவினார்கள். அதற்கரசன் மிகு தாழ்மையோடு தாங்கள் பெரிய நாதாவானதினாலே தங்களை தெரிசித்து தங்கள் கருணை பெறுவதற்காக நான் இங்கு வந்தே னென்றான். அது கேட்டு ஹலறத்தவர்கள் அவ்விராஜனைப் பார்த்து நீயும் உன் குடிகளும் எந்த மார்க்கத்தி லிருக்கின்றீர்க ளென்று கேட்டார்கள். அதற்கு இராஜன் புத்தை வணங்குகிற மார்க்கத்தி லிருக்கின்றோ மென்றான். அதைக் கேட்டு ஹலரத் தவர்கள், அவ்விக்கிரகங்கள் நீங்கள் நாடிய கருமங்களை முடித்துத் தருமோ வென்று வினவினார்கள். இராஜன் ஆமென்றான். அஃதெவ்விதமாய் நீங்கள் நாடிய கருமங்களை பூர்த்தி செய்யும் என்று கேட்டார்கள். அரசன் நாங்கள் நாடிய காரியத்தை எங்கள் சுவாமி கனவில் வந்து எங்களுக்கு அறிவிக்கு மென்றான். அதற்கு ஹலரத் ஆண்டவரவர்கள் நல்லது, நீங்கள் இவ்விரவிலே ஏ[illegible]த்தை நாடிக் கொண்டு நித்திரை செய்யுங்கள். அவ்வி[illegible] பதை காலையி லெனக்கு வந்து சொல்லுங்[illegible]ளென்றார்கள். அ[illegible] கேட்டு அரசன் முதலிய யாவர்களும் ந[illegible] விடை பெற்றுக் [illegible]ண்டு போய் ஒவ்வொ[illegible] ஆண்டவரவர்களிடம் வருடம் ஒவ்வொரு காரியங்களை நினைத்துக் [illegible]ண்டு நித்திரை செய்தார்[illegible]

110689

கள். அன்றிரவில் அக்காபிரீன்களில் ஒருவருக்கும் கனவில் யாதொன்றும் அறிவிக்கப்படவில்லை. அதனால் அவர்கள் விழித்துக் கவலையுற்று இராஜன் முதலியவர்க ளெல்லாம் ஹலரத் தவர்களிடத்திற்கு வந்து அடிபணிந்து வந்தனஞ் செய்து ஆண்டவர்களே! எப்போதும் நாங்கள் நாடிய காரியங்களை எங்கள் சுவாமிகள் கனவில் வந்து ஆகும் ஆகாதென்றறிவிப்பது வழக்கம்; இன்றிரவு எங்களிலொருவருக்காவது கனவில் யாதொன்றும் அறிவிக்கப்படவேயில்லை. அதனால் நாங்களாச்சரிய மடைந்திங்கு வந்தோ மென்றார்கள்.

அதைக் கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் அக்காபிரீன்களைப் பார்த்து நானுங்கள் சுவாமியை என் சமுகத்தி லழைத்துப் பேசிவித்தால் நீங்களெல்லோரும் என் சொல்லுக்கு வழிப்படுகிறீர்களா? என்றார்கள். அதைக் கேட்டு அவ்வரசன் முதலியவர்கள் யாவரும் ஆமென்று ஒப்புக் கொண்டார்கள். ஹலரத் ஆண்டவரவர்கள் அல்லாஹு தஆலாவுடைய தத்துவங் கொண்டு புத்துகள் யெல்லாம் சமுகத்தில் வரவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். உடனே அங்குள்ள எல்லா ஆலயங்களிலும் உண்டான விக்கிரகங்க ளெல்லாம் உருண்டு ஆண்டவரவர்களின் திரு சமுகத்தில் நின்று சாஷ்டாங்கஞ் செய்து வாய் திறந்து, ஆண்டவர்களே நாங்கள் சர்வதயாபரனின் படைப்புகளில் உள்ளவர்கள். எங்களை மலையிலிருந்து இவர்களெடுத்து வந்து வெட்டி கொத்திச் சுரூபஞ் செய்து எங்களைப் படைத்த நாயனுக்கு எங்களை யிணையாக வைத்துப் புட்பவகை சூட்டித் தீபதூபங் காட்டி ஆடையாபரணங்கள் பூட்டி ஓரிடத்திலெங்களை நாட்டி வணங்கி அவர்கள் பாவியாகிறதுந் தவிர எங்களையும் பாவியாக்குகின்றார்கள். ஆனதால் ஆண்டவர்களே! தங்களின் பாதம் பற்றிய எங்கள் மீது தாங்கள் அன்பு வைத்து ஆண்டவனின் முனிவு வாராதபடி எங்களை இரட்சித்தருள வேண்டுமென்று மன்றாடி நின்றன. தாங்கள் தெய்வமென்று வணங்கி வந்த விக்கிரகங்களே இவ்விதம் சொன்னதைக் கேட்ட அந்நகர் அரசனும், மற்றவர்களும் கண்டு ஆச்சரிய முற்று புதுமையாகி ஹலரத் ஆண்டவரவர்களை நோக்கி, "ஆண்டவர்களே! நாங்கள் உண்மையை விளங்கிக் கொண்டோம். இனி, தாங்கள் எங்களுக்கு என்ன புத்தி மதியை புகட்டுகிறீர்களோ அதை எற்று நடக்க சித்தமாய் கார்த்து யிருக்கிறோம்" என்று பணிந்து சொன்னார்கள்.

அதைக் கேட்டதும் ஹலரத் ஆண்டவரவர்கள் சந்தோஷ முற்று அவர்களை நோக்கி, சகல வஸ்துவையும் படைத்து அழிக்கின்ற ஏக

பராபர வஸ்துவாகிய அல்லாஹு தஆலா ஒருவனே நமக்கு கடவுளென்றும், அவனால் அனுப்பப்பட்ட அவனது திருத்தூதர் முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே யென்றும், மனதில் உறுதிகொண்டு கலிமாச் சொல்லி இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவுங்கள் என்றார்கள். இவ்வரிய திருவசனங்களை நகர அதிபதியும், மற்றவர்களும் கேட்டு ஹலரத் ஆண்டவரவர்களின் முபாரக்கான திருகரத்தைப் பற்றி "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி" என்னும் திருக்கலிமாவை யோதி இஸ்லாத்தைத் தழுவி நற்பதிவிக்குரியவர்களானார்கள்.

தர்ஜுச் சேரியிலுள்ள புத்த மதஸ்தர்களனைவரும் இஸ்லாமான பின் ஹலரத் ஆண்டவரவர்கள் அவர்களுக்கு மார்க்க விதிவிலக்குகளையும் சட்ட திட்டங்களையும் கற்பித்துக் கொடுத்து, அந்நகரிலுள்ள கோவில்களை யெல்லாம் இடித்து பள்ளி வாசல் களாக கட்டும்படி கட்டளை செய்து அதுபோல் கட்டிவிட்டு அப்பள்ளிகளுக்கு கதீபு, மோதீன் முதலியவர்களையும் நேமித்து விட்டு ஆண்டவரவர்கள் ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வொரு நாள்போய் குத்துபா ஓதி ஜனங்களுக்கு வேத விதிவிலக்குகளை எடுத்துக்காட்டி, மார்க்க பிரசங்கஞ் செய்து வந்தார்கள். இவ்வாறு அவ்வூரில் ஒரு வருஷம் வரை தங்கி யிருந்தார்கள்.

அப்பால் ஒரு நாள்ஹலரத் ஆண்டவரவர்கள் தர்ஜுச் சேரியின் அரசரையும் மற்றுமுள்ள குடி ஜனங்களையும் அழைத்து, நான் குடியிருக்கும் என்னுடைய ஊருக்கு பிரயாணமாக நினைக்கிறேன். நீங்கள் யாவர்களும் சுகமே வாழுங்களென்று சொன்னார்கள் இவ்வசனங்களை அவ்வூரார்கள் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டு மனங்கலங்கி ஆண்டவர்களே! நாங்கள் நரகத்தில் கிடந்து உழல இருந்தவர்களை எங்களை அங்ஙனம் போகாமல் நற்கதிக்காளாக்கி சுவர்க்கத்துக்கு வழிகாட்டி தந்த தாங்கள் எங்களை விட்டுப் போக காரணம் என்ன? நாங்கள் ஏதும் குற்றங் குறைகள் செய்து விட்டோமோ; அப்படி ஏதுஞ் செய்திருந்தாலும் தாங்களே மன்னித்தருள வேண்டும் என்றார்கள். அதற்கு ஆண்டவரவர்கள் அல்லாஹு தஆலாவின் நாட்டம் நான் இங்கேயே தங்கியிருக்க வேணுமென்று என்பதல்ல, நான் பல நகரங்களையும் சுற்றிக்கொண்டு என் புத்திரரும் பகீர்களுமிருக்கு மிடத்திற்கு போக வேண்டு மென்றார்கள். இதைக் கேட்டு அவ்வரசன் முதலியவர்களெல்லாம் எங்களின் பாவத்தைப் போக்கி இரட்சித்த நாயகமே! தாங்கள்

உத்தரவு செய்தால் நாங்கள் சில கப்பல்களை தயார் செய்துக் கொண்டு போய் தங்கள் புத்திரரையும், பகிர்களையும் இங்கு அழைத்து வந்து சேர்க்கிறோம். தாங்கள் ஹயாத்தா யிருக்குங் காலமெல்லாம் எங்களை விட்டு அகலாதிருக்கும்படி கேட்கிறோம்; தாங்கள் வபாத்தை யனுப வித்தாலும், இவ்விடத்திலேயே அடக்கமாக வேண்டும்; எங்கள் கால முழுவதும் தங்கள் பணிவிடையிலேயே தொண்டு செய்து கழிக்க வேண்டும். நாங்கள் தங்களிடத்தில் பெற்ற புண்ணியங்களைப் போல் எங்கள் சந்ததிகளும் பெறவேண்டும். ஆதலால், தாங்கள் இந்நகரை விட்டுப் போக வேண்டாமென்று பாதம் பணிந்து கெஞ்சி மன்றாடி கேட்டார்கள்.

அவர்களின் வேண்டுதலை கண்ணுற்று ஆண்டவரவர்கள் புன்னகை செய்துக் கொண்டு பின்னும் இரண்டு வருடம் அவ்விடத்தில் தங்கி யிருந்தார்கள். பின்னர், ஒரு நாள் அந்நகரத்தரசனையும் குடிபதி களையும் அழைத்து வைத்துக்கொண்டு நான் நாளையத்தினம் வபாத்தை அனுபவிக்கப் போகிறேன், நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடி என்னை நீராட்டி கபன் செய்து நல்லடக்கம் பண்ணுங்களென்று சொல்லிவிட்டு இன்னும் அவர்களுக்கு சொல்ல வேண்டிய நல்லறிவுகளைச் சொல்லி அனுப்பினார்கள்.

இத்துக்க வசனத்தைக் கேட்ட அவர்களெல்லாம் மிகுந்த கவலை யுற்று, மனஞ் சஞ்சலித்து முகம் சாம்பி அழுதுக் கொண்டு போயி னார்கள். மறுநாள் ஆனபோது ஹலரத் அவர்கள் சொன்னது போலும் அந்நகரத்தார் விரும்பியதுபோலும், வபாத்தை யனுபவித்தது போலும் உபாத்தானார்கள். அவ்வூர் அரசன் குடிகள் யாவர்களும் வந்து கூடி உண்மையாகவே ஆண்டவர்கள் உபாத்தாய் விட்டார்களென்று துக்க முற்று அழுது புலம்பி ஆண்டவர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்கு முதலியவைகளெல்லாஞ் செய்து, குளிப்பாட்டி கபனிட்டு அடக்கஞ் செய்தார்கள்.

ஆண்டவரவர்களோ மிகுந்த தத்துவம் வாய்ந்தவர்களாதலால் அம்மன் அறையை விட்டெழுந்து தாங்கள் முன்னிருந்த நாகூர் முது பக்கில் வந்து சேர்ந்து விட்டார்கள். தர்ஜைச்சேரியில் ஆண்டவரவர்கள் அடங்கின ஸ்தானத்தில் அலங்காரமான மஹறபறு ஒன்று கட்டி அதிக திரவியங் கொண்டு அதை சிங்காரித்துக் கொண்டு பிரதி வருஷங்கள் தோறும் ஆண்டவரவர்கள் பேரில் கந்தூரி யென்னும் "திருவிழா"

நடத்தி வருகின்றார்கள். அங்ககாரரெல்லாம் உண்மையாக ஆண்டவ ரவர்கள் அங்கே அமைந்திருக்கிறதாக நிச்சயித்திருக்கின்றார்கள். அது போல் அவர்களுடைய பிரார்த்தனைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின் றன; அவர்களின் காரணங்களும் அங்கே நிகழ்கின்றன. அவ்வூரார் இடத்தில் ஹலரத் ஆண்டவரவர்கள் நாகூரில் அடங்கப்பட்டிருக்கின் றார்க ளென்று சொன்னால் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறதேயில்லை.

மணம் புரிந்த சரித்திரம்.

ஹலரத் கஞ்ஜசவாயி மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் தர்ஹச் சேரியிலிருந்து முதுபக்கில் வந்து வாசஞ் செய்துக்கொண்டிருக்கும் போது மேலேவாஞ்சேரி செய்யிது காஜா மருதூம் அவர்கள் தங்கள் மனதில் ஹலரத் ஆண்டவரவர்கள் தங்கள் புதல்வர்க்கு தமது புத் திரியை மணஞ்செய்துக் கொள்வதாக சொல்லி நம்மை அனுப்பி னார்களே, அப்படிச் சொல்லி அதிகநாளாகி அதைப் பற்றி ஒன் றும் தெரிவிக்காம லிருக்கிறார்களே! அது என்ன காரணமோ தெரியவில்லையே; என ஆலோசித்து தங்கள் பந்துக்களில் சிலரையும், தங்கள் புத்திரி சுல்தான் பீவியையும் அழைத்துக் கொண்டு முதுபகுக்கு வந்து, ஹலரத் ஆண்டவரவர்களின் திருவடிகளில் பணிந்து போற்றி "ஆண்டவர்களே! பெரியோர்களை அவமதித்த பலனை நான் பெற்றுக் கொண்டேன். என் இரண்டு கப்பல்களும், மூத்த மகளும் போனது மல்லாமல் இன்னும் மிச்ச சொச்சமா யிருந்த என் ஆஸ்திகளும் நாளுக்கு நாள் அருகிக் கொண்டே வந்து விட்டன. அதனால் நான் மிகவும் பயப்படுகிறேன். ஆகையால் என் புத்திரியை தாங்கள் புத்திர சிகாமணிக்கு விவாஹஞ் செய்து கொண்டு என்னை இரட்சியுங்கள்" என்று மன்றாடிச் சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் ஒரு சுபதினத் தைக் குறிப்பிட்டு காஜா மருதூம் அவர்களைப் பார்த்து, நல்லது, இன்ன நாளில் விவாஹஞ் செய்விக்கலாம், நீங்கள் போய் உங்கள் மாளிகையை விவாகத்திற்காக அலங்கரித்துக் கொள்ளுங்க ளென்று கட்டளை பண்ணி அனுப்பினார். உடனே காஜா மருதூ மவர்கள் ஆனந்தமுற்று ஆண்டவரவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு மேலே வாஞ்சேரி சென்று இச்சுப செய்தியை தங்கள் பந்து மித்திரர்களுக்கு தெரிவித்து

தங்கள் மாளிகையை அலங்கரிக்கச் சொன்னார்கள். அது போல் மாளிகையை அலங்கரித்தார்; அவ்விவாஹத்தைக் குறித்து விவாஹ பத்திரிகையும் அச்சிட்டு பக்கத்திலுள்ள நாகப்பட்டணம், பார்ப்பானூர் முதலிய சுற்று நாடுகளுக்கும் திருமண அறிக்கை செய்யப்பட்டது. பத்திரிகையில் குறித்த சுபதினத்தன்றே எல்லாரும் மேலவாஞ்சேரி வந்து கூடினார்கள். அன்று அறுசுவை பதார்த்தங்களோடு பெரும் விருந்து ஒன்று நடத்தப்பட்டது.

அன்று மாலையான போது ஹலாத் ஆண்டவரவர்கள் மகனார் ஹலாத் செய்யிது யூசுபு சாஹிபு அவர்களை மஞ்சனமாட்டி, ஆடைகள் புனைந்து காஹூற்று நான்கு தபோதனர் பகீர்கள் புடைசூழ, தக்பீறு தஸ்பீஹு தஹ்லீலு தஃமீது சலவாத்துகள் முழங்க அழைத்துக் கொண்டு மேலவாஞ்சேரி வந்தார்கள்.

மேலை வாஞ்சேரியி லிருந்து அவ்வூரார்களும் கலியாண விருந்தாளி களும் பெருந்திரளாய் கூடி எதிர்க் கொண்டழைத்து காஜா மகுது மவர்கள் மாளிகைக்குள் அழைத்துச் சென்று, அவர் அவர்களுக்குத் தக்க ஆசனங்களில் அமர்த்தினார்கள். அதற்கேற்ற அங்கு பலவகை ஆசனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மணவாளருக்கிட்ட ஆசனத் தில் மணவாளர் அமர்ந்தார். அன்றிரவு மேலை வாஞ்சேரி முழுதும் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இவ்வித அலங்காரமான மகாசபையில் ஹலாத் ஆண்டவரவர்கள் செய்யிது காஜா மகுதும் அவர்களோடு மஹர் முதலான கட்டணங் களில் கலந்து பேசி முடிவு பண்ணிக் கொண்டு செய்யிது முஹம்மது யூசுப் சாஹிபவர்களுக்கும் செய்யிது சுல்தான் பீபி அவர்களுக்கும் நிக்காஹ் நிறைவேறிற்று. நிக்காஹ் வென்னும் கலியாணம் நிறை வேறினவுடன், அறுசுவை பதார்த்தங்களோடு விருந்தும் வெகு கெம்பீர மாய் நடந்து முடிவு பெற்றது. உடனே ஹலாத் ஆண்டவரவர்கள் மணமகன் மணமகள் இருவர்களையும் அழைத்துக் கொண்டு, முது பகுக்கு வந்து, இருவர்களையும் சேர்த்து விட்டு குடி யிருத்தாட்டினார் கள். இருவரும் மங்களகரத்தோடு சுகமே வாழ்ந்தார்கள்.

சிறு நீரைப் பாலாக்கிய சரித்திரம்.

ஹலரத் செய்யிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது ஆண்டவ ரவர்கள் தங்கள் புத்திரரும் மருமகனும் முதுபக்கில் சுகமே வாழ ஹலரத் ஆண்டவரவர்கள்பால் வந்து பாதம் பணிந்து, "ஆண்டவர் களே! நம்மில் ஒரு பகீர் இன்னூர் கள் குடிக்கின்றார்" என்றார்கள். ஆண்டவரவர்கள் உடனே அந்த பகீரின் மீது கோபங் கொண்டு அவரை உடனே இங்கு கொண்டு வாருங்களென்று கட்டளை செய்தார் கள். அது போல் அவரை அழைத்து ஆண்டவரவர்களின் முன்னில் நிறுத்தினார்கள். அவரைப் பார்த்து நீர் கள் குடித்தீரா? என்று ஆண்டவரவர்கள் வினவினார்கள். அதற்கு அந்த பகீர் நான் கள் குடிக்கவில்லை யென்று மறுத்தார். அதற்கு ஆண்டவரவர்கள் இச் செயல் நமது மார்க்கத்தில் விலக்கானதாகும். ஆனதால் ஒரு போதும் கள் குடிக்ககூடாதென்று கூறி விட்டு மற்ற பகீர்களைப் பார்த்து; இனி மேல் அந்த பகீர் எப்பொழுதாவது கள் அருந்த கண்டீர்களே யானால் அவரை கள் பாத்திரத்தோடு கைப் பிடியாக பிடித்துக் கொண்டு வாருங் கள் என்று உரைத்தனுப்பினார்கள்.

மற்றொரு நாள் அந்த பகீர் கள் குடித்துக் கொண்டிருக்கும் போது மற்றவர்கள் கண்டு கள் பாத்திரத்தோடு கைப்பிடியாக பிடித்துக் கொண்டு வந்து ஆண்டவர்கள் சமுகத்தில் விட்டார்கள். ஆண்டவர்கள் அந்த பகீரைப் பார்த்து, "நீர் ஏன் நமது மார்க்கத்திற்கு மாறான காரியத்திற்கு உட்பட்டு வீணே நரகவாதியாகின்றீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த பகீர் ஆண்டவர்களே! நான் மார்க்கத் திற்கு மாற்றமாக கள் குடிக்கவில்லை; எனக்கு தாகம் உண்டானதால் பாலை வாங்கி குடித்தேன் என்றான். அது கேட்டு ஹலரத் ஆண்டவ ரவர்கள் மற்றவர்களை நோக்கி அக்கள் பாத்திரத்தை எடுத்து கவிழ்த் துங்கள் பார்ப்போ மென்றார்கள். அது போல் கவிழ்த்து பார்த்த போது அக்கள் பாத்திரத்தில் நின்றும் பால் ஓடக்கண்டு ஹலரத் அவர்கள் இவர் எஹ்றமத்தினாலல்லவோ கள்ளை பாலாக்கினார் என்றறிந்து அங்கிருந்த ஒரு சிறுவனை அழைத்து நீ இப்பாத்திரத்தில் சிறு நீர் செய்யென்றார்கள். அது போல் அச்சிறுவன் சிறு நீர் செய்து ஹலரத் முன்பு வைத்தான். அப்பாத்திரத்தில் சிறுவன் பெய்த சிறு நீர் நுரை பொங்கிய பாலாயிற்று.

ஹலரத் ஆண்டவரவர்கள் அந்த பகீரைப் பார்த்து இதுவும பால தான் குடி யென்று உத்தரவு செய்தார்கள். அதைக் கண்டு அந்த பகீர்

பயந்து அஞ்சி ஆண்டவர்களே! என் மூடப்புத்தியினால் செய்த குற்றத்தை மன்னித்து இரட்சித்தருள வேண்டும்; இனி ஒரு காலும் இக்காரியம் நான் செய்கிறதில்லை யென்று சத்தியஞ் செய்து கொடுத்தார். ஹலரத் ஆண்டவரவர்கள் அந்த பகிரை நீ தௌபாச் செய்து ஆண்டவனிடத்தில் பிழை பொருக்க தேடு மென்றார்கள். அது போல் அந்த பகீரும் தௌபா செய்து மீண்டார். ஹலரத் அவர்களும் அவரை மன்னித்து போகும்படி அனுமதித்தார்கள்.

ஸ்தனங்களை மாற்றி மீட்டிய சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஒலியுல்லா ஆண்டவரவர்கள் நாளுக்கு நாள் காரணம் விளக்கி உலகமெல்லாம் செழிக்கச் செய்திருக்கும் போது, ஆண்டவரவர்கள் ஒரு நாள் மேலை நாகூருக்குத் தென்புறமா யிருந்த ஊருணிக் கரையில் தனித்துச் சென்று அசறு தொழுகையையியற்ற ஒலுச்செய்து கொண்டிருந்தார்கள். அவ்வூருணியோ! பலபேர்களும் வந்து குடங்களில் தண்ணீர்மொண்டு கொண்டு போகுந் ஸ்தலமானதால் அவ்வேளையில் காபிரான ஒரு வாலிபப்பெண் குடங்கொண்டு தண்ணீர் எடுக்கவேண்டி அக்குளக் கரையில் வந்து அவளணிந்திருந்த சேலையில் ஓர் தலப்பை அரையில் அணிந்துக்கொண்டு மாற்றோர்தலப்பை நீரில்நனைத்து அக்குளக்கரையிலுள்ள கல்லில் அடித்து துவைத்து கொண்டிருந்தாள். அச்சேலையில் நின்றும் தண்ணீர் தெரித்து ஹலரத் ஆண்டவரவர்கள் பேரில் பட்டதால், ஆண்டவர் அவர்களின் சிரசை உயர்த்தி அவளை பார்க்க, அவளின் மார்பு இரண்டும் மறைவின்றி ஆண்டவரவர்கள் கண்ணுக்கு தென்பட்டதால் அவர்கள் மனதில் பொருத்தக்குறைவு ஏற்பட்ட மாத்திரத்தில் அந்த வாலிப ஸ்திரீயின் பளபளப்பாக இலங்கிய கனதனமிரண்டும் அமிழ்ந்து ஆடவரின் மார்பைப் போலாயின. இதை அறியாத அப்பெண் வழக்கம் போல் அவ்வூருணியில் ஸ்நானஞ் செய்துவிட்டு தண்ணீர் மொண்டு கொண்டு தன் மனை போய்ச் சேர்ந்தாள். அங்கு சேர்ந்து சில நேரங்களுக்குப் பின் குழந்தை பால் கேட்டழுத போது, குழந்தைக்குப் பால் கொடுக்க மார்பை நோக்கும் போது தனமில்லாதிருக்கக் கண்டு உடலயர்ந்து மனங்கலங்கி நின்றாள். அதனை

யறிந்த அவளின் தாய்வந்து பார்த்துத் திடுக்கிட்டேங்கி மிகுதுயருண்டு அழுது மகளை நோக்கி மகளே! இவ்விதம் நிகழ்ந்த காரணமென்ன? நீ செல்லும் பாதையில் எவரிருந்தாரறிவையோ வென்று வினவினாள். அதற்கு அப்பெண் தாயே! நானொன்று மறியேன். தண்ணீருக் கேகும் போது அவ்வூருணிக் கரையினருகில் தேகவஜீகரத்தையுடைய ஒரு பெரியோரிருந்து அனுஷ்டானஞ் செய்து கொண்டிருக்கின்றார். நான் போன போது அவரின் திருஷ்டி என் பேரில் விழுந்தது. இதுவல்லா மல் வேறொன்றுமில்லை யென்றாள். அது கேட்டு அத்தாயானவள் ஏதோதொரு நல்ல காரணம் இதில் இருக்கின்றதென்று எண்ணி மகளை அழைத்துக் கொண்டு அவ்வூருணிக் கரையில் ஆண்டவர்களிருக்கு மிடத்திற் சென்று ஹலரத் ஆண்டவரவர்களின் பாதம் பணிந்து போற்றிப் புகழ்ந்து அழுது, புலம்பி, காரண நாதாவே! இவ்வுலகத்தில் ஆண் பிள்ளைகள் பெண்பிள்ளைகளை விரும்பித் தன்னுயிர் போல் பாவிக் கிறதெல்லாம் கனதனத்தின் பெருமை யல்லாது வேறில்லை. பெண் களுக்கடையாளமானது இரண்டு தனபாரங்களாயிருக்கின்றன. இவை தில்லா விடில் அழகு மில்லை, இன்பமுமில்லை, பிரகாசிக்காநின்ற நன் னயமில்லை, தொலையாகுற்றமும் தீராதவசையு முண்டாகிறதுந் தவிர வல்ல நாயகனிரங்கி யளித்த குழந்தைகள் அழுதுண்டு வளர்வதும் அத்தனங்களைக் கொண்டாயிருக்கும். ஆனதால் இன்று எனது மகளார் இந்த ஊருணிக்கறைக்கு ஸ்னானஞ்செய்ய வந்து தங்களைகண்ட நிமித்தம் அவளின் இருமார்பும் சூம்பி பாலற்றுபோயின. அதனால் மதலையின் பசிதீர்க்க கெதியில்லாமல் துயரப்பட்டுக் கொண்டிருக்கி றோம். கருணைக்கடவுளாகிய ஆண்டவர்களே! இத்துயரத்தை நீக்கி யருட்செய்ய வேண்டுமென்று மன்றாடி நின்றாள். இவைகளைக்கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் தங்களின் கிருபைக்கண்ணால் அம்மாதினை நோக்கி அவளின் முகவாட்டத்தைக் கண்டு மனமிரங்கி, ஓ! மாதே! இனி நீ வெட்க மில்லாதிருக்காதே, உன்னிரு கனதனங்களைக் கண் டேன். மனம் வெறுத்ததால், வல்லவனுடைய தத்துவங்கொண்டு அவை மாறிப்போய் விட்டன. நீயஞ்சாதே! யென்றுரைத்து தங்கள் முபாறக்கான இரண்டு கைகளையு முயர்த்தி, ஆண்டவனே! இப் பெண்ணின் வெட்கம் வெளிகண்டமையால், நானதைக்கண்டு பொருத் தக்கேட்டேன்: இப்போது அது மதலைகளுக்கு பால் ஊட்டும் தன மாயிருக்கின்ற படியால், முன்போல் ஆக்கிவை யென்றிரைந்தார்கள். உடனே அல்லாஹு தஆலாவின் கிருபைகொண்டு அப்பெண்ணின்

தனங்களிரண்டும் முன்போல் உண்டாகிப் பந்துகளைப்போல் திரண்டு விம்மிப் பாலுஞ் சுரந்து முலைக்கண் திறந்து பால்சொரிந்தது. அது கண்டு அம்மாதாவர்கள் மனமகிழ்ந்து ஆண்டவர்களின் பாதமலர்களில் பணிந்து எழுந்து புகழ்ந்து விட்டுச் சென்றுபோய்த் தன் சிசுவிற்கு அமுதூட்டி வளர்த்தார்கள். ஹலரத்தவர்கள் தங்களிருப்பிடஞ் சார்ந்தார்கள்.

கற்பாரிற்பொருந்த கப்பலை மீட்டிய சரித்திரம்.

ஹலரத் செய்யிது ஷாஹுல் ஹமீது ஒலியுல்லா அவர்கள் ஒரு நாள் வெளியிலிருந்து ஹலரத் செய்யது யூசுபு சாஹிபு அவர்களுக்கும், மற்றும் சிலர்களுக்கும் அறிவு சொல்லிக்கொண்டிருக்கும் போது திடீரென்றெழும்பி அவர்கள் தனித்திருக்குங் கட்டிடத்தினுட் சென்று அங்கு தரிக்காது மீண்டு வரும்போது ஆண்டவரவர்களின் இடக்கரச் சட்டை நனைந்திருப்பதை ஹலரத் செய்து யூசுபு சாஹிபவர்கள் முதலான பேர்கள் கண்டு ஆண்டவர்களே! தங்கள் கைச்சட்டை நனைந்து இருக்குங் காரணம் என்ன? வென்று வினவினார்கள். அதற்கு ஹலரத்தவர்கள் அது காரியம் உங்களுக்குப் பின்னுக்குத் தெரியு மென்றார்கள். அது கேட்டெல்லோரும் ஆச்சரியமுற்று வாய் மூடி யிருந்தார்கள்.

சில நாள் கழிந்த பின் ஒரு நாள் ஒரு பெரிய மணவற் கப்பல் நாகப்பட்டணத்தின் துறைமுகத்தில் வந்து கரை பிடித்து அதன் தலைவர்கள் சில பொருட்களுடன் கரையி லிறங்கி, அப்பொருட்களைத் தலைகளிற் சுமந்தவர்களாக நாகூர் வந்து ஹலரத் ஆண்டவர்களின் சமுகத்தில் அப்பொருட்களை பாத காணிக்கையாய் வைத்துப் பாத கமலங்களைத் தொட்டு முத்தி யிட்டுக் கைகட்டி பணிந்து நின்று ஆண்டவர்களே! தங்களின் பாட்டனாராகிய ஹலரத் குத்புல் அக்தாபு கவுதுல் அஃலம் ஆண்டவரவர்கள் தீனை ஹயாத்தாக்கி வைத்தது போல் ஆழக்கடலில் தாழுஞ் சமயத்தில் எங்களையும், எங்கள் கப்பலையும் காத்திரட்சித்த நாயகமே! இக்காணிக்கையைத் தாங்கள் கைக்கொள்ள வேண்டு மென்று மன்றாடினார்கள். ஹலரத்தவர்கள் இசைந்து அப்பொருளை ஒப்புக் கொள்ளச் செய்தனர்கள்.

பின்பு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு முதலியவர்கள் அக்கப்பற்காரர்களிடத்தில் நடந்த காரியமென்ன? வென்று கேட்டார்கள், அதற்கு அக்கப்பல்காரர்கள் நாங்களெல்லோரும் கப்பலேறிப் பாய் விரித்து ஓடி நடுக்கடலிலான போது அங்குள்ள ஒரு கற்பாறையில் எங்கள் கப்பலின் அணியமேறிப் பொறுத்துக் கொண்டது. அப்போது நாங்க ளெல்லோரும் பயந்து அஞ்சி நடுங்கி வியாகுலமுற்று, இதென்ன பரிதாப நிலை இன்னமொரு அலை யடித்ததானால் கப்பல் முழுமையும் பாறிலேறித் தகர்ந்து போகுமே, அப்படியானால் நாமெல்லோரு மிவ்விடத்தி லிறந்து போவது நிச்சயம் என்று திகிலடைந்து மனமுடைந்து இருந்த போது எங்களுக்கோர் அருளுண்டாயிற்று. அதாவது நமது தென்னாட்டில் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் காரண குருவா யிருக்கின்றார்களே அவர்களிடத்திலேயே நாமெல்லோரும் மன்றாடிக் கேட்க வேண்டும் என்று எண்ணம் வந்ததும், ஹலரத் ஆண்டவர்களை மனதில் நினைத்து ஆண்டவர்களே! நாங்களெல்லாம் உங்கள் தஞ்சம், நீங்களே எங்களைக் காப்பாற்றி இரக்ஷிக்க வேண்டுமென்று சொல்லிக் காணிக்கை சேகரித்து கட்டி தூக்கி வைத்துவிட்டிருந்தோம். சற்று நேரத்தில் பொறுத்திருந்த கப்பல் கடினமாக அசைவு கொண்டிருந்ததால் நாங்களெல்லோரும் ஓடிப்போய் கப்பல் அடிபாரத்தைப் பார்க்கும் போது, பொறுத்திருந்த கப்பல் கற்பாறையை விட்டகன்று சீராக ஓடுகின்றதைக் கண்டு நாங்கள் மனமகிழ்ந்து இது ஆண்டவரவர்களின் உதவியே யென்று நினைத்து ஹலரத்தவர்களைப் புகழ்ந்திருந்தோம். எங்கள் கப்பல் சிந்தரத்திரையாக ஓடி வந்து இந்நாகை பதி வந்து சேர்ந்தது. அதனால் நாங்கள் அவர்களுக்காக சேகரித்து வைத்த காணிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்தோமென்றார்கள். ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் முதலியவர்களெல்லாம் அக்கப்பல்காரர்களிடத்தில் நாங்கள் ஒரு நாள் ஆண்டவரவர்களுடன் கூடி யிருக்கும் போது, ஆண்டவரவர்கள் திடீரென எழுந்து கட்டிடத்திலுள் சென்று அங்கு தரிக்காமல் மீண்டும் வரும் போது அவர்களின் இடது கைச்சட்டை நனைந்திருந்தது. அதை அவர்களிடத்தில் வினவிய போது, அது விஷயம் நீங்கள் பின்னே தெரிந்து கொள்வீர்கள் என்று விடை பகர்ந்தார்கள். அதுவே தங்கள் கப்பலை காப்பாற்றின காரணமாகும் என்று அவர்களுக்குச் சொன்னார்கள்.

அதைக் கேட்டு அக்கப்பல்காரர்கள் யாவரும் ஆச்சரியமுற்று இது வெல்லாம் அல்லாவிடம் தத்துவம் பெற்று செய்யும் ஓர் காரண

மாகு மென்று சொல்லி விட்டு ஆண்டவர்களின் பாதம் பணிந்து உத்தாரம் பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

எனதன்பர்களே! இந்தக் காரியத்தை யோசிக்கு மிடத்தில் ஹலரத் அவர்களின் இடக்கரச் சட்டை நனைந்திருந்ததும், நடுக்கடலில் பொறுத்த கப்பல் அசைந்து சென்றதையும் யோசித்தால் ஹலரத் தவர்கள் தங்கள் முபாறக்கான இடது கையினால் அக்கப்பலைத் தள்ளி விட்டதாய்த் தோற்றுகின்றது. ஆனதால் நடுக் கடலில் தங்களை நினைத்தவர்களுக்கு உதவி செய்த மீரான் ஒலியுல்லா சாஹிபு ஆண்டவரவர்கள் நம்மனைவரையுங் காப்பாற்றி நற்கிருபை செய்வார்களாகவும் ஆமீன்.

கள்ளுக் குருவிகளுக்குச் சீட்டு விட்ட சரித்திரம்.

ஹலரத் செய்யிது அப்துல் காதிர் கன்ஜேசவாயி ஆண்டவரவர்கள் விடுதி விட்டிருக்குந் தானம் பலவிதச் சருக்களடர்ந்த தோப்புகளாகையால் அங்கு பலவித பறவைகளும் சஞ்சாரம் செய்வதோடு கள்ளுக் குருவிகளும் மிகுதமா யிருந்தன. அக்குருவிகள் ஒருவித சாம்பல் வர்ணமா யிருக்கும். அவைகள் அநேகமாய் ஹலரத் ஆண்டவரவர்களின் விரிப்புகளில் எல்லா நேரமும் வந்து துள்ளி விளையாடிச் சத்தமிட்டுக் கொண்டிருக்கும். அதை ஹலரத்தவர்கள் பார்த்து மிகுந்த சந்தோஷமா யிருப்பார்கள். அப்படி யிருக்கும் போது ஒரு நாள் விறகு கொண்டு வரப்போன ஒரு பக்கீறு அக்குருவிகளை நோக்கி ஒரு கல்லினா லெறிந்தார். அக்கல் ஒரு குருவியின் பேரில் பட்டு அக்குருவி கீழே விழுந்திறந்தது. அது கண்டு மற்றைய குருவிகளெல்லாம் பறந்தோடிப் போய் ஒன்று கூடி பேசி நம்மை வதை செய்பவர்களிருக்கு மிடத்தில் நாமிருப்பது என்றும் ஆபத்தாகவே முடியும் ஆகையால், நாமெல்லோரும் இதை விட்டகன்று மறுதோப்புக்கு போய் விட வேண்டு மென்று, பேசி முடிவு பண்ணிக் கொண்டு அதிலொரு குருவியை ஹலரத்தவர்களிடத்தில் முறையிடும்படி அனுப்பி விட்டு, மற்றைய குருவிகளெல்லாம் பெருங் கூட்டமாக பறந்து கீழ்வாஞ்சி யூரென்கிற ஊரில் சென்று அங்குள்ள சோலைகளி லிருந்தன.

ஹலரத் ஆண்டவரவர்களிடத்திற்கு தூதாய் வந்த குருவி ஆண்டவரவர்களின் திருச்சமுகத்திற்கு முன்னின்று பட்சிகளுக்குரிய நவீன பாஷையினால் ஆண்டவரவர்களே! குருவிக் கூட்டங்களாகிய நாங்கள் இச்சோலையி லிருந்து தங்களைத் தெரிசனை பண்ணிக் கொண்டும், தங்களெதிரே உல்லாசமாய் விளையாடிக் கொண்டு மிருந்தோம். அவைகளை தாங்கள் ஆனந்தமாக தங்கள் கருணை கண்களால் பார்த்து சந்தோஷ முற்றிருந்தீர்கள். அது எங்களுக்குப் பெரும் பாக்கியமா யிருந்தது. அப்படி யிருக்க, தங்களில் ஒரு பகீர் விறகு ஒடிக்க வந்தவர் எங்களில் ஒரு குருவியை கல்லினால் அடித்து வதைத்தார். அதனால் நாங்க ளெல்லோரும் கீழ்வாஞ்சூர் தோப்பிற்கு போய் வாசஞ் செய்வதாக முடிவு செய்துக் கொண்டு, அது போல் எல்லா பறவைகளும் அத்தோப்புக்கு சென்று விட்டன. இச்செய்தியை மட்டும் தங்களுக்கு தெரிவிக்க என்னை நியமித்தார்கள் என்று மொழிந்தது.

அக்குருவியின் பிராதை ஹலரத் ஆண்டவரவர்கள் கேட்டு அப்பறவைகளின் பேரில் கிருபை கூர்ந்து இரக்கமுற்று, அவ்விரகத்தினால் மனம் வருந்திச் சிறப்பாகிய கண்களில் தண்ணீர் ததும்ப தபோதனர்களை நோக்கி இப்பறவையை கல்லினாலடித்து வதைத்தவா ரென்றார்கள். பக்கீருகளெல்லாம் மனந்தடுமாறி அக்குருவியை வதைசெய்த பக்கீரைச் சுட்டிக்காட்டினார்கள். ஹலரத்தவர்கள் அந்தப் பக்கீரை நோக்கி, நீயேன் அப்பட்சியை வதைத்தீர் என்று கேட்ட போது அப்பகீர் பயந்து நடுங்கி ஒன்று முறையாது நின்றதனால் அவரைக் கோபித்து விட்டு பிறகு ஒருதுண்டுக் கடுதாசியில் ஹலரத்தவர்களின் சிறப்பான கையினால் கவுல் பத்திரமெழுதிச் சமுகத்துற்ற ஷாஹுல்ஹசன் என்கிற ஒருபக்கீரு கையிற்கொடுத்து இதைக்கொண்டு போய்க்கீழ்வாஞ்சூரிலிருக்கின்ற சோலையில் கள்ளுக்குருவிக் கூட்டத்தின் முன் நின்றுக்கொண்டு இப்பத்திரத்தை வாசித்துக்காட்டு மென்றார்கள். ஹலரத் ஆண்டவரவர்களின் கட்டளைப்படி அந்தப்பக்கீர் அங்கு சென்று அக்குருவிக் கூட்டத்தின் முன்னின்று அப்பத்திரத்தைவாசித்தார். அவ்வாசகத்தைக் கேட்டு கள்ளுக் குருவிகளெல்லாம் கூட்டங் கூட்டமாக வாஞ்சூரை விட்டெழுந்து பறந்து ஹலரத்தவர்களின் திருசமுகத்திலாகிப் பாதமலரைத் தெரிசித்த பிறகு அக்காவுகடோறுங் குலாவி அச்சமின்றிச் சத்த மிட்டு விளையாடி வாசஞ்செய்துக் கொண்டிருந்தன. வேறொரு சொற்படி ஹலரத்தவர்களின் பக்கீர்வதைத்த

குருவி யிரண்டென்றும் ஹூலரத்தவர்கள் எழுதிய கவுல் பத்திரத்தை அந்தப் பக்கீரின் கையிற்கொடுத்து அக்குருவிக் கூட்டத்தின் முன்பில் வைத்துவிட்டு வரச்சொன்னதாகவும், அந்த ஹூலறஹுஸேன் என்கிற பக்கீர் அவ்வுத்தரப்படிக்குச் செய்ததாகவும் அக்குருவிகள் அக்கடிதத்தைச் சொண்டுகளினுல் கொத்திப் பிரித்துப் பார்த்துக் கொண்டு அங்கிருந்து முன்னிருந்ததானத்திற்கு வந்ததாகவும் சொல்லி வருகின்றது.

கப்பல் துளையை கண்ணுடியாலடைத்த சரித்திரம்.

ஹூலரத் செய்யிது ஹமீதொலியுல்லா ஆண்டவரவர்கள் புதுமைகள் உலக பிரசித்தமாக விளங்கி வருங்காலையில் ஹூலரத் ஆண்டவரவர்கள் ஒருநாள் காலிதனை யழைப்பித்து இப்போது சில்லாவடி யென்று விளங்கின்ற தானத்திலிருந்து முகப்பணி செய்வித்துக்கொண்டிருக்கின்ற தருணத்தில், ஒரு நசாருவின் கப்பல் நடுச்சாகரத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போது, அதன் அடிவாரத்தில் ஒரு பலகை பழுதுபட்டு துவாரமாகி விட்டபடியால் கம்மத்தாகி கப்பலுள் தண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. அதைக்கண்டு அதன் வேலைக்கார கலாசுகள் பேம்பா முதலிய கருவிகளைக் கொண்டு தண்ணீர் இறைத்தும் தண்ணீர் குறையாது பெருகிக் கொண்டேவந்ததால், அம்மரக்கலக் காரரும் மற்றும் சிப்பந்தி முதலியவர்களெல்லாம் நாமழியுங் காலம் நேரிட்டு விட்டதேயென்று மனங்கலங்கித் தட்டுத்தடுமாறி நினைவழிந்து ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கூக்குரலிட்டு அழுது கொண்டிருக்கையில், அக்கப்பலில் சரக்கு உத்தியோகஞ் செய்து கொண்டிருந்த இஸ்லாமான மனிதனொருவன் அக்கப்பலில் தலைவனை யடுத்து எஜமானே ! நான் ஒன்று சொல்லுகின்றேன் கேளுங்கள். நாகப்பட்டிணத்திற்கு வடபுறத்தில் விடுதிவிட்டு வாசஞ் செய்துக் கொண்டிருக்கிற ஹூலரத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள், தற்காலம் சகல தேசங்களுக்கும் சென்று, அங்காங்கு நேரிட்ட பல ஆபத்துகளையும் விலக்கி ரக்ஷித்துவிட்டு வந்திருக்கும் மஹான். அவர்கள் மிகுந்த காரணங்களை யுடையவராவர்கள். ஆனதால் அவர்களின் பேரில் பாரஞ்சாட்டி பிரார்த்தனை செய்து காணிக்கை முடிப்புக் கட்டினுல், ஆண்டவர்களுடைய கிருபையால் இவ் அவஸ்தையை விட்டும் நீங்கி நாமெல்லாம் சுகம் பெறலா

மென்று சொன்னான். அத்தலைவன் அதைக்கேட்டு "நல்லது, நீயேர் தப்படி செய் எனக்கும் சம்மதந்தான்" என்றான். அதுபோல் அந்தச் சராங்கு சில பொருட்களை அங்குள்ள பலரிடமு மிருந்தும் வாங்கி ஒரு முடிப்புக் கட்டி ஆண்டவரவர்கள் மீது பாத்திஹா வோதி, ஆண்டவரவர்களை மனதில் தியானித்துக் கொண்டு எங்களை நீங்களே காப்பாற்ற வேண்டுமென்று எல்லோரும் ஓரே முகமாய் கெஞ்சிக் கேட்டழுதார்கள். அவ்வாரவர்கள் கெஞ்சி நிற்பதை ஞான திருஷ்டியினால் இப் பெரிய பூமண்டலங்களை யெல்லாம் பார்க்கின்ற ஹலரத் மீறான் சாஹிப் ஆண்டவரவர்கள் அறிந்தபோது தாங்கள் நாவிதனிடம் முகப்பணி செய்துக் கொண்டிருந்தார்கள். உடனே அங்கிருந்த நாவிதனின் கண்ணாடியை எடுத்து கடலிலே வீசினார்கள்.

அதுகண்டு நாவிதன் ஆண்டவர்களே! நான் செய்யும் ஜீவனக் கருவிகளில் அதுவும் ஒன்றல்லவா? வென்றான். அதற்கு ஆண்டவர்கள் நீ பதறாதே அது உன்னிடம் பின்னுக்கு வந்துக் கிடைக்கும் என்றார்கள். ஆண்டவர்கள் எறிந்த அக்கண்ணாடி சென்று ஆழிய கடலிற்றாழப்போகிற நசுறுனிக் கப்பலின் அடிவாரத்துற்ற துவாரத்தை யடைத்துக் கொண்டமையால், அக்கப்பல் சலாமத்துப் பெற்று அதிலுள்ளவர்களெல்லா மனமகிழ்ந்து ஆண்டவரவர்களைப் புகழ்ந்து கொண்டு நாகப்பட்டணத்தை நாடி முஜ்ருப்பிடித்து ஓட்டினார்கள். சொற்பத் தினத்தில் அக்கப்பல் நாகப்பட்டணத்தின் தரையிலில்வந்து சேர்ந்தது. அம்மரக்கல ராயன் முதலியவர் கரையிலிறங்கிச் சாக்குகளை யெல்லாம் மிறக்கி விட்டுக் கப்பலை ஆற்றினுள் கொண்டு வரும்போது, ஹலரத்தவர்கள் ஒரு பக்கீரை நோக்கி நீர் நாவிதனைக் கூட்டிக் கொண்டு நாகப்பட்டணம் போய் அங்கசாறுவின் கப்பலில் இன்னவிடத்தில் ஒரு கண்ணாடி யிருக்கின்றது. அதை அக்கப்பலுடையானிடத்திற் கேட்டு வாங்கி இந்நாவிதன் கையிற் கொடுமென் றேவினார்கள். அந்த பக்கீறு அவ்வாறு சென்று அக்கப்பலின் சர்தாரைக்கண்டு ஹலரத்தவர்கள் சொன்ன அடையாளத்தைச்சொல்லிக் கண்ணாடியைக் கேட்டார். அதற்கு அத்தலைவன் என்வசங்கண்ணாடி கொடுத்தவர்யார்? நீர்யார்? என்று கேட்டபோது, அந்த பக்கீர் கடலில் நடந்ததையும் கரையில் நடந்ததையும்ஹலரத்நவர்கள் சொன்னதாகச்சொன்னார். அது கேட்டு அக்கப்பல் அதிகாரிதனது சராங்கை அழைத்து இத்தபோதனர் சொல்கிற அடையாளத்தின்படி நமது கப்பலில் கண்ணாடி யிருந்தால் அதைஎடுத்து இவர் கையில் கொடுவென்றான். அந்தச் சராங்குசென்று

அந்த அடையாளத்தின்படி பார்க்கும்போது கண்ணாடி யிருக்கக் கண்டு மனமகிழ்ந்தெடுத்து அந்தப் பக்கீறு கையில் கொடுத்துவிட்டு அத்து வாரத்தை தெரிந்துக் கொண்டபடியால் அதை அடைத்து செப் பனிட்டுக் கொண்டான். அவர் அக்கண்ணாடியை வாங்கி அந்நாவித னிடத்தில் கொடுத்துவிட்டார். அந்தச் சுறுங்கு இப்புதுமையை அம் மரக்கலத் தலைவனிடத்திற் சொன்னபோது, அதை அவன் கேட்டு ஆச் சரியமடைந்து நாமும் நமது கப்பலிலும் அதிலுற்றவர்களும் ஆழிய கடலிற்றாழ்ந்து போகாமல் காப்பாற்றினது ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் கிருபையா லல்லாது வேறில்லை யென்றெண்ணி, மனதில் நிச்சயித்து அந்நகரத்ததி காரிகளிடத்திலெல்லாம் இக்காரணங்களை அறி வித்து விட்டு, தானும் தனது கப்பல் சிப்பந்திகளும் மற்றும் பலரும் சேர்ந்து அவர்கள் பேரில் கட்டின காணிக்கை முடிப்பை எடுத்துக் கொண்டு ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் இருக்கும் தலத் திற்குச் சென்று அவர்களின் பாதங்களை பணிந்து காணிக்கை முடிப்பை சமர்ப்பித்து விட்டு விடை பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

மழையை வருஷித்ததும், பச்சைக் கிராம்பு அழைப்பித்ததும்.

ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் நசாறாவின் கப்பலைக் கண்ணாடியா லடைத்த காரணத்தை அக்கப்பற் காரன் மற்றுந் துரைமார்க ளிடத்திலெல்லாம் ஆண்டவரவர்களின் காரணத் தைப் பேசிக்கொண்டிருந்தமையால், மற்ற நஸாறாக்கள் மனதிற் சந் தேகங்கொண்டு, அந்தக் காரணர் விளக்கும் புதுமைகளை நாமெல்லாங் கண்ணாரக் காண வேண்டு மென்று நினைத்து, அம்மரக்கலகாரன் முதலான சகலரும் கூடிப்புறப்பட்டு நாகூருக்கு வந்து ஹலரத் ஆண் டவரவர்கள் திருசமுகம் வந்து நின்று ஆண்டவரவர்களைப் பார்த்துக் கைகூப்பி நின்று இரட்சகரே! இந்நகரில் மழை பெய்யாததினாலே மனி தர்க ளெல்லாம் மிக வருந்தி கஷ்டப்பட்டு வாடுகிறார்கள். தங்கள் கிருபைக் கண்ணால் எங்களைப் பார்த்து எங்கள் மீது அன்பு வைத்து மழையை வருஷிக்கச் செய்யவேண்டு மென்று மன்றாடிக் கேட்டார்கள். ஹலரத்தவர்கள் மனதிரங்கி தங்கள் முபாறக்கான கைகளை ஆகாயத்தி லுயர்த்தி ஆதியே! சோதியே! நீதியே! துய்யவா! என்று துதித்து

அல்லாஹு தஆலாவிடம் துஆ விரந்தார்கள். ஆண்டவரவர்கள் உயர்த்திய கரங்களைத் தாழ்த்து முன் மேகங்கள் ஆகாயத்திற் கவிழ்ந்து மின்னலெடுத்து இடி இடித்து சோனைமாரியாக மிகுந்த மழையை வருஷித்தது. அதனால் குண்டு குளம் தடாகம் முதலிய யாவும் நிறைந்தன. மரம் செடி புற்பூண்டு முதலியன செழிப்புற்றன. அதைக் கண்டு சகலரும் ஆச்சரியமுற்று ஆண்டவரவர்களை மிகவாய் புகழ்ந்து துதித்தார்கள். அங்கஸாருக்கள் மட்டும் ஆண்டவரவர்கள் செய்வித்த காரணங்களான கண்ணாடி கொண்டு கப்பல் துவாரத்தை அடைத்ததும், விரும்பினபடி மழையை வருஷித்ததும் இவை காரணமோ ஜால வித்தையோ வென்று சந்தேகம் வைத்தவர்களாக ஆண்டவரவர்களுக்கு வந்தனஞ் செய்துவிட்டு போய்த் தாங்கள் கொண்ட சந்தேகத்தை நிவர்த்தி யாக்கும் பொருட்டு மறுநாள் எல்லா நஸாறுக்களும் ஒன்று சேர்ந்து ஹலரத் ஆண்டவரவர்கள் பால்வந்து கைகட்டி பணிந்து முன்னின்று காரண நாயகமே! பூரணமதியமே! ஆரணக்கடலே! தாரணைக் குருவே! நாங்கள் எங்கள் உலர்ந்த ராஜ்ஜியத்தை விட்டு இங்கு வந்து வெகுகாலமானதால், எங்கள் நகரிலுள்ள பச்சைக் கிராம்பைப் பார்க்க மிகுந்த அபேட்சையா யிருக்கின்றோம்; தாங்கள் எங்கள் பேரில் தயவு கூர்ந்து பசிய கிராம்பு கொப்புக் குழையுடன் அழைத்துத் தரவேண்டு மென்று கெஞ்சிக் கேட்டார்கள். அது கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் தங்களின் வரிசை தங்கிய வலக் கரத்தைத் தாங்கள் அணிந்திருந்த அங்கியினுள்ளிட்டு அன்றறுத்த பாசடைகளுற்ற பூங் கொத்தும், தளிருஞ் சொரிந்த முறிக்கப்பட்ட ஒரு கொப்பை எடுத்து அங்கஸாருக்கள் முன் நீட்டிக் கொடுத்தார்கள். நோட்ட மிட்டு பார்த்தபோது, அது கமகமவென வாசனையோடும் அப்போதே ஒடித்த கொப்பாயும் இருக்கக் கண்டு, இது நம் தேசத்திலுள்ள கிராம்புச் செடியே அல்லாது வேறல்ல வென்றெண்ணி ஆச்சரியமுற்று ஹலரத் ஆண்டவரவர்களை புகழ்ந்து போற்றி உத்தாரம் பெற்றெழுந்து தங்கள் மனைகளிற் சென்று யோசனை செய்து அவர்களிற் றலைவனைக் கொண்டு அவர்களின் உலாந்தா தேசத்திலுள்ள மன்னனுக்கு ஹலரத் ஆண்டவரவர்களின் காரணங்களைப் பற்றியும், தங்கள் தேசத்து கிராம்பு கிளையை ஒடித்து அப்பவே அதை இங்கு அழைத்து கொடுத்த அற்புதத்தையும் கடித மூலம் எழுதி யனுப்பினார்கள். அதை யறிந்து அம் மன்னன் அக்கடிதத்தி லெழுதிய ஆண்டவரவர்களின் அற்புதத்தை நோட்ட மிட்டு புதுமையாகி இது விஷயம் இந்நகரில்தானோ நிகழ்ச்

திருக்க வேணுமென்று கருதி அந்நகரிலுள்ள தோட்டங்களில் நிற்கும் காம்பின் தருக்களை யெல்லாஞ் சோதிக்கச் சொல்லி ஏவலாட்களை யனுப்பினான். அவர்களேகி அங்குள்ள தருக்களை எல்லாம் நோக்கு மிடத்து ஒருமரத்திலொரு சிறிய கொம்பொடித் தெடுத்திருக்கக் கண்டு வந்து அதை அரசனிடத்தில் சொல்ல, அரசன் அதைக் கேட்டு அது இங்கிருந்துதான் கொய்யப்பட்டிருக்கிற தென்று தெரிந்து அச்செய் தியை நாகப்பட்டணத்து, நவாருக்களுக்குத் தெரிவித்தான். அதை நவாருக்கள் அறிந்து ஆனந்தமும், ஆச்சரியமுமுற்று ஹலரத் ஆண்ட வரவர்கள் காரண நாதாத்தான் என்று உறுதி கொண்டார்கள். பிறகு அவர்கள் சில பொருள்களும் சாமான்களும் சேகரித்து எடுத்துக் கொண்டு சகலரும் கூடி ஹலரத் ஆண்டவரவர்கள்பால் வந்து அவர்கள் திருப்பாதம் பணிந்து, "ஆண்டவர்களே! தங்கள் பொரால் நாங்களொரு கட்டிடமியற்ற வேண்டும்" என்று உத்தாரம் கேட்டார்கள். அதுபோல் ஆண்டவர்களின் உத்தாரம் பெற்று நான்கு கற்றூணுள்ள ஒரு மண்டப மும், இரட்டைக்கிணறு முண்டு பண்ணி வைத்தார்கள். அந்த மண்டப மாகிறது, ஆண்டவர்களின் றவுலா வென்னும் சமாதி ஸ்தானத்தின் கீழ்ப் புறமாக விருக்கும் பீர்மண்டப மென்று விளங்குகின்ற கட்டிடத் தின் நடுவில் நிற்கின்ற நாற்கால் மண்டபமாக விருக்கும். அக்கிணறோ குளிர்ந்த மண்டபத்தின் தென்புற மிருக்கின்றது. மனிதர்கள் வேண்டு தலுக்காக உப்பு மிளகு கொண்டு வந்து அக்கிணற்றின் அருகிற் கட்டப் பட்டிருக்கும் கல் தொட்டியில் போடுகின்றார்கள்.

காணிக்கை நிலைத்த சரித்திரம்.

ஹலரத் செய்யிது ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவ ரவர்கள் மிகு மாட்சிமையோடு அங்குள்ளவர்களுக் கெல்லாம் நல்லறி வைப் புகட்டிக் கொண்டிருக்குங் காலையில், அவர்களைச் சூழ்ந்திருக் கின்ற பகீர்களெல்லாம் நாகப்பட்டணம் போய் உருலாவி பார்த்து விட்டு வந்து ஹலரத் ஷாஹு முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர் களிடத்தில் அங்குள்ள சிறப்புகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு பகீறுகள் நாகப்பட்டணத்தின் அலங்காரங்களை பல நாள் சொல்லக்கேட்டு வந்தபோது ஒருநாள் ஹலரத் ஷாஹு முஹம்மது யூசுபு சாஹிபவர்களின் மனதில் நாமும் நாகப்பட்டணம் போய் பார்க்க வேண்டு மென்கிற உதிப்புண்டானதினால், ஹலரத் ஆண்டவ

வர்களின் சமுகத்தில் வந்து மிகு மரியாதையுடன் நின்று கொண்டு என் தந்தையரே! பக்கீறு களுடன் நானுங்கூடி நாகப்பட்டணம் போய்ப் பார்க்க மிகுந்த வேட்கை யிருக்கின்றது. தேவரீரவர்களின் உத்தாரமானால் போய் வருகிறே னென்றார்கள். அதைக் கேட்டு ஆண் டவரவர்கள் மனமகிழ்ந்து உத்தாரங் கொடுத்துச் சில பக்கீருகளையுஞ் சேர்த்தனுப்பினார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்களின் உத்திரவு பெற்றுக் கொண்டு ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் மிகு மாட்சிமையோடு பகீர்கள் சூழ நடந்து நாகப்பட்டணத்திற் சென்று அங்குள்ள கோட்டை கொத்தளங்களையும் உன்னத மாடிகளையும் பார்த்துக் கொண்டு முஸ்லிம்களிருக்கும் தெரு வீதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். அப்போது அந்நகரத்து முஸ்லிம்கள் ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்களின் பூரணச் சந்திரோதயம் போன்ற முகார விந் தத்தையும் மற்றைய அவயவத்தின் அழகினையும் மேதை, மேத்தியம், மரியாதை இப்போற்கொத்த குணங்களையுங் கண்டு மனமகிழ்ந்து ஒவ் வொருவரும் அவர்களுக்கு வெகு ஆசாரஞ் செய்தழைத்துக் கொண்டு போய் அவரவர்களின் மனை கிரகாறும் பரமதானிகளிருப்பாட்டி உப சரித்து ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்களின் அமிர்த வாக்கின லியம்பும் ஞான சாரங்களைக் கேட்டு எற்று மனங்குளிர்ந்து இவர்களைப் புகழ்ந்து போற்றிப் பாத காணிக்கைகளும் வைத்து ஹலரத் காதிறுவலி பாதுஷா ஆண்டவரவர்களின் பாதகமலங்களுக் காக அவரவர்கள் நேர்ச்சை செய்து வைத்திருந்த பொருட்களையுங் கொடுத்து, மேன்மையும் நற் சுவைகளையுமுடைய அறுசுவை பதார்த் தங்களைக் கொண்டு பசியாற்றி வித்து, எல்லோரு மிவர்களின் பாதம் தொட்டு முத்திக்கொண்டு மிகுந்த மரியாதையுடன் அனுப்பி வைத் தார்கள்.

ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் அக்காணிக் கைப் பொன்களை ஒரு முடிப்பாகக் கட்டி வைத்துக்கொண்டு நாகப் பட்டணம் விட்டுநீங்கி நாகூர் வந்து, ஹலரத் ஆண்டவரவர்களிடத்தில் வந்து பாதம் பணிந்து அக்காணிக்கைகளின் முடிப்பை அவர்கள் முன் வைத்து நின்றார்கள். ஹலரத் ஆண்டவரவர்கள் அம் முடிப்பைச் சுட்டி மகனாரே! இதென்ன வென்று வினவினார்கள். அதற்கு, ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள், நான் நாகப்பட்

டணம் சென்றபோது அங்குள்ள முஸ்லிம்கள் என்னை யழைத்து மிகுந்த சங்கை மரியாதைகள் செய்து தங்களின் பேரால் நேர்ந்த நேர்ச்சையின் புறத்திலாய்த் தங்களுக்குரிய இக்காணிக்கையையும் என்னிடத்தில் தந்தார்கள். அதை நான் வாங்கிக்கொண்டு வந்தேனென்றார்கள்.

அது கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் புத்திரர் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களை நோக்கி வரிசை தங்கிய என் மைந்தனே! இப்பூவுலகத்தின் கண் இருக்கும் மனிதர்களின் பலவினையினால் வரும் இப்பொருளானது ஈன மென்று உம்முடைய மனதில் ஆராய்ந்து பார்க்கவில்லையோ? நல்லது, நான் அதின் ஈனத்தை உமக்கு அறிவிக்கிறேன் பாருமென்றுரைத்து, அருகிலிருந்த தபோதனர்களில் ஒருவரை நோக்கி இம்முடிப்பைச் சீலையுடன் எடுத்துப் பிழியுமென்றார்கள். அதுகேட்டு அதிலொருவர் எழுந்து அம்முடிப்பைக் கையிலெடுத்துக் கசக்கிப் பிழிந்தார். அப்பொருள் முடிப்பிலிருந்து சிழுஞ் சோரியுமாய் வடியக் கண்டு ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்களும், பக்கிர்களும் அச்சமுற்று இதென்ன புதுமையோ வென்ற எண்ணத்துடன் தீயிலிட்ட மலர்போல் தயங்கிய நின்றார்கள். இன்னமும் ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் ஆண்டவரவர்களுடைய உத்திரவில்லாமல் இத்தீமை நிறைந்த பொருளை வாங்கி வந்ததற்கு நம்மை நமது தந்தையார் என்ன சொல்வார்களோ வென்ற பயத்தினால் திகிலடைந்து நிற்கும்போது, ஹலரத் ஆண்டவரவர்கள் தங்கள் முபாறக்கான வாயைத் திறந்து ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களை நோக்கி, என் கண்ணின் மணியே! கருத்தின் நிதியே! செல்வமகனாரே! என்று கூவி இவ்வுலகத்தின் கண் உமது பிள்ளைகட்கும் பொன்னியற்றும் கீமியா தொழிலை படிப்பிக்க நான் நாடியிருந்தேன். அல்லாஹு தஆலா அத்தொழிலையு மற்ற வெத்தொழிலையும் முமக்கும் உம்முடைய பவுத்திரர்களுக்கும் ஆகாதென்றகற்றி யாதொரு வருத்தமின்றிய இத்தொழிலை உமக்கு உரிமையாக்கினான். ஆதலால் சர்வதயாபரனால் எனக்காக வரும் காணிக்கைப் பொருளடங்கலும் உமக்குரியதென்று எனக்கறிவித்ததை நிறைவேற்றும் பொருட்டே சூட்சியாக உம்மை நாகப்பட்டண மேகச்செய்து, எனக்காக வைத்திருந்த நேர்ச்சையின் பொருளை உமதுகையால் வாங்கும்படி பண்ணி வைத்தான். பற்பல ஜெந்துக்களையுங் காத்திரட்சித்து இரண மரணங் கொடுக்கா நின்ற அடங்காப் பெரும் புதுமைகளை யுடைய வல்ல பெரிய

வனின் கட்டளையை மாற்ற ஒருவராலு முடியா தாகையால் அவனது
உதிப்பின்படி நிறை வேறிற்று. ஆதலால் எனக்காக வரும் காணிக்கைப்
பொருள்களை வல்லபெரியவன் உமக்கும் உமது புத்திரர்களுக்கும்
ஹலாலாக்கி வைத்தான். கியாம நாளென்கிற நடுதீர்ப்பின் காலமட்டில்
என் பெயராலுள்ள நேர்ச்சைப் பொருளையே உமக்கும் உமது பவுத்
திரர்களுக்கும் உணவாக்கி வைத்தான். இஃதன்றி அல்லாஹு தஆலா
குர்ஆனென்னும் திருவேதத்தில் பூமண்டலத்தின் கண் வசிக்கா நின்ற
எவ்வகை ஜெந்துக்களுக்கும் அவரவர்களின் மரணகால மட்டுக்கு
மவர்களில் நாடிய உணவை, யவரவர்களுக்கு ஈவோமென்ற பான்மை
போல் உம்முடைய ஜத்தென்ற வம்ச வழியிலுதிக்கும் குத்தார் பெரு
கப்பெருக உமக்காக ஏற்படுத்திய உமது நேர்ச்சைப் பொருளையும்
அல்லாஹு தஆலா பெருகச் செய்வானாகவும்.

இஃதன்றி வாய்மையிற் சிதைவுறா வல்ல கடவுள் உமக்கும்
உமது பவுத்திரர்களுக்கும் முரித்தாக்கிவைத்த என் பேராலுள்ள
தூய்தாகிய காணிக்கைப் பொருளை உமது குடும்பஸ்தர்களல்
லாது மற்ற எவர்களாவது அபகரிக்க நாடினால், அது அவர்களுக்கு
ஹறாமா யிருக்கும். அப்பொருளை உமது பவுத்திரர்களல்லாது மற்ற
எவர்களாவது புசித்தால் அவர்களுக்கு இதோ நமது முன்னிலுற்ற
நீர் கொண்டு வந்தகாணிக்கை முடிப்பி லிருந்தொழுகிய இரத்தமும் சீழு
மாகி விடும். அவ்வியல்பாகிய காணிக்கைப் பொருளைக் கொண்டு
உமது வம்சத்தோர்கள் கியாமநாள் வரையில் குறைவில்லாத செல்வத்தி
லிருக்க ஆண்டவனுதவி செய்வா னென்று ஹலரத் மீறான் சாஹிபு
ஆண்டவரவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். அதைக் கேட்ட
ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் தாங்கள் கொண்ட
மனதச்சம் அவர்களை விட்டும் நீங்கி மன மகிழ்ந்து ஆனந்தக் கடலில்
மூழ்கி எழுந்தவர்கள் போல் சந்தோஷ முற்றார்கள். அன்று முதல்
ஹலரத் ஆண்டவரவர்களின் நேர்ச்சையில் வரும் பலவிதப் பொருட்
களையும் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களே ஒப்புக் கொண்டு
வந்தார்கள். வேறு சொற்படி நாகப்பட்டணம் போய் நேர்ச்சைப்
பொருள் வாங்கி வந்தது ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களின்
புத்திர சிகாமணிகளாகியவர்க ளென்று வருகிறது. அவர்களாவர்: ஹல
ரத் ஷாஹ் பாவா பகுறுத்தீன் சாஹிபவர்கள், ஹலரத் ஷாஹ் ஹமீ
துல் ஆசிக்கீன் சாஹிபவர்கள், ஹலரத் ஷாஹ் சுல்தான் கபீரி கலீபா
சாஹிபவர்கள், ஹலரத் ஷாஹ் சுல்தான் நூறுத்தீன் காமிலி சாஹி

பவர்கள், ஹலரத் ஷாஹ சுல்தான் சகிரி சாஹிபவர்கள் இந்த ஆறு மகத்துகளா யிருப்பர். என தன்பர்காள்! ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களுக்கு நமது நாயகர் ஹலரத் மீறான் சாஹிபவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சொல் பிசகுமோ? அவர்கள் வாக்கு மாறாத நாதாவானதால் ஒருக்காலும் அச் சொற்றவறா தென்றுணர்வீர்களாகவும்.

பாப்பாவூர் புக்க சரித்திரம்

ஹலரத் காதிர் ஒலி கன்ஜசவாயி ஷாஹுல் ஹமீது ஆண்டவ ரவர்கள் ஒரு நாள் இப்போது ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் அடங்கி யிருக்கின்ற தலத்திலிருக்கும்போது பாப்பாவூரிலுள்ள பெரிய வர்த்தகர் ஒருவர் வந்து ஹலரத்தவர்களின் பாதம் பணிந்து கைகட்டி நின்று ஆண்டவர்களே! வெகு காலமாய்த் தங்களுக்குந் தங்களோ டுற்றவர்களுக்கும் விருந்து கொடுக்க நாடியிருந்து இன்றைய தினம் என் வீட்டில் பல ஒஜீபனங்களும் பல பதார்த்தங்களும் ஆயத்தம் பண்ணி வைத்து விட்டு நான் தங்களை அழைக்க இங்கு வந்தேன். என் பேரில் தயவுசெய்து தங்கள் குமார சிகாமணி முதலிய தபோதனர் களுடன் வந்து என் மனையிற் றரித்து உணவருந்தவேண்டு மென்று மன்றாடினர். ஹலரத்தவர்கள் அவர் பேரில் அன்பு கூர்ந்து மைந்தர் செய்யது யூசுபு சாஹிபு அவர்களும் சில தபோதனர்களும் சூழ நடந்து பாப்பாவூர் சென்று அங்கு அவ்வர்த்தகரின் மனையிற் சேர்ந் தார்கள். அவர் அழகான விரிப்புகள் விரித்து அதிலோ ரிடத்தில் விலையுயர்ந்த பாமதானி போட்டுப் பசிய நிறத்தையுடைய மக்மலினால் செய்த திண்டு சாத்தி இரண்டு துடைகளுந் தங்குவதற்காகப் பச்சை நிறத்தையுடைய வெண்மையான சித்திரங்களியற்றிய சக்கிரத்தலையணை இரண்டும் அமைத்திருந்தார்கள். ஹலரத்தவர்கள் சென்றும் அவ் விரிப்பில் தங்களுக்கென்று இயற்றி யிருந்த பாமதானியில் வீற்றிருக்க ஹலரத் யூசுபு சாஹிபு அவர்களும் மற்றும் தபோதனர்களும் ஆண்ட வர்களை சூழ்ந்திருந்தார்கள்.

அவ்வர்த்தகர் மிகுந்த மரியாதையுடன் கை வாய் அலம்ப தண் ணீர் கொடுத்தபின் அறுசுவை பதார்த்தங்களோடு உணவுகளும் கனி வர்க்கங்களும் கொண்டு வந்து வைத்தார். ஹலரத்தவர்கள் பிஸ்மிற் சொல்லி ஒஜீபனந்தின்ன ஆரம்பித்த உடன் மற்றவர்களும் ஆரம்பித்து

பூர்த்தியாய் பசியாறி முடிந்தபின் அவ்வர்த்தகர் வாய் கைகழுவ நீர் வார்த்து கழுவி தீர்ந்தபின் ஆண்டவரவர்கள் ஆண்டவனை துதித்து ஷுக்ரு செய்தார்கள்.

பிறகு அவ்வர்த்தக ரெழுந்து சந்தனம் பன்னீர் தாம்பூலம் புட்ப முதலானவைகள் கொடுத்து முடிந்த வுடன் கைகட்டி நின்று ஆண்டவரவர்களை நோக்கி கற்பகத் தருவே! கருணைப் பொக்கிஷமே! நிகரற்ற நிதியமே! ஒளிவுற்ற மதியமே! அற்புத மணியே! அரும் பொருளே! பொற்கிரிப்புயத்தவரே! பொற்புறு மகத்தவரே! தயவு நிறைந்த தாயரமே! என்று பலவாறு புகழ்ந்து அடியேனுக்கு தங்களிடத்தில் ஒரு வேண்டு கோளுண்டா யிருக்கிறது அதை கிருபை கூர்ந்து அருள் புரிய வேண்டும். அது எனக்கு இரண்டு கப்பல்கள் சொந்தமாயிருக்கின்றன. அவ்விரு கப்பல்களிலும் நிறைய சரக்குகளேற்றிப் பத்தாவிய்யா வென்கிற நகருக்கனுப்பி வைத்தேன். அக்கப்பல்கள் பாயெடுத்தோடி வெகு நாளாகியும் அதைப் பற்றி யாதொரு சங்கதிகளு மெனக்குத் தெரிய வில்லை, ஆனதா லென் மனங் கலங்குகின்றது. தாங்கள் கிருபை கூர்ந்தென் மரக்கலங்களை வாவழைத் தருள வேண்டு மென்றார். இவ்வசனங்களைக் கேட்டு ஹலரத்தவர்கள் அவருக்கு யாதொரு மறுமொழியுஞ் சொல்லாமல் இருந்து விட்டு எழுந்தபோது சிறப்பாகிய கைகளின் இரண்டு அக்குள்களிலும் வரிசை தங்கிய இருதுடைகளின் கீழுற்ற வட்டணைகளை எடுத்துக் கொண்டெழுந்து மனையின்கண் நடக்கும்போது அவ்வர்த்தகர் மனதில் ஆண்டவரவர்கள் இரண்டு வட்டணைகளையும் கொண்டு போகிறார்களே! ஒன்றைப் போட்டு விட்டு ஒன்றைக் கொண்டு போனால் நலமாச்சுதே யென்றெண்ணினார். ஹலரத்தவர்கள் சகல உதிப்புகளையுமறிந்தநாயகமானதால் அவரின் எண்ணத்தையறிந்து ஒரு வட்டணையைப் போட்டு விட்டு ஒரு வட்டணையை கொண்டு வெளியிலாகி அவ்வட்டணையை ஆகாயத்தில் எறிந்து விட்டு தங்கள் புத்திர சிகாமணியும் தபோதனர்களும் சூழ நடந்து நாகூர் வந்து தங்களிருப் பிடத்தில் சேர்ந்தார்கள். சில நாளைக்குப் பின் அந்தச் சவுதாகருடைய கப்பலில் ஒன்று வந்து சேர்ந்தது. அவ்வர்த்தகர் அந்தக் கப்பலில் வந்த மீகாமன் முதலானவர்களை நோக்கி, இன்னமொரு கப்பலெங்கே யென்று வினவினர். அதற்கு அவர்கள் எங்கள் எஜமானே! இரண்டு கப்பலும் விரைவாக ஓடிவரும்போது இரண்டு கப்பலிலும் இரண்டு பலகை பெயர்ந்ததினால் கப்பலுள்ளே தண்ணீர் நிரம்பிற்று. நாங்களும் பூவெம்பா முதலான கருவிகளைக் கொண்டும்

தண்ணீர் இறைத்தும் அதற்கடங்காமல் மேலும் மேலும் கணக்கற்று தண்ணீர் சுரந்துக் கொண்டு இரு கப்பலும் ஆபத்துக் கிடமாயிருந்தன. அப்போது திடீரென்று நாங்களேறி வந்த கப்பல் மாத்திரம் தண்ணீர் மட்டிட்டுச் சீராக கப்பல் ஓடப்பட்டது. நாங்கள் அதே முஜ்றுப் பிடித்து ஓடி வந்தோம்; மற்றொரு கப்பல் நாங்கள் பார்த்திருக்க லவண சமுத்திரத்தில் தாழ்ந்து போய் விட்டதென்றார். அது கேட்டு அவ் வர்த்தகர் மனம் வருந்தினவராக நாகூர் வந்து ஹலரத் ஆண்டவரவர் கள்பால் வந்து பாதம் பணிந்து, ஆண்டவர்களே! தங்கள் கிருபையினாலே ஒரு கப்பல் மட்டும் வந்து சேர்ந்தது. மற்றொன்று சமுத்திரத்தில் தாழ்ந்து விட்டதாக சொல்லுகிறார்கள், அப்படி தாழ்ந்து போய் விட்ட காரண மென்ன? அதை நான் அறிய விரும்புகிறேன் என்றார். அது கேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் ஓ செல்வனே! நான் உன் மனையிலிருந்து எழுந்தபோது என் கைகளிரண்டிலு மெடுத்த இரண்டு வட்டில்களில் நீ யொன்றைப் பொருந்தினதால் உன்னுடைய கப்பல் ஒன்று மீண்டு வந்தது, மற்றொன்றைப் பொருந்தாததால் உன் கப்பல் மற்றொன்று தாழ்ந்து விட்டது, என்று பதிலளித்தார்கள். அதை அறிந்து அவ்வர்த்தகன் புதுமையாகி தாழ்ந்து போன நமது கப்பலுக்கு நாமே வினையாய் நின்றோம் எனமதித்துக் கொண்டு, ஹலரத் ஆண்டவரவர்களை வந்தனஞ் செய்தெழுந்து விடை பெற்றுக் கொண்டு தன் நகர் போய் சேர்ந்தார். எனதன்பர்களே! ஆழிய கடலில் தாழப் போன கப்பலைப் பாதுகாத்திரக்ஷித்த ஆண்டவர்கள் நம்மனைவருக்குங் கிருபை செய்து இரட்சிப்ப தரிதெல்லவென்று உணர்வீர்களாகவும்.

இராயகுஞ்சாலி மரைக்காயரின் பிணிமாற்றிய சரித்திரம்.

ஹலரத் குத்பு ஷாஹுல் ஹமீது வலியுல்லா ஆண்டவரவர்கள் நாகூரில் இருக்கிற போது நாகப்பட்டணத்தா ரெல்லாம் என்னே சமூம், ஆண்டவரவர்கள் பால் வந்து கண்டு, பாதம் பணிந்துப் போற்றிப் போகிறது வழக்கமா யிருந்தது. அக்காலத்தில் அந்நாகப் பட்டிணத்தில் பெரும் செல்வந்தரும் ஊர்தலைவருமான இராய குஞ்சாலி மரைக்காய னென்பவர் இதை அறிந்து அவ்வூர் ஜனங்களை யழைத்துக் கஞ்சாக் குடிக்கின்ற பகீரிடத்தில் உங்களுக்கென்ன வேலை? நீங்களொரு

வரும் போக வேண்டாமென்று பயமுறுத்தி தடுத்தார். அவர் ஊர் தலைமைத் தனத்தையுடையவரானதால் அவருடைய சொல்லுக்கு வழிப்பட்டு அவ்வூர் ஜனங்கள் ஒருவரும் ஹலரத் ஆண்டவரவர்களிடத்தில் வராதிருந்தார்கள்.

ஹலறத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்களைத் தூஷணித்த அவ்விராய குஞ்சாலிமரைக்காயரின் வாயில் அப்பவே பிளவையொன்று கிளம்பி வெடித்துப் புண்ணாகி அதில் நின்று கிரிமிகள் புறப்பட்டன. அதனால் அவரின் சரீரங்களெல்லாம் நோயுண்டு வருத்தமாகி மிகுந்த வாதைபட்டு மனம் வருந்தி நொந்து கிடந்தார். எத்தனையோ பரிகாரங்கள் செய்தும் ஒன்றிலும் பிரயோஜனப் படாமல் வருந்தியும் நமக்கு இவ்வியாதி இன்ன காரணத்தினால் உண்டானதென்று அவர் அறியவில்லை.

அப்படி இருக்கும் போது ஒரு நாள் அந்நகரில் தமது சினேகிதராகிய செய்யிது மகுதூமென்கிறவரை யழைத்து அவரிடத்தில் தனக்கிருக்கும் வியாதியின் துன்பத்தைச் சொல்லி நான் இஸ்லாம் மார்க்கத்துக்கு அணுவளவும் தவறாமல் நடந்து வருகிறேன். மார்க்கத்துக்கு விரோதமாக ஒரு போதும் நடந்தவனில்லை. அப்படியிருக்க எனக்கு இவ்விதப்பிணி வருவதற்கு காரண மென்ன வென்று வினவினார் அதற்கு அந்த செய்யிது மகுதூம், நீரறியவில்லையா? தூய்தாகி ஒலிகள் சிகாமணியான ஆண்டவர்களை நீர் தூஷணித்ததற்காக உமக்கு இவ்வாறு பிணி நேரிட்டிருக்கிறது. இஃதெவ்வித அவிழ்தத்தாலும் சொஸ்தமாக மாட்டாது. அந்த நாதாவாகிய ஆண்டவர்களிடத்திற் சென்று அவர்களின் பாதம் பணிந்து வந்தனம் செய்து மன்றாடி அவர்களின் கிருபையை பெற்றால் இப்பிணி உடனே தீரு மென்றார். அதற்கந்த இராய குஞ்சாலிமரைக்காயர், செய்யிது மகுதூமே! தாங்கள் சொன்னது மெய்தான். ஹலரத் ஆண்டவரவர்களின் தகுதியே அறியாமல் நான் மொழிந்த வசனமே எனக்கு வினையாய் முடிந்தது. ஆகையால் நான் ஆண்டவர்களுடைய பாதம் பணிந்து மன்னிப்பு தேட சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஹலரத் ஆண்டவரவர்களிடத்திற் நான் போனால் என் பேரில் கோபங் கொள்வார்களென்ற அச்சந்தான் எனக்கு மிகுதியாயிருக்கிறது; தயவு செய்து தாங்களு மென்கூட வந்தால் தங்களின் சிபாரிசுவினால் ஹலரத் ஆண்டவரவர்களை யடுத்து மன்றாடி என் பிணியை நீக்கிக் கொள்வே னென்றார்.

அது கேட்டு அந்த செய்யிது மருதூ மென்பவர் நல்ல தென்று அவரை சிவிகையி லேற்றிக் கொண்டு நாகூர் வந்து அவரை ஓரிடத்தி லமைத்து விட்டுத் தான் மாத்திரம், ஆண்டவரவர்களின் திருச் சமுகத்திலாகி வணங்கி நின்று ஆண்டவர்களே! நாகப்பட்டிணத்தி லுள்ள இராயகுஞ்சாலி மரைக்காயர் தங்களைப் பற்றி மதப்பான வார்த்தைகளைச் சொன்னதால் அவருக்குத் தீமையான பிணியுண்டாகி மிகவருந்தி மனம் நொந்து தங்கள் சமுகத்தில் வரப்பயந்து என்னைச் சிபாரிசாக அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றார். அவரோ நம் முடைய நாயகம் ஜகத்சற்குரு காத்திமுல்லன்பியா முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மார்க்க நெறிமுறை தவறாது நடப்பவராதலால் ஆண்டவனுக்காகத் தாங்கள் பேரில் கிருபை செய்து அவரின் பிழையை மன்னித்து இரக்ஷித்தருள வேண்டு மென்றார்.

ஆண்டவரவர்கள் இரட்சகரானதால் அதைக் கேட்டதும் மன மகிழ்ந்து அவர் பேரில் கிருபைவைத்து அவரை இங்கழைத்து வாரு மென்று உத்திரவு செய்தார்கள். ஆண்டவரவர்களின் இக்கருணை மொழிகளைக் கேட்டதும் அந்த செய்யிது மருதூமென்பவர் ஓடோடி யும் போய் அவ்விராய குஞ்சாலி மரைக்காயரை வெகு துரிதமா யழைத் துக்கொண்டு வந்து ஹலரத்தவர்களின் முன்பில் விடுத்தார். அவர் ஆண்டவரவர்களைக் கண்ட மாத்திரத்தில் நடுநடுங்கிப் பாதம் பணிந்து ஆண்டவர்களே தங்களின் மகிமையை எள்ளத்தனையும் அறியாத இப் பாவி வாய் கூசாமல் தங்களை தூஷிக்கக் கூடிய மொழிகளை என் வாயால் மொழிந்து விட்டேன்; அதனால் நானடைந்த கஷ்டம் இத்தனை அத் தனையல்ல, இம்மட்டோடு என்னை மன்னித்து ரக்ஷித்தருள வேண்டு மென்று வாதை பொறுக்காமல் வாய் விட்டழுது கெஞ்சினார்.

அதுகேட்டு ஆண்டவரவர்கள் மனதிரங்கி, அவரை அருகே அழைத்து அவருடைய வாயில் தங்கள் முபாறக்கான வாயிலுள்ள தேவாமிர்தம் போன்ற உமிழ் நீரை உமிழ்ந்தார்கள். உடனே அவரின் பிணிகளெல்லாம் நீங்கிச் சரீரத்தில் பலமும் அழகுண்டாகி மாசற்ற தங்கம் போல் முகமிலங்கத் தோன்றினார். அப்போது அவ்விராயகுஞ் சாலி மரைக்காயர் ஆண்டவர்களின் பாத கமலங்களில் கண்களை வைத்துப் புரட்டி முத்தமிட்டு ஆண்டவர்களே! ஏழையை இரட் சித்தது போல் என் குடும்பத்தார் என் நகரார்களையு மிரட்சிக்கும் பொருட்டுத் தாங்கள் தயவு செய்து நாகப்பட்டணம் வரவேண்டு மென்று மன்றாடினார். ஹலரத் ஆண்டவரவர்கள் நல்லதென்று ஒப்புக்

கொண்டு மரைக்காயரோடு நாகப்பட்டணம் பிரயாணப் பட்டார்கள். அவ்விராய குஞ்சாலி மரைக்காயர் ஆண்டவரவர்களை யழைத்துக் கொண்டு நாகப் பட்டணத்திற் சென்று, அவரியற்றிய குத்பா பள்ளி யிலிருக்கச் செய்து மூன்று நாள் மட்டில் மிகு மரியாதையோடு வைத்து தாமும் ஊரார்களுமாக அறுசுவை பதார்த்தத்தோடு பல விருந்துகளும் அளித்து அவரும் அவ்வூரார்களும் ஹலரத்தவர்களைப் பணிந்துற்று மிகுந்த மரியாதையுடன் சகல பணிவிடைகளுஞ் செய்து வரும்போது, ஹலரத்தவர்களின் பாதம் பணிந்து ஆண்டவரவர்களே! இந்நகரார் என்னாளும் செழிப்புடனிருக்கும்படி தாங்கள் ஆண்டவனை வேண்டிக் கொள்ள வேண்டு மென்று கெஞ்சினார்கள். ஆண்ட வர்கள் அவ்வூரார் பேரில் கிருபை வைத்து இந்நாகப் பட்டணத் தார் என்னாளும் சிறப்பும் செல்வமும் பொருந்தி வாழ்வார் களென்று வாக்கு சொல்லிவிட்டு பிரயாணப்பட்டு நாகூருக்கு வர ஆயத்தமான போது, அவ்விராய குஞ்சாலி மரைக்காயரும் அவ்வூரார் முதலான சகலரும் ஆண்டவரவர்களோடு வந்து ஹலரத்தவர்கள் நாகூர் வந்து தங்கள் ஜாகையிற் சேர்ந்த பின் ஆண்டவரவர்களிடம் உத்திரவு வாங்கிக் கொண்டு தங்களுக்குரிய நாகப்பட்டணம் போய் சேர்ந்தார்கள். ஹலரத்தவர்கள் தங்களிருப்பிட முற்றார்கள். என் சினேகிதர்களே! இராய குஞ்சாலி மரைக்காயரின் துஷ்டப் பிணியை நீக்கிய ஆண்ட வர்கள்நம்மனைவரின் தரித்திரம் பிணி முதலான துன்பங்களனைத்தை யும் நீக்கி ஆட்கொள்வார்களாகவும்.

வாஞ்சூர் புக்க சரித்திரம்.

ஹலரத் கவுது ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் மிகு மாட்சிமையோடு நாகூரிலிருக்கும்போது ஒரு நாள் தனித்த விடத்திற் தரித்து ஜில்லாவென்கிற நேம நிஷ்டை புரிய வேண்டு மென்கிற வெண்ணங் கொண்டதால், ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹி பவர்களை நாகூரிலிருக்கும்படி சொல்லி விட்டுச் சில பக்கீர்களை யழைத் துக்கொண்டு கீழவாஞ்சூருக்குப் போய் அங்கொரு தனித்த விடத்தில் ஒரு கபறளவு பள்ளம் வெட்டச் சொல்லி அதனுள் தாங்களிருந்து கொண்டு அதன் மேலே பலகையால் மூடச் சொல்லி நாற்பது நாள் மட்டில் யாதொரு அன்னபான மின்றி அதனுள்ளிருந்து ஜெபதபஞ் செய்து தங்களெண்ணம் நிறைவேறிய பின் வெளியில் வந்து கஸ்தூரி

செய்யவேண்டு மென்று நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேராலும், ஹலரத் குத்துபு றப்பானி கவுது சமதானி முஹியித்தீன் அப்துல் காதிரில் ஜீலானி ஆண்டவர்கள் பேராலும் பாத்திஹாவோதி (அரிசி முதலிய பற்பல பண்டங்களின்றி) தாங்கள் கல்வத்திருந்த பள்ளத்தில் கையை நுழைத்து அதீதமாகிய பதார்த்தங்களாற் சமைத்த சாதங் கறிகளை யெடுத்து எல்லோர்களுக்கும் பசி தீரக் கொடுத்தார்கள். அதை ஜனங்கள் வாங்கி புசித்து அவ்வற்புத போஜனத்தால் மனங் குளிர்ந்து ஆனந்தங் கொண்டார்கள். ஹலரத் ஆண்டவரவர்கள் அவ்விடத்தில் ஓர் பள்ளி கட்டிட மியற்றும்படி உத்திரவு பண்ணி விட்டு நாகூர் வந்து தங்களிருப்பிடத்திற் சேர்ந்தார்கள். அவ்வாறங்ஙனம் ஓர் கட்டிடம் மியற்றப் பெற்று நாளதுவரை பிரதி வருஷங்கள் தோறுந் திருவிழா நடந்தேறி வருகின்றன. மேலும் மிகுந்த ஜனங்களின் முராதுகளும் நிறைவேறி வருவதால் அவ்விடத்திலநேகர் சென்று தெரிசனை செய்து காத்திருந்து பாத்திஹாவோதி ஹலரத் தவர்கள் பேரால் கந்தூரி கொடுத்து வருகின்றார்கள்.

புளியந்தரு வசனித்த சரித்திரம்.

ஹலறத் ஆஷிக் ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவரவர்கள் சாகைசெய்துக் கொண்ட புளியமரத்தின் அருகில் தனித்திருக்கும் போது ஒருநாள் அந்தமரம் என்மீதிற்சாய்ந்திருக்கிற காரணிதாகிய காரண நாயகமே! யென்று ஆண்டவரவர்களைக் கூவிஅழைத்து தங்களிடம் நான் ஒரு விண்ணப்பம் செய்துக் கொள்கிறேன். அதாவது மனிதர்களென்னை மலட்டு மர மென்று சைக்காமலிருக்க வேண்டியதற்காக நான் பூத்துக் காய்த்துப் பழுத்திருந்தால் போதும், ஆனால் என்னுடைய வித்து வெளியாகாமலிருக்கும்படி தாங்களெனக்கு வரங் கொடுக்க வேண்டு மென்று கேட்டது. அதுகேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் ஓ புளியந் தருவே! இப்பூமண்டலங்களில் சர்வ வல்லபக் கடவுளினாலுண்டாகிற வஸ்துக்களடங்கலும் வித்துகளுக்கு கிளைகோத்திரமுண்டாக வேண்டுமென்று விரும்புகின்றனவே, நீமாத்திரம் அதை யேன் விலக்குகின்று யென்றார்கள். அதற்கு அந்தமரம் ஆண்டவர்களே! தங்கள் சிறப்பாகிய திருமேனி என்பேரில் படும்படிக்குச் சாய்ந்திருந்த பறக்கத்தும் பெருமையுமெனக்குப்போதும். எனக்குக்கிடைத்த

பாக்கியம் இவ்வுலகத்தில் எந்த மரத்திற்கும் கிடைத்திருக்கவில்லை. ஆனதால் என்னில் நின்றும் வித்து வெளிப்படுமாகில், பற்பல தலங்களிலும் விழுந்து பயிராகவேண்டிவரும். அதில் அருவருப்பாகிய தலங்களும் உண்டாயிருக்கும். முபாறக்கான திருமேனிபட்ட என் வித்து தீமையாகிய இடங்களில் முளைக்கிறது எனக்குப் பொருத்தமில்லை. ஆனதால் என்கேள்வியை நிறைவேற்றி வையுங்களென்று விண்ணப்பித்து கொண்டது. அதுகேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் அத்தருவின் பேரில் கிருபை வைத்து உன்னுட்டத்தின் படி பூத்துக்காய்த்துப் பழுத்திருப்பாய், உன்னில் நின்றும் வித்துண்டாகாமல் போகக்கடவதென்றும் நீ நீண்டகால மட்டில் ஜீவித்திருப்பாய்; உன்னுடைய இலை பட்டை இவைகளை நசலாளிகள் தின்றால் அவர்களின் துஷ்ட பிணிகளெல்லாம் நீங்கி நற்சுகம் பெற்று வாழ்வார்களென்றுந் திருவாக்கிட்டார்கள். அன்றுமுதல் அந்தப் புளியமரம் மிகுந்த செழிப்புடன் நீண்டகாலமாக நின்று காய்த்துப் பழுத்து வித்தில்லாதிருந்து சில நாளைக்குமுன் பட்டுப் போய்விட்டது. என தன்பர்களே! ஓர் மரங் கேட்டு கேள்வியை நிறைவேற்றி வைத்த ஆண்டவரவர்கள் பேரில் என்றும் அன்பும் ஆசையும் வைத்திருப்போமானால், நம்மை அவர்கள் என்றும் பாதுகார்த்து நம்முடைய நாட்டங்களையும் நிறைவேறச் செய்வார்களாகவும், ஆமீன்.

செங்குவளை மலர் தோற்றிய சரித்திரம்.

ஹலரத் குத்பு ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவரவர்கள் மிகுந்த சிறப்புடன் நாகூரில் வீற்றிருக்கும்போது ஒரு நாள் ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபு ஆரிபுபில்லாஹி அவர்களைக் கூட்டிக் கொண்டு முதுபகு வென்கிற கட்டிடத்தினுட் சென்று, அங்கிருக்கின்ற கிணற்றருகில் யூசுபே! இக்கிணற்றைப் பாரு மென்றார்கள். ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் அக்கிணற்றைப் பார்த்தபோது புதிதாய்ச் செங்கழு நீர்க் கொடியுமிலையு முண்டாகி அதிம்மிகுத்த அழகினையுடைய புட்பமொன்று மலர்ந்து சிவந்திருக்கக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்து பார்த்த கண்ணைப் பறித்து வாங்காமல் நிற்கும் போது ஹலரத்தவர்கள் யூசுபே! இக்கிணறுனது மிக்க தகுதியும், அநேக அதிசயங்களையும், மேன்மையையும் உடையதாயிருக்கும்.

நசலாளிகள் இக்கிணற்றின் தண்ணீரை யெடுத்துப் பருகினால் அவர்களுடைய நசல்களெல்லாந் தீர்ந்து நல்ல சுகம் பெறுவார்கள். இஃதன்றி இவ்வூரிலும் இதை யடுத்து இருக்கிற மற்றைய ஊர்களிலும் பலவித முசிபத்துகள் ஆபத்துகள் ஏதும் நடக்கிறதா யிருந்தால், அங்கு நடக்குமுன் இக்கிணற்றில் இப்போது நீர் கண்ட செங்கு வளைப்பூ உண்டாகிறதுந் தவிர வெள்ளிக்கிழமை உச்சிநேரத்தில் நமது தறுகாவில் சந்தனமழையும் பெய்யு மென்றுரைத்து விட்டு தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். மனிதர்களே! அந்த நாதா சொன்னபிரகாரம் அவர்கள் பரமகதி சார்ந்த பின்னர் பஞ்சங்களுண்டாகிற முன்னுக்கு பெரும் புசல்களடிக்கிறதின் முன்னுக்கும் தஞ்சை நகரின் பேரில் சென்னையின் அரசராகிய நவாபு படை எடுத்து வருமுன்னும், ஹைதர் கலகம் வந்ததற்கு முன்னும், திப்பு சுல்தான் படையில் மவுத்தாகிறதற்கு முன்னும் மேலே சொல்லிய அடையாளங்கள் உண்டானதாக அந்த ஆண்டவரவர்களின் ஆகமத்திலே பெரியோர்களால் எழுதப் பட்டிருக்கின்றது.

வைப்பருளிய சரித்திரம்.

ஹலரத் செய்யிது மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் இவ்வுலக மெல்லாம் புகழ் பெற்று தாமரைத் தடாகங்கள் சூழ்ந்திரா நின்ற மேன்மை தங்கிய நாகூரில் வசித்திருக்கும்போது ஹலரத் ஆண்டவரவர்களின் அதிசயங்களை அடிக்கடி கேள்வியுற்று, எந்தநேரமும் ஆண்டவரவர்களிடத்திற் வந்திருந்து பணிவிடை செய்து கொண்டிருந்த கரையார்கள் ஒருநாள் கூட்டமாக வந்து ஹலரத் தவர்களின் பாதம் பணிந்து மிகு மரியாதையுடன் கைகட்டி நின்று, மணியே! மதியே! மலரே! அருமருந்தே! குருவே! மாதவமே! என்று பலவாறு புகழ்ந்து ஆண்டகையே! நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே பாடுபட்டுச் சிலபொருட்களைச் சேகரித்து எங்களின் தலைவனுடைய கொடுமைக்களுக் காற்றாது அப்பொருட்களை ஒன்று சேர்த்து நிலத்தின்கண் எங்கள் யாவருக்கும் பொதுவிற் புதைத்து வைத்திருந்தோம். சிறிதை சில நாட்களுக்குப் பின் இப்போது அப்பொருளை எடுத்தாள வேண்டு மென்றெண்ணி அவ்விடத்தை வெட்டிச் சோதித்துப் பார்த்தும் காணாமையால், மறுபடியு மற்றிடங்களிலும் வெட்டி வெட்டிப் பார்த்தும் எங்கள் உடலயர்ந்து போனதே தவிர நாங்கள் வைத்த

அப்பொருளைக் காணமுடியவில்லை. ஆனதால் நாங்களேங்கி மயங்கித் தியங்கிப் பரிதவிக்கிறோம். இதுவென்ன கொடுமையோ? மாயமோ? அல்லது வஞ்சகமோ? யார் செய்த வாதோ வென்றெண்ணி வேறு கதியில்லாமல் தங்களின் பாதம் புயமடைந்தோம். எங்கள் பேரில் அன்புவைத்து அப்பொருள் வெளியாகும்படி கிருபை செய்தருள வேண்டு மென்றழுது நின்று மன்றாடினார்கள்.

ஹலரத் ஆண்டவரவர்கள் அவர்கள் பேரில் அன்புவைத் திரங்கி நல்லது, நீங்களஞ்ச வேண்டாமென்று உரைத்து விட்டு, ஹலரத் ஆண்டவரவர்கள் ஒஹுாச் செய்யுங் கலசத்தை எடுத்து அதனுள்ளிருந்த தண்ணீரில் தாங்கள் திருவாயால் ஓதியூதி அத்தண்ணீரை கரையார் பால்கொடுத்து இத் தண்ணீரை நீங்கள் பொருளை புதைத்து வைத்திருந்த விடத்தில் தெளித்து விட்டு பிறகு அவ்விடத்தை குழி வெட்டிப் பாருங்கள், நீங்கள் புதைத்த பெரும்பொருள் உங்களுக்குத் தோன்றவரும்; எடுத்துக் கொள்ளுங்களென்று அமிர்த வாக்கிட்டார்கள். அதைக் கேட்டு அக்கரையார்கள் ஆனந்த முற்று அந்நீர்பாண்டத்தை வெகு மரியாதையோடு கைக்கொண்டு வெகுதுரிதமாய் நடந்து அந் நிலத்தின் கண்தெளித்து விட்டு, பிறகு மண்ணை வெட்டிப் பார்த்தார்கள். அவர்கள் வைத்த பொருள் யாவும் குறைவின்றி இருக்கக் கண்டு ஆச்சரிய முற்று, மனமகிழ்ந் தெடுத்து வெளியில் குவித்து பின்னர் அப்பொருளைச் சுமையிட்டு எடுத்துக்கொண்டு வந்து ஆண்டவரவர்களின் திருச்சமுகத்தில் குவித்து வைத்துக்கொண்டு ஆண்டவர்களை நோக்கி ஆண்டவர்களே! தாங்கள் அருளிய பிரகாரம் அந்நீரை எடுத்துக்கொண்டு போய் அந்நிலத்தில் தெளித்து பிறகு வெட்டிப் பார்த்து இப்பொருளை வெளியாக்கினோம். ஆதலால் இப்பொருளைத் தாங்களே அனுபவித்துக் கொள்ளவேண்டு மென்று உரைத்து நின்றார்கள். அதுகேட்டு ஹலரத் ஆண்டவரவர்கள் இப்பொருள் முழுதும் உங்களுக்குடையதே; இப்பொருளிலெனக்கு இச்சை யில்லை, நீங்களே கொண்டு போங்களென்றுத்தாரஞ் செய்தார்கள். அம்மனிதர்கள் அப்பொருளைப் பங்கிட்டெடுத்துக்கொண்டு மனமகிழ்ந்து, ஆண்டவர்களின் பாதம் பணிந்தெழுந்து உத்திரவு பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

ஆண்டவரவர்களின் வபாத்து.

ஹலரத் செய்யிது ஷாஹ சுல்தான் குத்புல் அக்தாப் ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் ஹிஜ்ரி தொளாயிரத்திப் பத்தாம் வருடத்தில் மாணிக்கப் பூரென்னுந் திரு நகரத்தில் அவதரித்துப் பதினெட்டு வயதுவரையில் தாங்கள் தந்தையாரிடத்தில் தரித்திருந்து வேதமுதலிய சகல கலைக்யானங்களெல்லாங் கற்றுக் கொண்டு குரு உபதேசம் பெறவேண்டி, குவாலியர் நகர் சென்று ஹலரத் முஹம்மது கவுது குவாலியா ஆண்டவரவர்களிடத்தில் முரீது பெற்று அங்கு பத்து வருடம் வரை இருந்த பின்பு, அங்கிருந்து புறப்பட்டு பன்னிரண்டாண்டு வரையிலும் பரதேச சஞ்சாரஞ் செய்து பல நாடு நகரம் சுற்றி அநேக அற்புதங்களை வெளியாக்கிவித்து கடைசியாக நாகூர் வந்து மிருந்த காட்சிகளுடன் இருபத்தெட்டு வருடமமைந்திருந்தார்கள். ஆக வயது அறுபத்தெட்டான போது, அன்று ஹிஜ்ரத்து தொளாயிரத்தி எழுபத் தெட்டாவது வருடம் ஜமாதுல் ஆகிர்மாதம் பத்தாம்தேதி வெள்ளிக்கிழமை இரவானவுடன், மிகுந்த மேன்மையுந் தகுதியுந் தங்கிய முதுபமென்னும் நான்கு மூலையாயிருக்கின்ற மண்டபத்தின் வடகிழக்கு மூலையின் கண் பிஸ்தருச் செய்து வீற்றிருந்து இஷா தொழுகையைத் தொழுது முடித்த பின்னர் சர்வ தயாபரனால் தங்களுக்கு நேமித்திருந்த மௌத்து நாளையும் வேளையும் மின்னதென்றறிந் திருந்தமையால் அவ்விரவின் கண் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களை யருகிலழைத்திருத்தி, என் கண்ணின்மணியே! (அல்மௌத்து ஜஸருன் யூசுலுல் ஹபீபி இலல் ஹபீபு) தவமகனே! மவுத்தாகிறது ஒரு பாலமாக விருக்கும். அது எப்படிப்பட்ட பாலமானால் எந்த ஒன்றில் உகப்பு வைத்திருக்கிறானோ, அந்த உவப்பான வஸ்தளவில் அவனை சேர்த்து வைக்கிற பாலமாயிருக்குமென்றுரைத்து அல்லாஹு தஆலா எனக்கமைத்த முடிவு காலமாகிறது இப்போது வந்து விட்டது. நான் அவனளவில் யாத்திரையாகப் போகிறேனென்று அந்தரங்கமாகச் சொன்னார்கள். சொல்லக் கேட்ட ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் உடற் பதறி திகைத்து மனநிறைந்த துயர் கொண்டு நடு நடுங்கி உடலயர்ந்து முகம் வாடி அபய சத்தமிட்டு கண்களி லிருந்து தாரை தாரையாய் நீரோட அழுதார்கள். எனதன்பர்களே! ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் சகல அறிவுகளையுந் தேர்ந்த நாதாவாக விருக்க எவ்வாறழுதார்களென்றெண்ணுவீர்கள்?

ஆனால் நீங்கள் யோசித்துப் பாருங்கள். நமது நாயகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வபாத்தை யனுபவித்த போது அவர்களின் இரண்டாவது கலீபாவாகவும், மாமனாராகவும் ஆகியவரும் கல்வியில் மஹா தேர்ச்சி பெற்றவர்களுமான அமீறுல் மூமினின் உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மனமுருகி தன்னை மறந்து மனமருண்டு வாட்படையை உறையை விட்டு நீக்கிக் கையிற் பிடித்துக் கொண்டு எங்கள் நபி நாயகம் அவர்கள் வபாத்தாகவில்லை, யாராகிலு மொருவன் எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை வபாத்தாகி விட்டார்க ளென்று சொல்வானாகில் இவ்வாளினால் இரண்டாய் பிளந்தெறிவேன் என்று புலம்பிக் கொண்டிருந்தார்களே யானால், ஹலரத் ஆண்டவரவர்களின் மவுத்தைக் கேட்டு ஹலரத் முஹம்மது யூசுபு ஆண்டவரவர்கள் எப்படி அழாம லிருக்க முடியும். கூக்குரலிட்டு ஹோவென்றழுத மகத்துவந் தங்கிய ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களின் குரலோசையைக் கேட்ட பக்கீறுகளெல்லாம் மனம் பதறி ஒடி வந்து ஆண்டவரவர்கள் பால் அடைந்து மன மயங்கி துக்கமுற்று சஞ்சலித்தழுது நின்றார்கள். அத்தருணத்தில் ஹலரத் ஷஹின்ஷாஹ் பாதுஷா ஆண்டவரவர்கள் மிகவும் துக்கமுற்று அழுது கொண்டிருந்த மகனார் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களை அருகிலழைத்து வைத்துக் கொண்டு, மகனே! நம்முடைய மவுத்துக்காக நீரேன் சலிக்கிறீர்? உலகத்தின் கண் உருவெடுத்து வந்த ஜீவ ஜெந்துக்களில் மரணமில்லா திருப்பதுவுமுண்டோ? ஆதம் அலைஹிஸ்ஸலா முதலாய இலட்சத் திருப்பதினாலாயிர நபிமார்களும் வபாத்தை யனுபவித்தார்க ளென்பதையும், நம்முடைய ஆண்டவரவர்கள் நபியுர் றஹ்மத்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களும், அவர்களின் கலீபாக்களும், தோழர்மார்களும், பவுத்திரர்களும் வபாத்தை அனுபவித்தார்க ளென்பதையும், நீரறியவில்லையா? ஆகையால் உயிரெடுத்தவைகளனைத்தும் இறப்பது திடனாக இருக்கும். ஆதலால் என்னுடைய மவுத்தை நினைத்து நீரிங்கனம் அழ வேண்டாமென்று தேறுதல் கூறி அழுகையை மாற்றினார்கள்.

பிறகு உம்முடைய பிள்ளைகளை யழைத்து வாருமென்றேவினார்கள். அது கேட்டு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் வெகு சுறுக்கிற் சென்று தங்கள் மைந்தர்களாகிய 1-வது ஹலரத் ஷாஹ் ப்ர்வா பகுறுத்தீன் சாஹிபவர்களையும், 2-வது ஹலரத் ஷாஹ் ஹமீது

ஆஷிக்கீன் சாஹிபு அவர்களையும், 3-வது ஹலரத் ஷாஹ் சுல்தான் கபீர் சாஹிபவர்களையும், 4-வது ஹலரத் ஷாஹ் சுல்தான் ஹக்கானீ சாஹிபவர்களையும், 5-வது ஹலரத் ஷாஹ் சுல்தான் நாஹுத்தீன் காமிலீ சாஹிபவர்களையும், 6-வது ஹலரத் ஷாஹ் சுல்தான் சகீரி சாஹிபவர்களையும், 7-வது செய்யிது பீவீ சுஹறா நாச்சியார் அவர்களையும், 8-வது செய்யிது பிவீ பாத்திமா நாச்சியார் அவர்களையும் ஆக இந்த எட்டு பவுத்திரர்களையும் ஒருங்கே அழைத்துக் கொண்டு வந்து ஆண்டவரவர்கள் சமுகம் விட்டார்கள். ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவர்கள் அப்பிள்ளைகளை யெல்லாம் சமுகத்தில் வைத்துக் கண் குளிர நோக்கி அதில் மூன்றுவது பிள்ளையாகிய ஹலரத் ஷாஹ் சுல்தான் கபீர் சாஹிபவர்களை எப்போதும் மிகுந்த கிருபையுடன் மடிமீது வைத்திருக்கிற வழக்கம்போல் தங்கள் முபாறக்கான மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, சிறப்புந் தகுதியுந் தங்கிய இருகைகளையு முயர்த்தி அரிய பெரியவா! நித்தனே! சுத்தனே! ஆதியே! அரும்பொருளே! அடங்காப் பெரும் வாழ்வே! யென்று பலவாறு ஆண்டவனை புகழ்ந்து துதித்து, இப்பிள்ளைகளையும் இப்பிள்ளைகளின் சந்ததிகளையும் என்றும் சிறப்பாக்கி வைப்பாயாக. இக்குடும்பத்தை என்றும் மகத்துவமுள்ள குடும்பமாக்குவாயாக! வென்று துஆ செய்து முடிந்த பின் அப்பிள்ளைகளை யெல்லாம் அன்னையரிடத்திற்கு அனுப்பி விட்டார்கள்.

பிறகு தங்கள் தவப்புத்திரர் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களை நோக்கி மகனே! நான் இன்று தஹஜ்ஜத்து தொழுகையின்போது மௌத்தாகி விடுவேன். நான் மௌத்தை யனுபவித்த பின்னர் ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம் எனக்கு முன் சொன்னது போல் நடப்பிக்க வேண்டு மென்றுரைத்து விட்டு, முதுபகென்னு மண்டபத்தின் கண் தாங்கள் வீற்றிருக்குஞ் சாகையில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி அங்ஙனம் ஒரு பெட்டியில் கபன் துணி சுருமா கர்ப்பூரம் பரிமளம் இவைகளிருக்கின்றன. அவைகளை எடுத்து ஆயத்தஞ் செய்து வைத்துக் கொண்டு இம்முதுபகின் தென்பாகமாய் நான் முன் பிஸ்தறுச் செய்திருந்த தலத்தில் சுற்றித் திரைகட்டி அதனுள் என் மையத்தைத் தூக்கி வைத்து நீர் மாத்திரமிருந்து குளிப்பாட்ட வேண்டும். எம்மைக் குளிப்பாட்ட நீர் ஆயத்தமானபோது அல்லாஹ்வுடைய உத்தரங் கொண்டு ஒரு மேகமானது பணிந்து வந்து குடையிட்டுக் கொண்டு தன்னில் நின்றும் யானையின் துதிக்கை போலொன்றை யிறக்கி அதனால்

கெண்டியின் மூக்கிலிருந்து தண்ணீர் சொரியுமாறு தண்ணீர் சொரியும். அத்தண்ணீரைக் கொண்டு என்னை நீராட்டி ஷெ கபன் புடவையைக் கொண்டு கபன் செய்து முன் நான் வீற்றிருந்த புளியமரத்தின் தென் பாகமா யிருக்கின்ற நாற்கால் மண்டபத்தில் வைத்து ஜனாஸா தொழு வித்து மேற்படி மரத்திற்கு மேற்புறமாய் அடையாளஞ் செய்திருக்கிற தலத்தில் குழி வெட்டி என்னை அடக்கஞ் செய்யுமென் றுரைத்தார்கள். அது கேட்டு ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் முன்னிலும் மும்மடங்கு அதிகமாய் சஞ்சலித்து ஓ வென்றலறி அழுதார்கள்.

அப்போது ஹலரத் பீரூன் சாஹிபவர்கள் யூசுபே! நான் உமக்கு ஞான சாரங்கள் முதலான அநேக அறிவுகளை யெல்லாம் உமக்கு கற் பித்து வைத்து எல்லக்கடுத்த தகுதியையும் உமக்கருளியிருக்க நீரேனிப் படி அழுகின்றீரென்றார்கள். அது கேட்டு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் என்னாண்டவர்களே! பாவாவே! நபிமுஹ்லூர் றஹம்மத்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வபாத்து அடுத்தபோது, ஒரு மாதம் வரையில் திரேக சுகமில்லா திருந்தபோது யாவர்களையும் அழைத்து சொல்லரிய அறிவுகளை யெல்லாஞ் சொல்லி இன்ன மாதம் இன்ன தேதி இன்ன கிழமை இன்ன நேரத்தில் வபாத் தென்றறிவித்து விட்டு வபாத்தானார்கள். அப்படி இருக்க, அவர்களின் குடும்பஸ்தார்கள் முதலாய அஸ்ஹாபிமார்க ளெல்லாம் மனங்கெட்டு தட்டுத் தடுமாறி உடலயர்ந் தழவில்லையா? தாங்கள் திடீரென்றெனக் கறிவித்த தங்களின் மவுத்தைக் கேட்டவுடன் என் மனம் எப்படி சகிக்கும்? நான் எப்படி அழாமலிருப்பே னென்று விடை பகர்ந்தார்கள். பிறகு ஹலரத் காதிற் கன்ஜசவாயி ஆண்டவரவர்கள் மகனுக்கு சபருக் கேற்ற பல உபதேசங்களை போதித்து அவர்களின் அழுகையை மாற்றி னார்கள்.

அப்போது ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் என் தந்தையரே! தாங்கள் வபாத்தாகிய பின்னர் தங்களைத் தாரப்படி நல்லடக்கம் பண்ணி மூன்றும் ஸியாறத்துச் செய்து முடித்து விட்டு நானும் என் மனைவி மக்களும் இன்னகர் விட்டு நீங்கி லாகூருக்குப் போய் விடுகிறேம். தங்களுக்குப் பின் நாங்கள் இங்கிருந்து என்ன பிர யோஜனம்? என்று மொழிந்தார்கள். அதற்கு ஹலரத் பீரூன் சாஹிபு ஆண்டவரவர்கள் யூசுபே! நீர் சலியாதையும், நான் உம்முடைய வெளிப் பார்வையை விட்டு மட்டும் மறைந்திருப்பேனே தவிர, அந்தரங் கத்தில் உம்முடனேயே இருப்பேன். நீர் அதை அறிய வேண்டுமானால்

என்னை அடக்கஞ் செய்த மூன்ரும் நாள் என்னுடைய கபறின் கால் மாட்டில் வந்து நின்று கொண்டு எனக்கு ஸலாம் சொல்லும், அந்த ஸலாத்துக்கு மறுமொழி கிடைத்தால் உம்முடைய ஷெய்கு மண்ண றைக்குள் மறைந்திருந்த போதிலும் சிவனேடும், உம்மோடும் இருக்கி ருர்களென்றெண்ணி நானுமக்கு முன் சொன்னபடியே நீரும் உம்மு டைய பிள்ளைகள் பவுத்திரர்களெல்லோரும் இவ்வுலக முடிவு காலம் வரையில் நமது காணிக்கையை ஆதீனமாகக் கொண்டு இத்தலத்தில் இருங்கள். அப்படி நீரெனக்குச் சொல்லும் ஸலாத்தினுக்கு நான் பதிற் சொல்லாவிடிற் உம்முடைய ஷெய்கு மவுத்தாகி விட்டாரென் றெண்ணி நீர் சொல்லியபடி லாகூருக்குப் போய் விடும். இஃதன்றி நாம் கபறுக்குள்ளடங்கிய மூன்ரும் தினத்தில் சூரியனுதிக்கு முன் நம் முடைய கபறுக்கு அருகில் ஒரு பகிர் சாஹிபு வந்து நின்று பாத்திஹா ஓதுவார்கள். அந்நேரத்தில் நீரங்கு காத்திருந்து அவர்கள் ஓதி முடித்து போகும் போது நீரும் அவரோடு பின் தொடர்ந்து செல்லும். அவர்கள் கொஞ்சத் தூரம் சென்ற உடன் அவர்களுக்கு நீர் ஸலாம் சொல்லும். அவர்களுமக்குப் பதில் சொல்வார்கள். அவர்களின் திரு நாமத்தைக் கேட்டுக் கொண்டு உம்முடைய காரிய பாவங்களை யவர்க ளிடத்தி சொல்லும். அதற்கவர்கள் சொல்கின்ற சொற் பிரகாரம் நடந்து கொள்ளுமென் றுரைத்தார்கள்.

அது கேட்டு ஷெய்கு யூசுபு சாஹிபவர்களின் மனத்துயர் சற்றே நீங்கி தைரியமாக விருந்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள் மகனு ருக்கும் தபோதனர்களுக்கும் இன்னும் சொல்ல வேண்டிய நஸீஹத்து களை ஒழுங்காய் சொல்லி முடித்த போது, தஹஜ்ஜத்து நேரமும் அடுத்தது. அப்போது மகிமை பொருந்திய ஹஸரத் கௌதுல் அஃலம் மீருன் சுல்தான் செய்யது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களின் சிறப்பாகிய சிரமுதல் பாத கமலங்கள் வரையில் ஆயிரங் கோடி சூரியப் பிரபைகளும், நிக்ரொவ்வாத பெரிய ஒளியானது ஜொலித்தது. சுவர்க்கலோகத்துக்கு பரிமளம் கமகம வென வீசிக் கொண்டிருந்தது. ஆண்டவரவர்கள் தங்கள் விரிப்பின் கண் படுத்துக் கொண்டு முஷாஹதா, முறுக்கபா, முகாஷபா, முஆ யினு, இவ்வகை தியானத்தில் சிந்தனை கொண்டிருந்தார்கள். அப் போது ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு அவர்களும் பக்கீறுகளும் பார்த்த கண் பறித்து வாங்காமல், அவ்வொளியினது பிரகாசத்தை நோக்கி ஆச்சரிய மடைந்திருக்க, ஹிஜிரி தொளாயிரத்தி யெழுபத்

தெட்டாம் வருஷம் ஜமாதுல் ஆகிற் மாதம் பத்தாம் தேதில் வெள்ளிக் கிழமை இரவில் தஹஜ்ஜத்துடைய வக்தில் இரட்சகராகிய சாஹிபு தம்ஜீது ஷாஹுல் ஹமீது ஒலியுல்லா ஆண்டவரவர்களின் சக்ருத்து அடுத்து முபாறக்கான திருமேனி அயர்ச்சி கொள்ள, அப்போது தங்கள் தூய்தான வாயைத் திறந்து தேவாமிர்தம் சொரிவது போல அல்லாஹு அக்பர், என்று சொல்லிக் கொண்டு இரு கை களையும் நெஞ்சினுக்குத் தாழே வைத்துத் தக்பீர் கட்டிக் கொண்டு (அத்துன்யா சிஜ்னுல் மூமீன்) என்கிற சொற்படி இவ்வுலக மென்னுஞ் சிறைச்சாலையை விட்டு நீங்கி மேன்மை தங்கிய அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் தங்கள் பாட்டனார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தெரிசித்து பேரின்பம் பெறும் பொருட்டு வபாத்தை அநுபவித்தார்கள்.

ஹலரத் செய்யது அப்துல் காதிர் மீருன் சாஹிபு ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் வபாத்தானதும் பக்கிறுக ளெல்லா மனங் கலங்கித் தியங்கி பலவாறு புலம்பி அழுதார்கள். அப்போது ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் அவர்களுக் கெல்லாம் நல்லறிவுகளை சொல்லி துக்கத்தை போக்கி அழுகையை மாற்றினார்கள். ஹலரத் ஆண்டவரவர்கள் வபாத்தான செய்தி வெளியாருக்கு தெரியப்படவே அவ்வூர், சிற்றூர் முஸ்லிம்க ளெல்லாம் கூட்டங் கூட்டமாக வந்து ஹலரத்தவர்களின் ஒளி விளங்கிய முகாதார விந்தத்தை தெரிசித்துக் கொண்டு போனார்கள்.

அப்போது ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் ஆண்டவரவர்களை அடக்கஞ் செய்ய ஆயத்தமாகி முன் தங்கள் தந்தை யர் சொன்னவாறு முதுபகென்னு மண்டபத்தில் தெய்விகமா யமைந் திருந்த பெட்டியை நிலத்தைக் கெல்லி யெடுத்து அதனுள்ளிருந்த கபன் முதலியவைகளைத் தயார் செய்து வைத்துக் கொண்டு முன் கூறிய தலத்தில் வளைந்த திரை கட்டிக் கொண்டு அதனுள் ஆண்டவ ரவர்களை மிருதுவாய்த் தூக்கி வைத்து அத்திரையினுள் ஒருவரும் நுழையா தகற்றி விட்டுத் தாங்கள் மாத்திரம் தனியே நின்று குளிப் பாட்டினார்கள்.

அப்போது ஹலரத் ஆண்டவரவர்க ளுரைத்தது போல் அல்லா வுடைய அநுக்கிரகங் கொண்டு ஒரு மேகமானது வந்து குடையிட்டு நிழல் பரப்பித் தன்னில் நின்றும் யானையின் தும்பிக்கை போலோர்

கதிர் விட்டு மிருதுவாகத் தண்ணீரைச் சொரிந்தது. அது கொண்டவர்கள் ஆண்டவர்களை மெல்ல மெல்லத் தேய்த்து நீராட்டினார்கள். அத்தண்ணீரின் வாசமானது ஆங்கு வந்து நிறைந்திருக்கின்ற மனிதர்களின் நாசிகளை மணமாக்கினதால், அவர்களின் மனங்களெல்லாம் ஆனந்தமாகி ஆண்டவனைப் புகழ்ந்து ஹலறத்தவர்களை வாழ்த்தி இந்த நாதாவின் ஜனாசாவுக்கு நாமெல்லாம் வந்திருந்ததையால், அல்லாஹு தஆலா அவர்களுக்காக சுவர்க்க லோகத்தின் ஹவுலல் கவுதரென்கிற நதியின் தண்ணீரை இம்மேகத்தின் மூலியமா யிறக்கி வைக்க, அவ்வாசத்தை நாமெல்லாம் ஏற்றுக் கொள்ளும்படி. யாச்சுதென்று ஒருவரோடொருவர் பேசி மனமகிழ்ந்து ஆண்டவரவர்களை போற்றிப் புகழ்ந்தார்கள்.

ஹலரத்தவர்களை ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் நீராட்டி கபனுஞ் செய்து சுறுமா யிட்டுக் கற்பூரம் வைத்துக் கெந்தப் பொடியைத் தாங்கள் முந்தி எடுத்து ஹலரத் தவர்களின் பிரகாசந் தங்கிய நெஞ்சின் கண் தூவிய பிறகு திரையை யவிழ்த்து விட்டு மற்றவர்களை யெல்லாம் கெந்தப்பொடி தூவும்படி உத்தாரஞ் செய்தார்கள். அது போல் வாசம் பொருந்திய கெந்தப் பொடியை எல்லோரு மெடுத்துத் தூவும் போது ஆண்டவரவர்களின் திருமேனியி லிலங்கு கின்ற ஒளியைக் கண்ணாரக் கண்டு மனமகிழ்ந்து ஆனந்தம் கொண்டார்கள்.

ஷெய்கு யூசுபு வொலியுல்லா ஆண்டவரவர்கள் ஹலரத்தவர்களை மிக அலங்காரமாகக் கலிமா முழக்கத்துடன் சந்தூக்கில் வைத்துத் தூக்கிக் கொண்டு வந்து ஆண்டவரவர்கள் சொன்ன பிரகாரம் நாற்கால் மண்டபத்தில் வைத்து ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் முன்னிலையாக இமாமாகவும் மற்றவர்களெல்லாம் அணியணியாய் பின் நிலையில் மாமூமாகவும் நின்று தொழுது துஆச் செய்து முடித்துக் கொண்டு பிறகு அங்கிருந்து சகல முஸ்லிம்களும் ஒருங்கு சேர்ந்து தோட்புயத்தில் தூக்கிக் கொண்டு, கலிமா முழக்கத்தோடு கொண்டு போய் ஆண்டவரவர்கள் முன் குறிப்பிட்ட தலத்தில் தோண்டி கபுறுக்கு அங்கிருந்தெடுத்து முஸ்லிம்கள் தோள் தாங்க, வேதவாக்கிய மொலிக்க, ஹாபிலீன்கள் களிக்க, ஒளிவுகளானது ஜொலிக்க, கலிமாவி னோசை களிக்க, மெல்ல மெல்ல நடந்து கொண்டு போய் முன் குறிப்பிட்ட யிடத்தில் கெல்லிய குழியின் கண் இறக்கி வைத்து நல்லடக்கஞ் செய்து யாவரும் கூடி பாத்திஹாவும் ஓதி முடித்துக் கொண்டு திரும்பி

வந்து ஹலரத் அவர்கள் வபாத்தை யனுபவித்த சிறப்பான தலத்திற்கு வந்து நின்று பாத்திஹாவும் துஆவும் ஓதி முடிந்த பின்னர், வந்தவர்க ளெல்லாம் ஹலரத் யூசுபு வொலியுல்லா ஆண்டவரவர்களைக் கட்டித் தழுவி சலாம் சொல்லிக் கொண்டு தங்கள் தங்களிடங்களுக்குப் போய் விட்டார்கள்.

ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் ஹலரத் பீருன் சாஹிபு ஆண்டவரவர்களுக்கு பதிலாக யிருந்து, வருபவர்களுக்கு ஆதரவு செய்து பக்கிறுகளுக் கெல்லாம் நல்லறிவுகளைப் புகட்டி ஹலரத் தவர்களின் காணிக்கையைக் கைக்கொண்டு ஆண்டு வந்தார்கள். மணி தர்களே! ஆண்டவரவர்கள் வபாத்தாகிய முதப கென்னும் மண்டபத் தின் வடகிழக்கு மூலையில் கிலாரி யடைக்கப்பட்டும் அவர்களை நீராட் டிய தலத்தில் ஓர் கற்றொட்டியுங் கட்டி அதைச் சூழ நான்கு சதுரமான கட்டிடமு மியற்றி ஆசுறுப்பள்ளி யென்று வழங்குகின்றது. தொழு வித்த தலமாகிறது இப்போது பீர் மண்டபமென்று வழங்குகின்ற கட்டிடமாகிய நாற்கால் மண்டபமா யிருக்கும்.

இந்த மட்டில் ஹலரத் செய்யது ஷாஹுல் ஹமீது ஆண்டவ ரவர்கள் இப்புவன முகத்திலா யிருக்கும் போது நடந்த அநேக காரணங்களில் அறிந்த மட்டிற் சிலதை யெடுத்தெழுதினோம். இனி யவர்கள் இவ்வுலகத்தை விட்டு மறைந்திருந்து நடத்திய புதுமைகளிற் சிலதை யெடுத்தெழுதுகின்றோம்.

மறைந்த மூன்றும் நாள் நடந்த சரித்திரம்.

ஹலரத் காதிறொலி ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் வபாத்தாகி அடங்கிய மூன்றுந் தினத்தில் சூரியனுக்கு முன் ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் தங்கள் தந்தையர் வபாத் தாகும் தருணத்தில் சொன்ன வாக்கியங்களை மேற்கொண்டு தங்க ளிருப்பிடம் விட்டெழுந்து மேலாம்பரமான கபறு ஷரீபின் கண் வந்து பார்க்கும் போது, ஆண்டவர்கள் சொற்படி ஒரு பக்கிறுனவர்கள் நின்று பாத்திஹா ஓதிக் கொண்டிருக்கக் கண்டு சற்று நேரம் அவர்களை எதிர்ப் பார்த்து நின்றார்கள். அந்த நாதர் ஓதி முடித்து விட்டு போகும் போது ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களும் அவர்களின் புறமே

தொடர்ந்துச் சென்று கொஞ்சத் தூரமானபோது அஸ்ஸலாமு அலைக்கு மென்று சலாம் உரைத்தார்கள். அது கேட்டு அந்த பக்கீராகிய நாதர் திரும்பிப் பார்த்து வஅலைக்கு முஸ்ஸலா மென்று மறுமொழி பகர்ந்த உடன், ஹலரத் செய்யிது யூசுபு சாஹிபவர்கள் அவர்களை நோக்கி தாங்கள் யாரென்று நான் அறிய விரும்புகிறேன் என்று வினவியபோது அவர்கள் நான் கிலுறு என்று பதிலளித்தார்கள்.

அதுகேட்டு ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் மிகுந்த சஞ்லத்தோடு எங்கள் பாவா காலமாகிவிட்டார்கள். நானும் என் மனைவி மக்களும் இக்கடற் கரையில் தனித்திருக்க வேண்டிய தாயிற்று. இனி எங்கள் காலம் எப்படி போகுமென்று தெரியவில்லை. ஆதனால் நான் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்சஞ்சலம் நீங்க தாங்கள் அருள் புரியவேண்டுமென்று கோரினார்கள். அப்போது ஹலரத் கிலுறு அலைஹிஸ்ஸலா மவர்கள் மிகுந்த அன்புடனே, யூசுபே! நீர் சலிக்கவேண்டாம் அஞ்சாதிரும், உம்முடைய குருசிகாமணியாகிய மீரான் சாஹிபு ஆண்டவர்கள் ஜீவனோடிருக்கும்போது வல்லநாயனாகிய அல்லாஹு தஆலா உமது தந்தையாருக்கு அருளிய சில வசனங்களை நான் அவர்களுக்கு முன்னமேயே சொல்லி இருக்கிறேன். ஆனதால் அந்த ஆண்டவனின் கிருபைகொண்டு உமக்கும் உம்முடைய மனைவி மக்களுக்கும் அவர்களின் சந்ததிகளுக்கும் எந்தக் காரியத்திலும் என்றும் உதவியா யிருப்பது என்பேரில் கடனாக விருக்கும், உம்முடைய காரிய மடங்கலும் கியாமமென்கிற நடுத்தீர்ப்பின் காலம் வருமளவும் என்கைவசமாயிருக்கும், இன்று முதல் நீர் ஜீவனோடிருக்குங் காலமெல் லாம் அவசியமான எந்த காரியத்திற் கானாலும் என்னை நினைத்தபோது நான் வந்து உமது காரியத்தை அல்லாவின் உதவிகொண்டு முடித்து வைப்பேனென்றுரைத்து அவர்களின் சலிப்பை ஆற்றிவிட்டகன்று போனார்கள்.

அது கேட்டு ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் சந்தோஷத்துடன் தங்களிருப்பிடத்திற்கு வந்த போது சூரியன் உதயமாகுந் தருணமாயிற்று. அப்போது ஹலரத் ஷாஹின்ஷாமீரான் சாஹிப் ஆண்டவரவர்களின் மூன்றும் நாள் ஸியாரத்துக் காகவும், ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிப் அவர்களின் தரிசனைக் காகவும், நாகப்பட்டணம், மேலை நாகூர், பாப்பாவூர் முதலிய பலகிராம வாசிகளான முஸ்லிம்கள் பலர் திரள் திரளாய் கூடினார்கள். ஹலரத்

ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் பக்கிறுகளையும் மற்றைய முஸ்லிம்களை யும் ஒருங்கே அழைத்துக் கொண்டு ஆண்டவரவர்களின் கபறுஸ்தா னத்தை அடைந்து வழக்கபடி குர்ஆன் ஓதி கத்தம் முடித்து பாத் திஹா ஓதி ஸியாரத்தை முடித்து இன்பமான பதார்த்தங்கள் பரிமாறி மூன்றும்நாள் ஸியாறத்து சடங்குகளை நிறை வேற்றினார்கள்.

பிறகு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் அங்கு கூடியிருக் கும் பக்கிறுகளையும் மற்றும் முஸ்லிம்களையும் நோக்கி சகோதரர்களே! எனது தந்தையார் வபாத்தை யடையுமுன் எனக்குச் சொன்ன உத் தாரப்படி நானவர்களுக்கு சலாம் சொல்லப் போகிறேன், அதற்கு மறு மொழி பிறக்கின்றதையும் நீங்களெல்லோரும் வந்து கேளுங்களென்று சொல்லிவிட்டு ஹலரத் ஆண்டவர்களின் கபறுமுபாறக்கை யடுத்து நிற்க, மற்றவர்களும் வந்து சூழ்ந்து நிற்க, ஹலரத் ஷாஹுமுஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் மிகுந்த மரியாதையுடன் கைகட்டி நின்று அஸ்ஸலாமு அலைக்கும் யாஹாதி யென்றுரைத்தார்கள். அப் போது அங்குகூடி நின்ற மனிதர்களின் செவிகளுக் கெல்லாங் கேட்கத் தக்கவிதமாய் ஹலரத்தவர்களின் கபறு ஷரீபில் நின்றும் வஅலைக்க முஸ்ஸலாம் யாபுனையி யென்ற மறுமொழியோடு யூசுபே! நீரும் உம் முடைய புத்திர பவுத்திரர்களும் நடுத்தீர்ப்பின் காலம் வரையில் என்னை விட்டகலாது இவ்விடத்திற்றானே சிறப்பாக இருந்து வாழுங் கள். என்னுடைய அன்பும் ஆதரவும் என்றும் உங்கள் மீது மாறா மலிருக்கும் என்றும் சப்த முண்டாயிற்று. அதுகேட்டு அங்கு நின்றோ ரெல்லாம் புதுமையாகி ஹலரத் ஷாஹுல் ஹமீது நாயகமவர்களின் கபறின் பாத தாமரையில் பணிந்து போற்றிப் புகழ்ந்தார்கள். ஹலரத் செய்யது யூசுபு ஆண்டவரவர்கள் நமது தந்தையார் இவ்வுலகை விட்டு மறைந்தும் சுய்மோடுதான் ஜீவனோடு இருக்கிறார்கள் என்று உறுதி கொண்டு சந்தோஷ சாகரத்தில் மூழ்கி ஆனந்தம் கொண்டார்கள். பிறகு அங்கு விஜயஞ் செய்திருந்த சகல முஸ்லிம்களும் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களிடத்தில் உத்தாரம் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடம் போய் சேர்ந்தார்கள். ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்கள் தங்கள் மனைவி மக்கள் சகிதம் முதுபகில் வாழ்ந்து வந்தார்கள்.

தபோதனர் புறப்படு சரித்திரம்.

ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு ஆரிபுபில்லாஹி ஆண்டவரவர்கள் மனைவி மக்கள் சகிதம் முதுபக்கில் தங்கியிருக்கும் போது ஹலரத் பீருன் சாஹிபு ஆண்டவரவர்களின் தபோதனர் களாகிய பக்கீறுகளின் சற்தாறுகளாகிய நான்கு கலீபாக்களுங் கூடி யோசனை செய்து நமது சற்குரு சிகாமணியாகிய ஹலரத் ஆண்டவரவர்கள் ஹயாத்துடனிருக்கும் போது ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களுக்குச் சொன்ன வாக்கியம் போல் கபறு ஷரீபில் இருந்து வந்த உத்திரவின்படி ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் இங்கு தான் சம்சார சகிதம் தங்கி இருக்கும்படி முடிந்திருப்பதால் நாம் சகலரும் இங்கு தானே கூடியிருப்பது உசிதமல்ல. இனி நாம் இதை விட்டு பரதேசி களாக வெளிக்கிளம்பி விடுவதே நலமென்று ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டு, ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து எங்கள் நாயகமே! நம்முடைய சற்குரு ஆண்டவர்களோ காலமாகி விட்டார்கள். இனிமேலும் நாங்கள் இங்கு இருந்துக் கொண்டிருப்பது ஒழுங்கானதென்று நாங்கள் நினைப்பதற்கில்லை. ஆகையால் நாங்கள் யாத்திரையில் செல்ல தாங்கள் அநுமதியளிக்க வேண்டும். நாங்கள் போய் பரதேசஞ் சுற்றிக் கொண்டு தாங்களெப்போது இங்கு வரச் சொல்லுகிறீர்களோ, அப்போது வருகிறோ மென்றார்கள்.

அது கேட்டு ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் அந்தப் பக்கீறுகளை நோக்கி நீங்களெல்லோரும் வெகு காலமாய் என்னுடனே மருகுதலா யிருந்தவர்க ளானதால் பாவா அவர்கள் வபாத்தான பின் இவ்வளவு துரிதத்தில் உங்களையும் நான் பிரித்து விடுவதானால் என் மனம் எங்ஙனம் ஒத்துக்கொள்ளும். ஆகையினால் நீங்கள் அவசரப்பட வேண்டாம். ஹலரத் ஆண்டவரவர்களின் நாற்பதாம் கத்தத்திற்கு நீங்களும் என்னுடன் இருந்து அதிற் நடத்த வேண்டிய குர்ஆன் கத்தம் பாத்திஹா முதலிய சடங்குகளை செய்து முடித்து விட்டு பிறகு என்னிடம் கேளுங்கள். நான் அநுமதிக்கிறேன் என்று விடை பகர்ந்தார்கள். அது போல ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்களின் சொல்லுக் கிசைந்து 404-சாதுக்களான பகிறுகளும் அவ்விடத்திலேயே இருந்தார்கள். அப்பால் ஆண்டவரவர்கள் அடக்கமாகிய நாற்பதாம் நாள் வந்தபோது யாவரும் ஒன்று கூடி கத்தம் பாத்திஹா முதலியன ஓதி முடித்து

அமிர்தம் பொருந்திய நேர்ச்சையும் வழங்கி நாற்பதாம் நாள் சடங்கை முடித்துக் கொண்டார்கள்.

நாற்பதாம் நாள் பாத்திஹா முடிந்த பின்னர் பகிர்களெல்லோரும் கூடி ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களை பணிந்து தாங்கள் பரதேசம் போக உத்தரவு கேட்டார்கள். அது கேட்டு ஹலரத் செய்யது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் எனது தோழரான பக்கீர்களே! உங்கள் நாட்டப்படி உங்களுக்கு அனுமதி தருகிறேன் நீங்களெங்கெங்கு போய்ச் சுற்றவேண்டுமோ? அங்கங்கெல்லாம் போய்ச் சுற்றிக் கொள்ளுங்கள். ஆனால் வருஷத்திற்கொரு தடவை மாத்திரம் தப்பாமல் ஹலரத் ஆண்டவர்களின் வருஷ பாத்திஹாவின் திரு நாளுக்கு வந்து விட்டுப் போங்களென்றுத்தாரஞ் சொல்லினார்கள். அது கேட்டு பக்கீறுகளெல்லாம் எங்கள் கண்ணின் மணிபோன்ற ஷெய்கு யூசுபே! தாங்களுரைத்த வார்த்தைகளை தங்கள் தந்தையாகிய எங்கள் எஜமானராகிய ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்களின் தேவாமிர்த வாக்கியமாக மதித்து ஒப்புக் கொண்டோம். நாங்களெங்கு சென்றிருந்த போதிலும் தாங்களிட்ட கட்டளைப் பிரகாரம் ஹலறத்தவர்களின் வருடத் திருவிழாவின் போது நாங்களெங்கிருந்தாலும் அவசியமாய் வந்து விட்டுப் போகிறோமென்று ஒப்புக்கொண்டபின், ஹலறத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு 404-பக்கீர்களும் வந்தனஞ் செய்தெழுந்து யாத்திரையிலாகினார்கள். அன்று முதல் நாளது வரையில் அந்தப் படியே வருஷங்கடோறும், பக்கீறுகள் யாவர்களும் ஒன்று கூடிவந்திருந்து வருட பாத்திஹாவை சிறப்பாக நிறைவேற்றி விட்டு போகிறார்கள். முன் ஹலறத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் ஹயாத்துடனிருக்கையில் கரையார்களுடைய பொருள் காணாதிருந்ததைத் தண்ணீரோதிக் கொடுத்து வெளியாக்கி வைத்திருந்தார்களல்லவா? அந்தக் கரையார்கள் வந்து ஹலறத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களின் திவ்விய பாதம் பணிந்து ஆண்டவர்களே! தங்கள் தகப்பனாராகிய ஆண்டவரவர்களின் சமாதி ஸ்தானத்தை சுற்றிப் பலகையினால் ஓர் கட்டிடமியற்ற நாங்கள் மிகுந்த நாட்டம் வைத்திருக்கின்றோம். தாங்கள் அனுமதி தர வேண்டுமென்று வேண்டினார்கள். அப்போது ஹலறத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் அவர்களின் வேண்டுகோளுக் கிசைந்து அனுமதியளித்ததால் அந்தக் கரையார்கள் மிகுந்த சந்தோஷத்துடன் பலகைகளைக் கொண்டு அழகிய விசித்திரமான கட்டிடமொன்று அமைத்து அதன் பேரில் மிகுந்த

அலங்காரமுள்ள ஒரு விமானஞ் செய்து வைத்தார்கள். ஹலரத் ஆண்டவர்களின் கபறு ஷரீபு வெட்ட வெளியான மைதானத்தில் இருந்து பிறகு கரையார்களால் அவர்களின் கபறு ஷரீபை சுற்றிகட்டடம் கட்டிய செய்தி உலகமெங்கும் பரவியதால் சகல ஜனங்களும் ஆண்டவரவர்களின் ஸியாரத்துக்கு அடிக்கடி வந்து தெரிசித்து காணிக்கை அளிக்க ஆரம்பித்தார்கள். அக்காணிக்கைகளை ஹலறத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆரிபுபில்லாஹ் ஆண்டவரவர்கள் கை கொண்டு அனுபோகித்து வந்தார்கள்.

கந்தூரி நடப்பித்த சரித்திரம்.

ஹலறத் கஞ்ஜசவாயி ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் வபாத்தாகிய முதலாவது வருடம் நெருக்கமானபோது ஜமாதுல் அவ்வல்மீ கடைசியில் ஹலறத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்கள் சுற்றார் சிற்றார்களுக் கெல்லாம் ஆண்டவரவர்களின் வருடப் பாத்திஹாவை குறித்து விளம்பரமூலம் அறிவித்து விட்டு அவ்வருட பாத்திஹாவுக்கு வருகிறவர்களுக்காகவும் பகீர்களுக்காகவும் போதுமான இடவசதிகளையும், செய்துவைத்துக் கொண்டு மேலும் அரிசி நெய் பருப்பு ஆடு மசாலாக்கள் விறகு பாண்டங்கள் பாய்கள் எண்ணை முதலிய சகலவஸ்துக்களெல்லாஞ் சேகரஞ் செய்து வைத்துக் கொண்டு தங்கள் தபோதனர்களான பகீர்களுடையவும் மற்றும் முஸ்லிம்களுடையவும் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜமாதுல் அவ்வல்மீ 29-திகதியாய் இருந்தது. அன்று முதலாவதாக சிரமிசை சடையும் உரமிசை கபனும் கரமிசை தடியும் பாமிசை நினைவும் பற்பலவித ஜெபமாலைகளும் பிடித்துக் கத்தி கேடய மணிந்து ஹூக்காக் குடுக்கையும் தடுக்குங் கைகொண்டு வெண்சங்கூத நகரு முழக்கத்துடன் பாங்காவிலுளைச மனிதர் தாங்காது மறுக மலக்கென்னும் பெயர் கொண்ட பக்கீறுகள் வேதவாக்கியத்துடன் பெரிய கூட்டமாக வந்தார்கள். இரண்டாவதாக கோதடியணிந்து குதிரை மீதேறி குண்டாவுந்தடியும் கைக் கோடாரியுங் கொண்டு தலையதனில் நீண்ட தாஜுமிட்டு கபனும் புனைந்து டைத்துகளோதிக் கட்டியக் காரர் முன்னின்று கட்டியம் கூற தீன் தீனென்னும் பெயரொலியொலிக்க பானவர் வென்னும் பெயர்கொண்ட பக்கீறுகளும் பெரிய கூட்டமாகவந்தார்கள். மூன்றுவதாக வலது புயத்தில் முத்திரை

தரித்து கம்பளிக்கயறு புனைந்து குடுகுடாக் குடுக்கையுங்கொண்டு கொம்பு குழலூத குரலோசையிட்டு ஜலாலி யென்னும் பெயர் தரித்த பக்கீறுகள் பெரிய கூட்டமாக வந்தார்கள். நாலாவதாக கொடிகள் பிடித்துப் பற்பல விருதுகளணிந்து நகாறு நவுபத்து பங்கா டங்கா வினது முழக்கத்துடன் மாதாரி என்ற நாமம் பெற்ற பக்கீறுகளும் பெரியகூட்டமாக வந்தார்கள். இத்தாதி ஜம்பத்துடன் வந்த பக்கீறு களைக் கண்ட ஹலறத் ஷெய்கு முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் அவர்களை வரவேற்று ஆதரித்து ஒவ்வொரு கூட்டத்தை ஒவ்வொரு தலத்திலிருக்கும்படி உத்தாரஞ் செய்தார்கள். அவ்வுத்திரவை ஏற்றுக் கொண்டு பக்கீறுகள் அனைவர்களும் சற்குரு வாகிய ஹலரத் கஞ்ஜ சவாயி செய்யது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களின் கபுறு முபாறக்கென்னும் சமாதி ஸ்தானத் திற்கு சென்று ஸியாரத்து செய்து பாத்திஹா துஆவோதிக் கொண்டு ஆங்காங்கு வந்து அமைந்தார்கள். உடனே ஹலறத் செய்யிது முஹம் மது யூசுபு சாஹிபவர்கள் பக்கீறுக்களுக் கெல்லாம் அவரவர்கள் ஜமாக் களுக்கு போதியவாறு படியளந்து விடச் செய்தார்கள். பிறகு மிகுந்த அழகினையுடைய புதியகொடி யொன்று தைத்து தயார்செய்து வைக்கப் பட்டது. ஜெண்டாமரமும் நாட்டி வைக்கப் பட்டிருந்தது. அத் தருணம் சுற்று நகரார்களெல்லாம் ஒருங்கே வந்து கூடினார்கள். அப் போது ஷெய்கு யூசுபு சாஹிபு ஒலியுல்லா ஆண்டவரவர்கள் ஓர் ஒட்ட கத்தின் முதுகின் மீது பச்சைப் பட்டாடை போர்த்தி கழுத்தில் ஆப ரணங்கள் சூட்டி நாற்கால்களிலுஞ் சிலம்பமணிந்து மிகுந்த அலங் காரஞ் செய்து அதன் முதுகில் அக்கொடியை வைத்து அதன் மேல் மல்லிகை முல்லை சண்பகமலர்களால் சோடிக்கப்பெற்ற சதரும் புனைந்து பரிமள வாசங்கமழ நானூற்று நான்கு தபோதனர்களும் இருமருங்கும் சூழ்ந்து வர மாந்தர்கள் மகிழ்ந்து பைத்துகளோத வெண்சாமரை வீச வெண்சங்கூத முத்துக்குடை கவிப்ப முழுமணிச் சுடரிலங்கப் பம்பை பறை டம்மாற முதலாய பதினெண்வாத்திய முழக்கத்துடன் முதுபதி யிருந்து எழுந்தருளியாகி ஆண்டவரவர்களின் திவ்விய சமாதி ஸ்தானத் தைச் சுற்றி வந்து சன்னிதானத்தில் நிறுத்திக் கொண்டு ஜமாதுல் ஆகிற் மாதத்தின் இளம்பிறை தோற்றியபோது ஹலறத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களும் மைந்தர்களும் மற்றைய முஸ்லிம் களும் பக்கீறுகளுங் கூடி நின்று பாத்திஹாவும் துஆவும் வோதி தீன் தீன் என்னும் திருமொழி ஒலிக்க கொடியை யேற்றினார்கள். அதன்

பின் ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்களும் தபோதனர்களும் மற்றும் முஸ்லிம்களும் கூடி ஆண்டவரவர்களின் கபறு ஷரீபுக் கெதிரே வந்து நின்று பாத்திஹா ஓதி ஸியாரத்துச் செய்து முடித்தார்கள். அன்றிரவு முழுதும் தர்கா ஷரீபில் பலரும் கூடி குர்ஆன் ஷரீபை ஓதும் சப்தங்கள் முழுங்கிக் கொண்டிருந்தன. சிற்றுரார்களெல்லாம் விடை பெற்றுக் கொண்டு அவரவர்கள் வீடுபோய் சேர்ந்தார்கள். மறு நாளானபோது நாகப்பட்டினத்திலுள்ள இஸ்லாமான ஜனங்களெல்லாந் திரண்டுவந்து ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களின் பாதம் பணிந்து மரியாதையுடன் நின்று ஒலியே! நாதாவே! தங்கள் தகப்பனாரவர்களின் திருவிழாப் பத்தாமிரவையில் ஆண்டவரவர்களுடைய கபறு ஷரீபின் பேரில் பூசுகிறதற்காகச் சந்தனமிழைத்தொரு பாத்திரத்தில் வைத்து மிகு அலங்காரமான பிரபையையுடைய ஒரு கூடுகட்டி அதனுள் அந்த சந்தனப் பாத்திரத்தையமைத்தெடுத்து ஊருலாவித்துக் கொண்டு வந்து இங்கு சேர்ப்பிக்க நாங்கள் மிகுத்த நாட்டம் வைத்திருக்கின்றோம். தாங்கள் கிருபை வைத்து உத்திரவு செய்தருள வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டார்கள். அதுகேட்ட ஹலரத் ஷெய்கு யூசுபுசாஹிபு ஆண்டவரவர்கள் அவர்கள் மீது மனமிரங்கி நீங்கள் சந்தனங் கொண்டுவர வேண்டாம். கூடுமாத்திரம் அலங்காரமாய் கட்டிக் கொண்டு வாருங்களென்றுத்திரவு சொன்னார்கள். அவ்வுத்திரவு பிறந்ததும் நாகப்பட்டணத்து முஸ்லிம்கள் கேட்டு மனமகிழ்ந்து தங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தார்கள். ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் ஜீவித்திருக்கும் போது நாகப்பட்டணத்திலுள்ள ஒரு பிராமணன் வந்து தனக்குண்டான குறைப்பாட்டைச் சொல்ல, ஆண்டவரவர்கள் அதை நிவர்த்தி செய்ததினால், அன்று முதல் அப்பிராமணன் ஹலரத்தவர்களிடத்திற்கு வரும்போதெல்லாம் மிகுந்த தூய்தாகிய சந்தனம் அரைத்துக் கொண்டு வந்து கொடுத்து கொண்டிருந்தான். ஆண்டவரவர்களின் வபாத்துக்கு பின் ஹலரத்ஷெய்கு யூசுபு சாஹிபவர்களுக்கும் அவ்வாறு கொடுத்துக் கொண்டுவந்தான். அதையுணர்ந்த ஹலரத் ஷெய்கு யூசுபுஸாஹிபு ஒலியுல்லா அவர்கள் அந்தபிராமணனை யழைத்து எங்கள் பாவா அவர்களின் வருடப் பத்திஹா 10-ம்நாள் சந்தன கூட்டிற்காக மிக்க துப்பரவாகக் கொஞ்சம் சந்தன மிழைத்துக்கொண்டு வரும்படியான உத்தாரஞ் செய்தார்கள். அவன் அதைமிக்க ஆனந்தத்தோடு ஏற்றுஅவ்வாறே அரைத்து பிறை ஒன்பதாம் நாள் கொண்டுவந்து கொடுத்தான். அதை ஹலரத் யூசுபு சாஹிபு ஆண்டவர்கள் வாங்கி வைத்திருந்தார்கள்.

பின்பு நாகப்பட்டிணத்தார் பல வண்ணம் பொதிந்த மிகுந்த அழகினையுடைய சந்தனக் கூடொன்றியற்றிக் கொடியேற்றிய பத்தா வதிரவில் மிகுந்த ஜனங்களைக் கொண்டு அக்கூண்டைத் தூக்கிச் சாம்பிராணித் தூபமுதலாய பரிமள வாசங் கமழ பலவித மேளவாத்திய முழக்கத்தோடு பூமி குலுங்கத் தக்க அதிர்வெடி முழங்கச் சிதர் வாணஞ் செடி வாணம் லேர்வாணம் பூவாண முதலிய பற்பல வாணங்களின் பிரகாசமானது திசைகளெல்லாம் ஜொலிக்க எண்ணற் கரிய தீவெட்டி பிரகாசிக்க மிகுந்த அலங்காரத்துடன் ஊரெங்கும் உலாவி சுற்றிக் கொண்டு வெகு விமரிசையோடு நாகூர் வந்து சேர்ந்ததும் ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் தங்கள் வசமிருந்த சந்தனத்தை ஒரு குடத்திற் கரைத்தெடுத்து அக்கூட்டினுள் வைத்து அக்கூட்டை தருகாவை சுற்றி வரச்செய்து தருகாவினெதிரே நிறுத்திக் கொண்டு மற்றவர்களெல்லாம் வெளியில் நிற்கச் செய்துவிட்டு தாங்கள் மாத்திரம் அச்சந்தனத்தை தூக்கிகொண்டு றவுலாவினுட்சென்று ஒளிவானது ஏகமயமா யிலங்கு மென்னத்தக்க கபறு முபாறக்கைத்தொட்டு சந்தனத்தை பூசிவிட்டு தாங்களுடன் கொண்டு போயிருந்த வெள்ளை புடவையையும் கபறு ஷரீபின்பேரில் போர்த்தினார்கள். அப்போது வெளியிலிருந்த சகல முஸ்லிம்களும் குர்ஆன் ஷரீபை ஓதிக் கொண்டிருந்தார்கள். அந்நேரம் ஆண்டவர்கள் வபாத்தான தலுஜ்ஜத்து வக்தாயிருந்தது. ஹலாத் யூசுபு சாஹிபு ஆண்டவர்கள் சந்தன வேலையை செய்து முடித்த பின் வெளியே வந்து கத்தம் பாத்திஹா வோதி ஸியாரத்துச் செய்து முடித்தார்கள். பிறகு கபறு ஷரீபில் பூசி மிஞ்சிய சந்தனத்தை யாவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.

பிறகு நாகப்பட்டிணத் தார்களெல்லாம் ஹலரத் யூசுபொலி யுல்லா அவர்க களிடத்தில் மிகுந்த மரியாதையோடு வணங்கி ஆண்டவர்களே ! இனிவரும் வருடங்கடோறும் இவ்வருடம் போல் கொடியுங் கூடும் நாங்களே செய்து கொணர்ந்து இத்திரு விழாவைச் சிறப்புச் செய்து ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவர்களுடைய கிருபையை பெற்றுக் கொள்ள தாங்களனுக் கிரகஞ் செய்ய வேண்டு மென்று மன்றாடினார்கள். அதற்கு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவர்கள் நல்லது அவ்வாறே பிரதி வருடங்கடோரும் நீங்களே நடத்தி வாருங்க ளென்று அனுமதி யளித்து விட்டு முன் சந்தனங் கொண்டு வந்து கொடுத்த பிராமணனை நோக்கி நீயும் இப்போது செய்தது போலவே இனி யெல்லா வருடங்களும் உமது புத்திர பவுத்திர

சகிதமாய் சந்தன மிழைத்துக் கொண்டு வந்து கொடுவென்று உத்தரவு செய்தார்கள். அவனதை யொப்புக் கொண்டானந்தமாகினான். பின்பு யெல்லோரும் ஹலரத் ஆண்டவரவர்களின் கபறு முபாறக்கைத் தெரிசித்து விட்டு ஹலரத் ஷெய்கு யூசுபு ஒலியுல்லாவின் பாதம் பணிந்து தங்கள் அனுமதி பெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆண்டவர்களின் தபோதனர்களும் அனுமதி பெற்றுக் கொண்டு செலவுக்கு பணமும் பெற்றுக் கொண்டு ஏகினார்கள். அப்பிராமணன் தானும் தனக்கு பின் சந்ததிகளுமாக சந்தனம் கொடுத்து வந்து இடையில் அவன் சந்ததிகளில் ஏதோ ஒரு பிசகு நிகழ்ந்ததால் அக்காலத்து சாஹிபுமார்கள் அதை ரத்து செய்து விட்டு தங்கள் நாட்டாமை காரரால் சந்தனம் கொண்டு வந்து கொடுப்பதாக கூறப்பட்டிருக்கிறது.

இராய குஞ்சாலி மரைக்காயர் மண்டபமியற்றிய சரித்திரம்.

ஹலரத் குதுபு ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் வபாத்தடைந்த பின்னர் கபரை சுற்றி கரையார்கள் மரத்தால் கட்டிய கட்டிடம் பழுதடைந்ததைக் கண்ட கரையார்கள் மீளவும் பலகையை பிரித்து விட்டு மண்ணினால் சுவர் எழுப்பி மேலே பலகையை கொண்டு மூடு போட்டு கட்டி முடித்தார்கள். அந்த மண் கட்டிடந் தான் தர்காவாக விருந்தது.

இவ்வாறிருக்கையில், ஒரு நாள் நாகப்பட்டணத்தாரிற் சிறந்தவராயும் மிகுந்த நிதிமணியுடையவராயு மிரா நின்ற இராய குஞ்சாலி மரைக்காயர் ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்கள் பால் வந்து வணங்கி நின்று ஆண்டவர்களே! முன் தங்கள் தகப்பனாரவர்களுக்கு என் மூடத்தன்மையால் ஒரு தப்பிதஞ் செய்து அதனால் நான் நோயுண்டு கெட்டிறந்து போகுந் தருணத்தில் என்னை யிரட்சித் தருளிய அந்த நாதா வாகிய ஆண்டவரவர்களின் சிறப்பான தர்கா கட்டிடம் மண்ணால் கட்டி யிருப்பதால் அதை நான் கற்கட்டிடமாய் கட்டி அவர்களின் அருளைப் பெற விருப்பமுற்றிருக்கிறேன். தாங்கள் என் மீது அன்பு கூர்ந்து உத்திரவளிக்க வேண்டு மென்று

மன்றாடினார். அது கேட்டு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்கள் மனதிரங்கி நல்லது செய்யு மென்றுத்தாரஞ் செய்தார்கள். அப்போது அவ்விராய குஞ்சாலி மரைக்காயர் மிகுந்த சந்தோஷத்துடன் சென்று பிறகு மிகு திரவியங்களைச் செலவு செய்து ஹலரத் ஷஹின்ஷா காதிற் கன்ஜ சவாயி ஆண்டவர்களின் ஒளி விளங்கிய சமாதிஸ்தானத்தைச் சூழ்வா திவ்விய கட்டிடமும் நடுவே சதுராகார மதிலும் நாற்புறமும் மண்டபத் தாழ்வாரமும் நடுவிலுள்ள குவிந்த மண்டபச் சிகரத்தில் பொற் கலசமும் உள்ளதாக அழகினையுடைய தர்கா மண்டபம் கட்டி வைத்துப் புகழ்பெற்று வாழ்ந்தார்கள்.

ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு ஆண்டவர்களின் புத்திரர்கள் விவாக சரித்திரம்.

ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்கள் தங்கள் புத்திரர்கள் சகிதம் முதுபக்கில் வாழ்ந்திருந்தார்கள். அப்போது ஆண்டவர்களுக்கு புத்திரர்கள் பாவா பக்றுதீன், அமீறுல் லாஷிக்கின், சுல்தான் கபீரி, சுல்தான் ஹக்கானி, சுல்தான் நூறுத்தீன் சுல்தான் ஸகிரி, என்னும் அறுவரும் புத்திரிகள் சுஹறுபீவி, பாத்திமா பீவி என்னும் இருவரும் இருந்தார்கள். இவர்கள் நமது இஸ்லாம் மார்க்கத்தின் இல்முகள் அனைத்தையும் கற்று, அதில் அதிக தேர்ச்சி பெற்று இருந்தார்கள். அதோடு அவர்கள் தகுதியான பிராயத்தையும் அடைந்திருந்தார்கள்.

அப்போது ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிப் ஆண்டவர்களுக்கு தங்கள் புத்திரர்கள் பருவமடைந் திருப்பதைக் கண்டு இனி இவர்களுக்கு, விவாகம் செய்து விடவேண்டு மென்று எண்ண முண்டாயிற்று. ஆனால் தங்கள் பெண்களுக் கேற்ற மாப் பிள்ளைமாரும், தங்கள் ஆண் மக்களுக்கேற்ற பெண்களும் எங்கே கிடைக்குமோ ; எங்கே தேடலாம் என்று சிந்தித்து வந்த போது, தங்கள் மனதில் ஒரு எண்ணம் புலப்பட்டது. அதாவது :—முன் ஹலரத் பாவா ஷாஹுல் ஹமீத் ஆண்டவர்கள் ஜீவித்திருக்குங் காலங் களில் மேல நாகூரில் ஆண்டவர்களுக்கு விரோதமாய் அநேகரும்,

ஆண்டவர்களுக்கு உடந்தையாய் சிலரும் இருந்தார்களே அவர்களில் ஆண்டவர்களுக்கு உடந்தையா யிருந்து ஆண்டவர்கள் பால் வந்து தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் அபயங் கேட்டுக் கொண்ட பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களின் ஞாபகம் வந்தது.

அப்போது, ஹலரத்செய்யது முஹம்மதுயூசுபு சாஹிபுஆண்டவர்கள் பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களுக்கு புத்திரபுத்திரிகள் எத்தனை பேர்கள் உண்டென்று விசாரித்த போது ஆறு பெண் மக்களும், இரண்டு ஆண் மக்களும் இருக்கிறார்களென அறியப்பட்டதும், அந்த பெண்மக்கள் அறுவரையும் நமது புத்திரர்கள் அறுவருக்கும், புத்திரர்கள் இருவர்களுக்கும் நமது புத்திரிகள் இருவருமாக பேசி விவாகஞ் செய்துக் கொள்ளலா மென்று முடிவு செய்து கொண்டார்கள்.

பிறகு ஒரு மனிதரை மேல நாகூருக்கு அனுப்பி பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களை அழைத்து வரச்சொன்னார். அது போல் அம் மனிதன் போய் ஹலரத் ஆண்டவர்கள் தங்களை அழைக்கிறார்க ளென்ற மாத்திரத்தில் அவர்கள் புறப்பட்டு வந்தார்கள். தங்கள் சமூகத்தில் வந்த பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களை தங்கள் சமூகத்தி லிருத்தி பல இனிய மொழிகளை சம்பாஷித்துக் கொண்டிருந்த பின், அவர்களை நோக்கி, பஹாவுத்தீனே! என் மக்கள் அனைவரும் பிராய மடைந்து விட்டார்கள். அவர்களுக்கு விவாகஞ் செய்து விடவேண்டு மென்று நினைக்கிறேன். தங்களுடைய செல்வ பெண் மக்கள் அறுவரையும், எனது புத்திரர்கள் அறுவருக்கும் என் பெண் மக்கள் இருவரையும் தங்கள் இரண்டு புத்திரர்களுக்குமாக விவாகஞ் செய்து முடிக்க நினைக்கிறேன். இது தங்களுக்கு சம்மதந்தானா? என்று கேட்டார்கள். இம்மொழிகளை பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்கள் செவிகளில் கேட்டதும் மிக்க ஆனந்தங் கொண்டு என் மக்களனைவர்களுக்கும் இருலோக வாழ்க்கை கிடைப்பதற்கு இனி என்ன தடை என்று ஆனந்தத்துடன் சொன்னார்கள்.

இதைக் கேட்ட ஹலரத் ஆண்டவர்கள் சந்தோஷமுற்று இருவர்களுமாக விவாகம் நாள் இன்னதென்று அப்போதே குறிப்பிட்டுக் கொண்டார்கள். பின்பு பஹாவுத்தின் சுஹறவர்தி அவர்கள் ஹலரத் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு மேல நாகூருக்குப் போய் விவாகத்திற்காகுமான சகல பிரயத்தனங்களையும் செய்து வைத்தார்கள். முதுபக்கிலும் ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவ

சவர்கள் விவாகத்திற்கு வேண்டிய கருமங்களை நடத்திக் கொண்டு தயாராக இருந்தார்கள். அப்போது மேல நாகூரில் பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களின் மனையில் கலியாணத்திற் கேற்ற அலங்கார ஜோடிப்புகள் ஜோடித்து எட்டு புதிய மணவறையும் தயார் செய்து வைத்து விட்டு பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் சுற்று கிராமங்களிலுள்ள சகல முஸ்லிம் தனவந்தர்களுமாக மேல நாகூரை விட்டு புறப்பட்டு முதுபகுக்கு வந்து ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்களின் புத்திரர்களை அலங்காரமான ஜோடினை செய்து அழைத்துக் கொண்டு பைத்துகள் முழங்க வெகு மகிழ்ச்சியுடன் சென்று, மேல நாகூர் போய் பஹாவுத்தீன் சுஹறவர்தி அவர்களின் வீட்டில் போய்ச் சேர்ந்து அவரவர்களுக் கிட்ட ஆசனங்களில் இருக்கச் செய்து சகல முஸ்லிம்களும் புடை சூழ யிருந்து எட்டு மணவாளர்களுக்கும் எட்டு நிக்காஹ்கள் செய்யப் பட்டன. நிக்காஹ் முடிந்தவுடன் அறுசுவை பதார்த்தங்களோடு யாவருக்கும் விருந்து அளிக்கப்பட்டு அலங்காரமான விவாஹம் நிறைவேறி முடிந்தன.

ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு அவர்கள் விருப்பப் படியே மணவாளர், மணவாளிகள் சகலரும் முதுபக்கிலேயே வந்து வாழ்ந்திருந்தார்கள்.

ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்களின் வபாத்து

ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்கள் முதுபகு என்னும் ஸ்தலத்தில் மனைவி மக்கள் மருமக்களோடு ஹலரத் நாகை நாயகரவர்களுடைய சிறப்பாகிய தறுகாவின் பணிவிடைமாறாது செய்து வருடங்கடோறுந் திருவிழா நடத்தி அவர்களின் தூய்தாகிய காணிக்கையைக் கைக் கொண்டு சிறப்பாய் வாழ்ந்து வருங்காலத்தில், தங்கள் எட்டு மக்களுக்கும் ஆண் பிள்ளை பெண் பிள்ளைகள் பிறந்து குடும்பம் பெருக்கத் தொடங்கி விட்டதால் ஹலரத்தவர்கள் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தர்காவைச் சுற்றி தனித்தனி வீடு கட்டிக் கொடுத்து ஒவ்வொருவரையும் அவரவர்கள் மனைவி மக்கள் சகிதம் வெவ்வேரா

யிருக்கும் படி ஆக்யாபித்து அவர்களின் சம்ரக்ஷணை பொறுப்பை தாங்களே மேற் கொண்டு பார்த்து வந்தார்கள்.

இவ்வண்ணம் சிறப்பாய் வாழ்ந்து வருங் காலத்தில் ஹலரத் செய்யது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்களுக்கு வயது தொண்ணூற்று நாலு நிறைந்த போது சர்வ தயாபரனிட்ட கட்டளைப் பிரகாரம் அவர்களுக்கு மவுத்து காலம் வந்து அடுத்தமையால் தங்கள் மனைவி மக்கள் சந்ததிகள் அனைவர்களையும் அழைத்து வைத்துக் கொண்டு தங்களின் மவுத்தை பற்றிய பல நஸீஹத்துகளையும் அவர்களுக்கு உபதேசித்து அவர்கள் சிரேஷ்டத்தனமாய் வாழும்படி துஆவும் இரந்து வாழ்த்தி விட்டு என் தந்தையாரும் உங்கள் பாட்டனாருமாகிய ஹலரத் ஆண்டவர்கள் உங்கள் பக்கத்திலேயே இருக்கின்றார்கள். நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை என்று பல நன்மொழிகளை சொல்லி முடித்து விட்டு பின்னும் இந்த தர்காவை என் பிள்ளைகளாகிய நீங்கள் எட்டு பேர்களும் பற்றிப் பிடித்துக் கொண்டு அதில் வருகிற காணிக்கை வகைறாக்களை சமபாகமாகப் பாகித்துக் கொள்ளுங்கள் என்று ஆக்யாபித்து விட்டு ஆண்டவனைத் தியானித்தவர்களாக யிருந்து வயது தொண்ணூற்று நான்கான போது ஹிஜிரி ஆயிரத்தி முப்பதிரண்டாம் வருடம் துல்ஹஜ்ஜு மாதம் மூன்றாந் தேதியில் கலிமாவுடன் வபாத்தை யனுபவித்துச் சுவர்க்கபதி சார்ந்தார்கள்.

அப்போது அருகிலிருந்த அவர்களின் பத்தினி ஆண் மக்கள் பெண் மக்கள் மருமக்கள் மற்றுள்ளார்களும் சஞ்சலித்து தேங்கி யழுது தீர்த்து பொறுதி செய்துக் கொண்டார்கள். உடனே இது செய்தி சுற்று கிராமங்க ளெல்லாம் பரவியதால் சகல முஸ்லிம்களும் ஜனாஸாவின் அடக்கத்திற்காக வந்து கூடினார்கள். பிறகு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆரிபு பில்லாஹி ஆண்டவர்களின் ஜனாஸாவை நீராட்டி கபன் முதலிய சடங்குகளெல்லாம் குறைவறச் செய்து சந்தூக்கில் வைத்துமூடி அவர்களின் புத்திரர்கள் மருகர்கள் கூடித் தோள் தாங்கி யெடுத்து நடந்து கலிமா முழக்கத்துடன் கொண்டுபோய் ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவர்களினது திவ்விய சமாதி ஸ்தானத்திற்குமேல் பாகமாய்க் குழிகோதி அதில் அடக்கஞ் செய்து விட்டு பாத்திஹா துஆவோதி முடித்தார்கள். பின்னர் ஜனாஸாவுக்கு வந்தவர்களனைவரும் அவரவர்கள் குடும்பத்தாருக்கு தாஸியத்து செய்து முடித்த பின் சென்றார்கள். பிறகு ஹலரத் ஷாஹுல் ஹமீதொலி

யுல்லா ஆண்டவர்களின் சொற்றவருது தறுகாவினது பணிவிடை மாறுமற்செய்து அவர்களினது திருக் காணிக்கையைக் கையாட்சி செய்து ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபவர்களுடைய கிருபை தங்கிய பிள்ளை களெட்டுப்பேரும் மருமக்களும் சந்தோஷத்துடன் வாழ்ந்திருந் தார்கள்.

பாந்தன் நகரதிபன் போர்வை யனுப்பிய சரித்திரம்.

ஹலரத் கவுது ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவரவர் களின் சிறப்பாகிய அற்புத காரணங்கள் எங்கும் பரவியதுபோல் பர்மா நாட்டிலும் பரவியிருந்ததால் அவர்களின் காரணங்களை யெல்லாம் நெடி லிலுங் கேள்வி யுற்றிருந்த பாந்தனென்கிற நகரதிபதியாகிய சுல்தான் ஹலரத்தவர்கள் வபாத்தை யனுபவித்துப் புகழ்தங்கிய நாகூரில் அடங்கி யிருக்கிறார்கள், என்பதை யறிந்து ஹலரத்தவர்களின் தற் காவுக்கு ஒரு தொண்டு இயற்ற வேண்டு மென்று நாட்டங் கொண்டு கபறு முபாறக் கென்கிற சிறப்பாகிய சமாதி ஸ்தானத்தின் பேரில் போர்த்து வதற்காக கிலாபென்கிற ஒரு போர்வையும் நற்கெந்தந்தரும் சந்தனக் கட்டைகளும் உயர்ந்த சாம்பிராணியும் சேகரித்து ஒரு பெட் டகத்தினுள் வைத்து அத்துடன் ஆண்டவரவர்கள் பேரால் ஒரு கடிதமுமெழுதி வைத்துப் பூட்டி அப்பெட்டியின் மேல் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களு கென்றெழுதிப் பாந்தன் நகரி லிருந்து நாகபட்டிணத்திற்குப் பயணமாகிய ஒரு வர்த்தகனுடைய கப்பலில் அப்பெட்டகத்தை யேற்றி நாகூர் தறகா ஷரீபிற் கொண்டு போய்க் கொடுக்க வேணுமென்று உத்திரவு செய்தனுப்பினர். அக் கப்பற்காரன் அதை ஒப்புக்கொண்டு தன் கப்பலில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து கப்பலை நங்கூரந்தூக்கிப் பாய் விரித்தோடி ஆழிய நடுக் கடலில் வரும்போது தெய்வச் செயலாய் கடும் புயல் உண்டாகி கடலில் கொந்தளிப்பால் அலை மோதுண்டு கப்பல் சிதைந்து போன தால் அக்கப்பலும் அதிலுள்ள ஜனங்களும் ஹலாக்காயின. ஆனால் அதிலிருந்த ஹலரத்தவர்களின் திருநாமம் பொதிந்த பெட்டகமட்டி லும் யாதொரு பழுதும் படாமல் கடலில் மிதந்துக்கொண்டு நாகபட் டிணத்தின் துறையில் கரை கண்டு அக்கரை யருகாக சிறப்புந் தகுதியுந் தங்கிய நாகூர் தறுகாவை நோக்கி மிதந்து கொண்டு வந்தது. அதை

சிலர் கண்டு அங்ககர் அதிகாரிகளுக்கு அறிவித்தனர். அவ்வதிகாரிகள் சிப்பந்தி சகிதம் வந்து அப்பெட்டியைக் கவனித்தபோது அது தானு கவே நாகூர் ஆண்டவர்களின் தற்கா அருகேயுள்ள கடற்கரையில் ஒதுங்கிற்று. உடனே அதிகாரிகள் அப்பெட்டியை கரையேற்றி பார்த்தபோது அதன்மீது ஆண்டவர்களின் திருநாமம் எழுதியிருக்கக் கண்டு உடனே அப்பெட்டியை யெடுத்து வந்து ஹலறத்தவர்களின் தறுகாவில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அங்கிருக்கின்ற அவர் களின் பேரர்களாகிய சாஹிபுமார்கள் பெட்டியை ஒப்புக்கொண்டு உடைத்து பார்த்தபோது அதில் உயர்ந்த பட்டு போர்வையும் சந்தனக் கட்டையும் சாம்பிருணியும் ஒரு கடிதமும் யாதொரு பழுதுமாகாமல் இருக்கக் கண்டு சந்தோஷமும், ஆனந்தமு முற்றுர்கள். மேலும் அக் கடிதத்தை வாசித்தபோது அப்பெட்டி யனுப்பிய அரசரின்னு ரென் றும் அதையேற்றி வந்த கப்பலுடையானின்னு ஞென்று மறிந்தார்கள். பிரமாதமாகிய கப்பல் சேதமடைந்தும் ஹலறத் ஆண்டவரவர்களின் வரிசை கொண்டு அவர்களின் காணிக்கையாகிய இப்பெட்டகமானது யாதொரு குறைவின்றி வந்து சேர்ந்ததென்று ஆச்சரிய மடைந்தானந் தம்பொங்கி ஆண்டவரவர்களைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அக்கடி தத்திலெழுதியபடி அப்போர்வையை யெடுத்து தறுகாவினுட் சென்று மிகுந்த மரியாதையுடன் ஆண்டவரவர்களின் கபறு ஷரீபின் பேரில் போற்றி சாம்பிராணித் தூபமிட்டு பாத்திஹா ஓதிவிட்டு வெளியில் வந்தார்கள். பின்னர் இவ்வற்புதங்களை கண்ணுரக் கண்ட நாகப்பட் டணத்தரசாக்ஷியார் இச்சமாசாரங்களை யெல்லா மெழுதி பாந்தன் பட்டணத் தரசருக் கனுப்பினுர்கள். அவர்கண்டு அதிசயங்கொண்டு அங்ககாருக்கெல்லா மறிவித்தபோது எல்லோரும் மிகுந்த புதுமை யாகி மனமகிழ்ந் தானந்தங் கொண்டு ஹலறத் மீருன் சாஹிபு ஆண் டவர்களைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி மேலும் மேலும் நேர்ச்சைகள் வைத்துக் காணிக்கைகள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

கொலைமாற்றி இரட்சித்த சரித்திரம்.

ஹலறத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களின் அற்புதங்கள் அநேகமாய் விளங்கிவருங் காலத்தில் மலாக்கா வென்கிற நகரத்தின் அரசாட்சியாரின் நாணயமியற்றுகின்ற கம்பட்ட சாலையில் வேலைக்கு தலைவனுயிருந்த திருமலை செட்டியென்பவன் நீண்ட காலமாய் அவ்

வேலையிலிருந்து வந்தான். அவனுடைய மூடத்தன்மையாலும் பொருளின் பேரில் வேட்கை மீறியதாலும் பின்வரும் கெடுதியை சற்றும் கவனியாமல் சில கள்ள நாணயத்தை யுண்டு பண்ணி நல்ல நாணயத்துடன் கலந்து வெளியில் விட்டான். அவ்வாறு சில நாள் நடந்து அதனால் திருமலைச் செட்டிபெரிய செல்வந்தனாய் விளங்கி வந்தான். அப்படியிருக்கும் போது அக்கள்ள நாணயம் அந்நகர் அரசாட்சிக்குரிய பொக்கிஷத்திலும் வந்து சேர்ந்தது. அதை அந்நகர்த் தலைமை நடத்துகின்ற அதிகாரி அறியப்பட்டதும் மிகுந்த கோபமாகி துப்பறியும் இரகசிய அதிகாரிகளுக்கு அறிவித்து புலன் அறியும்படி ஆக்யாபித்ததோடு ஆங்குள்ள ஆலோசனைக் கூட்டத்தின் தலைவர்கள் எட்டு பேருக்குந் தெரிவித்து இக்கள்ளத்தனஞ் செய்தவனென்று விசாரிக்கும் படியும் உத்திரவு செய்தார். இவர்களெல்லாம் இதை ஆராய்ந்து அறிந்தபோது இது நாணயசாலை திருமலை செட்டி செய்த மாறுபாடுதான் என்ற அத்தாட்சிகள் பூரணமாய் வெளியாயின. அதனால் அவ்வூரதிபன் தன் சேவர்களை யனுப்பி அச்செட்டியின் ஆஸ்திகளை யெல்லாம் பறிமுதல் செய்து அவனையும் பிடித்து விலங்கிட்டு சிறைச்சாலையி லடைத்து விட்டு அந்நகர் பிரதம நீதிபதியும் எட்டு கவுன்சலர்களுங் கூடி அப்பிராதை விசாரித்து ஆலோசித்த போது இப்பெரும் மோசடி திருமலைச் செட்டியால் தான் நடைபெற்றதென்று அறிந்து நீதிபதியும் எட்டு கவுன்சலர்களும் ஏகமனதாய் அச்செட்டியை தூக்கிலிடும்படி தீர்மானம் எழுதி யாவரும் கையொப்ப மிட்டு வைத்து விட்டு பிரிந்து விட்டார்கள். திருமலைச் செட்டியோ சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தான். அவனுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு விட்டதென்று அவனுக்கு கழுமரமும் நாட்டப்பட்டு விட்டது. சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்கிற திருமலைச் செட்டியோ சிறைச்சாலையிலிருந்து தனக்கு வந்து நேரிட்டிருக்கின்ற இடர் தவிர்ந்து போகும் பொருட்டு அநேக தேவதைகளைப் பிரார்த்தித்தும் யாதொரு பிரயோசனத்திற்கு அறிகுறியுமின்றிக் கவலை யுற்றிருக்கும் போது தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதென்று செய்தியும் அவன் செவிக்கு வந்தவுடன் திடுக்கிட்டு மனம் பதறி தேங்கியழுது புலம்பிக் கொண்டிருக்கும் போது அவன் மனதில் நாகூர் ஆண்டவர்களின் எண்ணம் உதித்தது. உடனே அவன் ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவரவர்களை மனதில் தியானித்து இரட்சகரே! இக்கொலையை விட்டென்னைக் காத்து மீட்டி வைப்

பிர்களானால் தங்களின் புகழ்தங்கிய பாத காணிக்கையாக சந்தனக் கட்டைகளும் அகில் கட்டைகளும் சாம்பிராணியும் ஈயப்பாளமுமாக எனக்குரிய ஒரு கப்பல் நிறைய ஏற்றித் தங்களுடைய சிறப்பாகிய தறுகாவிற் கனுப்பிவைப்பே னென்று நேர்ச்சை வைத்துக் கொண்டு, அந்நினைவு தவறாமல் மிகுந்த சாலையப் பாட்டுடன் தியானித்துக் கொண்டிருந்து விட்டு நித்திரை செய்யும் போது அவனுடைய கனவில் வரிசை தங்கிய ஒரு பக்கீறு சாஹிபவர்கள் வந்து ஓ! செட்டியே! நீ யொன்றுக்குமஞ்ச வேண்டாம். நாளையுன்னை இந்நகரத்து துரைத்தனத்தாரால் விடுதலைச் செய்யப்படு மென்றுரைத்து, தங்கள் கையிலிருந்த தடி கொண்டு அவன் முதுகிற் றழும்பேறத் தக்கவோ ரடியடித் தகன்றார்கள். அதைக் கண்டதும் இவன் திடுக்கிட்டு எழுந்து ஆச்சரியமுற்று இது நன்மை ரக்ஷிப்பதற்கு போதிய அறிகுறி என்று மனம் தேறி யிருந்தான். இது போலவே அந்த பக்கீறு சாஹிபவர்கள் அந்த மலாக்காவின் நீதிபதியுடைய கனவிலும் அவன் மனைவியின் கனவிலும் அவ்வெட்டுக் கவுன்சலர்களின் கனவிலும் வெளியாகி ஒவ்வொருவரிடத்திலும் சொன்னதாவது :—இந்தத் திருமலைச்செட்டி நமது மனிதனாதினால் அவனைக் கழுவிற் போட்டு சிரைச்சேதம் செய்வது சரியல்ல. அவனை நாளையத் தினமே அவன் குற்றத்தை மன்னித்து விடுதலை செய்து விடவேண்டு மென்று வற்புறுத்திச் சொல்லி ஒவ்வொருவருக்கும் முதுகில் தழும்பேறத் தக்க சோட்டாத் தடியினாலடித்து விட்டுச் சென்றார்கள். இதை அறிந்த ஒவ்வொருவருந் தனித் தனியே திடுக்கிட்டு பதறி விழித்து நித்திரை செய்யாமல் அஞ்சி நடுங்கி யிருக்கும் போது சூரியனும் கீழ்த்திசையி லிருந்தெழுந் துதயமானான். அந்நகரத்து பிரதம நீதிபதிகள் தன் முதுகில் பட்ட அடி தடித்துச் சிவந்திருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்து உடனே கவுன்ஸலர்களை யழைத்துத் தான் கண்ட அற்புதக் காரணங்களைச் சொல்ல, அவரவர்களும் அவ்வகையே நாங்களுங்கண்டோ மென்றுரைத்து ஒருவருடைய முதுகை யொருவர் பார்த்து அடங்காப் புதுமையாகி எல்லோருங் கூடி நீதி ஸ்தலத்திற்கு சென்று அவரவர்கள் ஸ்தானத்தில் அமர்ந்து முதல் நாளெழுதி வைத்த தீர்மானத்தை எடுத்து திருத்தலா மென்று நோக்கும் போது, அவர்கள் திருமலை செட்டியை கழுவிற் போட்டு சிறை தண்டனை செய்ய அத்தாட்சி காட்டி யெழுதப்பட்டிருந்ததை மாற்றி அச்செட்டியை விடுதலை செய்து விடும்படியான அத்தாக்ஷி . காண்பித்து விடுதலை செய்து விடும்படி யெழுதி யிருக்கக்

கண்டு எல்லோரும் ஆச்சரியமுற்று அந்தச் செட்டியைச் சிறைச்சாலையை விட்டுக் கொண்டு வந்து அவனுக்கிட்டிருந்த விலங்கை நீக்கி விட்டு அவனை நோக்கி ஏ! செட்டி நீ யேதும் புதுமைகள் கண்ட துண்டா? வென்று வினவிய போது அச்செட்டி சொன்னதாவது, என்னைக்காவற் கிடங்கி லடைத்த போது தனக்குரிய தேவாலயங்களிற் பல தேவதை களுக்கும் வேண்டிப் பிரார்த்தனை பண்ணினதையும் அதனால் பலனில்லா மற் போனதையும், அப்பால் தனக்குக் கொலை சிட்சை நேர்ந்ததை யறிந் ததும் பதறி யழுது ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களை வேண்டு தல் செய்து பிரார்த்தனைச் செய்துக் கொண்டு நித்திரை புரிந்த போது தான் கண்ட கனவில் வந்து உபயங் கொடுத்த விவரங்களையும் சொல்லி அவர்கள் தடியால் அடியுண்ட முதுகையும் காட்டினான். அப்போது அந்நகர் நீதிபதியும், கவுன்சலர்களுங் கூடி யோசித்து நாமடங்கலும் செட்டியும் ஓரே இரவில் கண்ட கனவானது யாதொரு பேதக மில்லா திருக்கின்ற படியால் இவனை நாம் விடுதலை செய்யாவிடில் அப்பெரியா ருடைய கோபாக்கினியினால் நமக்கெல்லா மென்னகேடு நேருமோ? வென்றஞ்சி உடனே திருமலைச் செட்டியை விடுதலை செய்து விட்டு அவனை நோக்கி உன் பறிமுதல் சொத்தை பெற்றுக் கொண்டு நீ சீக்கிரம் போய் அந்த ஆண்டவர்களுக்கு நீர் நேர்ந்த நேர்ச்சையை சீக்கிரத்தில் நிறைவேற்றி வையென்று அனுப்பி வைத்தார்கள்.

அப்போதந்தத் திருமலைச் செட்டி மிகமகிழ்ந்து ஆனந்தங் கொண்டு புயங்கள் பூரிக்கனை சார்ந்த வேண்டிய திரவியங்களைச் செலவு செய்து சந்தனக் கட்டை அகிற்கட்டை குமஞ்சான் ஈயப்பாளம் இவை களை மிகுதியாக வாங்கி அதற்கு போதிய ஒரு கப்பலைத் தயார் செய்து அது நிறையும்படி மேற்சொன்ன சரக்குகளை ஏற்றி அவ்வூர் இராஜாங் கத்தாருடைய முத்திரையிட்ட ஒரு கடிதத்தில் ஆங்கு நடந்த கார ணங்களை யெல்லா மெழுதி அதற்காக திருமலைச் செட்டி ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவர்களுக்குப் பாத காணிக்கையாக இக்கப்பலை யும் இதிலுள்ள சாமான்களையும் அனுப்பப் பட்டதென்று பட்டோலை முடித்து ஒரு பெட்டகத்தில் வைத்துப் பூட்டி அதை அக்கப்பலின் காம்பறுவில் வைத்துத் திறவு கோலை அப்பெட்டியின் பூட்டுவாயில் மாட்டி பதினாறு பாய்களையும் விரித்து லங்கரையுந் தூக்கிக்கட்டிய பின் அத்திருமலைச் செட்டி கப்பலிலுள்ள மனிதர்களடங்கலையு மிறங்கச் சொன்னபோது மலாக்காவின் துரைமார்களெல்லாம் மனிதரில்லாமல் இக்கப்பல் எப்படி யோடிச் செல்லுமென்று கேட்க, திருமலைச் செட்டி

என்னுடைய தலையை மீட்டு வைத்த நாகை ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் தங்களுடைமையையும் அழைப்பித்துக் கொள்வார்கள், பாருங்களென்று பதில் கூறினார். அது கேட்டு அத்துறைத்தனத்தார் அச்சொல்லை உண்மை கொண்டு எல்லோரும் கப்பலை விட்டிறங்கி கரையில் வந்துநின்று பார்த்திருக்க, அக்கப்பல் தன்னிலே திரும்பி நாகூர் தறுகா ஷரீபை முன்னோக்கி யோடுகின்றதைக் கண்டு தாங்கொணாப் புதுமையாகி ஆண்டவரவர்களை மிகமிகப் புகழ்ந்து போற்றி வாழ்த்தித் தங்கள் தங்கள் மனையின் கண் சார்ந்தார்கள்.

பஞ்சமாற்றிய சரித்திரம்.

ஹலரத் குத்பு ஹமீதொலியுல்லா ஆண்டவரவர்களுக்காக மலாக்காவிலிருந்து திருமலைச் செட்டியினு லனுப்பிய கப்பல் கபீதான் மாலுமி சுக்கானீ கலாவஸீ முதலிய யாதொரு சிப்பந்திகளு மில்லாமலிருந்தும் சற்றுவது திசை தவறாமலும் நேராக நாகூரை நோக்கி சீராகவோடி வந்து நாகப்பட்டிணத்திற்கு நேர்கரை யோரமாய் வந்தடைந்தபோது அத்துறையிலுள்ள கட்டுமரக்காரன் போய் அக்கப்பலை நோக்குமிடத்தில் மனிதர்கள் ஒருவருமே இல்லாதிருக்கக் கண்டு ஆச்சரியமுற்று சீக்கிரத்திற் திரும்பி போய் அவ்வூர் அதிகாரியினிடத்திற் சொல்ல அதுகேட்டு அவ்வதிகாரி சில சிப்பந்திகளுடன் வெகு துரிதத்திற் சென்று அக்கப்பலைப் பார்த்தபோது அதில் ஒருமனிதரும் இல்லாததால் கப்பலுள் சென்று சுற்றிப்பார்த்தார். அதன் குத்தல்வாயில் உலாந்தா முத்திரை வைத்திருக்கக் கண்டு அக்கப்பலின் விரித்த பாய்களைக் கட்டிவித்து லங்கரை விட்டுக் கப்பலை நிறுத்தி விட்டு காமறாவிலுட்சென்று பார்க்க அதில் ஒரு பெட்டகம் இருக்கக்கண்டு பெட்டகத்தின் பூட்டுவாயில் திறவு கோலிருப்பதை நோக்கி அத்திறவு கோலைக் கொண்டு பெட்டியைத் திறந்து அதனுள்ளிருந்து கடிதத்தை யெடுத்து வாசித்து பார்த்ததில் சகல சங்கதிகளும் தெரிய வந்தது. இக்கப்பல் சங்கடமின்றி ஓடி வந்தது ஹலறத் மீறான் சாஹிபு ஆண்டவரவர்களுடைய காரணங் கொண்டல்லாமல் வேறில்லை யென்றுரைத்து அக்கப்பலி லேற்றிய நான்கு வகைச் சரக்குகளையுமிறக்கிக் கடலருகிற்றனே பதனம் பண்ணிவைத்தான். இதையறிந்த நாகூர் மீறான் சாஹிபு ஆண்டவர்களின் பவுத்திரர்களாகிய சாஹிபுமார்கள் தங்கள் ஏவலாளிற் சிலரை நாகபட்டிணத்திற்கனுப்பி அக்கப்பலுள்பட சகல

சாமன்களையும் கேட்டபோது அந்நகராதிகாரி அச்சரக்கு சாமான்களெல்லாம் ஷாஹுல் ஹமீது ஆண்டவர் அவர்களுக்குரியது தான். இதோ நாங்கள் அச்சரக்குகளை யெல்லாம் இறக்கி ஓர் தெப்பங் கட்டி வைக்கின்றோம். ஆனால் இந்நகர் முற்றிலும் மழை பொழிதல் இல்லாமையால் பஞ்சம் பிடித்து ஏழை ஜனங்கள் மயங்கிக் கசங்கி வாடி மெலிந்து வருந்துகின்றனர். அவ்வாதை நீங்கும் பொருட்டு மாலிம் சுக்கானி முதலிய கப்பலோட்டிகளில்லாமல் இக்கப்பலைத் தருவித்துக் கொண்ட ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் இந்நகரில் மழை யிறங்கச் செய்து அம்மழையின் தண்ணீர்ப் பெருக்கத்தில் இத்தெப்பம் மிதந்து தறுகாமுனைவறில் சேரும்படி உதவி செய்ய வேண்டுமென்று யாங்கள் மிக விரும்புகின்றோமென்றுரைத்தான். அதைக் கேட்டுப்போன ஏவலாளிகள் ஆண்டவர்களின் பௌத்திரர்களான சாஹிபுமார்களிடத்தில் சொல்ல, அது கேட்டு அவர்களெல்லோரு மெழுந்து சிறப்புந்தகுதியு மொளிவுந் தங்கிய ஹலராத் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களின் சமாதி ஸ்தானத்திற்கு சென்று கபுறு ஷரீபை சூழ்ந்து நின்று நாகப்பட்டணத்ததிகாரி கேட்ட சங்கதிகளை முறையிட்டு மன்றாடி வரங்கேட்டு விட்டு வந்தார்கள். அன்றிரவே ஹலராத் ஆண்டவரவர்களின் கிருபை கொண்டு ஆகாய முழுமையும் மேகம் படர்ந்து, மழை பொழிய ஆரம்பித்து சோனமாரியாய் மழை அவ்விரவெல்லாம் வருஷித்ததால் பூமியடங்கலும் வெள்ளம் பிரளயமாகி யிருந்ததால் நாகப்பட்டணம் முதல் நாகூர் வரை ஒரே வெள்ளமயமாயிருந்தது. அதில் அத்தெப்பமுமிதந்து கடலருகாய் தறுகாஷரீபில் வந்து சேர்ந்தது. அன்றிரவு நீங்கி சூரியனுதித்தபோது நாகையின் அதிகாரி இதை யறிந்து மிகுமகிழ்ந்து ஹலறத்தவர்களின் பாதகமலங்களைப் போற்றி புகழ்ந்து தங்கள் சேவகர்களை நாகூருக்கு அனுப்பி கப்பலையும் குமஞ்சானையும் ஈயப்பாளம் இவைகள் யாவையும் ஒப்புக்கொள்ளும்படி சாஹிபு மார்களுக்கு சொல்லியனுப்பினான். இது செய்தியை சாஹிபு மார்கள் அறிந்தவுடன் சில சிப்பந்திகளை யனுப்பிக் கப்பலையும் ஈயப் பாளயங்களையும் கிரயஞ் செய்து ரொக்கப் பணமாக்கிக் கொண்டு சாம்பிராணி பெட்டியை வரவழைத்துக் கொண்டார்கள். அன்று முதல் காடு நகரங்களிலுள்ள பஞ்சங்கள் நீங்க செழிப் புற்றமையால் மனிதர்களடங்கலும் சுகம்பெற்று ஹலறத்தவர்களைப்புகழ்ந்து வாழ்த்தினார்கள். ஹலராத் தவர்களின் பவுத்திர சிகாமணிகளாகிய சாஹிபுமார்கள் அப் பணத்தைச் செலவு செய்து முன் ஆண்டவர்களுடைய ஒளி விளங்கிய

சமாதி ஸ்தானத்தில் முன் இராயக் குஞ்சாலி மறைக்காயர் கட்டின கட்டிடத்திற்கு முன் முகப்பில் இப்போது வெள்ளிக்கத விட்டிருக்கும் முன் வாசல் வரையும் புதுப்பித்து கட்டி முடித்தார்கள்.

பணிவிடை செய்தவர்க்குப் பணமருளிய சரித்திரம்.

ஹலரத் செய்யிது அப்துல் காதிறு மீரான் சாஹிபு ஆண்டவர்கள் தங்கள் செல்வ மகனாராகிய ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபு ஆரிபு பில்லாஹி ஆண்டவர்களுக்குச்சொன்ன அறுதி வாக்கின் பிரகாரம் நாளுக்கு நாள் அவ்லாதென்னும் சந்ததிகள் பெருகப் பெருக பல திசைகளில் நின்றுங் காணிக்கைகளும் பெருகி வந்தமையால் இக்காணிக்கைப் பணங்களை ஒருங்கே சேகரித்து பங்கு வைத்துக் கொள்ளும் பொருட்டு சாஹிபுமார்களெல்லாம் ஆலோசித்து ஒருண்டியலை தறுகா வாசலில் வைத்து வருங்காணிக்கைகளை அதில் போடச் செய்து நமக்குத் தேவையானபோது பிரித்தெடுத்துக் கொள்வோ மென்று முடிவு பண்ணிக் கொண்டார்கள். அவ்வாறு ஓர் கலசத்தால் உண்டியற் கட்டி வைத்தார்கள்! வருகிற ஜனங்கள் தங்கள் காணிக்கைகளை அவ்வுண்டியலில் போட்டு வந்தார்கள். அதை சாஹிபுமார்கள் தங்களுக்கு வேண்டிய நேரம் அவிழ்த்துப் பங்கிட்டெடுத்துக் கொள்ளுகிறது வழக்கமாயிருந்தது. இவ்வாறு சில நாள் நடந்து வருகையில் ஓர்போது சீருஞ் சிறப்புந் தங்கிய தறுகாவைச் சுற்றி வேலியடைக்கும்படி சில கூலிக்காரர்களை வேலைக்கு விட்டிருந்து அவர்களுக்கு கூலி கொடுக்க மறந்து விட்டு எப்போதுஞ் செய்கிற வழக்கப்படி உண்டியலை யவிழ்த்து அதிலிருந்த காணிக்கைப் பொருட்களை பாகாச்சாரம் பங்கிட்டு அவரவர்கள் எடுத்துக் கொண்டார்கள். பின்பு பொழுது அஸ்தமித்தபோது அவ்வேலைக் கூலிக்காரர்கள் சாஹிபுமார்களிடத்தில் வந்து கூலிப் பணம் கேட்டபோது அவர்களெல்லோரும், இதென்ன? கூலிக்காரருக்கு கூலி கொடுக்காமல் உண்டியலை ஒவ்வொருவரும், பங்கெடுத்துக் கொண்டோமே. இப்போது இக்கூலிக் காரர்களுக்கு யார் பணம் கொடுப்பது என்று யோசித்துக் கவலை கொண்டிருக்கும்போது, ஒரு வயோதிகர் வந்து நீர் என் கவலைப்படுகிறீர்கள்? ஆண்டவர்களுடைய காணிக்கைஉண்டியலைமீளவும்

கொட்டிப் பாருங்கள். பணமிருக்கு மென்று உரைத்து விட்டு சென்றார். அதுபோல் அவ்வுண்டியலைக் கொட்டி பார்த்தபோது, அக் கூலியாளருக்கு கொடுக்கவேண்டிய பணங்கள் எவ்வளவோ அவ்வளவு மட்டில் காலணா ஏறாமலும் குறையாமலும் சரியாய் இருந்தது. அதை எடுத்து அக்கூலியாளருக்கு கொடுத்து அனுப்பிவிட்டு ஆண்டவர்களை போற்றி புகழ்ந்து துதித்து இருந்தார்கள்.

காரணக் குருவியால் கண்ட மாறுபட்ட சரித்திரம்

ஹலரத் மீரான் சுல்தான் குத்பு நாயகம் ஹமீது ஆண்டவரவர்களடங்கி யிருக்கின்ற நாகூருக்கு மேல் பாகத்திலுள்ள கவர்மெண்ட் அதிகாரி ஒருவனுக்கு மூங்கில் தேவைப் பட்டமையால் சில சிப்பந்திகளை பல திக்கிலும் அனுப்பி மூங்கில்கள் விளைந்திருக்கு மிடத்தைப் பார்த்து வாருங்களென்றேவினான். அது கேட்டு அச்சிப்பந்திகளில் சிலர் எங்கும் தேடியலைந்தும் சரியான மூங்கில் கிடைக்காததால் நாகூரில் வந்து ஆண்டவர்களின் புதுமை தங்கிய தறுகாவைச் சுற்றி மூங்கில் மரங்க ளிருக்கின்றதைக் கண்டு அதிகாரியிடத்தில் போய் அறிவித்தார்கள். அதை அவன் கேட்ட உடனே, பல்லக்கு சவாரியில் நாகூருக்கு வந்து மூங்கில்களைப் பார்க்குமிடத்தில் அவைகள் நல்ல மூங்கில்களாக விருந்தமையால், மிகுந்த சந்தோஷத்துடன் ஹலரத் தவர்களுடைய தறுகாவைச் சுற்றி யிருக்கிறதென்று சற்றும் அஞ்சாமலும், அத்தறுகா ஷரீபையுடையவர்களாகிய சாஹிபுமார்களிடத்தில் அனுமதி பெறாமலும், தன்னாட்களை விட்டுத் தனக்குத் தேவையான மூங்கில்களை வெட்டும்படி ஏவினான். அதை அறிந்து உடனே சாஹிபுமார்கள் போய் வெட்ட வேண்டாமென்றுத் தடுத்ததற்கு அவன் தன்னதிகாரத்தின் பெருமையினால் அச்சொல்லை நிராகரித்து விட்டுத் தனக்குத் தேவையான மட்டில் வெட்டித் தெப்பங் கட்டி ஆற்றின் வழியாய் கொண்டு வரும்படி தன்னாட்களுக்குச் சொல்லி விட்டுத் தான் பல்லக்கிலேறிக் கொண்டு சேவகர் சூழத் தன்னகரை நாடிச் சென்றான்.

இதைப் பார்த்து சாஹிபுமார்களெல்லாம் மனம் நொந்து ஆண்டவர்களின் தறுகாவாயிலை நண்ணி நின்று ஆண்டவர்களே! தாங்கள்

எங்களுக் குரித்தாக்கித் தந்த எங்களுடைய மூங்கில் மரங்களை அநீத மாக வெட்டி யழித்துக் கொண்டு போகின்று னென்று பிரியாது சொல்லிக் கொண்டிருக்குந் தருணத்தில், ஹலரத் காதிறு அவுலியா ஆண்டவர்களுடைய புகழ் தங்கிய கபறு முபாறக்கின் போர்வையினுள் ளிருந்து ஒரு வோலைச் சுருள் வெளிப்பட்டு பட்சியைப்போல் பறந்து போய் அவ்வதிகாரியின் பல்லக்கினுட் புகுந்தது. அவனதைக் கண்டு இதென்ன வென்றெடுத்து வாசித்தறிய வெண்ணங் கொண்டு அச் சுருளைப் பிரித்தபோது ஓலையாயிருந்த சுருள் நிமிர்ந்து இருபுறமும் கூருள்ள வாளாகி அவனிரு கரங்களையும் இழுத்துக் கொண்டு அவ னுடைய கழுத்தை யறுத்து விட்டது. அவன் பல்லக்கிலிருந்து சிரம் வேறு உடல் வேறாகச் சிதைந்து விழுந்தான். அதனால் இரத்தப் பிரவாகம் பல்லக்கின் வழியாய் கீழே ஒழுகிற்று. அது கண்டு அவ னுடைய சேவகர்களெல்லாம் உடனே அப்பல்லக்கை கீழே வைத்து பார்க்கும் போது தன் எஜமானன் வெட்டுண்டு கிடைப்பதைக் கண்டு மெய்மறந்து முகம் சாம்பிச்சற்றுநேரம் மலைத்து மனந்தெளிந்து எல்லோ ருங் கூடி யோசனை பண்ணி இப்பாதகன் ஆண்டவர்களுடைய தறுகா ஷரீபைச் சூழநின்ற மூங்கில்களைச் சற்று மஞ்சாத நெஞ்சு கொண்டு அதற்குடைய சாஹிபுமார்களின் மறியலுக்கும் நிற்காமல் துஷ்டத்தன மான செய்கை செய்ததால் இக்கேடவனுக் குண்டாயிற்று. இனி நாம் அந்த மூங்கில்களைக் கொண்டு போனால் நமக்கும் என்னென்ன கேடு சம்பவிக்குமோ வென்று ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டு உடனே ஆட்களை யனுப்பி அம்மூங்கிற் றெப்பத்தைத் திருப்பிக் கொண்டு வந்து தறுகா ஷரீபில் சேர்த்து வைத்து விட்டு ஆண்டவரவர்களின் சமாதி ஸ்தானத்தைத் தரிசித்துக் கைகட்டி அஞ்சி நடுங்கிப் பயந்து நின்று, இரட்சகரே! அடிமைகள் அறியாமற் செய்த பிழையை பொறுத்தாட் கொள்ளவேண்டும் மென்றுரைத்துச் சாஷ்டாங்கம் செய் தெழுந்து பிறகு சாஹிபு மார்களிடத்திற் சென்று அஞ்சி வணங்கி வந்தனம் செய்து கைகட்டி நின்று ஆண்டவர்களே! எங்கள் சர்தார் செய்த குற்றத்திற்காக அவன் தலைக்கு ஆக்கினை நேரிட்டது. நாங்கள் உங்களுக்குரிய மூங்கில்களி லொன்றும் சேதம் போகாமற் கொண்டு வந்து சேர்த்து விட்டோமாகையால் தாங்கள் மன்னித்து எங்கள் பெய ரில் யாதொருயிடர் வந்தணுகாமல் தாங்கள் காக்கவேண்டு மென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டு எல்லாரும் தங்களூர் போய்ச் சேர்ந்தார் கள். மனநேர்மையுடையவர்கள் இக்காரியத்தின் பிரகாரம் தறுகாவின்

எவ்வகைப் பொருட்களையாவது அபகரித்தவர்கள் எவ்வாறாகினுந் தப்பித்துக் கொள்ள வழியுண்டோ? இல்லை யில்லை.

சமைத்துண்ட சேவல் வயிற்றிற்கூவிய சரித்திரம்.

ஹலரத் காதிறுெலியுல்லா ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் வபாத்தாகி வெகு காலத்திற்குப் பின் அவர்கள் திரு வாக்கியத்தின்படி ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களின் சந்ததிகள் மிகுந்ததால் வரிசை தங்கிய சமாதி ஸ்தானத்திற்கு வடபாகமாய்ச் சில வீடுகளியற்றி ஒவ்வொருவரும் வெவ்வேறுய்க் குடியேறி மகிழ் கூர்ந்து வாசஞ் செய்திருக்கும் போது சில பிரதேசத்தார்களும் அங்கு வந்து கட்டிடங்களியற்றி குடி ஏறியதால் அவ்விடத்திற்கு நாகூ ரென்கிற பெயர் பெற்று ஒரு நகரமாய் விளங்கிற்று. அவ்விடத்திற்கு ஹலரத்தவர்கள் பரமகதிசார்ந்த நாள் முதல் வருடங்கடோறும் நடக்கின்ற வருட கந்தூரிக்காக பல நகரங்களிலு மிருந்து பற்பல ஜாதியார்களும் காணிக்கை பொருள் கொண்டு வருகிறதுபோல் வருஷத்தில் தொட்டிய நாட்டிலுள்ளவர்களில் சிலர் ஒரு கூட்டமாகக் கூடி தறுகாவுக்காகப் பல காணிக்கை முதலியனவைகளைக் கொண்டு வரும் போது அதை ஓர் தொட்டியப் பெண் கண்டு ஓ! மனிதர்களே நீங்கள் எங்கே போகின்றீர்க ளென்று விசாரித்தபோது, அக்கூட்டத்தார்கள் அவளை நோக்கி நாங்க ளெல்லோரும் நாகூரிலடங்கி யிருக்கின்ற அதீத காரணங்களையுடைய ஹலரத் மீருன் சாஹிபு ஆண்டவரவர்களின் கந்தூரி யென்கிற வருஷ திருவிழாவின் சிறப்பை நோக்கி அவர்களின் சமாதி ஸ்தானத்தைத் தெரிசித்து யாங்கள் நாடிய நாட்டங்களை கேட்டு வருகிறதற்காகப் போகின்றோ மென்றுரைத்தார்கள்.

அது கேட்டு அப்பெண் அவர்களைப் பார்த்து என்னுயகனுக்கும் என் புத்திரனுக்கும் வெகு காலமாய்த் தொலையாத நசலாக விருக்கின்றது. இப்போது நீங்கள் சொன்ன அந்த ஆண்டவரவர்கள் இப்பிணியை நீக்கி என் புருடனும் பிள்ளையுஞ் சுகம் பெற்றெழுந்தால் காணிக்கைகளுடன் இனி வருந் திருவிழாவிற்கு நானு மென்னுயகனும் பிள்ளையுமாய்ப் போய் அந்த ஆண்டவர்களுடைய சன்னிதானத்தில் சாஷ்டாங்கஞ் செய்து வருவோ மென்று பிரார்த்தித் துரைத்து விட்டு தன்னில்

லிற் சார்ந்து தனக்குரிய ஒரு பெரிய சேவலை தன் கைகளிற் பிடித்து அவள் புருடனையும் பிள்ளையையுந் தீண்டச் சொல்லி இச்சேவல் மீறான் சாஹிப் ஆண்டவர்களுடைய தென்றுரைத்து நேர்ந்து விட்டு விட்டாள். உடனே அவ்விருவருக்கும் ஆண்டவர்களின் கிருபையால் நாளுக்கு நாள் வியாதிகள் நீங்கி சுகமேற்பட்டது. அவ்வதிசயத்தை அப்பெண் கண்டு மிகுந்த சந்தோஷங் கொண்டு தன் பிள்ளைக்காண அதிகக் கிருபையை அச்சேவலின் பேரில் வைத்து வளர்த்தனள். அச்சேவலோ அதற்கேற்றவாறு பருத்துக் கொழுத்து மதாளித்து அழகாய் ஆடியோடி திரிந்தது. இச்சேவலின் அழகையும் வர்ணிப்பையும் அந்நாட்டுப் பாளையப்பட்டுச் சேவகரி லொருவன் கண்ணோட்டமாய்ப் பார்த்திருந்து இச்சேவலை எவ்விதத்திலும் நாம் பிடித்து அறுத்துத் தின்னவேண்டு மென்று ஆசைக் கொண்டிருந்து அதற்கு சமயம் பார்த்து ஒரு நாள் வந்து பிடித்து அதனிரு காலையுஞ் சேர்த்துக் கட்டினான். அத் தொட்டியப் பெண் அதை யறிந்து வந்து, 'ஐயா! இச்சேவல் நாகூர் ஆண்டவர்களுக்காக பிரார்த்தித்து வளர்த்து வருகிறேன். அது நமக்குடையதல்ல, ஆண்டவர்களுக்குடையது. நீர் அதை விட்டு விடும், அதற்கு பதிலாக வேறே எத்தனை சேவல் கேட்டாலும் நான் தருகி றேன் என்று மன்றாடி கெஞ்சி கேட்டாள்.

அவளின் வார்த்தையை அவன் கொஞ்சமும் மதிக்காமல் அலக்ஷி யம் செய்து விட்டு அச்சேவலிரு காலுக்கு மிடையில் ஒரு கொம்பை நுழைத்து தன்றோளில் வைத்துக் கொண்டு நடந்தான். அச்சேவல் அடுத்தடுத்து கூவிக் கொண்டு அவன் தலையை கொத்திக் கொண்டு மிருந்தது. அதை அவன் கொஞ்சமும் கவனியாமல் தான் சென்றுக் கொண்டே யிருந்தான். இதை அப்பெண் கண்டு ஓ! மனிதனே! இச்சேவலாகிறது உன் றலையிற் கொத்துகின்றதை நீ யோசிக்க வில்லையா? மிகு காரணங்களுடைய ஹலரத் மீறான் சாஹிபவர்களுடைய காணிக் கையிலுள்ளதா யிருக்கும். நீயதை விட்டு விடு. ஒன்றுக்கு நாலு சேவல் நான் தருகிறே னென்று மீளவுங் கெஞ்சிக் கேட்டும் அவனதை விடாமல் கோபத்துடன் அவளைப் பார்த்து இன்னும் அரை நாழிகை யில் இச்சேவலைத் தின்று விடுவேன். அப்பால் மீறான் சாஹிபுடைய சேவலென்றால் என் வயிற்றிலுள்ளிருந்துங் கூவுமோ? கொத்துமோ? வென்று பரியாசை வார்த்தை பேசி விட்டு தன் வீட்டிற் சென்று அச்சேவலை யதைத்துக் கறி சமைத்து சாப்பிட்டு விட்டு மனமகிழ்ச்சி யாய் நித்திரை செய்தான்.

அன்றிரவு இரண்டாஞ் சாமமானபோது அம்மூடனின் வயிற்றில் பெருத்த வலியுண்டாகி தன்னால் தாங்க முடியாமல் பதறி விழித்துப் பார்க்க அவ்வயிற்று வலி வரவர அதிகரித்துக் கொண்டிருந்தது. அதை அவனாலாற்ற முடியாமல் கீழே விழுந்து புரண்டு ஐயோ! ஐயய்யோ! வென்றலறி யழுதான். அச்சத்தங் கேட்ட அயலார்களெல்லாம் ஓடி வந்து கூடி யிருந்து அவன் படும் வருத்தத்தை கண்ணினாற் பார்த்துச் சகிக்க முடியாமல் மனமிரங்கி அநேகவித அவிழ்தங்களையும் மந்திர தந்திரங்களைச் செய்தும் அவனது வருத்தம் எள்ளத்தனையும் நீங்காமல் இருந்தது. அவ்விர வெல்லாம் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்ததோடு அச்சேவல் வயிற்றினுள்ளிருந்து செட்டை தட்டி அங்ஙனமவனைச் சூழ்ந்திருப்பவர்களின் செவி யடைக்கச் சப்தமிட்டு கூவிற்று. அதனால் அவனுக்கு சகிக்க முடியாத வயிற்று வேதனை யுண்டாகி மூர்ச்சையாகி விழுந்தான். அது கண்டு அங்கு வந்த அயலார்களெல்லாம் ஆச்சரியமுற்று அப்புதுமையை மனந்தெளிந் தின்னதென்றறியக் கூடாமையால் அவனுடைய மனைவிமக்களோடு இது ஆச்சரியமென்று வினவினார்கள். அதற்கு அவர்கள் நாகூர் ஆண்டவர்கள் பிரார்த்தனை செய்து விடப்பட்ட ஒரு சேவலை அறுத்து சமைத்து புசித்ததே இதற்குகாரணமென்று பதில் கூறினார்கள். அதை யறிந்து அம்மனிதர்கள் ஆலோசித்து இவ்வாதை அந்த நாதாவின் கிருபையினால் தீருமேயல்லாது மற்றைய மருந்துகளால் தீரமாட்டா தென்று சொல்லி அத்தொட்டியப் பெண்ணுக்கு ஆள்விட்டழைத் தார்கள். அவள்கேட்டுவந்து அவன்செய்த கொடுமைக்கு பதில் கிடைத்தது, அப்பாவியின் முகத்தை நான் வந்து பார்க்க மாட்டே னென்று மறுத்து விட்டாள். அப்பால் அச்சேவலடிக்கடி அவன் வயிற்றிலிருந்து கூவுவதாலும் வருத்தம் மிக அதிகமுற்று இனிசீவ வதை வந்து நேரிடு மென்றஞ்சித் தன்னைத் தூக்கிக்கொண்டு போய் அங்ககரிலுள்ள முஸ்லிமானவர்களிருக்கும் இடத்தில் விட்டு விடுங்கள் என்று சொல்லி பரிதவித்து புலம்பி அழுதான். அது கேட்டு அவர்கள் அவனை தூக்கி முஸ்லிம்கள் வசிக்கும் இடத்திற் கொண்டு போய் விட்டார்கள்.

அவன் முஸ்லிம்கள் ஸ்தானத்திற்கு போனதும் அவர்களைநோக்கி ஐயா சாயபுகளே! நான் நாகூர் ஆண்டவர்களுக்கு செய்த பிழையால் சகிக்கொணா துன்பத்தை அனுபவித்துக் கொண்டு என் உயிருக்கும் ஆபத்தாயிருக்கிறது. ஆகையால் எனக்கிவ்விடர் நீங்கும்படி யெல்

லோரும் ஹலறத் மீருன் சாஹிபு ஆண்டவர்களிடத்தில் மன்ருடிக் கேட்டு என்னை ரக்ஷியுங்கள். நான் ஆண்டவர்கள் கிருபையால் என் அவஸ்தை நீங்கி நற்சுகம் பெற்றெழுந்தவுடன் எனக்குரிய சகல ஆஸ்திகளையும் அந்த ஆண்டவர்களின் பவுத்திரர்களுக்குப் பாத காணிக்கையாகக் கொடுத்து விடுகிறதுந்தவிர நானும் என் குடும்பத்துடன் உங்கள் இஸ்லாம் மார்க்கத்திலாகி விடுகிறே மென்று மிகவும் கெஞ்சிக் கிடந்தழுதுக் கேட்டான். அதுகேட்டு இஸ்லாமிலுள்ள பெரியோர்களெல்லாம் மனமிரங்கி ஹலறத் குத்பு ஷாஹுல் ஹமீத் ஆண்டவர்களை மனதில் தியானித்து ஆண்டவர்களே! இக்காபிரான வன் நமது தீனில் இஸ்லாமில் வந்து சேரும் பொருட்டு அவன் செய்த அரும் பிழையைப் பொருத்து ரக்ஷிக்க வேண்டு மென்று துவாயிரந்து மன்ருடி கேட்டார்கள். உடனே ஹலறத் ஆண்டவரவர்கள் முஸ்லிம் களின் வேண்டுதலுக்காகவும் தீன் தழைப்பதற்காகவும் அந்த புத்தி யீனன் செய்த குற்றத்தை பொறுத்து அவனுக்குற்ற வாதையை வெகு துரிதத்தில் மாற்றி வைத்தார்கள்.

அவனுக்கு அவ்வருத்தம் நீங்கினதும் உடனே அவன் தன்குடும் பத்துடன் கலிமாச் சொல்லி இஸ்லாத்தைத் தழுவினன். மேலும் அவன் முன் சொன்னவாறு தனக்குரிய ஆஸ்திகள் யாவையும் கிரையஞ் செய்து பொருளாக்கி அப்பொருளை யெல்லா மெடுத்துக் கொண்டு தன் குடும்பத்துடன் நாகூர் ஷரீபுக்கு வந்து ஹலறத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களின் தறுகா சன்னதியில் கைகட்டி நின்று பாத்திஹாவோதி காணிக்கைகளை உண்டியலிற் போட்டு விட்டு அங்குள்ளவர்களுக் கெல் லாம் நடந்தவை களனைத்தையும் விவரமாய் சொல்லி ஆண்டவர்களைப் போற்றி புகழ்ந்து நின்ருன். இதுகேட்டு யாவர்களும் ஆண்டவர் களின் காரணங்களை பாராட்டினர்கள். சிலநாள் தனது குடும்பத்தோடு நாகூரில் தரித்திருந்து ஆண்டவர்களின் கிருபை பெற்று வாழ்ந்திருந்து பின் தன்னகரடைந்தான். எனதன்பர்களே! இவ்வகைச் சரிதைகளை யெல்லாம் நாமறிந்திருக்க அந்த தறுகாவுக்குரியவர்களின் எவ்வகைப் பட்ட உடமைகளையாவது நாமெடுத்தருந்த மனந்துணியுமோ? அப் படித் துணிந்தெடுத்தவர்களுக் கெவ்வாற்ருனு மிடருறு மென்பதற்குச் சந்தேக மில்லை, இல்லை, என்றுணர்வீர்களாகவும்.

குருடுமாற்றி இரட்சித்த சரித்திரம்.

ஹலரத் ஷாஹ் சுல்தான் ஷாஹுல் ஹமீதாண்டவரவர்களுடைய வரிசை தங்கிய தறுகாவில் வருஷங்கடோறும் தப்பாமல் நடந்து வரும் கந்தூரிகளில் ஓர் தடவை ஓர் பிராமணப் பெண் கொஞ்சம் நெய் கொணர்ந்து சமாதி ஸ்தானத்தின் சன்னதி விளக்கிலிட்டாள். அஃது அவ்விளக்கில் நரிக்காமல் தண்ணீர் போலாகிச் சிதறிப் பூமியின்கண் வீழ்ந்துவிட்டதுந் தவிர அவளிரண்டு கண்ணுங் குருடாகி விட்டது. அதையறிந்து அவள் தட்டுதடுமாறி யழுதுபுலம்பி பரிதபித்து நின்றாள். அதுகண்டு அங்ஙன மிருந்த சாஹிபுமார்களெல்லாம் வந்து அவளை நோக்கி நீ யேனழுகின்றாய்? உன் சஞ்சலம் என்ன? வென்று கேட்டார்கள். அதற்கு அப்பிராமணி மிகுந்த பரிதாபத்துடன் வாய்திறந்து ஐயா சாயபுகளே! நானென்னூட்டி லிருக்கும்போது அவ்வூராரில் சிலர் நாகூருக்குப் பிரயாணித்து வருவதைக் கண்டு அவர்களை நோக்கி, ஐயா நீங்கள் என்ன காரியத்திற்கு செல்லுகிறீர்களென்று வினவினேன். அதற்கு அவர்கள் நாகூர் மீறான் சாஹிபு ஆண்டவரவர்களுடைய தறுகாவுக்குப் போய் எங்கள் வேண்டுதலை நிறைவேற்றஞ் செய்து கொண்டு வரப்போகிறோமென்றார்கள். அதுகேட்டு நானு மென்மனதில் என் புருஷனுக்கு வெகு காலமாய் கண்ணொளி மழுங்கி யிருப்பதை அந்த ஆண்டவரவர்கள் சுகமாக்கி வைத்தால் ஒரு பணத்திற்கு நெய் வாங்கிவந்து இச்சன்னதி விளக்கில் வார்ப்பதாக நேர்ச்சை வைத்துக் கொண்டேன். உடனே என் எண்ணப்படி என் கணவனின் திரு விழிகளுந் தெளிந்து பார்வை கூர்மையாகி விட்டது. அதனால் என் பிரார்த்தனைப்படி அங்கு தானே ஒரு பணத்திற்கு நெய் வாங்கிக் கொண்டு தறுகாவை நாடி நாகூருக்கு வந்தபோது நான் கொண்டு வந்த நெய் இங்கு மூன்று பணத்திற்கு விற்குமென்று நான் கேள்வி யுற்றதால் என் மூடப் புத்தியினாலே நான் கொண்டு வந்த நெய்யை மூன்று பணத்திற்கு விற்று அதில் ஒரு பணத்திற்கு இன்னூட்டு நெய்யை வாங்கிக் கொண்டு இரண்டு பணத்தை லாபமாக வைத்துக் கொண்டு வந்து இச்சன்னதி விளக்கில் வார்த்தேன். அந்த நெய்யடங்கலும் அவ்விளக்கிற்றங்காமற் சிதறிப்போனது மன்றி ஆண்டவரவர்களுடைய இரண்டு பணத்திற் கிச்சித்த என்னுடைய இரண்டு கண்களையுமிழந்து இக்கேடு கெட்டேனென்று ஏங்கியலறி யழுதாள். அது கேட்டந்த சாஹிபுமார்களிற் சிலர் அப்பிராமணப் பெண்ணுக்கு ஆறுதல் கூறி அழுகையை மாற்றி கூடவே அழைத்துக் கொண்டு கடை வீதியிற் சென்று இப்பெண்ணிடத்தில் நெய் வாங்கியவனொன்று

விசாரித்தபோது ஒருவன் தான் வாங்கினதாகச் சொன்னான். அப்போதவனிடத்திலிருந்த அவ்விரண்டு பணத்தையு மவனிடத்திற் கொடுக்கச்சொல்லி அந்த நெய்யை வாங்கியவள் கையிற் கொடுத்து மீண்டும் தறுகா ஷரீபிற்கு கூட்டி வந்து நிறுத்தி நீ இங்ஙனம் நின்று ஆண்டவர்கள் பால் பிழை பொறுக்கத் தேடிக்கொண்டு அப்பாலிந்த நெய்யை திரு விளக்கிலிடென்றுரைத்தார்கள். அதுபோல் அப்பெண் அஞ்சி நின்று அழுதழுது ஆண்டவரே! அருந்தவமே! நாதாவே! நாடினோர்க்கருள் புரியும் நாயகமே! யென்று பலவாறு புகழ்ந்து அடியாளறியாமற் செய்த குற்றத்தை பொருத்துச் சித்த மிரங்கிச் சிறியாளைக்காக்க வேண்டுமென்று மன்றாடிப் பூமியின் கண் வீழ்ந்து சாஷ்டாங்கஞ் செய்தெழுந்து அந்த நெய்யையுந் திரு விளக்கில் வார்த்தாள். உடனே அவளிரண்டு கண்ணும் விளங்கித் துலங்கினதால் மனமகிழ்ந்தானந்தங் கொண்டு ஆண்டவரவர்களை யடிக்கடி புகழ்ந்து சாஹிபுமார்களையும் மிக மிக வாழ்த்திக் கொண்டு தன்னூர்போய்ச் சேர்ந்தாள். என் சகோதரர்களே! இவ்வகைச் சங்கதியைக் காதாரக்கேட்ட எவர்களாவது அந்தப் பொருட்களை யெடுத்தபகரிக்கக் கனவிலும் நினைப்பரோ? அப்பொருளை யெடுத்தருந்தியவர்கள் கெடாதிருப்பரோ? நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

தரியாபீவி தன மறுந்தழிந்த சரித்திரம்

ஹலரத் செய்யிது மீருன் சாஹிபு ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களின் தறுகாவில் அவர்கள் பேரால் நடத்துகின்ற சிறப்பாகிய வருட கந்தூரிக்காக பாப்பாஊரில் வசிக்கின்ற மிகுந்த செல்வத்தையுடைய பொன்னி மரைக்காயருடைய மனைவி தரியா பீவி என்பவள் நாகூருக்கு வந்து ஆண்டவர்களுடைய தறுகாவிற் சென்று நேர்ச்சைப் பொருட்களையும் காணிக்கைகளையும் சேர்த்து விட்டு ஓரிடத்தில் விடுதி விட்டிறங்கி யிருந்தனள். பின்பு அத்திரு விழாச் செய்து முடிவாகிய பத்தாவது நாளில் சாஹிபுமார்கள் வழக்கப்படிக்கு கொழியலரிசியில் சாதஞ் சமைத்து கந்தூரிக்கு வந்தவர்களுக் கெல்லாம் பங்கிட்ட பின்னர் ஓர் மண் பாத்திரத்தில் கொஞ்சம் சாதமும் சந்தனமும் வைத்து ஓர் ஆள்வசங் கொடுத்து தரியாபீவி என்னும் பெண்ணுக்கு அனுப்பி

வைத்தார்கள். அவனந்தச் சாதத்தையும் பாத்திரத்தையும் பார்த்த வுடனே தன்னுடைய தகுதிக்கு அம்மண் பாத்திரமும் கொழியலரிசி சாதமும் இழிவாய்க் கண்டு சாஹிபுமார்கள் பேரில் மிகுந்த கோபமாகிக் கண்களிரண்டுஞ் சிவப்பேற இதழ் துடிக்க பல்லை நறுநறுத்து எதிரி லிருந்த தனது தாதியர்களை நோக்கி என் மேன்மையையும் தகுதியை யும் இந்த சாஹிபுமார்கள் நன்றாயறிந்திருந்தும் கிஞ்சித்தும் அஞ்சாது பஞ்சைகட்கு ஈவதுபோல் நெஞ்சு துணிந்து இந்த மண் பாத்திரத்தில் தவிடெடுபடாத அரிசி சாதத்தை வைத்தனுப்பிய இவர்கள் நம்மை என்ன மதித்தார்கள்? நம்மை இழிவுபடுத்துவதற்கல்லவோ இம்மாதிரி செய்தார்கள். இருக்கட்டும் அவர்களைச் சொற்ப தினத்தில் இத்தரு காவை விட்டும் நீக்கித் துரத்தி விட்டு அவர்களுக்குப் பதிலாக பிஜாப் பூரிலிருக்கின்ற நமது ஷெய்கு அத்தீக் குல்லாவையும் அவருடனிருக்கிற வர்களையும் இங்கு அழைத்து வந்து அவர்களை இத்தருகாவிற்கு தலை மையாக்கி வைக்கா விட்டால் என் முலைகளிரண்டையு மறுத்து நாய்க் கிரை யிடுவேனென்று சபதம்கூறி தனக்கு வருங்கெடுதியை யுணராது சத்தியமும் செய்து விட்டு உடனே அங்கிருந் தெழுந்து தனது பாப்பாஹூர் போய்ச் சேர்ந்தாள்.

தரியா பீவி தன் வூர் போய்ச் சேர்ந்ததும் லிகிதர்களி லொருவனை யருகில் அழைத் திருத்தி ஒரு காகிதத்தில் பிஜாபூர் ஷெய்கு அதீ குல்லா சாஹிபுக்கு எழுதியதாவது, தான் நாகூருக்குப் போயிருந்த தையும், அங்கு தனக்கு சாஹிபுமார்கள் செய்த அவமரியாதையையும் தன் எண்ணத்தையு மெழுதி, சிக்கிரத்தில் தாங்களுந் தங்களோடுற்ற வர்களுமாக நாகூர் வந்து சேரவேண்டியது, தங்களையே தருகாவுக்கு தலைமையாக்க முடிவு செய்திருக்கிறேன் என்று அழுத்தமாய் எழுதி கடிதத்தை மடித்து மேல் விலாசமிட்டு பிஜாப்பூரிலிருக்கிற தனது ஷெய்கு அத்தீக் குல்லாவுக் கனுப்பி வைத்தாள்.

பின்னர் தான் யோசித்ததாவது நாம் இந்த சாஹிபுமார்களை நீக்கி விட்டு விதிய தலைமை தனத்தை எற்படுத்துவதானால் அடுத்தாப் போல் தஞ்சை அரசர் இதற்கோர் தலைமையா யிருக்கிறார். அவருடைய அனுமதி இதற்கு மிக்க அவசியமாகும், ஆதலால் அவருடைய அனு மதியை பெற முயற்சிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு தன் வச மிருந்த மிகுந்த விலை பெற்ற வைரம், வைடூரியம், பவளம், மாணிக்கம், மரகதம், கோமேதகம், புஷ்பராகம், நீலம், இவ்வகை இரத்தினங்களிற்

சிலதையும் மிகுந்த பொருட்களையும் எடுத்துக்கொண்டு தாதியர் மூப்பிரியர் ஏவலாளர் புடை சூழ இருபுறமுங் கொம்புள்ள வாகன மீதேறித் தஞ்சை நகர் போய்ச் சேர்ந்தாள். அங்கு போய்ச் சேர்ந்ததும் அந்நகர் அரசரைக் கண்டு வாஞ்சனை செய்துக் கொள்வதற்காக அவ்வரசனின் மந்திரி பிரதானிமார்களை முன்னதாகவே கண்டு இஷ்டம் பிடித்துக் கொண்டு அவர்கள் வழியாய் அரசரையும் போய் சந்தித்தாள். அரசரை சந்தித்தபோது தான் கொண்டு வந்த இரத்தினாதிகளையும் அரசருக்குக் காணிக்கை வைத்துக் கண்டு அரசருடைய சிநேகிதத்தையுங் கைக் கொண்டாள்.

பிறகு ஹலரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா ஆண்டவரவர்களினது ஒளி விளங்கிய தறுகாவையுடைய சாஹிபுமார்கள் பேரில் அரசன் வெறுப்புண்டாகத் தக்க குரூரமான அநேகமான கோள் குண்டணிகளைச் சொல்லி சாஹிபுமார்கள் மீது அரசனுக்கு வெறுப்புண்டாக்கினாள். பிறகு அங்கு சில நாள் தரித்திருந்து அரசனோடு அன்னியோன்னிய சிநேகமாயிருந்து சாஹிபுமார்களை ஆண்டவரவர்களின் தறுகாவை விட்டு நீக்கித் தனக்குப் பிரிய முள்ளவர்களை அவர்களுக்குப் பதிலாக தறுகாவுக்கு தலைமையாக நேமிக்கும்படியான அதிகார பத்திரமும் அரசரால் பெற்று அவ்வரசனால் விடுத்த சில சேவர்களையும் தன்னோடு கூட்டிக் கொண்டு பல்லக்கிலேறி நடாத்திச் சொல்லொண்ணா மகிழ்ச்சியோடு தஞ்சை நகர் விட்டு நீங்கி கொறடாசேரி வந்த போது சூரியனும் அடைந்ததால் அங்கு கூடாரமடித்து விடுதி விட்டிறங்கினாள். அன்றிரவு இரண்டாவது ஜாம மானபோது ஹலரத் நாகை நாயகராகிய மீரான் சாஹிபு ஆண்டவரவர்களுடைய முனிவானது அந்த தரியா பீவியின் பேரில் இறங்கிற்று. அதனால் உடனே கடினமாகிய காற்று மழையுங் கலந்தடித்ததுடன் அமாவாசையி னிரவைக்காண மிகுந்த இருளுமுண்டாகி விட்டதால் அத்தரியா பீவியினுடைய ஏவலாளர்கள் பல பந்தங்களேற்றியும் அப்பந்தம் எரியாமலும் அவ்விருள் நீங்காமலும் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாமல் மன மருண்டெல்லோரும் பயந்து ஒடுங்கினது மன்றி குளிர் பொறுக்கக் கூடாமையால் பதுங்கு மிடந்தேடி யொருவரை யொருவரறியாது அப்படு நீலியை விட்டு சிப்பந்திகள் யாவரும் நீங்கி பல திசைகளிலும் சிதருண்டு ஓடி விட்டார்கள். அப்பாலந்தப் படுநீலியாகிய தரியா பீவி யென்பவள் மாத்திரம் தனித்துத் தானேறி வந்த பல்லக்கினுள் திகிலடைந்து கதவை அடைத்துக் கொண்டு இருக்கும் தருணத்தில் அவ்விருளின் கண் தெய்வச் செயு

லாய் ஒரு நாயானது வந்து அப்பல்லக்கின் கதவை முட்டித் தள்ளிக் கொண்டு பல்லக்கினுட் புகுந்து அக்கொடும் பெரும் பாதகியினது இரண்டு தனங்களையுங் கவ்வி யிழுத்துக் கொண்டு போய் விட்டது. உடனே காற்றும் மழையும் நீங்கி அக்கொடிய விருளும் விலகி விட்டது. உடனே அப்பாவிப் பெண்ணாகிய தரியா பீவி மெய்மறந்து அயர்ச்சிக் கொண்டிருக்கச் சூரியனுதித்து பொழுது விடிந்தது.

பொழுது விடிந்ததும் பல திசைகளிலும் சிதறிப்போயிருந்தவர்களெல்லாம் வந்து பல்லக்கினுள் பார்க்கும்போது தரியா பீவியாகிய தன் எஜமானி மயக்குண்டு கிடப்பதையும் நாய்க் கடியினால் இரண்டு கனதனங்களையு மிழக்கப் பெற்று இரத்தச் சோரிசொரிவதையும் நாய்ப் போற் குலைப்பதையுங் கண்டு எல்லோரு மனமஞ்சி அவளைத் தூக்கி வந்து அவளிருந்த பாப்டாவூரிற் சேர்த்தார்கள். அப்பெண் மூன்று நாள் வரையில் நாய்போற் குலைத்து கதறி இறந்தாள். நற்புத்தியுடைய மனிதர்களே! நீங்கள் நன்றாய் ஆலோசித்துப் பாருங்கள். வாக்குமாறாத நாக்குள்ள நமது நாயகரவர்களின் திருவாக்கால் சொன்ன சொல்லை மாற்றிவைக்க நாடிய தரியா பீவி யென்பவளடைந்த துன்பத்தையுந் தாழ்மையுங் கேட்கில், அந்த ஆண்டவரவர்களின் அருமை மகனாகிய ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபவர்கள் வாங்கி வந்த காணிக்கை முடிப்பைக் கசக்கிப் பிழிந்த போதுரைத்த வார்த்தையை யெவரு மறைப்பரோ? மறந்தவர்கள் தாழ்மையிலாகா திருப்பரோ? சொல்லுங்கள்.

ஷெய்கு ஹத்தீக்குல்லா வெருட்சி யுற்றோடிய சரித்திரம்.

ஹலரத் காதிற் கன்ஜ சவாயி ஆண்டவரவர்களினது கோபாக்கினி தாக்கியதா லிழிவுண்டிறந்த தரியா பீவி யனுப்பிய கடிதம் பிஜாபூரிலிருந்த ஷெய்கு அத்தீக்குல்லா விடத்திற் சேர்ந்ததும், அவரதை வாசித்தறிந்து மகிழ்ச்சி கூர்ந்து ஹலரத் ஆண்டவரவர்களின் அடங்காப் பெரும் புதுமைகளை நன்றாய் அறிந்திருந்தும் பெரும் செல்வத்தை வேட்கை கொண்டதால் அதை மறந்து அந்த தரியா பீவி எழுதிய சங்கதிகளை ஒப்புக் கொண்டு தானுந் தன்னோடுற்றவர்களுமாய் பிஜாப்பூரை நீங்கி வெகு துரிதத்தில் நடந்து காடு நகரங்களைக் கடந்து அக்கொடு நீலி கொறடாச் சேரியில் வந்திறங்கிய இரவில் இவரும் மேலே

நாகூரில் வந்திறங்கி யிருந்தார். அப்பாவிப் பெண்ணின் காகிதத்திற்கு உடன் பட்டு இவர் இங்கு வந்தமையால் ஆண்டவரவர்களுடைய கோபப் பார்வை அவருக்குந் தாங்கி சர்வ தயாபரனுடைய ஏவலின் படி சிற்றெறும்புக் கூட்டங்கள் பந்து பந்தாய்த் திரண்டு ஆகாயத்தின் மூலம் பறந்து அந்த ஷெய்கு அத்தீக்குல்லாவின் தலையில் விழுந்து தேகமடங்கலிலும் பரவி விழுந்து கடித்ததுந்தவிர அவர் புசிக்கின்ற வஸ்துக்களிலும் அவ்வெறும்பே விழுந்து அவைகளை யவருந்தக் கூடாமலும் செய்தன. இவ்வெறும்பின் தொந்திரவைக் கண்டு அவர் மனமருண்டு தரியா பீவியின் காகிதத்தை ஒப்புக் கொண்டு நாம் இங்கு வந்ததால் நமக்கு இக்கேடு நேரிட்டதென் றெண்ணித் தானுந் தன்னோடு வந்தவர்களுமாக தான் வந்த திசையை நோக்கி ஓட்டம் பிடித்தார். அவர் அவ்வாறு வெருள்தல் கொண்டோ டும் போது அவ்வெறும்பும் அவரை விடாமல் தொந்திரவு கொடுத்துக் கொண்டே வெருட்டி பிஜாப்பூருடைய நறுபதா வென்கிற ஆற்றின் கரைவரையில் துரத்திக் கொண்டு போய் விட்டது. அவர் ஆற்றைக் கடந்ததும் அவ்வெறும்பு அவரை விட்டும் நீங்கி விட்டது. அதன் பின் ஷெய்கு அத்தீக்குல்லா வென்பவர் எப்பொழுதாவது தஞ்சை நகரை நோக்கி வருவதாக நினைத்து அந்த நறுபதா வென்கிற ஆற்றைக் கடந்தால் உடனே அச்சிற்றெறும்புகளும் வந்து விழுந்து அவரை தொந்திரவு செய்து துரத்தி விடுகிறது வழக்கமாயிற்று. அவர் இதற் கஞ்சி தஞ்சை நகர் செல்லாமல் அங்குதானே தரித்து விட்டார். இதை அறிந்த மனிதர்க ளெல்லாம் ஹலறத்தவர்களுடைய கிருபையானது ஹலரத் செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபவர்களுடைய பவுத்திரர் கள் பேரிற் பரிபூரணமா யிருக்கின்ற தென்றெண்ணி மிகவும் பயந்து நடந்தார்கள்.

பாவாராவுத்தருக்குச் சந்ததி யுண்டான சரித்திரம்.

ஹலரத் ஷஹின்ஷா பாதுஷா ஷாஹு சுல்தான் செய்யிது அப்துல் காதிறு சாஹிபு ஆண்டவரவர்களுடைய நற்கிருபை பெற்ற வர்களெல்லாம் சுகமுடன் வாழ்கின்று ரென்கிற பிரபலம் உலகெங்கும் பரவி இருந்தது. அப்போது ஆண்டவரவர்களின் காரணத்தை கேள்வி

செவியிற் புகுந்திருந்த இலையான்றலை யறுந்து வீழ்ந்த சரித்திரம்.

ஹலரத் ஷாஹுல் ஹமீதொலியுல்லா ஆண்டவர்களுடைய பூரணமதிக் கிரணம் என்னும் பூத்தொழுகா நின்ற நாகூருக்கு மேல்பாகமா யிருக்கிற ஊர்களில் ஒரு நாட்டிலுள்ள ஒருவனுடைய செவியில் நாயின் பேரிலிருக்கின்ற ஈ புகுந்து குடியா யிருந்துக் கொண்டு காதிலேயே குஞ்சுகளும் பொரித்து பெருகி காதினுள் சதைகளையே தின்று ஜீவித்துக் கொண்டிருந்தன. அதனால் அவனுக்குச் சதா காதில் கடினமான வருத்தம் யுண்டாகி ஊணுறக்க மின்றி இரவு பகலா யுழன்று அலறி அழுதுக் கொண்டிருந்தான். அது கண்டு அவனுடைய குடும்பத்தார்கள் விசனமுற்று அநேக பண்டிதர்கள் மந்திரவாதிகளைக் கொண்டு பற்பல அவிழ்தங்களைச் செய்தும், மந்திரங்களைச் செபித்தும், அநேக தந்திரங்களைப பண்ணியும அவன் செவியினது வாதை நீங்கவே இல்லை. அதனால் அவன் ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவர்களின் திருப்பாத கமலங்களை நாடி தறுகாவுக்கு வந்து சன்னிதானத்தில் நின்று நாதரே! நீதரே! போதரே! வேதரே! யென்று புகழ்ந்து அடி பணிந்து புலம்பித் தன் செவியில் ஈ யிருந்து பண்ணுந் துன்பத்தை முறையிட்டு" இக்கொடிய பாதகத்தை தேவரீ ரவர்களின் திருநோக்கங் கொண்டு தீர்த்து ரட்சிக்க வேண்டு மென்று மன்றாடிக் கொண்டிருக்கும் போதே அவனுக்கிருந்த வருத்தம் சற்றே நீங்கினதாலும் வெகு காலமாய் நித்திரை யில்லாது இருந்தவனாதலாலும் அவன் தன்னை யறியாது நித்திரை சோகமுண்டாகி நின்ற விடத்திற்றானே படுத்துறங்கினான்.

அது கண்டு அவனுடைய மனைவி மக்கள் ஆச்சரியமுற்று மிருந்து சந்தோஷத்துடனவனைக் காத்திருந்தார்கள். கொஞ்ச நேரத்தின் பின் அவன் விழித்துத் தன்னுடைய செவியினது பாதை நீங்கி வருவதை அறிந்து ஆண்டவரவர்களை வாழ்த்திப் புகழ்ந்து அங்கு தானே தரித்துத் தனக்குச் சுகங் கிடைத்த விடத்தை விடாது அவ்விடத்திலேயே சில நாள் வரையில் சயனித்தெழும்புகிறவனாக இருந்தான். அதனால் நாளுக்கு நாள் அவ்வாதை குறைந்து போனதுந் தவிர அப்பாலொரு நாள் ஆண்டவரவர்களுடைய கிருபைகொண்டு அவன் நித்திரைசெய்கையில் அவனுடைய செவியிற் குடியாயிருந்த ஈக்களெல்லாம் தலையறுந்து மும்மூன்று துண்டாகக் கீழே விழுந்து கிடப்பதை அவன் விழித்துப் பார்த்து ஆச்சரிய மடைந்து எல்லோரையுங் கூவி யழைத்துக்

காட்டி தனக்கிருந்த துன்பம் நீங்கிச் சுகமானதை யெண்ணி மிகுந்த சந்தோஷத்துடன் ஆண்டவர்களைப் புகழ்ந்து போற்றி சாஹிபுமார்களுக்கு வந்தனஞ் செய்து உத்தாரம் பெற்றுக் கொண்டு தன்னூர் சார்ந்தான். என தன்பர்களே! அந்த ஆண்டவர்களை நாடியவர்கள் வீண் போவதுண்டோ? சொல்லுங்கள்.

ஊமையுங் குருடுமாற்றிய சரித்திரம்.

ஹலரத் செய்யிது பீருன் சாஹிபு ஆண்டவரவர்களின் காரணம் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் போது ஓர் நாட்டிலுள்ள ஒரு மனிதன் பெரிய சீமானாக விருந்து சில காலத்திற்குப் பின் அவனது திரவியங்க ளெல்லாம் பலவாறு சிதைந்து போனதால் ஏழையாய் இருக்குங் காலத்தில் அவனுடைய மகனுக்குச் செவ்வையா யிருந்த கண்களிரண்டுங் கெட்டு வாயும் ஊமையாகிப் போனதைக் கண்டு அவனும் அவன் பெண்ஜாதியுந் திகிலடைந் தேங்கி யழுது அநேக வயித்தியங்களைச் செய்துந் தீராததால் ஆண்டவர்களை மனதில் எண்ணித் தானுந் தன்தேவியுமாய் மகனை யழைத்துக் கொண்டு மேன்மை பொருந்திய ஆண்டவரவர்களின் தறுகாவில் வந்து வந்தனஞ் செய்து ஆண்டவர்களினது முபாறக்கான மிதியடி தங்கிய பொற்பேழையை தன் மகனின் சிரமேல் வைத்து எடுக்கச் சொல்லி ஆண்டவர்களை மன்றாடி நின்று பின்னர் சாஹிபுமார்களிடத்தில் வந்து அடிபணிந்து தன் மகனுக்கிருக்குந் துன்பத்தைச் சொல்லி நீங்க ளெல்லாம் என் மகனுக்காக ஆண்டவர்களிடத்தில் வேண்டுதல் செய்து அருள்புரிய வேண்டு மென்று கெஞ்சிக் கேட்டு மன்றாடினார்கள். அது கண்டு சாஹிபுமார்கள் மனதிரங்கி அவர்கள் பேரில் கிருபை கூர்ந்து அவனையு மவன் பெண்ஜாதியையும் பிள்ளையையு மழைத்துக் கொண்டு முன் சமர்கந்து இராஜ்ஜியத்தின் காட்டி லிருந்து ஒடித்து ஒருவர் கொண்டு வந்த காய்ந்த குச்சி யொன்றை ஆண்டவரவர்களின் காரணத்தால் தழைத்து மரமாக நின்றதே அம்மரத்தி னிடத்திற் சென்று அதன் பட்டையிற் கொஞ்ச மெடுத்தோர் கல்லில் உரைத்து அதை அப்பிள்ளையின் கண்ணிலும் வாயிலுந் தடவி விட்டு நீங்கள் இம்மரத்தடியிலேயே இருந்து ஆண்டவர்களை மன்றாடிக் கொண்டிருங்க ளென்றுரைத்துத் தாங்களும் ஆண்டவரவர்க ளிடத்தில் வேண்டுதல் செய்தார்கள். பின்பு அந்த மனிதனும் அந்த மனைவியும் மகனுமாக ஆண்டவர்களை மன்றாடிப்

புகழ்ந்து அம்மரத்தை விட்டகலாது சில நாளிருந்தார்கள். ஹலாத் மீருன் சாஹிபு ஆண்டவர்களின் கிருபையினால் அப்பிள்ளையுடன் வாய் விளங்கிப் பேச்சுண்டாகி பட்டுப்போன கண்களிரண்டுந் துலங்கி விட்டன. அதுகண்டு தாயும் தகப்பனும் மிக மகிழ்ந்து ஆனந்தமாகி ஆண்டவர்கள் பேரில் சோறு கறிகளெல்லா மிகுதமாகச் சமைத்து பாத்திஹா வோதி எல்லாருக்கும் பசியாறக் கொடுத்துக் காணிக்கைக ளெல்லாம் உண்டியலிற் போட்டுப் புகழ்ந்து போற்றி சாஹிபுமார்களையும் வாழ்த்திக் கொண்டு தன்னூருக்குப் போய் விட்டான்.

ஓலைச்சுருள் பாம்பான சரித்திரம்.

ஹஸ்ரத் குத்பு ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களின் திரு தறுகாவில் கந்தூரி நடக்கின்றபோது பல தேசங்களிலு மிருந்து மிகுந்த ஜனங்கள் வந்து காணிக்கை போட்டதால் தறுகாவின் பொக்கிஷக் கலசத்திற் பொருட்கள் அதிகமாகச் சேர்ந்திருந்தது. அதைச் இக்கல் கிராமத்தில் சுபைதார் அதிகாரியாய் வேலை பண்ணிக் கொண்டிருந்த நெஞ்சு துணிந்த நஞ்சிலுங் கொடியான் அறிந்து அதை யெடுத்துத் தஞ்சை நகர் அரசனுக்கு அனுப்பவேண்டு மென்றெண்ணித் தானுஞ் சில சேவகர்களுமாக கந்தூரிக் கூட்டத்துள் தறுகாவினுட் சென்று மரியாதையாய்க் குனிவது போல் குனிந்து உண்டியலைத் தூக்கி யெடுத்துக் கொண்டு போய்த் தானேறி வந்த பல்லக்கில் வைத்துக்கொண்டு போகிறதை சாஹிபு மார்கள் கண்டு அவனிடத்திற் சென்று கேட்கப் பயந்து ஆண்டவர்களிடத்தில் முறையிட்டார்கள். அப்போது ஆண்டவர்களுடைய புகழ்தங்கிய கபுறு ஷரீபின் பேரிலாயிருந்த போர்வையிலுள்ளிருந்து ஒரு ஓலைச் சுருள் வெளியாகிப் பல்லக்கில் சென்றுக் கொண்டிருந்த அந்த சுபைதார் மடியிற்விழுந்தது. அவனதைக் கண்டு இஃதென்ன வென்றெடுத்து விரித்து பார்த்த போது அவ்வோலைச் சுருள் சர்ப்பமாகிப் படத்தை விரித்து அக்கொடும் பெரும் பாதகனைக் கவ்வினதால் உடனே விஷம் மண்டைக் கேறி உயிரிழுந்து செத்தான். அதுகண்டு அவனுடன் வந்தவர்க ளெல்லாம் மன மருண்டு உடல் நடுங்கிப் பதறி யேங்கி இது ஆண்டவரவர்களின் முனிவே யல்லாது வேறில்லை யென்று உறுதிகொண்டு அவ்வுண்டியலைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு வந்து ஆண்டவரவர்களுடைய

தறுகா வாயலில் வைத்து சாஹிபு மார்களுடைய பாதம் பணிந்து நடந்தவை களனைத்தையும் விபரமாய் சொல்லி அவர்களிடம் பிழை பொறுக்கத் தேடிக்கொண்டு அப்பாதகனின் பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு தங்களூர் போய்ச் சேர்ந்தார்கள்.

பொன்னுமரிசியும் புதுமையா யளித்த சரித்திரம்.

ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்களுடைய பவுத்திரர்கள் நாளுக்கு நாள் பெருகி வரும்போது ஓர் வருடம் சோழ மண்டலத்தில் மாரி பொழியா தின்மையால் நெற்பயிர்களும் மற்றும் தானியங்களும் விளையாமல் கருகிப்போய் விட்டதால் கருகினதுந் தவிர படியரிசி எட்டு பணத்திற்கு விற்கக்கூடிய கொடும் பஞ்சகால மாகி விட்டது. அதனால் அதை சகிக்க முடியாமல் நாகூரில் குடியா யிருந்த ஜனங்களெல்லாம் சிதறி பல நாடு நகரங்களுக்கும் போய் விட்டனர். அதுவுமன்றி தறுகாவாயற் பொக்கிஷத்திற் காணிக்கைகள் சரியாய் வந்து சேரவில்லை. செய்யது யூசுபு சாஹிபு ஆண்டவர்களின் சந்ததிகளின் சீவனத்திற்கு இவ்வுண்டியல் காணிக்கை பணங்களே யல்லாது வேறு வழியில்லாததால் அதிக முடைபட்டிருந்தார்கள். அந்தப் பஞ்சத்தின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் சாஹிபு மார்கள் எல்லோருமொன்று கூடி சிறப்பாகிய தறுகாவிற் சென்று தங்கள் பாட்டனாராகிய ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பால் கைகட்டி நின்று தங்கள் அவஸ்தையை விவரமாய் விண்டு எங்களை இப்பஞ்சத்தை நீக்கி காப்பாற்றுங்களென்று முறைப்பாடு செய்து விட்டு அங்கு தானே எல்லோரும் கூடியிருந்து குர்ஆனை ஓதி தியானித்து ஆண்டவர்களே! எங்கள் ஜீவனத்திற்கு வழி காட்ட வேண்டுமென்று மன்றாடினார்கள்.

ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் தங்களருமை மகனுருடைய சந்ததியார்கள் பேரிற் பட்சமுள்ளவர்களானதால் அப்போதிருந்த சாஹிபு மார்களில் ஒரு முதியோருடைய தெரிசனையில் வெளியாகி நீங்கள் அஞ்சவேண்டாம் நாளை சூரியனுதயத்தில் நமது தறுகா வாயற்படியின் கீழிருந்து உங்களுக் கெல்லாம் உணவு அனுப்பிவைக்கிறேன் என்கிற சயிக்கினை உண்டாயிற்று. அந்த முதியவர் தங்களின்

நேம நிஷ்டையைச் சரிவாச் செய்து முடித்த பிறகு மற்றைய சாஹிபு மார்களுக்கெல்லாம் இது செய்தியை அறிவித்தார்கள். அதை யாவரும் அறிந்து ஹலரத் ஆண்டவரவர்களைப் புகழ்ந்து சொண்டிருந்து பொழுது உதயமாகும் தருணமானபோது, எல்லோருமெழுந்து போய் ஹலரத் மீரான் சாஹிபவர்கள் சயித்கின செய்த தலத்தில் நின்று அவ்வாயற் கதவைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது படியின் கீழிருந்து எறும்பின் கூட்டம் பகுதி பகுதியாய்ச் சில கூட்டங்களினது வாய்களில் ஒவ்வொரு அரிசியும் சில கூட்டங்களினது வாய்களில் அக்காலத்தில் விளங்குகின்ற தங்க நாணயத்தில் ஒவ்வொரு பணமுமாக கொண்டு வந்து ஆண்டவரவர்களுடைய பாத தாமரைகள் தங்கிய தலத்திலுக்கு மேல் புறமாய் பணக்குவியலும் கீழ்ப்புறமாக அரிசிக் குவியலுமாகக் குவித்தன. அதுகண்டு சாஹிபு மார்கள் புதுமையுடன் மிகுந்த சந்தோஷமாகி ஹலரத்தவர்கள் பணத்துக்கொரு அரிசி விற்றாலும் நம்மைத் தயங்க விடமாட்டார்கள், என்றொருவரோ டொருவர் பேசிக் கொண்டு ஆண்டவரவர்களைப் புகழ்ந்து போற்றிய பின் அப்பணத்தையு மரிசியையுமெடுத்து பாகாச் சாரமாய் பங்கிட்டு செலவு செய்து கொண்டார்கள். அப்பணமு மரிசியும் சிலவாகுமுன் மழை பெய்து தானியங்களும் மலிந்து சோழ நகர் முழுதுஞ் செழிப்புற்றது. முன் சிதறியோடின ஜனங்களெல்லாம் மீளவும் வந்து குடியேறி சுகத்துடன் வாழ்ந்தார்கள். எனதன்பர்களே! அக்காலத்திலிருந்த சாஹிபு மார்களின் நிண்ணயத்தையும் நானென்னதான் சொல்வேன்.

முதல் மினாருவுஞ் சில மண்டபமு மியற்றிய சரித்திரம்.

ஹலரத் ஷாஹ சுல்தான் செய்யிது அப்துல் காதிறு ஆண்டவரவர்களுடைய அருமையையும், பெருமையையும், புகழையும் காரணத்தையும் செஞ்சிச் சீமையில் உத்தியோகஞ் செய்து கொண்டிருந்த சுல்தான் இபுறுஹீம் கான் என்கிறவர் கேள்வியுற்றபோது தன் மனதில் சிலநாட்டங்கள் உண்டாயின. அதனால் ஆண்டவரவர்களைத் தியானித்து என்னெஜமானே! தாங்களென்கனவில் வெளியாகி நான் நாடியிருக்கின்ற நாட்டத்தையும் இன்ன தென்றெனக்கு அறிவித்து அதுபோல் அந்நாட்டத்தையும் நிறை வேற்றித் தருவீர்களானல்

நான் தங்கள் தறுகாவைச் சூழச் சில மண்டபங்களும் ஒரு மினாருவுங் கட்டி வைப்பே னென்று முருது செய்துக் கொண்டார். அதுபோல் ஹலரத் ஷஹின்ஷா பாதுஷா ஆண்டவரவர்கள் அவரெண்ணங் கொண்ட அன்றிரவிற்றானே அவருடைய கனவில் வெளியாகி அவர் நாடிய நாட்டத்தையும் அவருக்கு அறிவித்து அவருடைய நாட்டத்தை நிறைவேற்றியும் வைத்தார்கள். அதை அறிந்து இப்றாஹிம்கான் மிக மன மகிழ்ச்சியுடன் ஆண்டவரவர்களைப் புகழ்ந்து துதி செய்து தனக்குத் தலைமைத் தனமும் மேன்மையும் செல்வமும் மிகுந்த தெல்லாம் ஹலரத் ஆண்டவர்களுடைய உதவி கொண்டல்லால் வேறில்லை யென்றுரைத்துத் தன் காரியஸ்தர்களில் மீராறுவுத்தர் மதாறுறுவுத்தர் இவர்க ளிருவரையு மழைத்து மண்டபத்திற்கும் மினாருவுக்கும் போதுமான திரவியங்களை அவர்கள் வசங் கொடுத்துச் சில சிப்பந்திகளையு மவர்களுடன் சேர்த்து நீங்களிருவரும் நாகூருக்குப் போய் ஹலரத் மீறான் சாஹிபு ஆண்டவர்களினது ஒளி விளங்கிய தர்காஷரீபை சூழ அல்லது அதை அடுக்க ஒரு மினாருவும் சில மண்டபங்களும் கட்டி வைத்து விட்டு வாருங்க ளென்று அனுப்பி வைத்தார். அவ்விருவர்களும் சிப்பந்திகளோடு செஞ்சி நகரத்தை விட்டுப் புறப்பட்டு நடந்து நாகூர் ஷரீபு வந்து சேர்ந்ததும் சிறப்பாகிய ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களின் தறுகாவைத் தெரிசித்துப் பாத்திஹா வோதி ஸியாரத்து செய்து கொண்டு அப்போதைய தர்காவின் தலைமைத்தனம் பெற்ற ஹலரத் ஷெய்கு சுல்தான் கபீர்வலியுல்லா சாஹிபு ஆண்டவரவர்களினது செல்வக் குமாரராகிய ஹலரத் சுல்தான் அப்துல் காதிறு சாஹிபு அவர்களிடத்தில் சென்று தனித்து மரியாதையுடன் வணங்கி இருந்து தாங்கள் வந்த காரியங்களை விபரமாக எடுத்துச் சொல்லி மினாருவும் மண்டபங்களும் கட்டுகிறதற்கு உத்தரவும் கொடுத்து அவைகள் கட்டுகிறதற்கு ஸ்தானமும் அதன் மாதிரியும் காட்டித் தரவேண்டுமென்று விரும்பிக் கேட்டார்கள். அது கேட்டு ஹலரத் சுல்தான் அப்துல் காதிறு சாஹிபவர்கள் அவ்விருவரையும் நோக்கி நீங்கள் கொஞ்சம் பொறுத்திருங்கள். நான் ஆண்டவரவர்களிடத்தில் உத்திரவு பெற்ற பின் சொல்லுகிறே னென்று பதிலளித்து விட்டு அன்றிரவே ஹலரத் ஆண்டவரவர்களின் முபாறக்கான கபறு ஷரீபை அடுத்து நின்று ஆண்டவர்களிடத்தில் இது செய்தியை அறிவித்து விட்டு தாங்கள் நித்திரை செய்யும் போது அவர்களுடைய கனவில் ஆண்டவரவர்கள் வெளியாகி மினாரு கட்டுகிற இடமும்

அதன் மாதிரியும் மண்டபங்களியற்றுந் தலமும் அதன் மாதிரியும் அறிவித்து விட்டுச் சென்றார்கள்.

அதை அறிந்ததும் ஹலரத் சுல்தான் அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் மிக அகமகிழ்ந்து, ஆனந்தங் கொண்டெழுந்து மீரா ராவுத்தர் மதார் ராவுத்தர் இவ்விருவர்களையும் அழைத்து மினாராவும் மண்டபமும் கட்டும் இடமும் மாதிரியும் காட்டிவித்து கட்டிடம் அனுமதியும் அளித்தார்கள்.

அது கேட்டு அவர்களிருவரும் ஆனந்தங் கொண்டு ஹிஜ்ரி ஆயிரத்து ஐம்பத்தைந்தாம் வருடத்தில் ஓர் மினாருவும் சில மண்டபங்களும் கட்டி வைத்தார்கள். பின்பு ஒவ்வொரு விளக்கிற்கு ஒரு பாதமும் ஐந்து தட்டங்களும் குமிழுமாக இரண்டு தேர் விளக்குஞ் செய்து ஆண்டவரவர்களின் சன்னதியி லிருபுறமும் வைத்துத் தீபங்களேற்றி மற்று மிடங்களுக்கும் வேண்டுமான விளக்குகள் வைத்து தறுகாவை மிகவும் உன்னதமாய் அலங்கரித்து விட்டு மீரா ராவுத்தர் மதாரு ராவுத்தார் இவ்விருவர்களும் ஆண்டவரவர்களின் சன்னிதானத்தில் வந்து நின்று அவர்களி னெஜமானனாகிய சுல்தான் இபுறாஹீம் கானுக்காகவும் தங்களுக்காகவும் ஆண்டவர்களிடம் மிகுந்த வேண்டுதல் செய்து கொண்டு பாதம் பணிந்தெழுந்து ஹலரத் சுல்தான் அப்துல் காதிறு சாஹிபவர்கள் முதலாகிய சாஹிபு மார்களுக் கெல்லாம் வந்தனஞ் செய்து பிரயாணத்திற்கு அனுமதி பெற்றுக் கொண்டு தங்களூர் செஞ்சி நகர் போய்ச் சேர்ந்தார்கள். அக்கட்டிடங்களாவன இப்போது நடு மண்டப மென்கிறதும், அதைச் சூழ விருக்கின்ற மண்டபங்களும் அரை வீச்சு மண்டபமும் ஆண்டவரவர்களுடைய சிறப்பாகிய கபுறு ஷரீபிற்கு தென்மேற்கி லிருக்கின்ற சாஹிபு மினாரு வென்கிறதுமா யிருக்கும்.

தேங்காயில் கொம்பு முளைத்த சரித்திரம்.

ஹலரத் மீரான் சாஹிபு ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களுடைய தறுகாவில் மிகுந்த சிருஞ் சிறப்பும் பெருகி வருங் காலத்தில், செஞ்சி நகரத்திலுள்ள ஒரு மனிதனுக்குரிய ஒரு தென்னந் தோட்டத்திலுள்ள மரங்க ளெல்லாம் காய்க்காமல் நின்றதை அதை

உடையவன் கண்டு கவலையாகி ஹலரத் ஷாஹு சுல்தான் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களை மனதிலெண்ணி ஆண்டவர்களே! தங்களுதவி கொண்டு இம்மரங்க ளெல்லாம் செவ்வையாய்க் காய்த்ததானால் தங்கள் தறுகாவுக்கு இந்த ஒரு மரத்தில் காய்க்கிற தேங்காய்க ளடங்கலையும் பறித்தனுப்பி வைக்கிறே னென்று ஓர் மரத்தைச் சுற்றி பிரார்த்தித்துக் கொண்டார். பிரார்த்தித்த சொற்ப தினத்தில் அவனது தென்னை தோப்பிலுள்ள தென்னைகளடங்கலும் கணக்கின்றிக் காய்த்துத் தேறினதால் அவன், மன மிக மகிழ்ந்து ஆண்டவரவர் களுடைய பேர்சொல்லி விட்ட மரந்தவிர மற்றைய மரஙகளெல்லாவற்றி லுமிருந்த காய்களடங்கலையுங் கொய்து கொண்டான். ஆண்டவர்கள் பேருக்காக விட்டமரம் மாத்திரம் காயை பறிக்காமல் விட்டிருந்தான்.

அத்தருணத்தில் அங்ஙகர் துரைத் தனத்தாருடைய சேவகரிற் சிலர் தேங்காய் வேண்டுமென்று அவசியப்பட்டு அத்தோட்டத்தில் வந்து பார்த்தபோது ஒரு மரத்திலும் காய்இல்லாமல் பறித்திருந்ததால் ஹலரத் தவர்களுக்கு விடப்பட்டமரத்தில் மாத்திரம் காய்கள் இருக்கக் கண்டு அதிலேறிப் பறிக்க ஆயத்தம் பண்ணினான். அதை அறிந்து அத்தோட்டக்காரர் வந்து ஓ! சேவகர்களே! அம்மரத்தின் தேங்காய்க ளடங்கலும் நாகூர் ஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்களுக் குடையது. நீங்களதை இச்சிக்கவேண்டா மென்று பலவாறு சொல்லித் தடுத்தும் அம்மடையர்கள் அதைக் கேளாமல் மீரான் சாஹிபுடைய தேங்கா யென்றால் கொம்பு முளைத்திருக்குமோ? வென்று பரியாசஞ் செய்துக் கொண்டு ஒருவனை மரத்திலேற்றி ஒரு காயைக் கொய்து பார்க்கும் போது அதிலொரு கொம்பு முளைத்திருக்கக் கண்டு ஆச்சரிய மடைந்து அஞ்சி நடுங்கித் தடுமாறி ஆண்டவர்களே! நாங்கள் அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத்திரட்சிக்க வேண்டு மென்று மன்றாடி அத்தேங் காயை அத்தோட்டத்துடையான் வசங்கொடுத்து விட்டு போய்விட் டார்கள். பிறகு அம்மனிதன் அம்மரத்திலுள்ள தேங்காய்களடங்கலையும் பறித்தெடுத்துக்கொண்டு வந்து நாகூர் முழுதுஞ் சுற்றிப் பவனி வந்து தறுகாவிற் கொண்டுவந்து சாஹிபு மார்கள் வசம் ஒப்புக் கொடுத்து விட்டு ஆண்டவர்களின் கபறு ஷரீபை அடுத்து நின்று ஸியாரத்துச் செய்து வந்தனஞ் செய்துகொண்டு தன்னகரடைந்தான். அக்கொம்பு முளைத்த தேங்காயை நாளது வரையில் தறுகா சன்னதி மண்டபத்திற் றூக்கப் பட்டிருக்கின்றது.

இரண்டாம் மினாறாவும் மூன்றா மினாறாவு மியற்றிய சரித்திரம்.

ஹலறத் காதிறுவலியுல்லா ஆண்டவரவர்களுடைய தறுகாவின் சிறப்பு நாளுக்கு நாளோங்கி வருங்காலத்தில் நாகப்பட்டிணத்தில் மிகுந்த திரவியங்களை யுடைய நல்ல சயீது மரைக்காய ரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சில நாட்டங்களை மனதி லெண்ணிக்கொண்டு ஹலறத் மெய்ஞ்ஞான குருஷாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் இக் காரியத்தை நிறை வேற்றித் தந்தால் நான் அவர்கள் தருகா ஷரீபை அடுக்க ஒரு மினாறாக் கட்டி வைப்பேனென்று முறுது வைத்துக்கொண்டார். அதுபோல் ஆண்டவரவர்கள் அவருடைய நாட்டத்தை நிறை வேற்றி வைத்தார்கள். அதனால் அவர் வெகு சந்தோஷத்துடன் மிகு திரவியங்களைச் செலவு செய்து சாஹிபு மார்களின் அனுமதிபெற்று ஹிஜ்ரி ஆயிரத்து நூறாம் வருடத்தில் ஆண்டவர்களுடைய மேன்மை யான தர்கா ஷரீபுக்கு வடமேற்கு புறத்தில் ஒரு மினாறாக் கட்டி வைத்துப் புகழ் பெற்றார். அஃதே தற்போது தலைமாட்டு மினாறா வென்று விளங்குகின்றது. இதை யறிந்த மலாக்கா நகரிலுள்ள அந்த நல்ல சயீது மரைக்காயரின் பிராண சிநேகிதரும் மிகுந்த செல்வத்தை யுடைய வருமான பீரு நயினா மரைக்காய ரென்பவர் தானு மொரு மினாறாக் கட்டுகிறதாக நேர்ச்சை வைத்துச் சில பிரார்த்தனை செய்தார். ஆண்டவரவர்களுடைய கிருபைகொண்டு அவருடைய நாட்டங்களும் நிறைவேறின. அதனால் பீரு நைனா மரைக்காயரும் அக மகிழ்ந்து தன் சிநேகிதராகிய நாகப்பட்டிணத்திலிருக்கிற நல்ல சயீது மரைக்காயருக்கே மிகு திரவியங்களை அனுப்பி ஒரு கடிதமு மெழுதி அவரை முன்னிலையாக நின்று ஒரு மினாறா கட்டி வைக்கும்படி வேண்டிக் கொண்டார். அதுபோல் செய்யிது மரைக்காயர் சாஹிபு மார்களிடம் உத்திரவு பெற்று ஹிஜ்ரி ஆயிரத்தி நூற்றுப் பத்தாம் வருடத்தில் ஆண்டவ ரவர்களுடைய கபுறு முபாறக்கின் வடகிழக்கில் ஒரு மினாறாக் கட்டிவைத்தார். அதுவே இப்போது முதுபகு மினாறா வென்று பேர் சொல்லப்படுகின்றது.

கிட்டா நகரத்தரசனின் குருவைப் பன்றி ரூபமா யமைத்து மாற்றிய சரித்திரம்.

ஹூலரந் செய்யிது மீறான் சாஹிபு ஆண்டவரவர்களுடைய பவுத்திரர்களி லொருவராகிய செய்யிது நயினா லெப்பை யென்கிற ஷெய்கானவர் ஒரு கப்பலிலேறி கிட்டா நகருக்குச் சென்று சில நாளி ருந்து அங்குள்ளவர்களிடத்தில் சேர்ந்த ஆண்டவர்களுடைய காணிக் கைகளைப் கைபற்றிக்கொண்டு வரும்போது அவ்வூரிலுள்ள மனிதர்கள் அந்த ஷெய்னைக நோக்கி இந்நகரதிபனின் குருவானவர் காட்டுக்குள்ளி ருக்கின்றார். அவர் வசம் இந்நகராதிபன் அக்காட்டிலுள்ள தேனையும் யானைக் கொம்புகளையும் அவர் வசமே சாட்டியிருக்கின்றார். அதனால் அவருக்கு கணக்கற்ற செல்வம் நிறைந்துக் கொண்டிருக்கின்றன. மேலும் அவரோ வருடங்க தோறும் நூறு றிங்கி செலவு செய்து சோறு கறியாக்கி நமது ஆண்டவரவர்கள் பேரால் கந்தூரியும் கொடுக்கிறார். ஆனதால் ஆங்கு தாங்கள் சென்றால் மிகுந்த காணிக்கைகள் கிடைக்கு மென்று நினைக்கிறோம் என்றுரைத்தார்கள்.

அது கேட்டு அந்த ஷெய்கானவர்கள் புறப்பட்டு அக்காட்டினுட் சென்று இராஜாவின் குருவை தெரிசித்தபோது அக்குரு இவர்களை நோக்கி நீர் யார்? எங்கே வந்தீர்? என்று கேட்டான். அதற்கு ஷெய்கு அவர்கள் எங்களாண்டவரவர்களுடைய காணிக்கைகள் உம் மிடத்திலிருக்கிறதாகக் கேள்விப் பட்டு யான் இங்கு வந்தேனென்றார் கள். அதற்கவன் மீறான் சாஹிபு ஆண்டவரவர்களுக்கு நீர் யார் என்றான். நான் அவர்களுடைய பவுத்திரர்களிலுள்ளவ னென்றார்கள். அப்போது அந்தக் குருவானவன் இந்த செய்யிது நயினா லெப்பை யென்கிற ஷெய்கைப் பார்த்து, நீ தப்புவார்த்தை சொல்லுகின்றாய்? அவர்கள் நாயகத் தனத்தையுடை வர்களாச்சுதே, உன்னைப் பார்த்தால் பன்றியின் ரூபமாயிருக்கின்றதே யென்றான். இதைக் கேட்டதும், இவர்களுக்குக் கோபம் பீறினதால் அக்குருவை கொஞ்சம் நிந்தனையாக பேசினார்கள். அதை அவன் சகிக்காமல் தன்னாட்களை விட்டு அவர்களை அடித்து துரத்தினான்.

அந்த ஷெய்கு அடி பொறுக்காமல் ஓடிப் பயந்து மலாக்காவி லோர் வீட்டிற் பதுங்கி யிருந்தார்கள். அப்பால் சூரிய னடைந்த பின்னே அந்த மூடக் குருவானவன் புசித்துப் புனலருந்தித் தானு

றங்கும் பள்ளியறையிற் சென்று நித்திரை செய்தான். அவ்விரவின் இரண்டாஞ் சாமத்தில் ஹலாத் தவர்களுடைய முனிவினால் அவன் தன்னுருமாறிப் பன்றியினுரு வெடுத்து உழன்று உறுமிக்கொண்டு இருப்பதைக் கேட்டு அவன் பள்ளியறையில் சென்று பார்த்தபோது மனுடரூபமாயிருந்தவரிப்போது பன்றி ரூபமாக மாறி உருமுகின்றாரே யென்று ஆச்சரியமுற்று சலித்தழுது இது செய்தியை கிட்டாவின் அரசருக்கு அறிவித்தார்கள். அதுகேட்டதும் அவர் வந்து கண்டு தன் குருவைப் பார்த்தபோது அவர் பன்றி ரூபமாயிருப்பதைக் கண்டு மிகுந்த கவலையடைந்து அங்ஙனமிருந்தவர்களை நோக்கி, இங்கு நடந்தவை யென்னவென்று வினவினர். அதற்கு அவர்களெல்லாம் செய்யிது நயினா லெப்பை யவர்களுக்கும் அந்தக் குருவுக்கு மிடையில் நடந்த சங்கதிகளை விபரத்துடன் எடுத்துச் சொன்னார்கள். அது கேட்டு அவ்வரசன் அந்த ஷெய்கு எங்கே? யென்று கேட்க, அவர் களிங்கில்லை யென்றதால் அவ்வரசன் பன்றியின் ரூபமாயிருக்கின்ற தன் குருவின் கழுத்தில் சங்கிலி பூட்டி வெளியிலிழுத்துக் கொண்டு வந்து கிட்டா நகருக்குள் சென்று அங்கு பல விடத்திலும் நாகூர் செய்யது நைனா லெப்பை ஷெய்கு அவர்களை தேடியும் எங்கும் கிடைக் காததால் நாகூர் ஷெய்கை யாராவது கண்டு வந்து சொன்னவர்களுக்கு தகுந்த நன் கொடையும், வெளிவிடாது மறைத்து வைத்தவர்களுக்கு தகுந்த சிக்ஷையும் அளிக்கப்படு மென்று ஊரெங்கும் விளம்பரம் பண்ணினன்.

அது கேட்டந்த ஷெய்கு சாஹிபைப் பதுக்கி வைத்திருந்த வீட்டுக்காரன் மிகவும் நடுநடுங்கிப் பயந்து தன்னைக் காக்கும் பொருட்டு இராஜனிடத்திற் சென்று நாகூர் ஷெய்கு சாஹிபு என் வீட்டிலிருக் கின்றார்களென்று அறிவித்தார். அது கேட்டவுடன் அரசன் ஏறுவா கனமின்றி சில சேவகர் சூழ அந்த வீட்டை நோக்கி வெகு துரிதமாய் நடந்து வருகின்றதை அந்த செய்யிது நயினா லெப்பை யவர்கள் கண்டு தன்னைக் குத்திகொல்ல வருகிறா னென்றெண்ணிப் பயந்து தங்கள் பாட்டனாரவர்களை மனதி லெண்ணி அவ்வீட்டை விட்டு வெளியில் வந்தார். அதை அவ்வரசன் கண்டு சுறுக்கில் ஓடிவந்து அவர்களின் பாத தாமரையில் வீழ்ந்து தனதிரண்டு கண்களையும் அப்பாத தாமரை களில் வைத்துப் புரட்டி முத்தமிட்டுக் கொண்டு அழுகுரலோசை யுடன் ஆண்டவரே! உங்கள் மேன்மையை யறியாமல் என் குரு மூட பத்தியால் செய்த தப்பிதத்தை ஆண்டவனுக்காகத் தாங்கள் மனம்

பொருத்து ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்களிடத்தில் வரங் கேட்டு என் குரு கொண்டிருக்கின்ற பன்றி ரூபத்தை மாற்றி முன் போலாகச் செய்தாலல்லாது தங்கள் காலை விடேனென்று கதறியழுது மன்றாடினான்.

அப்போதந்த ஷெய்கு சாஹிபவர்கள் மனதிரங்கி இராஜனின் தலையை யுயர்த்தச் செய்து ஒரு கலசத்தில் நீர் தருவித்து ஒலுச்செய்து தொழுது ஆண்டவனை புகழ்ந்து போற்றிய பின் தங்கள் பாட்டனாராகிய ஹலரத் ஆண்டவரவர்களை மனதில் தியானித்து நாகூரின் திசையை நோக்கி அவர்களிரு கரங்களையு மேந்தி ஆண்டவர்களே! இவ்வரசனின் குரு என்னைச் செய்த கொடுமையை நான் பொறுத்துக் கொண்டேன். தாங்களும் பொறுத்து மனதிரங்கி, அவன் முன்போல் மனித ரூபம்பெற கிருபை செய்ய வேண்டுமென்றிரந்து நிற்கும்போதே அங்ஙன மடைந்திருந்தவர் களெல்லாம் கண்ணாரக் காணும்படி பன்றியாய் நின்ற அந்த குருமுன்போல் மனிதரூபமாக மாறினான். அவன் உடனே ஓடோடியும் வந்து அந்த ஷெய்கவர்களின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு நிற்க, அதை அரசன் கண்டு ஆச்சரியமடைந்து ஆனந்தம் பொங்கித் தன் குருவை யழைத்து அருகிலிருத்தி நடந்த காரண மென்னவென்று கேட்க, அவன் தனக்கும் அந்த ஷெய்கு சாஹிபவர்களுக்கு மிடையில் நடந்த சம்பாஷணைகளை நவின்று நான் நித்திரை கொள்ளையில் ஒரு முழம் வளர்ந்த கோல் பிடித்தவர்களாக அநேக பக்கீறுகள் வந்தென்னை வளைந்து கொண்டு அத்தடியினால் அடித்தார்கள். உடனே என் ரூபத்தையு மாற்றப் பட்டது. அவ்வடி பொறுக்காமல் நான் சத்தமிட்டேன் அதற்குப் பிறகு நான் ஒன்றையும் அறியேன். இப்போது தான் உங்களையும் அந்த ஷெய்கு சாஹிபவர்களையும் மற்றைய கூட்டங்களையுங் கண்டேன், என்றுரைத்ததைக் கேட்டு எல்லோரும் புதுமையாகி இப்பெருங் காரணம்போல் ஒரு போதுங் கேட்டதில்லை யென்று ஆச்சரிய வார்த்தைகள் பேசி ஷெய்கு சாஹிபவர்களுக்குப் பணிந்து மரியாதை செய்து தங்கள் மனையின் கண் சார்ந்தார்கள்.

அந்நகராசர் அந்த செய்யிது நயினா லெப்பை சாஹிபவர்களை மிகுந்த அன்போடு அழைத்துக் கொண்டு தன் அரண்மனை சேர்ந்து அவர்களை சில காலம் வைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து உபசரித்து வைத்திருந்த பின்னர், அந்த ஷெய்கவர்கள் நாகூ

ருக்கு யாத்திரையாக நாடியதை இராஜன் கேட்டு அநேக திரவியங்களும் ஆடைகளும் பரிசளித்து அங்ககாரர்களும் வேணவெகுமதிகள் கொடுத்தெல்லோருங் கூடி வந்து ஒரு கப்பலில் அவர்களைப் பயணமனுப்பி வைத்தார்கள். அந்த செய்பிது நயினா லெப்பை சாஹிபவர்கள் சிந்தாத்திரையாய் நாகூர் வந்து சேர்ந்து கிட்டா நகரில் நிகழ்ந்த சம்பவங்கள் யாவையும் விபரமாய் அறிவித்தார்கள். அதுகேட்டு யாவர்களும் சந்தோஷமுற்று ஆண்டவர்களை போற்றிப் புகழ்ந்தார்கள். என் சகோதரர்களே ஆண்டவர்கள் அவர்களின் பவுத்திரர்கள் பேரில் கிருபை கூர்ந்திருப்பதை யெவராலெடுத்துரைக்கக் கூடும், அரிதரிது, அது காரியம் பெரிது பெரிது.

நாலா மினாருக்கட்டிய சரித்திரம்.

ஹலரத் ஆஷிக்கு ஷாஹூல் ஹமீது ஒலியுல்லா ஆண்டவரவர்களின் தறுகாவில் நடந்தேறி வருகிற கந்தூரிக்காக பரங்கிப்பேட்டை யென்கிற மஹ்மூது பந்தரில் உத்தியோகம் பண்ணிக்கொண்டிருந்த மிகுந்த நிதிகளையுடைய தயாள நெஞ்சினரான ஹாக்கிம் தாவூதுகான் என்கிறவர் வந்திருந்தபோது சிறப்பாகிய தறுகாவினது பிரகாசத்தையும் மூன்று மினாருக்களிருக்கிற அழகினையும் பார்த்துக் களிகூர்ந்து தறுகா வாயலின் எதிர் வந்து கைகட்டி நின்று ஆதியருள் பெற்ற ஆண்டவரே! நிதி மணியே! ஆதியொளியே! அற்புதமே! போதக்கடலே! பொறைக்கடலே! வேந்தர்க்கரசே! வேதியரே! சாந்தகுணமே! சற்குருவே! என்று பலவாறு புகழ்ந்து தங்கள் கிருபை கொண்டு நான் நாடிய நாட்டம் நிறைவேறிற்றானால் தங்கள் தறுகாவில் நான்காவதாக நானுமொரு மினாருக்கட்டி வைப்பேனென்று பிரார்த்தித்துக்கொண்டார். அந்நிண்ணய மாறாமலிருந்து மன்றாடியபின் கந்தூரி முடிவாகும் வரையில் நாகூரிற்றானே தரித்திருந்து அப்பால் சாஹிபுகளுக்கு மரியாதை செய்து விடை பெற்றுத் தன்னகர் சார்ந்தார். ஹலரத் ஷாஹூல் ஹமீதொலியுல்லா நாயகரின் கிருபைக் கொண்டு அவர் நாடிய நாட்டம் குறைவின்றி நிறைவேறினதால் மிகுந்த சந்தோஷமாகி நாகூர் வந்து சாஹிபுமார்களிடத்தில் அனுமதி பெற்று மிகுந்த திரவியங்களைச் செலவு செய்து ஹிஜ்ரி ஆயிரத்தி நூற்று முப்பத்தேழா மாண்டில் ஹலரத் மீரான் சாஹிபு ஆண்டவரவர்களுடைய சிறப்பாகிய தறுகா ஷரீபுக்கு தென்கிழக்காக ஒரு மினாருக் கட்டி வைத்து மிகுவாழ்வு

பெற்றார். அதுவே இப்போது ஒட்டுமினுரு வென்று பேர் விளங்கி வருகிறதா யிருக்கும்.

சாஹிபுமார்களில் ஒருவருக்குக் குன்மவாய்வு தீர்த்த சரித்திரம்

ஹலரத் செய்யிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களுடைய பவுத்திரர்களாகிய சாஹிபுமார்களில் மீருன் லெப்பை சாஹிபும் அவர்களுடைய தம்பி யூசுபு லெப்பை சாஹிபும் ஒரு கப்பலில் பயணமேறி மலாக்கா வென்கிற நகரத்திற் போயிருந்தார்கள். அவ்வூரார்க ளெல்லாம் இவர்களைக் கண்டு ஆண்டவர்களுடைய பவுத்திரர்க ளென்று மிகுத்த சங்கை மரியாதை செய்து ஆதரித்து தொண்டியற்றி வருங்காலத்தில் ஒரு நாள் அங்கர் காவனத்தில் ஒரு அவுலியா விருக்கின்றார்கள். அவர்கள் மிகுமகிமை யுள்ளவர்கள் என்று அவர்களைத் தெரிசிக்கப் போகிறோ மென்றார்கள். இவ்விதம் அவ்வூரார் சொல்லக் கேட்டு அந்த சாஹிபுமார்களிருவரில் ஒருவருக்கு குன்மவாய் வுண்டா யிருந்தமையால் நாமும் அப்பெரியோரைக் கண்டு இப்பிணியை நீக்கச் சொல்லலாம் மென்ற எண்ணங் கொண்டு அவ்வூராருடன் சேர்ந்து அந்தப் பெரியோரிருக்குங் காட்டிற்குச் சென்றார்கள். அங்குச் சென்ற போது அவ் அவுலியா விருக்குந் தலத்தை சுற்றி மரங்களினால் பெரிய வாடி போலடைத்து அதனுள்ளவர்க ளிருக்க, பல யானைகளும் புலிகளும் வந்து பணிந்து அவ்வாடியைச் சுற்றி கார்த்துக் கொண்டிருப் பதைக் கண்டு அதனுட் புகுந்து அந்த அவுலியாவை தரிசிக்க வேண்டி சாஹிபுமார்களிருவரும் நெருங்கிப் போவதை மற்றைய மனிதர்கள் கண்டு ஷெய்குமார்களே! அவ்வாடியினுள் ஒருவரும் போகக்கூடாது, போனு விடறனுகுமாதலால் உங்களிடத்தில் காணிக்கைகளுண்டா யிருந்தால் அதை யொரு முடிப்பாகக் கட்டி வெளியிற்றனே யெறிந்து விடுங்க ளென்றுரைத்தார்கள். சாஹிபுமார்கள் அச்சொல்லைக் கேளாமல் அவ்வாடியினருகே அடைந்து ஆங்கு நிற்கும் துஷ்ட மிருகங்களைக் கண்டு கொஞ்சம் மலைவு கொண்டு நின்ற போது, அந்த அவுலியா சாஹிபு ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபுடைய பேரர்களே! அஞ்சாமல் இங்கு வாருங்களென் றழைத்துக் கட்டித் தழுவி சலாம் சொல்லிக் கிட்ட விருத்தி அவ்விருவரின் முகங்களையும் பார்த்து நீங்களிருவரும்

என்னை இங்கிருக்க விடாது துரத்த வந்தீர்களோ வென்ற போது சாஹிபுமார்க ளிருவரும் பதறி யேங்கித் தாங்களேன்? எங்களை நோக்கி இவ்வாச்சரிய வார்த்தை சொல்லுகின்றீர்க ளென்றூர்கள். அதற்கு அந்த அவுலியா நான் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் சில தினங்களுக்கு முன் பேதலித்த ஆனந்தத்துடன் நாகூர் கஸ்தூரியான நேரத்தில் ஹலரத் ஆண்டவரவர்களுடைய தெரிசனையை நான் நாடி தறுகாவுக்கு வந்திருந்த போது, ஹலரத் ஷெய்கு யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களின் பேன்மை தங்கிய சமாதி ஸ்தானத்திற்கு மேல்புற மிருக்கிற மேடையில் விடுதி விட்டு இறங்கி யிருந்தேன். அப்போது உங்களைப் போலொத்த ஹலரத் தவர்களுடைய பவுத்திரர்களிலொரு சிறுபிள்ளையை யழைத்து என்னுடைய ஹுக்காவையுஞ் சிலும்பியையும் கொடுத்து இந்த ஹுக்காவில் தண்ணீர் விட்டு சிலும்பியில் நெருப்பு வைத்துக் கொண்டு வாருமென் றேவினேன். அவர் அதை செய்து முடிக்கு முன் ஹலரத்தவர்களுடைய கோபமென் பேரில் உண்டாகி என்னை எடுத்தெறியும் படி ஜின்னுக்கு உத்திர வானவுடன் அந்த ஜின் வந்து என்னைத் தூக்கிக் கொண்டு மேகமண்டல மளாவப் பறக்கும் போது நான் திகிலடைந்து வேறு கெதியின்றி ஹலரத் தவர்களை மனதில் தியானித்து ஆண்டவர்களே! நானறியாத் தன்மையாற் செய்த குற்றத்தைப் பொறுத்து இரட்சித் தருளவேண்டு மென்று மன்றாடினேன். அத்தருணத்தில் அந்த ஜின் என்னை இவ்விடத்தில் கொண்டு வந்து விட்டு விட்டு என்னை நோக்கி நீர் இன்னும் கொஞ்ச நேரம் ஆண்டவரவர்களை மன்றாடிக் கேட்கா திருப்பீரே யானால் உம்மை எழுவான் வரை கொண்டு போய் எறிந்து விட்டிருப் பேன். இதற்குள் நீர் ஆண்டவர்களிடத்தில் மன்னிப்பு கேட்டு விட்டதால் ஆண்டவரவர்கள் மனதிரங்கி உன்னை மன்னித்து எனக்கு இங்கு கொண்டு வந்து விட உத்திரவு விட்டபடியால் நான் இங்ஙன மிறக்கினேன் என்று உரைத்து விட்டு சென்றது. ஆதலால் இப்போது நீங்கள் நாடிவந்த காரியத்தில் நான் பிரவேசித்தால் நம்முடைய பிள்ளைகளுக்குள்ள பிணியகற்றிவைக்க இவர்தான் தகுதியோ வென்று கோபமாகி இங்கிருந் தெடுத்து எங்கெறியப்படுமோ? என்று அஞ்சுகிறேன். ஆனதால் தங்களுடைய காரியத்தில் பிரவேசிப்பதற்கு நான் தகுதியல்ல வென்றுரைத்து விட்டு மேலான ஓர் போர்வையும் சில அகிற் கட்டைகளும் கொடுத்து இன்னும் அவர்களுக்கு அங்கு கிடைத்திருந்த காணிக்கைப் பொருட்களி னின்றும் சிலதையுங் கொடுத்து மிக்க மரியாதையோடு உபசரித்து அனுப்பினூர்கள்.

சாஹிபுமார்க ளிருவரும் களிகூர்ந்து தங்களாற் சுமக்கக் கூடிய மட்டில் அக்காணிக்கை முடிப்புகளை யெடுத்துக் கொண்டு வெளியில் வந்து அங்கு நின்றவர்களுக் கெல்லாம் அங்கு நிகழ்ந்த சங்கதிகளைச் சொன்னபோது அவர்கள் கேட்டு வெகு ஆச்சரிய முற்று சாஹிபு மார்கள் இவர்களும் வெகு தகுதி யுடையவர்களென்று சாஹிபுமார்கள் இருவர்களுக்கும் மிகவும் பயந்து மரியாதையுடன் நடந்தார்கள். அன் றிரவு அவ்விருவர்களும் அக்காட்டின் கண் தரித்து நித்திரை செய்யும் போது அதிலொருவருடையகனவில் ஹலரத் ஷாஹுல் ஹமீது ஆண் டவர்கள் உதயமாகி நீர் நம்முடைய நொம்பலத்தை இவரிடத்திலேன் சொல்ல வந்தீரென்று எற்புறுத்தி அவர் உம்முடைய காரியத்தில் பிரவேசித்திருப்பாராகில் அவரை இங்கிருந் தெடுத்து இன்னுந் தூரத் தில் எறியப்பட்டிருக்கு மென்றுரைத்து வாயைத் திறக்கச் சொல்லி தன்கையை விட்டு வாய் உள்ளிருந்து ஒரு மயிர்பந் தொன்றைப் பிடுங்கி யெடுத் தெறிந்து விட்டார்கள். அது நிகழ்ந்ததும் அந்த சாஹிபு பதறி விழித்துப் பார்த்தபோது ஆண்டவர்கள் இல்லாமையால் இது கனவென்றறிந்து மனமிகப் பயந்து ஹலரத்தவர்களை நினைத்து நான் அறியாமல் இங்கு வந்த குற்றத்தை பொறுத்தி ரட்சிக்க வேணுமென்று துஆவிரந்து விட்டு தன்னைப் பார்த்தபோது தன்னில் உண்டா யிருந்த வியாதி ஒன்றுமில்லாமல் பரிசுத்தனாய் இருக்கக் கண்டு சந்தோஷ முற்றார். அன்று சூரியனுதய மாகுந்தருண மானபோது எழுந்து தண்ணீரெடுத்து ஒலுவென்னு மனுட்டானஞ் செய்து காலைக் கடமை தொழுகையைத் தொழுது முடித்து நாகூரின் திசையை நோக்கி பாத்திஹா ஓதி மன மகிழ்ந்து ஆனந்த முற்றார். பிறகு தனது நகராகிய நாகூருக்குப் போக வேணுமென்று தாங்களிரவிற் கண்ட கனவின் காட்சியை எல்லோருக்கும் அறிவித்து அவ்விடம் விட்டு மலாக்காவுக்கு வந்தங்குள்ளவர்களுக்கு மவ்வதிசயத்தை சொல்லிச் சிலநாள் அங்கு தரித்திருந்து விட்டு பின்னர் அந்த சாஹிபுமார்களாகிய மீரான் லெப்பை சாஹிபும் யூசுபு லெப்பை சாஹிபும் கப்பலில் ஏறி நாகூர் வந்து சேர்ந்து மலாக்கா நகரத்தின் காட்டினுள் நடந்த காரணங் களனைத்தையும் சகலருக்கும் அறிவித்தார்கள். அதைக் கேட்டவர்க ளெல்லாம் ஹலரத் ஆண்டவரவர்களைப் புகழ்ந்து போற்றினார்கள்.

ஐந்தாமினுருவும் ஓர்மானிய கிராமமு முண்டான சரித்திரம்

ஹலரத் செய்யது அப்துல் காதிற் ஷாஹுல் ஹமீது ஒலியுல்லா ஆண்டவரவர்களுடைய சிறப்பாகிய தறுகாவுக்கு வெகுதொலை தூரங்களிலிருந்து இராஜர்களெல்லாம் வந்தடி பணியுங் காலத்தில் தஞ்சை நகர் அதிபராகிய பர்தாப்பு சிங்கு மகாராஜாவுக்கு எல்லா பாக்கியங்களும் செல்வங்களும் அளவுக்கு மிஞ்சி நிறைந்திருந்த போதிலும் புத்திர சம்பத்தில்லாத குறைவே அவரை மிகவும் பாதித்துக் கொண்டிருந்தது. அதனுலவர் நாகூர் ஷாஹுல் ஹமீத் ஆண்டவர்கள் பால் சென்று நம்முடைய குறைகளை முறையிட்டு அவர்கள் உதவியால் நாம் புத்திர சம்பத்து அடைய வேண்டு மென்று கருதி இதை தன் மந்திரி பிரதானிகளுக்கு அறிவித்து நாகூர் பிரயாணத்துக்கு ஆயத்தமானபோது தன்னுடைய இரதகஜ துரகபதாதிகளென்னும் சதுரங்க சைன்னியத்துடன் மந்திரி பிரதானிகளும் தன் சைனிய வீரர்களும் புடை சூழப் புறப்பட்டு தன்னகர் விட்டு நீங்கி நாகூர் ஷரீபுக்கு வந்து பூரண சந்திரோதயம் போன்ற தறுகாவுக்குள் சென்று ஆண்டவர்களின் சந்நதியில் நின்று கணக்கற்ற காணிக்கைகளை கொடுத்து அஞ்சி ஒடுங்கி வந்தனஞ் செய்து ஆண்டவர்களே! தங்களனுக்கிரகத்தினுல் எனக்கெல்லாப் பாக்கியமும் உண்டா யிருந்தும் பிள்ளையில்லாத குறைவே பெரும் சஞ்சலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தாங்கள் என் மீது கருணை கூர்ந்து என் நாட்டத்தை நிறைவேற்றி எனக்கு புத்திர சம்பத்தை அருள் புரியும்படி தங்கள் திருபாதம் தொட்டு வேண்டிக் கொள்கிறேன். இன்னும் தாங்கள் இந்த சித்தடியேன் மீது கிருபை வைத்து எனக்கொரு சந்ததியுண்டாகச் செய்தால் தங்கள் தறுகாவின் எல்லையில் ஒரு மினுருவுங் கட்டி வைத்து ஒரு கிராமமும் தங்கள் தறுகாவுக்கு மானியம் எழுதி வைப்பேனென்று சொல்லி பிரார்த்தித்துக் கொண்டு அங்கிருந்து பிரயாணப்பட்டு தனது பரிவாரத்துடன் சென்று தஞ்சை நகர் போய்ச் சேர்ந்தார்.

உடனே ஹலரத் ஆண்டவரவர்களுடைய கிருபை கொண்டு அவ்வரசனின் மனைவி அம்மாதத்திலேயே கர்ப்பவதியாகிப் பத்து மாதமும் நிறைந்து மிகவும் அழகிய ஒரு குமாரனை ஈன்ருள். அது கண்டு பர்தாப்பு சிங்கு மஹாராஜா மிகுந்த சந்தோஷத்துடன் மகனுக்கு துளசி மகாராஜ னென்று நாமதேயம் தரிப்பித்து சுப சோபனங் கொண்டாடினுர். பிறகு இப்பாக்கியம் நமது ஹலரத் மீரான் சாஹிபு ஆண்

டவரவர்கள் நமது நாட்டத்தை நிறைவேற்றித் தந்தசால் நாம் அவர்களிடத்தில் பிரார்த்தித்தபடி நாம் நிறைவேற்றி வைக்க வேணுமென்று எண்ணி சில காரியஸ்தர்களிடம் வேண்டுமான பொருள்களை கொடுத்து நாகூரில் பாரியா மினரா வொன்று கட்டி அமைக்கும்படி கட்டளையிட்டு அனுப்பினர். அவர்கள் வெகு திரவியங்களுடன் நாகூர் வந்து ஆண்டவரவர்களுடைய சிர் செறியுந் தறுகாவை தரிசித்து விட்டு பிறகு தறுகாவுடைய சாஹிபுமார்களிடம் மினரு கட்ட அனுமதி பெற்று ஆண்டவரவர்களுடைய தறுகாவின் அலங்கார வாயலுக்கு மேல் பாகமாய் ஹிஜிரி ஆயிரத்தினூற்று எழுபத்தேழாம் வருஷத்தில் உன்னதமான ஒரு மினருவை வெகு அலங்காரத்துடன் கட்டி முடித்து விட்டு சாஹிபுமார்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு தஞ்சை நகர் போய்ச் சேர்ந்து அரசனுக்கு அறிவித்தார்கள். அவ்வரசன் அங்கிருந்து தன் மகனையுங் கூடவழைத்துக் கொண்டு தனக்குரிய சைனியங்கள் புடைசூழ நாகூர் வந்து தான் கட்டச் செய்த மினருவை நோக்கி மனமகிழ்ந்தானந்தமாகி தறுகாவினுட் சென்று ஆண்டவரவர்களின் சன்னதியில் நின்று அஞ்சி ஒடுங்கி வணங்கி ஆண்டவர்களே! நான் பிரார்த்தித்தபடி மினருவைக் கட்டி முடித்து விட்டேன். கிராம மானியத்தையும் தங்கள் தறுகாவிற்கு எழுதி தங்கள் பவுத்திரர்கள் பால் ஒப்படைத்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு வந்து அது போல் ஒரு கிராமத்தை தறுகா பேருக்கு மானியமாக செம்பு பட்டயம் எழுதி முடித்து சாஹிபுமார்கள் வசங் கொடுத்துவிட்டு அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு பர்தாப்பு சிங்கு மகாராஜா தன் சைனியங்கள் புடை சூழ தஞ்சை நகர் போய்ச் சேர்ந்தார். அம்மினருவே இப்போது பெரிய மினருவென்று விளங்கி வருகிறது.

துளசி மகாராஜா மானியங்கள் விடுத்த சரித்திரம்.

ஹலரத் கவுது ஷாஹுல் ஹமீது ஒலியுல்லா ஆண்டவரவர்களின் கிருபை கொண்டு துளசி மகாராஜா மிகு சிறப்புடன் வளர்ந்து வாலிப பிராயத்தை யடைந்து மகுடாபிஷேகம் பெற்று மிகு மேன்மையுடன் கொலு வீற்றிருந்து நீதி செங்கோல் நடாத்தி வருங்காலங்களில் தன் தகப்பனர் நாகூர் போய் ஆண்டவரவர்களிடத்தில் வரங்கேட்டு

அவர்களுடைய கிருபைக் கொண்டு தன்னைப் பெற்றதாய்த் தெரிந்து தானும் மேலும் மேலும் அந்த நாயகரின் கிருபையைப் பெற்றுக்கொள்ள வேண்டு மென்கிற காதல் கொண்டு நாகூர் தறுகாவின் தரிசனைக்கு பிரயாணப்பட ஆயுத்தப்பட்டு வெகு சிறப்புடன் பிரயாண மியற்றி மந்திரி பிரதானிகள் புடை சூழ முரசாதி வாத்திய மொலிக்க சதுரங்கச் சேனைகளுடன் தஞ்சை நகர் விட்டுப் புறப்பட்டு புகழ் தங்கிய நாகூர் வந்து சேர்ந்து ஆண்டவர்களுடைய தறுகாவின் அலங்காரத்தையும் தனது தகப்பனார் கட்டி வைத்த உன்னத மினாறாவையுங் கண்டு மனங்களித்துத் தறுகாவினுட் சென்று வந்தனஞ் செய்து கைகட்டி நின்று அடிக்கடி ஆண்டவர்களைப் பணிந்து அநேக காணிக்கைகள் கொடுத்து கற்கண்டு சீனி சர்க்கரை பழ வர்க்கங்கள் வைத்து சாஹிபு மார்களைக் கொண்டு பாத்திஹா வோதுவித்து தறுகாவின் கட்டிடங்களை டங்களையுஞ் சுற்றிப் பார்த்து அதன் காரியங்களை யெல்லாம் விசாரிக்கு மிடத்தில் அத்தறுகாவின் உன்னதமாகிய பல கட்டடங்களுக்கு விளக்கெண்ணைச் செலவுகளும் ஆண்டவரவர்களின் பவுத்திரர்களாகிய சாஹிப் மார்களுக்கு ஜீவனத்திற்குவேண்டியசெலவுகளும் அதிகம் உண்டாயிருப்பதால் அதற்கு போதிய வருமானம் அங்கில்லாததால் தங்கள் தகப்பனார் கொடுத்த ஒருகிராமத்தின் வருமானம் போதாதென்று கருதி தன் தந்தையர் கொடுத்தவொரு கிராமமும் தவிர தானும் பதினைந்கு கிராமத்தை மானியமாக விடுத்து அதற்கு செம்புபட்டாவு மெழுதி சாஹிபுமார்கள் வசங்கொடுத்து விட்டு ஆண்டவரவர்களின் நற்கிருபையைப் பரிபூரணமாய்ப் பெற்றுக்கொண்டு மாறாத புகழ்பெற்றவராய் சாஹிபு மார்களுக்கு மிகுந்த சங்கை செய்து அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு ஆண்டவரவர்களை ஓயாது புகழ்ந்துகொண்டு நாகை நகர் விட்டு புறப்பட்டு தன்பரிவாரத்துடன் தஞ்சை நகர் சேர்ந்து வாழ்ந்தார். எனதன்பர்களே ஆசப்பதினைந்து கிராமமும் நாளது வரையில் ஆண்டவரவர்களுடைய பவுத்திரர்களுக்குரியதாய் விளங்கிவருகிறதுந் தவிர தறுகாவில் நாளுக்கு நாள் மண்டபங்களும் பற்பல கட்டிடங்களும் வெள்ளி நிலைகள் வெள்ளிக் கபாடங்கள் கும்மசுகள் வெள்ளி விளக்குகள் பொன்விளக்குகள் பளிங்கு விளக்குகள் செடிவிளக்குகள் வெண்கல விளக்குகள் வால்சேட்டு குலோப்புகள் நிலைக்கண்ணாடிகள் பற்பல விளக்குகளுஞ் சிறுஞ் சிறப்பும் பெருகி வருவது மன்றி நாடி வருபவரின் நாட்டமும் தேடிவருபவரின் தேட்டமும் நிறைவேறி ஹலாத் செய்வித்து மீறான் சாஹிபு ஆண்டவரவர்கள் மக்கநகர் கஃபா

வின் ஹலரத்திலிருந்து தங்கள் கண்மணி புதல்வராகிய ஹலரத் ஷாஹ் முஹம்மது யூசுபு சாஹிபு ஆண்டவரவர்களுக்குச் சொன்ன உறுதி வார்த்தையின் பிரகாரம் ஹலரத்யூசுபு சாஹிபு ஆண்டவர்களின் சந்ததிகளும் பெருகிவருவதோடு அவர்களுக் கேற்றவாறு கணக்கற்ற பொருட்களும் வளர்ந்தேறி வருகின்றன. அதுபோல் அந்த ஆண்டவரவர்களின் திருப்பாதக் கமலங்களை யென்னாளும் மாறாது சிரசிலும் கண்ணிலும் நெஞ்சிலுந் தரிபாடாகவைத்திருக்கிற நம் அனைவர்களுடைய துன்பங்களையும் அகற்றி இன்பங்களைப் பெருகச் செய்து என்னாளும் நல்லருள் புரிவார்களாக ! ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இக்கிரந்தம் ஹிஜ்ரி ஆயிரத்தி யிருனூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் வருடம் வரிசை தங்கிய றமலான் மாதம் ஏழாந்தேதி வெள்ளிக்கிழமை குத்பாவிற்கு பின்னர் புகழுக்குரிய சர்வ தயாபரக்கடவுளின் உதவியைக் கொண்டு ஸெய்யிதுல் முறுசலின் ஷபீவுல் முதுனிபீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் நற்கிருபை கொண்டும் அவர்களின் தோழன்மார்களான வரிசையாகிய நால்யார்களின் பறக்கத்து கொண்டும் இமாம்கள் குத்புகள் கௌதுகள் அவுலியாக்கள் ஷுஹதாக்களுடைய துஆ பறக்கத்துக் கொண்டும் குத்புறப்பானி கவுது சமதானிமஹ்பூபு சுபஹானி மகுபூல்ஹற் தோஜஹானி முஹியித்தீன் அப்துல் காதிறுல் ஜைலானி ஆண்டவரவர்களின் அனுக்கிரகங் கொண்டும் ஷாஹுல் ஹமீது ஸெய்யது சுல்தான் அப்துல் காதிரின் நாகூர் ஆண்டவரவர்களின் திருகடாக்ஷம் கொண்டும் எழுதி முடிவு பெற்றது. ஷெ நாயகமார்களின் நற்கருணை இதைக் கோர்த்து எழுதியோனுக்கும் அச்சிட்டு பிரசுரித்தோனுக்கும் வாசித்துணர்ந் தோனுக்கும் கேட்டறிந்து புகழ்ந்தோனுக்கும் அவர்களின் [illegible] மக்கள் புத்திரர் அனைவோருக்கும் எந்நாளும் கிருபை உண்டாவதாக. ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

நாகூர் மீரான் சாஹிபு ஆண்டவரவர்கள் காரணச் சரித்திரம்

முற்றிற்று

110689

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
20, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

புதிய இரண்டாம் பதிப்பு

நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்.

(சீறு வசனம்.)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல், வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலிஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 8–0–0

அறபுத் தமிழ் அஃஷஜாதுல் முஹம்மதியா (றஸூலுல்லாவின் சரிதை)

விலை ரூ. 8–0–0

முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது கல்விக் கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானீ வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினு முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கறுமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதி யிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அரிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 3–0–0

ஷெ அரபுத் தமிழில் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனாகிபுல் கவ்துல் அஃலம்"

விலை ரூ. 8–0–0

PRINTED AT SHAHUL HAMEEDIA PRESS, MADRAS.

7B
2-1573